1572
25-3-09

வெளியீடு: 6-8-08 Issued: 6-8-08

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 7, 2008—தொகுதி 53—எண் 1

Wednesday, the 7th May 2008—Volume 53—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

V211,31'p68
P08-53:1
228388

7-5-2008

உள்ளடக்கம்

செயலகம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் .. v-x

Governor and Council of Ministers .. .. .. xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) .. xxi-xxxi

1. **இரங்கற்குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு .. .. 1

2. **வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 2-37

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 7) .. .. 37-101

3. **விதி 110-ன்கீழ் அறிக்கை—**

உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, விபத்துகளில் உயிர் இழந்தவர்கள், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் / பலியானவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை .. 101-105

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. 101-105

4. **தகவல் கோரல்—**

(அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் யோகா பயிற்சியைத் தொடர வேண்டுகோள் .. .. 105

திரு. ஜி.கே. மணி .. .. .. 105

பக்கங்கள்

**தகவல் கோரல்**—தொடர்ச்சி

(ஆ) தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை — 106-115

திரு. கே.ஏ. செங்கோட்டையன் .. 106-107, 114, 115

திரு. கி. ஆறுமுகம் .. .. 107-108

திரு. வை. சிவபுண்ணியம் .. .. 108-109

*திரு. நா. இராமகிருஷ்ணன் .. .. 109-110

*மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் .. 110-115

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 115-116

திரு. ஓ. பன்னீர்செல்வம் .. .. 115

5. **அறிக்கைகள் அளித்தல்**—

அரசு உறுதிமொழிக் குழு .. .. 116

6. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 44—குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 17—கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

(இ) கோரிக்கை எண் 18—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

} 116-262

*மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி 117,173, 183-184, 247-257



பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா — 135,173, 206,219, 237-246, 260

*மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன் — 155,174, 184,185, 192, 229-237

திரு. வே. செந்தில் பாலாஜி .. 128,148, 166,174-184, 259

திரு. ஓ. சுப்பிரமணியம் .. 185-192

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன் .. 193-200

திரு. கே.வீ. ராமநாதன் .. 121,141,160, 200-205

திருமதி ஜி. லதா .. 125-126,145, 163, 205-210

திரு சு. குணசேகரன் .. 134,144,172, 210-214

*திரு. அ. சின்னசாமி .. 214-218

திரு. விடியல் எஸ். சேகர் .. 118,136,156, 217-223

திரு. செ. பொன்னுதுரை .. 170,171 223-229

7. **அறிவிப்பு**—

உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் அளிக்கும் விருந்திற்குச் செல்லும் பேருந்து வசதி — 262-263

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 263-264

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில்நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. மின்சாரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

D
V2,3,1,908
908.53.1
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228388
சென்னை-600 008

4. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. **கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. **பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. **உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



9. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

11. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. **வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

13. **சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees

| | | |
|---|---|---|
| **18. Minister for Labour** | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| **19. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| **20. Minister for Handlooms** | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| **21. Minister for School Education** | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| **22. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| **23. Minister for Environment** | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| **24. Minister for Forests** | .. | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| **25. Minister for Highways** | .. | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| **26. Minister for Social Welfare** | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| **27. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| **28. Minister for Adi Dravidar Welfare** | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| **29. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| **30. Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| **31. Minister for Khadi** | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |

திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. எஸ். இராமன், பி.காம். .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி—1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாத்ன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. எஸ்.எஸ். - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஒசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச் [illegible] திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்–I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. - கடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்-2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 25

## 2008 மே 7, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்*
*சொல்லினால் தேறற்பாற் றன்று."*

*மனம் வேறு, செயல் வேறாக இருப்பவர்களின் வார்த்தைகளை நம்பி எந்தவொரு தெளிவான முடிவையும் எடுக்க இயலாது.*

### 1. இரங்கற்குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. அ. ஆறுமுகம் அவர்கள் 6-5-2008 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். திரு. அ. ஆறுமுகம் அவர்கள் இரு முறை சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன். மறைந்த அப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2008 மே 7

## 2. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**211—**

### துணை மின் நிலையம்

*** 34203—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, ஆர். கோபிநாதம்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொரப்பூர் தொகுதி, ஆர். கோபிநாதம்பட்டியில் ஏற்கெனவே ஒரு 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. எனவே, மேலும் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்சமயம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர், அரூர் வட்டங்கள் பெரும்பாலும் விவசாயத்தை மாத்திரம் நம்பி இருக்கிற பகுதிகளாகும். ஆர். கோபிநாதம்பட்டியில் துணை மின் நிலையம் 33 கிலோ வோல்ட்டில் இருக்கின்றது. பக்கத்தில் இருக்கிற பாப்பிரெட்டிப்பட்டி, பொம்மிடி, கடத்தூர் ஆகிய மூன்று பெரும் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பம்புசெட்டுகளும், பல்லாயிரக்கணக்கான மின் நுகர்வோர்களும் இருக்கிற காரணத்தால், 33 கே.வி. [illegible] அந்தத் துணை மின் நிலையங்களை 110 கே.வி. துணை மின் நிலைய[illegible] மாற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அது மாத்திரம் [illegible]ாமல், சிந்தல்பாடி, முத்தம்பட்டியில்

சென்னை-600 009



2008 மே 7]

33 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா? நடப்பாண்டில் எத்தனை துணை மின் நிலையங்கள் அமைக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தை இந்த அரசு கருத்திலே வைத்துக்கொண்டு, இப்போது இருக்கின்ற 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் உள்ள 5 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றியினை 8 எம்.வி.ஏ. ஆக அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணிகள் அநேகமாக செப்டம்பர் மாதத்திற்குள்ளாக முடிவடைந்துவிடும். இந்த ஆண்டு எத்தனை துணை மின் நிலையங்கள் தொடங்கப்படும் என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒரு முடிவு செய்து, நிதிநிலை அறிக்கையில் 90 துணை மின் நிலையங்களை, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்திலே அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் அதிகரித்து வரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டும், நீண்ட கால மின் தேவையைக் கருத்தில்கொண்டும், தலைவர் கலைஞருடைய அரசு மின் உற்பத்தியைப் பெருக்கிடப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிற இந்தக் காலக்கட்டத்தில், குறிப்பாக, தருமபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கள் விவசாயத்தை மாத்திரம் நம்பி இருக்கிற பகுதிகளாகும். அதிலேயும், தருமபுரியில் விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் கிடையாது. தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மாத்திரம் சுமார் 52,000 விவசாயிகள் மின் இணைப்பிற்காக விண்ணப்பித்துக் காத்திருக்கிறார்கள். 1986 ஆம் ஆண்டு பதிவு செய்தவர்களுக்கு மாத்திரம்தான் இப்பொழுது மின் இணைப்பு வழங்கப்படுகிற நிலை இருக்கிறது. ஆண்டுக்கு 5,000 மின் இணைப்புகள் என்பது அந்த மாவட்டத்திற்கு மிக, மிகக் குறைவான ஒன்றாக இருக்கிற காரணத்தால், விவசாயத்தை மாத்திரமே நம்பி இருக்கிற அந்த மாவட்டத்து மக்களின் நலன் கருதி, ஆண்டுக்குக்

குறைந்தது 10,000 மின் இணைப்புகளாவது வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல். 9-35

மேலும், இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கியிருக்கிற நம்முடைய கலைஞருடைய அரசில் சில பகுதிகள் கருப்புப் பகுதிகளாக மாற்றப்பட்டிருக்கிற காரணத்தால், வேளாண்மைத் துறைமூலம் அல்லது பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலமாக மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிற மின் இணைப்புகளுக்கு கருப்புப் பகுதிகளில் இல்லை என்கிற நிலை இருக்கிறது. எனவே கருப்புப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தப் பகுதிகளை நீக்கி, மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்கிறார்களா, நெல் உற்பத்தி செய்கிறார்களா என்பதைப் பார்த்து மின் இணைப்பு வழங்கப்படுவதில்லை. அவர்கள் மின் விநியோகம் வேண்டும் என்று எப்போது விண்ணப்பம் செய்கிறார்களோ, அந்த seniority அடிப்படையிலேதான் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, தமிழக அரசில் ஏற்கெனவே 4 இலட்சம் பேர் மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு நம்மால் 40 ஆயிரம் மின் இணைப்புகள்தான் வழங்க முடிகிறது. ஒரு மின் இணைப்பு வழங்குவதற்கு மின் வாரியத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையிலே செலவாகிறது. அது மட்டுமல்ல; இன்றையதினம் இலவச மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே—மொத்த மின் உற்பத்தியிலே கிட்டத்தட்ட 28 சதவீதம் மின்சாரத்தை, இலவச மின்சாரத்திற்கும், குடிசைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற இலவச மின்சாரத்திற்கும், கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத்திற்கும் நாம் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். 18 சதவீதம் line loss இருக்கிறது. 46 சதவீதம் இப்படி இலவசமாகவே போய்விடுகின்ற காரணத்தினாலே, 54 சதவீதம் consumer-களிடத்திலே இருந்துதான் மின் கட்டணத்தை வசூல் செய்கின்றோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், 40 ஆயிரமாக



இருக்கக்கூடிய, ஆண்டு ஒன்றுக்குக் கொடுக்கக்கூடிய இலவச மின்சாரத்தை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு தொகுதி, செருப்பாலூர் துணை மின் நிலையம் அமைக்க 2007 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டத்திற்கு வருகை தந்தபொழுது அறிவிக்கப்பட்டது. அதற்கான இடமும் கண்டுபிடிக்கப்பட்டு, மின் வாரியத்தின்மூலமாக அரசுக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்றது. பெருகி வரும் மின் தேவையைக் கணக்கில் எடுத்து, இந்த ஆண்டே அந்தத் துணை மின் நிலையத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துணை மின் நிலையம் கட்டுவதற்கான இடம் ஏற்கெனவே தயாராக இருக்கிறது என்று சொன்ன காரணத்தால், இந்த ஆண்டு நாம் புதிதாகத் தொடங்க இருக்கின்ற 90 துணை மின் நிலையங்களிலே ஒன்றாக அந்தப் பகுதிக்கும் ஒரு துணை மின் நிலையம் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதி, வைகுண்டத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

[2008 மே 7

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட, கொடுமுடி ஒன்றியத்திற்குட்பட்ட அஞ்சூர் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அந்த வேலைகள் இன்னும் தாமதமாக நடைபெற்று வருகின்றன. ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியிலே மிகப் பெரிய அளவிலே விவசாயிகள் இருக்கிற காரணத்தினாலே, உடனடியாக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தர முன்வருவார்களா என்று கேட்டு, அதேபோல, மொடக்குறிச்சி பகுதியிலே, கொடுமுடி பகுதியிலே மும்முனை மின்சாரமும் கொடுக்க இயலுமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அவருடைய தொகுதியிலே ஏற்கெனவே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு, வேலைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அதிலே காலதாமதம் ஏற்படும் என்று சொன்னார்கள். அந்தக் காலதாமதத்தைப் பற்றி, அதிகாரிகளோடு கலந்து பேசி, ஜூன் மாதத்திற்குள்ளாக அந்தத் துணை மின் நிலையத்தைக் கட்டி முடிக்க அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குப் பயன்படுத்துகிற மின்சாரம் இரவு நேரங்களிலே அதிகமாகவும், பகல் நேரங்களிலே குறைவாகவும் வருகிற நிலை இருக்கிறது. இரவு நேரங்களிலே விவசாயத் தொழிலாளர்கள் அங்கே சென்று மின் மோட்டாரை இயக்க முடியாத சூழ்நிலை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. ஆகவே, பகல் நேரங்களிலே மின்சாரத்தைக் கூடுதலாகத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பது ஒன்று; இரண்டாவதாக, 4 இலட்சம் விண்ணப்பங்கள் விவசாயிகளால் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஆண்டுக்கு



2008 மே 7]

40 ஆயிரம் விண்ணப்பங்கள் என்று சொன்னால், பத்து ஆண்டுகளாகும். இன்னும் கூடுதலாக விண்ணப்பங்கள் வருகிற வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, அதை மீண்டும் கூடுதலாக — 40 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரமாக உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள், பகல் நேரத்தில் குறைவாக 6 மணி நேரமும், இரவு நேரத்தில் அதிகமாக 12 மணி நேரமும் மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம்; அதைப் பகல் நேரத்தில் அதிகப்படுத்த முடியுமா என்று கேட்டார்கள். கழக ஆட்சியிலே மட்டும் இப்படி நாம் கொடுக்கவில்லை. கடந்த 25 ஆண்டு காலமாக இதே கொள்கைதான் எல்லா ஆட்சிகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பகல் நேரத்திலே நாம் தொழிற்சாலைகளுக்கு அதிக மின்சாரத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தால், விவசாயிகளுக்குப் பகல் நேரத்தில் 6 மணி நேரமும், இரவு நேரத்தில் 12 மணி நேரமும் மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் நிலைமை முன்னேறினால் அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு கொறடா அவர்கள் கேட்கின்ற நேரத்தில், தற்போது கொடுக்கப்படும் 40 ஆயிரம் மின் இணைப்பை இன்னும் அதிகப்படுத்த முடியுமா என்று கேட்டார்கள். இப்போது இருக்கக்கூடிய மின்சார வாரியத்தினுடைய நிதிநிலையை மனதில் கொண்டு, 40 ஆயிரம் என்பதை 50 ஆயிரமாகவோ அல்லது 60 ஆயிரமாகவோ உயர்த்துவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

212—

சாலை வசதி

***2444—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பாலபட்டி ஊராட்சி, அரசூர் கிராமம், மதுரை வீரன் கோயில் பாதை, சொசைட்டி பாதை மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்துத், தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கம்பாலபட்டி ஊராட்சி, அரசூர் கிராமம், மதுரை வீரன் கோயில் பாதை (ஆதி திராவிடர் காலனி) மற்றும் சொசைட்டி பாதை ஆகியவை கான்கிரீட் சாலையாக அமைக்கப்பட்டுவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை சென்ற ஆண்டு நான் கேட்டிருந்தேன். இந்த ஆண்டு அந்தப் பணிகள் முடிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

**திரு. கோவை தங்கம்:** தலைவர் அவர்களே, நிறைய விஷயங்கள் இருக்கின்றன. இதிலிருந்து உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்—வினா கேட்டதிலிருந்து அந்தப் பணிகள் வேகமாக நடைபெற்றிருக்கின்றன என்று சொன்னால்—தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் கடந்த இரண்டு ஆண்டு காலம் பம்பரம்போல் சுழன்று பணியாற்றி உள்ளாட்சித் துறையில் ஒரு நல்லாட்சியை அமைத்திருக்கின்றார் என்பதற்காக காங்கிரஸ்



பேரியக்கத்தின் சார்பாக மனதாரப் பாராட்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, கடந்த 5-5-2008, அதாவது இரண்டு நாட்களுக்கு முன்பு தொழில் துறை மானியக் கோரிக்கையில் அவர் அறிவித்த பாங்கினைப் பார்த்தால்—சரளமாக, தங்குதடையின்றி சிறப்பான முறையிலே அவர்கள் மானியக் கோரிக்கையை அறிவித்தார்கள். எந்தத் துறையைக் கொடுத்தாலும் அவர் சிறப்பாகச் செய்வார் என்பதை இதிலிருந்து எங்களால் உணர முடிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக அவரைப் பாராட்டுவதன்மூலம், மேலும், மேலும் அவருடைய பணிகளை ஊக்குவிப்பதன்மூலம், அவர் அதிகமாகச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் பாராட்டுகிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, பிலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிபாளையம், அங்கலக்குறிச்சி, தென்செங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், ஜல்லிபட்டி, சோமந்துார், தென்சித்தூர், ரமணிமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், காளையாபுரம் மற்றும் வால்பாறையில் இருக்கின்ற சில பகுதிகளில் இன்னும் சில சாலைகளை சிமெண்ட் சாலைகளாகப் போட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு, வால்பாறை மலைப் பகுதி என்பதால், தொடர்ந்து அங்கே மழை வருவதால், சாலைகள் பழுதடைந்துகொண்டிருக்கின்றன. சிமெண்ட் சாலைகளாகப் போட்டால் சுமார் 40 ஆண்டு காலம், 50 ஆண்டு காலம் பழுதடையாமல் இருக்கும். ஆகவே, வால்பாறை தொகுதியில் இருக்கின்ற மலைப் பகுதியை ஒட்டிய கிராமங்களிலும், வால்பாறை மலைப் பகுதியிலும் சிமெண்ட் சாலைகள் போட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வால்பாறை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல, அவருடைய தொகுதியில் பல இடங்களில் சிமெண்ட் சாலைகள் போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், இது தவிர, பொது நிதி, மாவட்ட ஆட்சியருடைய விருப்புரிமை நிதி ஆகியவற்றிலிருந்து உங்களுடைய தொகுதிக்கு மட்டும் ரூபாய் 1,35,37,000 மதிப்பீட்டிலே 10 கிலோ மீட்டர்,

212 மீட்டர் நீளம் உள்ள 99 எண்ணிக்கையிலான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் ஏறத்தாழ 9 கிலோ மீட்டர் நீளம் உள்ள 94 பணிகள் முடிவடைந்திருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய அந்தப் பணிகள் இப்போது வேக, வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. [illegible] ஏதாவது விடுபட்டுப் போயிருந்தால், அதை அரசினுடைய கவன[illegible] நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்கிறபோது, அதுவும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு) திரு. கோவை தங்கம்.

முற்பகல் 9-45

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் சில கிராமங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், சாலைகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், பழுதடைந்த சாலைகளை மீண்டும் மீண்டும் புதுப்பிப்பதைவிட, ஒரே நேரத்தில், பல கிராமங்களில் சிமெண்ட் சாலைகளைத் தமிழ்நாடு முழுவதும் போட்டால்—தமிழ்நாட்டில் இருக்கிற கிராமங்களில் உள்ளாட்சித் துறையின் சார்பாகப் போட்டால்—மிகவும் நன்றாக இருக்கும்; அரசுக்குச் செலவும் குறையும். ஆகவே, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கிராமங்களில் பழுதடைந்த சாலைகளை சிமெண்ட் சாலைகளாகப் போட அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே வால்பாறை தொகுதியிலே சிமெண்ட் சாலைகள் போடக்கூடிய பட்டியலைத்தான் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனவே இது குறித்து, எந்தெந்தப் பகுதிகள் அதுபோல இருக்கின்றன என்பதை அரசினுடைய கவனத்திற்கு நீங்கள் எடுத்துச் சொல்கிறபோது, நிச்சயமாக அவையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.





**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கான்கிரீட் சாலை அமைப்பதற்கு அந்த ரோட்டினுடைய அகலம் ஏதாவது தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா? சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதுபோன்ற கான்கிரீட் சாலைக்கு நிதி ஒதுக்குகிறபோது, 14 அடிக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, சில இடங்களிலே 16 அடி, 18 அடி என்றெல்லாம் வருகிறது. அதுபோன்ற சாலைகளுக்கு ஏதாவது விதிவிலக்குக் கொடுத்து, அந்த சந்துப் பகுதிகளிலும் கான்கிரீட் சாலை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அதோடு, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டினுடைய நகர்ப் பகுதிகளில் அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகளில் எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் இருந்த நிலைக்கு ஒரு முடிவு கட்டி, இப்போது அதைக் குறைந்த கட்டணத்திலே முறைப்படுத்துவதற்கான ஓர் ஆணை வெளியிடப்பட்டு, தமிழகம் முழுவதும் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க ஒரு பெரிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள். அப்படி அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சற்றேறக்குறைய 90 சதவிகிதமான பகுதிகளில், அதை முறைப்படுத்துவதற்கான அந்தக் கட்டணத்தைச் செலுத்தி, தங்களது மனைகளைப் பதிவு செய்திருக்கிறார்கள்; 10%, 15% பாக்கியிருப்பதாகப் பல இடங்களிலிருந்து செய்திகள் வருகின்றன. ஆகவே, மேலும் ஒரு மூன்று மாத காலம், அந்தக் கட்டணத்தைச் செலுத்தி முறைப்படுத்திக்கொள்வதற்கான கால அவகாசத்தை நீட்டித்துக் கொடுப்பீர்களானால், 100 சதவிகிதம் முழுமை அடைகிற வாய்ப்பிருக்கிறது. அதற்கு அரசு முன்வருமா என்றும் தங்கள்மூலம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் கான்கிரீட் சாலைகளைப் பொறுத்தவரையில், பொதுவாக, கிராம ஊராட்சிகளில் பொது மக்கள் அதிகமாகக் கூடக்கூடிய கடைத் தெருக்கள், கோயில், சாவடிகள் மற்றும் ஆதி திராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகள், மக்கள் நெருக்கமாக வசிக்கக்கூடிய தெருக்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை

அளிக்கப்படுகிறது. அது மட்டுமல்ல; நிதியாதாரம் மற்றும் சிமெண்ட் இருப்பு, விலை ஆகியவற்றினுடைய அடிப்படையிலேதான், கிராம ஊராட்சிகளுடைய தீர்மானம் மற்றும் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுடைய நிதி ஒதுக்கீட்டையும் அடிப்படையாக வைத்துத்தான் அந்தப் பணிகள் எல்லாம் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, சாலையினுடைய அளவைப் பற்றிக்கூட இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

அதேபோல, தொடர்ந்து அங்கீகாரம் பெறக்கூடிய ஒரு சூழ்நிலையைச் சுட்டிக்காட்டினார். முறைப்படுத்தப்படாமல் இருந்த, அங்கீகாரம் பெறமுடியாத சூழ்நிலையில் இருந்த மனைப் பிரிவுகள், இப்பொழுது இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு முறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்குப் பல முறை கால அவகாசத்தை நீட்டித்துத் தந்திருக்கிறோம். இன்னும் மூன்று மாத காலம் நீட்டித்துத் தரவேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலித்து, முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *213*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**213—**

## விவசாயம்

***21976—திரு. ம. குணசேகரன்**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பண்ணை விவசாயத்தையும், இயற்கை விவசாயத்தையும் ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பண்ணை விவசாயத்தையும், இயற்கை விவசாயத்தையும் விவசாயிகளிடம் ஊக்குவிக்கும்பொருட்டு, தமிழக அரசு வேளாண்மைத் துறைமூலம் மாநில மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் பல்வேறு பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களில் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மைபற்றிய பயிற்சிகள், செயல் முறை விளக்கங்கள் மற்றும் இயற்கை வேளாண்மைக்கான இடுபொருட்களின் உபயோகம் குறித்த வயல்வெளி விளக்கங்களும் அடங்கும். மேலும், இயற்கை வேளாண்மைக்கான ஒரு சில இடுபொருட்களான பசுந்தாள் உர விதைகள் மற்றும் நுண்ணுயிர் உரங்கள் வேளாண்மைத் துறையால் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகம் முழுக்க முழுக்க விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருக்கின்ற மாநிலம். அவ்வாறு இருக்கையில், இப்போது முல்லைப் பெரியாறு, காவிரி மற்றும் பாலாறு போன்ற ஆறுகளில் தண்ணீர் வரத்தும் குறைந்திருக்கின்றது. அதைப்போல, இப்போது கால்நடைகளுடைய உற்பத்தியும், வளர்ச்சியும் குறைவாக இருக்கின்றது. அதே நேரத்தில் விவசாயத்தை நம்பியிருக்கின்ற நம்முடைய தமிழகத்தில், பண்ணை விவசாயத்தையும், அதைப்போல சில உரங்களினால் ஏற்படுகின்ற தீங்குகளைக் களைகின்ற வகையில், இயற்கை விவசாயத்தையும் ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கின்ற இந்த முறையைக் காட்டிலும் இன்னும் தீவிரமாகச் செயல்படுத்தி, தமிழகத்தில் பண்ணை விவசாயத்தையும், இயற்கை விவசாயத்தையும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணை விவசாய முறையில் உற்பத்தியைப் பெருக்கிட சொட்டு நீர்ப்பாசன சாகுபடி, கோனோ களையெடுக்கும் கருவிமூலம் களை எடுத்தல் போன்ற புதிய நவீனத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், துல்லியப் பண்ணைமூலம் வீரிய நாற்றுகள் மற்றும் உரங்கள் மானியத்தில் விநியோகம்

[2008 மே 7

செய்யப்படுவதுடன், சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம் மற்றும் சொட்டு நீர்ப்பாசன வழி உரம் இடுதல் போன்றவற்றிற்கான கருவிகள் மானியத்தில் வழங்கப்பட்டு, உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும்பொருட்டு, தேசிய இயற்கை வேளாண்மைத் திட்டத்தின்மூலம் கீழ்க்கண்ட பயிற்சிகள், கருத்தரங்கங்கள் மற்றும் செயல் விளக்கங்கள் நடைபெற்று வருகின்றன:

“இயற்கை வேளாண்மை ஆய்வு மற்றும் சான்றிதழ் தரும் நிறுவனங்களுக்கான பயிற்சி, இயற்கை வேளாண் இடுபொருட்கள் உற்பத்தித் தரம் மற்றும் தரக் கட்டுப்பாடு குறித்த பயிற்சி, விரிவாக்க அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கான இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி, விவசாயிகளுக்கான இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி, இயற்கை வேளாண்மை இடுபொருட்கள் தொடர்பான செயல் விளக்கத் திட்டங்கள் அமைப்பது, மாதிரி இயற்கை வேளாண்மைப் பண்ணைகள் அமைப்பது, மாநில அளவிலான மற்றும் மண்டல அளவிலான கருத்தரங்குகள் நடத்துதல், மண் புழு உரம் தயாரிப்பதற்கான மாதிரிப் பிரிவுகள் அமைத்தல்” ஆகிய பண்ணை முறையிலே உற்பத்தியைப் பெருக்க இயற்கைப் பண்ணை முறைக்கு ஊக்கங்கள் தரப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணை விவசாயத்தையும், இயற்கை விவசாயத்தையும் ஊக்குவிக்கின்ற நேரத்தில், தனியார்களும் அந்தப் பண்ணை விவசாயத்தைச் செய்கின்ற நேரத்திலும், இயற்கை விவசாயத்தைச் செய்கின்ற நேரத்திலும், அதிகமான உற்பத்தியை விவசாயத்தைச் பெருக்குகின்ற நேரத்தில், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், அதைப்போல, நன்மை பயக்கக்கூடிய விளைபொருட்களின் உற்பத்தியின்மூலம் அதிகமான உணவுப் பொருட்களுடைய விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், இந்தப் பண்ணை விவசாயத்தையும், இயற்கை விவசாயத்தையும் தனியார்கள் செய்கின்ற நேரத்தில் அவர்களுக்குச் சிறப்பான உதவிகளைச் செய்து, தமிழகத்தை விவசாயத்தில் முன்னுரிமை மாநிலம் ஆக்குவதற்கும், தனியார்களுக்கும் பண்ணை விவசாயத்தையும், இயற்கை விவசாயத்தையும் ஊக்குவிப்பதற்கும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 மே 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விவசாயம் செய்வதில்லை. விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன; அரசு விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. இப்போது விவசாயிகள் தனியாகத்தான் அவரவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்குத்தான் நான் சொன்ன அந்த உதவிகள் எல்லாம் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், திண்டுக்கல், சேலம், விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய 9 மாவட்டங்கள், சிறப்புக் கவனத்துடன் செயல்படுத்தத் தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசின் நிதியுதவி பெறப்பட்டு, N.A.D.P. திட்டத்தின்கீழ், தமிழகத்தில் இயற்கை வேளாண்மையும், இயற்கை உர உற்பத்திப் பெருக்கமும் கீழ்க்கண்டவாறு செயல் திட்டம் வகுக்கப்பட்டு, 2008-2009-வது ஆண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது:

விவசாயப் பண்ணைகளில் 645 இடங்களில் மண் புழு உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்க ரூபாய் 2 கோடியே 90 இலட்சமும், 129 வட்டாரங்களில் மாதிரி நகராட்சி Compost உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்க ரூபாய் 2 கோடியே 65 இலட்சமும், 129 வட்டாரங்களில் உயிரின இடுபொருட்கள்—Bio-inputs— தயாரிக்கும் மையங்கள் அமைக்க ரூபாய் 1 கோடியே 61 இலட்சமும், மொத்தம் ரூபாய் 7 கோடியே 16 இலட்சம் செலவு செய்யப்படவிருக்கிறது. இதிலே 50 சதவிகிதம் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. இயற்கைப் பண்ணை மற்றும் இயற்கை உர உற்பத்தி, உயிரின இடுபொருட்கள் தயாரிப்புபற்றிய பயிற்சிகளை விவசாயிகளுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கவும், மண் புழு உர உற்பத்தி மற்றும் நகராட்சி compost உரம் தயாரிப்பதை மேற்பார்வையிட்டு, தரக் கட்டுப்பாடு செய்யும் பணிகளுக்காக ரூபாய் 1 கோடியே 55 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 8 கோடியே 70 இலட்சம் இயற்கை உரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகிறது.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

[2008 மே 7

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டு நீர்ப்பாசனம்மூலம் பயிர்களுக்கு அளிக்கப்படும் திரவ உரங்களுக்கு மானியம் வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சொட்டு நீர்ப்பாசனம் போடுவதற்கு மட்டும் மானியம் உண்டு; உரத்திற்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**214—**

## தூர் வாருதல்

***12190—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணையைத் தூர் வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் பரப்பலாறு அணையைத் தூர் வாரும் திட்டம், நீர்வள ஆதாரத் துறை, பொள்ளாச்சி மண்டலத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரப்பலாறு அணையானது, 1972 ஆம் ஆண்டு நமது மாண்புமிகு



2008 மே 7]

முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பின்பு 1975 ஆம் ஆண்டு அவர் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்ட அணையாகும். இந்த அணையானது, கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,820 அடி உயரம் கொண்ட தனிச் சிறப்பைப் பெற்றதாகும். இந்த அணையினால் ஒட்டன்சத்திரம் வட்டத்தில் ஐந்து அணைக்கட்டுகள் மற்றும் ஆறு பாசனக் குளங்கள்மூலமாக 1,323 ஏக்கரும், அதேபோன்று நங்காஞ்சியாறு பாசன வாய்க்கால்மூலமாக 6,250 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெற்று வருகிறது.

அது மட்டுமல்லாமல் இந்த அணையானது, மேற்குத் தொடர்ச்சி மலையில் பாச்சலூர் கிராமத்தில், பரப்பலாறு, மாஞ்சோலையாறு, புலிக்கட்டியாறு என்னும் மூன்று ஆறுகள் இணைகின்ற இடத்தில் வடகாடு ஊராட்சியில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணையின் உயரம் 90 அடி ஆகும். 283 ஏக்கர் பரப்பளவில் அமைந்து, 198 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணையாக அமைந்துள்ளது. இந்த அணையின்மூலமாக ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கும், அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் 12 இலட்சம் லிட்டர் தண்ணீர் தினந்தோறும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த அணையின் கொள்ளளவை ஆய்வு செய்வதற்காக சென்னை, பூண்டியில் உள்ள நீரியல் மற்றும் நீர் ஆய்வகத் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டதில், இந்த அணையில் வண்டல் மண் அதிகமாகப் படிந்திருப்பதாகவும், 35 விழுக்காடு கொள்ளளவு குறைந்திருப்பதாகவும் அறிக்கையில் கூறியுள்ளனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அணையை இந்த ஆண்டு தூர் வாரினால், அங்குள்ள விவசாய நிலங்கள் முழுமையாகப் பாசன வசதி பெற முடியும். அதேபோல, ஒட்டன்சத்திரம் பேரூராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்கள் முழுமையான குடிநீர் வசதி பெறும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி, அணையைத் தூர் வார முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பரப்பலாறு அணையினுடைய ஸ்தல வரலாறுபற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னது அத்தனையும் உண்மை. தூர் வாரப்படுமா என்று கேட்டிருக்கிறார். அது பொள்ளாச்சி மண்டலத் தலைமைப் பொறியாளருடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். பரிசீலனையிலிருந்து அறிக்கை வந்த பிறகு, அரசு அது குறித்து என்ன செய்ய வேண்டுமென்பதைப் பிறகு முடிவு செய்யும்.

[2008 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன். (குறுக்கீடு) திரு. அர. சக்கரபாணி, சொல்லுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையிலிருந்து தினந்தோறும் 3 கன அடி நீர் ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்குத் திறந்துவிடப்படுகிறது. திறந்துவிடப்படுகின்ற நீர் விருப்பாச்சி கிராமத்திலே தலையூத்து என்ற இடத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைத்து, அதன் அருகில் ஒரு கிணறு வெட்டப்பட்டு, சுமார் 60,000 பேர் மக்கள் தொகை கொண்ட ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கு தினந்தோறும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஓராண்டிற்கு முன்பாக மின்சாரத் துறை அதிகாரிகள் அந்தத் திட்டத்தை வந்து ஆய்வு செய்து, அந்த அணையின் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம் என்று முடிவு செய்திருக்கின்றனர். தினந்தோறும் 3 கன அடி நீருக்குப் பதிலாக 5 கன அடி நீர் விழுந்தால் அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம் என்று ஆய்வு செய்துள்ளனர். எனவே, மின்சாரம் தயாரிப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. அதேபோல, விவசாயிகளுடைய நிலங்கள் முழுமையாகப் பாசன வசதி பெறுவதற்கும் வாய்ப்பு உள்ளது. ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட அத்தனை பாசனக் குளங்களும் இந்த அணையின்மூலமாகத்தான் நீர் ஆதாரத்தைப் பெறுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே மறுபரிசீலனை செய்து—திட்டத்திற்கான மதிப்பு 12 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள், அதைக்கூட மறு ஆய்வு செய்து, கூடிய விரைவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விருப்பம் எனக்குப் புரிகிறது. நான் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் மறுக்கவேயில்லை. பொள்ளாச்சி மண்டலத்தின் தலைமைப் பொறியாளருடைய பரிசீலனையில் இருக்கிறது. அறிக்கை வந்த பிறகுதான் அரசு அது குறித்து ஆய்வு செய்யும் என்று சொன்னேன். ஆகவே, மறுபரிசீலனை என்பதில்லை. திட்ட மதிப்பு 12 கோடி ரூபாய் என்று சொன்னார். நான் அதையும் சொல்லவில்லை.



2008 மே 7]

திட்ட மதிப்பீடு 12 கோடி ரூபாய் என்று சொல்லவில்லை. பொதுவாக, ஒட்டுமொத்தமாக, தலைமைப் பொறியாளருடைய பரிசீலனையில் இருக்கிறது என்று மட்டும் சொன்னேன். அறிக்கை வரட்டும். வந்த பிறகு pros and cons, இரண்டையும் பார்த்து, எது மக்களுக்குத் தேவையோ, அதை இந்த அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதியில் உள்ள வரதமாநதி அணை, 1978 ஆம் ஆண்டு முதல், சுமார் 5,200 ஏக்கர் நிலங்கள் பாசனப் பயன்பாட்டிற்கு உகந்ததாக உள்ளது. அணையின் கொள்ளளவு 108 கன அடியாகும். அணையின் உள்பக்க அகலம் அதிகரித்துள்ளது. ஆனால், கொள்ளளவு குறையவில்லை. கடந்த 30 ஆண்டு காலமாக நீரில் அடித்து வரப்பட்ட வண்டல் மண் சுமார் 2 இலட்சம் கன மீட்டர் அளவிற்குத் தேங்கி, தூர் வாரவேண்டிய சூழ்நிலை உள்ளது. மழைக் காலங்களில் மழை நீர் வரக்கூடிய நேரங்களில், மூன்றில் ஒரு பங்கு நீர்தான் அணையில் தேக்கப்படுகிறது. இரண்டு பங்கு நீர் வெளியேறிவிடுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதிக அளவு நீரைத் தேக்கம் செய்ய, தூர் வாரப்படுமா அல்லது அணையின் உயரம் உயர்த்தப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பக்கத்தில், silt form ஆகியிருக்கிறது என்று சொல்கிறார். இன்னொரு பக்கத்தில், கொள்ளளவு குறையவில்லை என்று சொல்கிறார். ஆகவே, உண்மையான நிலை என்ன என்பது இன்னும் அவருக்கே சரியாகத் தெரியவில்லை. எனவே, நானே ஒரு அறிக்கையைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் பெய்யும் மழை நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்கவும், நிலத்தடி நீர் அதிகரிக்கவும், பாலாற்றில் மணல் கொள்ளை

[2008 மே 7

போவதைத் தடுக்கவும், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதி வழியாகச் செல்லும் பாலாற்றின் குறுக்கே, குறிப்பாக ஆத்தூர், திம்மாவரம், பாலூர், வில்லியம்பாக்கம் போன்ற பகுதிகளில் தடுப்பணை—check dam—அமைத்து, மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா? மேலும், அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. அதேபோன்று, பாலாற்றின் வழியாக வீணாகச் செல்லும் மழை நீரைத் தடுக்க இந்த முறையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? மேலும், பாலாற்றிலிருந்துதான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், தாம்பரம், MEPZ போன்ற பகுதிகளுக்கும் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறோம். நிலத்தடி நீர் அதிகரிக்க உடனடியாகத் தடுப்பணை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும், எப்போது பணி நடைபெறும் என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், check dam கட்டுவதைப்பற்றியெல்லாம் கேட்டார். அதற்கு, பின்னால் பதில் சொல்கிறேன். முதலில் அவர் ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டும். ஏதோ, மணல் கொள்ளை நடப்பதாகக் கேள்வி நேரத்திலே சொல்லியிருக்கிறார். அது என்ன கொள்ளை என்பதை விவரிக்கட்டும். யார், யார் எப்படிக் கொள்ளையடிக்கிறார்கள் என்பதை நானும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**215—**

## பேருந்து வசதி

***29829—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மே 7]

வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கத்திலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து காவேரிப்பாக்கத்திற்கும் புதிய பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையிலிருந்து காவேரிப்பாக்கம் வழியாக, வேலூர், குடியாத்தம், பேரணாம்பட்டு, ஆம்பூர், திருப்பத்தூர், ஆற்காடு, ஆலங்காயம் மற்றும் சித்தூர் ஆகிய இடங்களுக்கு 8 நிமிட இடைவெளியிலும், அதேபோல, காவேரிப்பாக்கம் வழியாக சென்னைக்கு 8 நிமிட இடைவெளியிலும் பேருந்துகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்பட்டு வருகின்றன. இவையே காவேரிப்பாக்கத்திலிருந்து பயணம் செய்யும் பயணிகளுக்குப் போதுமானவையாக உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கத்திலிருந்து சென்னைக்கு நேரடியாகப் பேருந்து வசதி கேட்டிருந்தேன். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கிருந்து சென்னைக்கு நேரடியாகப் போக்குவரத்து வசதியில்லை. ஆகவே, அரசின் சார்பாக ஏற்பாடு செய்து கொடுத்தால், சோளிங்கர் தொகுதி மக்கள் மட்டுமின்றி, பல்வேறு இடங்களில் பணிபுரிகின்ற மக்களும் பயனடைவார்கள். இந்தியா என்றாலே, முதல் பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் நினைவுக்கு வருவதைப்போல, தமிழகத்திலே போக்குவரத்துத் துறை அமைச்சர் என்று சொன்னாலே, மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்கள்தான் நினைவுக்கு வருவார்கள். அந்த அளவிற்குத் தன்னுடைய துறையிலே, திரு. நேரு என்றாலே நேராகச் செல்லக்கூடியவர் என்று பெயரெடுத்திருக்கின்ற போக்குவரத்துத் துறை அமைச்சர்—இன்னொன்றும் சொல்ல வேண்டும், பாரம்பரியமிக்க காங்கிரஸ் குடும்பத்தில் பிறந்த திரு. நேரு அவர்கள் திராவிட இயக்கத்தில் தீவிரமாக இருந்தாலும்—எங்கள் தொகுதி மக்களின்மேல் கருணை வைத்து, காவேரிப்பாக்கத்திலிருந்து சென்னைக்கு, குறைந்தபட்சம் ஒரு ஏ.சி. வால்வோ பஸ்ஸாவது ஏற்பாடு செய்து தரவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2008 மே 7

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர்-ஆற்காடு-முத்துக்கடை-காவேரிப்பாக்கம்-பூந்தமல்லி-கத்திப்பாரா-பாரிமுனை என்றும், வேலூர்-ஆற்காடு-முத்துக்கடை-காவேரிப்பாக்கம்-பூந்தமல்லி-கோயம்பேடு என்றும் இப்போது 8 நிமிட இடைவெளியில் பேருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும், அந்தப் பகுதிகளில் வால்வோ பேருந்து இயக்குவதற்கான எந்த சாத்தியக்கூறும் இல்லை. சென்னை மாநகரில் பரிட்சார்த்தமாக இப்பொழுது 10 பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு, சென்னை மாநகரில் 20 வால்வோ பேருந்துகள் விடப்படுகின்றன. வெளியூரிலிருந்து வால்வோ பேருந்து இயக்குவதற்கான எந்த சாத்தியக்கூறும் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டும் 3,500 புதிய பேருந்துகள் வாங்கித் தந்திருக்கிறார்கள். எனவே, அங்கிருந்து நல்ல பேருந்துகளாக விடுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏ.சி. வால்வோ பஸ் இயக்க முடியாது என்று சொன்னாலும், புதிய பேருந்துகளையாவது உடனடியாக இயக்க வேண்டும். ஏனென்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே தனியார் பேருந்துகளை இயக்குகின்ற பலர் இருந்தாலும், குறித்த நேரத்தில் இயக்குவதில்லை. இதனால், அந்தப் பகுதி மக்கள் அவதிக்குள்ளாகின்றார்கள். எனவே, அரசின் சார்பாகக் குறித்த நேரத்திலே புதிய பேருந்து வழித்தடங்களை ஏற்பாடு செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொல்லியிருக்கின்றேன். இப்பொழுது இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் 3,500 புதிய பேருந்துகள்



2008 மே 7]

வரவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு நிச்சயமாகப் புதிய பேருந்துகளாக மாற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**216—**

## கட்டட வசதி

***25735—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இது, 100 ஆண்டுகளுக்கு மேலான மிகப் பழமையான கட்டடமாகும். அதே நேரத்திலே, போக்குவரத்துக்கு இடையூறான இடத்திலே அமைந்திருக்கின்றது. வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு சரியான இடத்திலே புதிய கட்டடம் கட்டுவதற்கு வருங்காலத்திலே அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 7

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை நேரிலே சந்தித்து, இந்த அலுவலகம் புதிதாகக் கட்டித் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். அவர்கள் வலியுறுத்தியதையடுத்து அது குறித்து நான் விசாரித்தபோது, அந்த வட்ட அலுவலகம் கட்டப்பட்டு 132 ஆண்டுகள் ஆவதாகத் தெரிய வருகின்றது. அந்தக் கட்டடம் தமிழகத்திலே மிகப் பழமையான முதல் கட்டடம். வருகிற நிதி ஆண்டிலே நிச்சயமாக அந்தக் கட்டடத்தையும் சேர்த்து, புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அவையின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்திலே, R.D.O. இல்லத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல், அவர் வாடகைக் கட்டடத்திலே இருந்து கொண்டிருக்கிறார். அந்தக் கட்டடம் மிகவும் மோசமான இடத்தில் இருக்கின்றது. அதற்கும் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், அனைவருக்குமே வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் முழுமையாக அனைவருக்கும், அவர்கள் குடியிருப்பதற்கு இல்லங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகம் வெள்ளைக்காரர்கள் காலத்திலே கட்டப்பட்ட மிகப் பழமையான ஓட்டுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அந்தக் கட்டடம் பழுதடைந்து, அவ்வப்போது புதுப்பித்து வரப்படக்கூடிய நிலையில் இருந்து வருகிறது. கடந்த 2006-ஆம் ஆண்டில் கேள்வி நேரத்தின்போதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அடுத்த ஆண்டு கட்டாயமாக இது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள். 2007 ஆம் ஆண்டும் முடிந்து, 2008 ஆம் ஆண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நடப்பாண்டிலாவது மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, தமிழ்நாட்டிலே மிகவும் பழுதடைந்துள்ள 43 வட்டாட்சியர் அலுவலகங்கள் 100 ஆண்டுகள் கடந்து இருக்கின்றன, 21 அலுவலகங்கள் 90 ஆண்டுகள் கடந்து இருக்கின்றன. இவற்றிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த ஆண்டு மிகவும் பழுதடைந்த 10 அலுவலகங்களுக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, அவற்றின் கட்டுமானப் பணிகள் தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே, பெரும்பாலும் மிக அவசரமாகக் கட்டப்படக்கூடிய பணிகளை அரசு கவனமாக எடுத்துக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அங்கே இருக்கக்கூடிய அலுவலகங்கள் அத்தனையையும் அந்த அடிப்படையிலே, ஒவ்வொரு ஆண்டும், நீங்கள் பழுதடைந்து இருக்கிறது என்று சொன்னீர்களே, அந்தப் பழுதுகளை நீக்குவதற்கெல்லாம் பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். தமிழ்நாட்டிலே எல்லா வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் தற்காலிகமாகப் பழுது நீக்குவதற்குப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அவர் சொன்ன மாதிரி, 132 வருடங்களான அலுவலகத்திற்குக்கூட ஒவ்வொரு ஆண்டும் 5 இலட்சம் ரூபாயை நாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இந்த ஆண்டுகூட நாகை மாவட்டத்திற்கு ரூ.90 இலட்சம் கொடுத்திருக்கிறோம். அது மாதிரி, பழுதுகள் நீக்கப்படுகின்றன. நிரந்தரமாகப் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்குப் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 7

217—

## தரம் உயர்த்துதல்

***19509—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, ஓரிச்சேரி கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, ஓரிச்சேரி கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட ஓரிச்சேரி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் அவருடைய மூலக்கேள்வியும்கூட. நிலைமை என்னவென்று சொன்னால், அது குறித்த உரிய கருத்துருக்கள் அரசுக்கு இன்னும் வரவில்லை. அதற்குரிய பங்குத் தொகைகூட இன்னும் செலுத்தப்படவில்லையென்று நான் அறிகிறேன். அதற்கு அருகிலேயே இரண்டு பள்ளிகள்—புதுப்பாளையத்திலேகூட ஒரு பள்ளி மூன்று கிலோ மீட்டர் தூரத்திலேயே இருக்கிறது. எனவே, அங்கே



2008 மே 7]

இருக்கக்கூடிய மாணவர்கள், பக்கத்திலே மூன்று கிலோ மீட்டருக்குள்ளாக இருக்கக்கூடிய பள்ளிக்குச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. வரக்கூடிய காலங்களில்—அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப, பிற்காலங்களில் அதுபற்றி நாம் யோசிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

218—

## மரக் கன்று நடுதல்

***29370—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் வனத் துறைமூலம் மரக் கன்றுகளை நட்டுப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் மரக் கன்றுகள் ஏதும் நடப்படவில்லை. தாம்பரம் தொகுதியில் உத்தண்டி முதல் ஒட்டியம்பாக்கம் வரையிலான பகுதியில் மரக் கன்றுகளை நடவு செய்ய இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கத்தை நான் ஏற்றுக்கொண்டு, தாம்பரம் தொகுதியிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக சில இடங்களைப்

[2008 மே 7

பார்வையிட்டார்கள். அப்படிப் பார்வையிட்டதிலே, திருநீர்மலை சாலை என்ற ஒரு சாலையை 50, 60 ஆண்டுகளாகப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். அந்தச் சாலை ஹைவேஸ் சாலையையும், தாம்பரம் நகராட்சி சாலையையும் இணைக்கின்ற சாலை. தாம்பரம் நகராட்சியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தச் சாலையைப் போடமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையைப் போடுவதற்குண்டான உத்தரவு வழங்கவேண்டுமென்றும், அதேபோல கம்யூனிஸ்டு இயக்கத்தினுடைய முதுபெரும் தலைவர், மறைந்த தோழர் ஜீவானந்தம் அவர்கள் தாம்பரம் பகுதியிலே வாழ்ந்தவர். குறிப்பாக, அந்தப் பகுதிக்குக் கஸ்தூரிபாய் நகர் என்ற பெயர் இருக்கிறது. 9-வது வட்டம், 8-வது வட்டம், 7-வது வட்டம், அந்தக் காலத்திலே அங்கே ஒவ்வொரு சாலைக்கும், ஜீவா தெரு, அண்ணா தெரு, ஜாகீர் உசேன் தெரு, சுப்ரமணிய சிவா தெரு, பகத் சிங் தெரு, சிங்காரவேலர் தெரு, வ.உ.சி. தெரு என்று அரசியல் தலைவர்களின் பெயர்களில் 50 ஆண்டு காலமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்க முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். இராஜா, பட்டா வழங்க வனத் துறை அமைச்சரால் எப்படி முடியும்? வனத் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன நிலங்களைத் தனியாருக்குப் பட்டா வழங்குகின்ற உரிமை மாநில அரசுக்கு இல்லை. எனவே, அதை வழங்க முடியாது. ஆனால் அவர் நீண்ட நெடுங்காலமாக இருந்த சாலையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நான் நேரில் பார்த்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். இதில் சில வரைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி அதற்குரிய அந்த வரைமுறைகளைக் கடைப்பிடித்தால், மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்த இடம் மாநில அரசுக்கு மாற்றப்பட்டு, சாலைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.



2008 மே 7]

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், சில திட்டங்களைக் காலத்திற்கு ஏற்ப மாற்றக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 50, 60 ஆண்டுகளுக்கு முன்பாகப் போடப்பட்ட அந்த உத்தரவை—வனத் துறையின் மைய அலுவலகமே தாம்பரத்தில் அதே பகுதியிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆக, இப்போது மக்களுடைய தேவையை உணர்ந்து, 60 ஆண்டு காலம், 70 ஆண்டு காலமாக வாழ்கின்ற அந்த மக்களுக்கு, குறிப்பாக கம்யூனிஸ்டு இயக்கத் தோழர் திரு. ஜீவானந்தம் அவர்கள் அதே பகுதியிலே வாழ்ந்தவர் என்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு அரசு உத்தரவைத் தளர்த்தி, அந்தப் பகுதி மக்களுக்குத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து, அதுபற்றி அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட சிற்றாறு அணை-1, சிற்றாறு அணை-2 பகுதிகளில் ஏராளமான தரிசு பூமி கிடக்கிறது. அந்த பூமியில் மரக் கன்றுகளை நட்டு, செயற்கை வனத்தை உருவாக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 4-வது முறை முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடம் நிதி உதவி பெற்று, கடன் பெற்று,

[2008 மே 7

அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, அதுபோன்று இடம் இருக்குமேயானால், அதை அலுவலர்களிடம் சொல்லி, மரக் கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**219—**

**கால்நடை மருத்துவமனை**

***38716—திரு. எச். வசந்தகுமார்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், மருதகுளம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், மருதகுளம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதகுளத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கள்ளத்தி என்ற கிராமத்திலேதான் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதே மாதிரி, மருதகுளத்திலிருந்து நாங்குநேரிக்கு 15 கிலோ மீட்டர் போனால்தான் ஒரு கால்நடை ஆஸ்பத்திரி இருக்கிறது. அதனாலே அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக மருதகுளத்திற்கு அமைத்துக் கொடுத்தால்தான், அங்கிருக்கிற அந்த விவசாயப் பெருமக்களுக்கும், அங்கே பால் கறந்து



2008 மே 7]

விற்பவர்களுக்கும் உறுதுணையாக இருக்கும். உங்கள் துறையில் நிதி இல்லாவிட்டாலும், முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு, கண்டிப்பாக எங்களுக்கு வாங்கித் தர வேண்டுமென்று நமது சட்டப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கூற்றுப்படி, மருதகுளம் கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 55,000 உள்ளதாலும், மேற்படி ஒன்றியத்தில் கிளை நிலையங்களும் அமையப் பெறாததாலும், தேவையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, உரிய நடவடிக்கையை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** நன்றி, நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி ஜவ்வாதுமலையிலே கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கடந்த 8 ஆண்டுகளாகக் கேட்டு வந்தேன். நம்முடைய அமைச்சரிடத்திலே கேட்டேன், பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். நேற்றைக்குக் கேட்கும்போது, தரம் உயர்த்தித் தரப்படும் என்று சொல்கிறார்கள். இன்னும் அங்கு மருத்துவமனையே இல்லை. ஆகையால், மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். அங்கு 10,000-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு மருத்துவ வசதி செய்ய வேண்டுமென்றால், 40 கிலோ மீட்டர் தூரம் வந்து, திருப்பத்தூரிலே சிகிச்சை செய்ய வேண்டும். ஆகவே, மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்றால், இந்த ஆண்டே அந்த மருத்துவமனையைத் தொடங்க அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிவிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 7

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய துறையின்மூலம் சுமார் 444 கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தி, தரமான மருத்துவ சேவைக்கான கால்நடை மருத்துவர்களைப் பணியமர்த்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, அருகிலே ஏதாவது கிராமத்திலே கிளை நிலையங்கள் இருந்தால் விவரங்களைச் சொல்லுங்கள், தரம் உயர்த்தித் தருகிறோம், 4 கிளை நிலையங்கள்கூட கொடுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். இப்போது அவருடைய ஜவ்வாது மலையிலே அந்தப் பகுதியில் கட்டாயத் தேவை ஏற்படின், பார்வை மையங்களை இந்த அரசு அமைத்துத் தரலாம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய கட்டடத்தை அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டித் தருவாராயின், பார்வை நிலையங்கள் அமைக்கப்படும். அதேபோல அவருடைய தொகுதியில் கிளை நிலையங்களும் தரம் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகள் என்பவை விவசாயத் தொழிலை ஒட்டியவையாகும். அப்படிப்பட்ட கால்நடைகளுக்கு நோய் வரும்போது சில பிரச்சினைகள் எழுகின்றன. ஏனென்றால், கால்நடைகளை வழியிலே இழுத்துக்கொண்டு வரும்போது, சில வழித்தடங்களிலே நெரிசல் பிரச்சினை ஏற்பட்டு, அந்தக் கால்நடைகள் மனிதர்கள்மேல் மோதுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால், கால்நடைகளுக்கு என்று ஒரு நடமாடும் மருத்துவமனையை ஏற்படுத்தினால், ஒரு யூனியனுக்கு ஒரு நடமாடும் மருத்துவமனை இருந்தால்கூட, கிட்டத்தட்ட 10 ஊர்களிலுள்ள கால்நடைகளைக் கவனிக்க முடியும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், நடமாடும் கால்நடை மருத்துவமனையை உருவாக்கி, அதிலே ஒரு டாக்டர், ஒரு கால்நடை ஒரு ஓட்டுநர் என்ற அடிப்படையிலே அது இருந்தால், நிச்சயமாக 10 சிற்றூர்களுக்குச் சென்று கால்நடைகளுக்கு வைத்தியம் செய்ய முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், போக்குவரத்து நெரிசலும் இல்லாமல் இருக்கும். அதனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடமாடும் கால்நடை மருத்துவமனையை அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



2008 மே 7]

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப்போல, உயர் இரகக் கலப்பினப் பசுக்களெல்லாம் நீண்ட தூரம் அழைத்துச் செல்லப்படுகின்றபோது, நோயின் தாக்கம் அதிகரிக்கப்பட்டு அவை இறக்க நேரிடும் சூழ்நிலை உள்ளது. இந்நிலையில், கடந்த ஆண்டு தக்கலைக் கோட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்களும், குடியாத்தம் கோட்டத்திற்குத் திருமதி லதா அவர்களும், தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாகனத்தை வாங்கித் தந்துள்ளார்கள். இந்த அரசு mobile unit, அதாவது நடமாடும் கால்நடை மருந்தகத்தைத் தொடங்கியிருக்கின்றது. அதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் துறைக்கு ஒத்துழைப்புத் தருவாராயின், உடனடியாக இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்:

**220—**

**வணிக வளாகம்**

***35108—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் மற்றும் கோத்தகிரியில் தாட்கோமூலம் வணிக வளாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கோத்தகிரியில் தாட்கோமூலம் வணிக வளாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2008 மே 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சுமார் 35 சதவீதம் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்றார்கள். அவர்களில் 85 சதவீதம் பேர் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். இம்மாவட்டத்தின் முக்கிய நான்கு நகரங்களில் குன்னூர், கோத்தகிரி ஆகிய இரண்டு நகரங்கள் அடங்கும். ஆதி திராவிட மக்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறவும், வணிக நடவடிக்கையில் ஈடுபடவும், குன்னூர் நகராட்சியுடன் இணைந்து பேருந்து நிலையத்தின் முதல் தளத்திலும், கோத்தகிரி பேரூராட்சியின் மார்க்கெட் பகுதியிலும் தாட்கோமூலம் வரும் நிதியாண்டிலாவது வணிக வளாகம் கட்டித் தரப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாக 20 மாவட்டங்களில் 81 வணிக வளாகங்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் 713 கடைகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் 197 கடைகளை வாடகைக்கு எடுக்க யாருமே முன்வராததால் காலியாக உள்ளன. 49 கடைகள் பேரூராட்சியின்மூலம் கடன் அடிப்படையில் விற்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 467 கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. ஆனால், வாடகைக்கு எடுத்த நபர்கள் யாரும் வாடகையைத் தராமல், இப்போது வாடகைத் தொகை நிலுவையில் இருக்கின்றது. வாடகைத் தொகை அதிக அளவில் நிலுவையில் உள்ளதால், தற்போது தாட்கோ மூலம் வணிக வளாகம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. 197 கடைகளையும் வாடகைக்கு விடுவதற்கான முயற்சிகள் ஆதி திராவிடர் நலத் துறையில் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குன்னூர் தொகுதியில் வணிக வளாகம் கட்டவேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். வாடகைக்கு விடப்பட்ட பிறகு, சாத்தியக்கூறுகள் இருப்பின், எதிர்காலத்தில் அது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.



2008 மே 7]

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றிய புள்ளிவிவரங்களைத் தெளிவாக எடுத்துரைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதே வேளையில், நீலகிரி மாவட்டம் மலைப் பிரதேசம் என்ற காரணத்தாலும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாரிசுகள் எதிர்காலத்தில் வணிக நடவடிக்கையில் ஈடுபடும்பொருட்டும், இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, மலைப் பிரதேசத்திற்கு வணிக வளாகம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் அருகிலுள்ள கோவை மாவட்டத்தில் மட்டும் 90 கடைகள் கட்டப்பட்டுள்ளன. அந்த 90 கடைகளில் 28 கடைகளில் மட்டுமே வாடகைக்கு இருந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களின் வாடகைத் தொகையும் 13 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிலுவையில் இருந்துகொண்டிருக்கின்றது. மேலும் 42 கடைகளில் இன்று வரை யாரும் வாடகைக்கு வராமல் இருக்கின்றார்கள். எனவே, கடைகளெல்லாம் வாடகைக்கு விடப்பட்ட பிறகு, எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தாட்கோ மூலமாக வணிக வளாகக் கட்டடங்கள் கட்டவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, 810 கடைகள் கட்டப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தார்கள். அவற்றில் 795 கடைகள் கட்டப்பட்டதாகச் செய்தி இருக்கின்றது. அதை ஏன் நாம் தொடரவில்லை? இனி வருங்காலத்தில் வணிக வளாகக் கட்டடங்கள் கட்டுவது தொடருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-3-1995 ஆம் நாளில் ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக, அரசாணை எண் 32-ல், 30 வணிக வளாகங்கள் கட்ட ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. மேலும், 20-4-1995 அன்று ஆதி திராவிடர் நலத் துறை அரசாணை எண் 91-ன்கீழ், 51 வணிக வளாகங்கள், கட்ட சுமார் 2 கோடியே 55 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இந்த இரண்டு அரசாணைகளையும் சேர்த்து 81 வணிக வளாகங்கள் கட்ட ஆணையிடப்பட்டது. 81 வணிக வளாகங்கள், 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 810 கடைகள் கட்ட ஆணையிடப்பட்டு, அவற்றில் 713 கடைகள் கட்டப்பட்டு, அவற்றில் 97 கடைகளுக்குப் பணித் தளங்கள் கிடைக்காமல், அந்தக் கடைகள் கட்டப்படாமல் இருக்கின்றன. 15-4-1998 அன்றுள்ளபடி, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக 664 கடைகள் கட்டப்பட்டதில் 197 கடைகளை வாடகைக்கு எடுக்க இதுவரை யாரும் முன்வரவில்லை. கடைகள் வாடகைக்கு விடப்பட்டவர்களும் வாடகை செலுத்தாமல், வாடகைத் தொகை நிலுவையாக இருக்கின்றது. வாடகை நிலுவை இருப்பதோடு மட்டுமல்லாமல், 197 கடைகளை வாடகைக்கு எடுக்க யாரும் முன்வரவில்லை. இந்த 197 கடைகளை வாடகைக்கு எடுப்பதற்கு யாராவது முன்வந்தால், வாடகை பாக்கியைத் திரும்பப் பெற்றுவிட்டால், ஆதி திராவிடர் நலத் துறை தாட்கோ மூலம் வருமானம் ஈட்டும். வருமானம் கிடைக்கும்பட்சத்தில், அந்தக் கடைகளை வாடகைக்கு எடுக்கும்பட்சத்தில், எதிர்காலத்தில் நல்ல வருமானம் ஈட்டக்கூடிய நிலை இருந்தால், இது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் கட்டப்படக்கூடிய வணிக வளாகங்கள் வாடகைக்கு எடுக்கப்படவில்லை என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தாட்கோ மூலம் கட்டப்படக்கூடிய வணிக வளாகங்கள் எல்லாம் ஊரின் வெளிப்புறங்களிலே கட்டப்படக்கூடிய காரணத்தால், வாடகைக்கு எடுக்கமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இனிமேல் கட்டப்படக்கூடிய வணிக வளாகங்கள் ஊரினுடைய மையப் பகுதியிலே





கட்டப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வளாகங்கள் 15-3-1995-ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முந்தைய ஆட்சியில் வணிக வளாகங்களை வெளிப்புறத்தில் கட்டியதால் யாரும் வாடகைக்கு எடுக்கமுடியாத சூழ்நிலை இப்போது இருக்கிறது. எதிர்காலத்தில் வணிக வளாகங்கள் இத்துறையின்மூலம் கட்டப்பட்டால், உரிய இடத்தில், தகுந்த இடத்தில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
## (பட்டியல் 7)@

### தரம் உயர்த்துதல்

**வினா எண் 26233—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர்—கம்பைநல்லூர் காவல் நிலையங்களைத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் நிலையங்கள் தொடர்பாக எழக்கூடிய கோரிக்கைகள் அனைத்தும், அவ்வப்போது எழக்கூடிய தேவையையும், நிலவும் சூழலையும், கோரிக்கையின் தன்மையையும் கருத்தில் கொண்டு, முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும்.

---

@இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

மொரப்பூர் காவல் நிலையம் அரூர் உட்கோட்டத்தில் இயங்கி வருகிறது. கம்பைநல்லூர் காவல் நிலையம் தருமபுரி உட்கோட்டத்தில் இயங்கி வருகிறது. இந்நிதியாண்டில் 12 காவல் நிலையங்களைத் தரம் உயர்த்துவதாக அறிவிப்புச் செய்து, அதற்கான அரசின் ஆணை 12-6-2007 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மொரப்பூர்—கம்பைநல்லூர் காவல் நிலையங்களைத் தரம் உயர்த்துவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

**2—**

**கட்டட வசதி**

**வினா எண் 30380—திரு. கோ. அரி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டவும், கூடுதலாக தீயணைப்பு வண்டி வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு கட்டடம் கட்ட ஏதுவாக திருத்தணி வட்டம், பட்டாபிராமபுரம் கிராமப் புல எண் 40/3-ல் மொத்தம் 4.70.0 எக்டேர் ஏரிப் புறம்போக்கு நிலத்தில் 0.40 எக்டேர் நிலம் நில மதிப்பீடு செய்து வருவாய்த் துறையிடமிருந்து மாற்றம் செய்து பெறப்பட்டதும் நிதிநிலைக்கேற்ப கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், திருத்தணி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு அக்டோபர் 2007-ல் புதிய நீர்தாங்கி ஊர்தி ஒன்றும், வாடியா பம்ப் மற்றும் மிதவை பம்ப் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தேவையைக் கருதி உதவிக்கு அழைத்திட ஏதுவாக திருவள்ளூர் கோட்டத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட உபரி நீர்தாங்கி வண்டி திருத்தணிக்கு அருகில் உள்ள திருவள்ளூர் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. திருத்தணிப் பகுதியில் பெறப்படும் வருடாந்திர தீ விபத்து அழைப்புகள் குறைவாக உள்ளதால், இப்பகுதியில் பெறப்படும் தீ விபத்து அழைப்புகளை இந்நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள ஊர்தியினைக்கொண்டே சமாளிக்க இயலும்.



எனவே, இந்நிலையத்திற்கு கூடுதலாக தீயணைப்பு வண்டி வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**3—**

**கட்டட வசதி**

**வினா எண் 33334—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. மேலும், இவ்வுட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளருக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்ட தற்போது நிலம் கைவசமில்லை. நிலம் ஆர்ஜிதம் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிலம் ஆர்ஜிதம் செய்த பிறகு, மானாமதுரை உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளருக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**4—**

**தங்குமிடம்**

**வினா எண் 34131—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தீயணைப்பு நிலைய வீரர்களுக்கு தங்குமிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தஞ்சாவூர் கோட்டம், பட்டுக்கோட்டை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம், அரசுக்குச் சொந்தமான அரை நிரந்தரக்

கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போதைய பழைய கட்டடத்தினை இடித்துவிட்டு, அதற்குப் பதிலாக புதிய நிரந்தரக் கட்டடம், பணியாளர்கள் தங்குமிட வசதியுடன் கட்டப்பட, பொதுப் பணித் துறையினரிடமிருந்து மதிப்பீடுகள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதிப்பீடுகள் பெறப்பட்டதும், அரசின் நிதிநிலைக்கேற்ப பட்டுக்கோட்டை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு பணியாளர்களுக்கான தங்குமிட வசதியுடன்கூடிய புதிய நிரந்தரக் கட்டடம் கட்டித் தருவது குறித்து உரிய தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

5—

## உதவி ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 34191—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர், ஆய்வாளர், உதவி ஆய்வாளர் அலுவலகம் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் காவல் நிலையம் அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திலேயே ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளருக்கு என அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளதால், தனியாக அலுவலகம் கட்டுவதற்கான அவசியம் தற்பொழுது எழவில்லை.

6—

## புறக்காவல் நிலையம்

**வினா எண் 34429—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது உள்ள புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். 2007-08 ஆம் ஆண்டு காவல் துறை மானிய கோரிக்கையின்போது 12 புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் முழுக் காவல் நிலையமாக நிலை உயர்த்துவதாக அறிவிப்புச் செய்து, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அரசின் கொள்கை முடிவின்படி இப்பொருள் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 39287—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தி காவல் நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தி காவல் நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டுவது தொடர்பான கருத்துருவினை, காவல் துறை தலைமை இயக்குனர் அவர்களிடமிருந்து பெற்று, பரிசீலனை செய்து, நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

## கட்டட வசதி

**வினா எண் 39294—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை, காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த உட்கோட்டத்திற்கு தனியாக அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டுவதற்கு தகுந்த இடம் தேர்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இடம் தேர்வு மற்றும் நில மாற்றம் செய்யப்பட்டவுடன், காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களிடமிருந்து தக்க செயற்குறிப்புகள் பெறப்படும்போது, நிதி நிலைமைக்கேற்ப, அக்கருத்துருவினைப் பரிசீலனை செய்து, அதற்கேற்ப தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**9—**

## விளையாட்டுப் போட்டி

**வினா எண் 39311—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு ஆண்டுக்கொரு முறை விளையாட்டுப் போட்டி நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2007 ஆம் ஆண்டில் மண்டல அளவில் அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட கோட்டங்களிடையே விளையாட்டுப் போட்டிகள் மாநிலம் முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதன்படி தென்மண்டலத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம் அடங்கிய இராமநாதபுரம்-சிவகங்கை கோட்டப் பணியாளர்கள் பங்கேற்ற மண்டல விளையாட்டுப் போட்டிகள் 26-9-2007 முதல் 28-9-2007 முடிய





நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. எனவே, சிவகங்கை மாவட்ட தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கென தனியே ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்த வேண்டிய நிலை எழவில்லை.

**10—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 39312—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் தீயணைப்பு நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் கோட்டம், பூவந்தி பகுதியைச் சுற்றி மானாமதுரை, சிவகங்கை மற்றும் மேலூர் ஆகிய இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், பூவந்தி பகுதியில் பெறப்படும் வருடாந்திர தீ விபத்து அழைப்புகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதாலும், தற்போது பூவந்தி பகுதியில் பெறப்படும் தீ விபத்து அழைப்புகளை இப்பகுதியினைச் சுற்றிச் செயல்பட்டு வரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் உள்ள ஊர்திகளைக்கொண்டே சமாளிக்க இயலுமென்பதால், இங்கு புதியதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

**11—**

## கூடுதல் தீயணைப்பு வண்டிகள்

**வினா எண் 39313—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தீயணைப்பு நிலையத்திற்கு தடுப்புச் சுவர், பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதி, நோயாளர் ஊர்தி மற்றும் கூடுதல் தீயணைப்பு வண்டி .ள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையத்தைச் சுற்றிலும் நான்கு புறமும் நிரந்தரமான தடுப்புச் சுவர் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. நிலையக் கட்டடம் கட்டியதுபோக மீதமுள்ள நிலத்தில் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 17 குடியிருப்புகள் கட்ட வசதி உள்ளது. மேலும், அரசின் நிதிநிலையினைக் கருத்தில் கொண்டு படிப்படியாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, நிதிநிலைக்கேற்ப உரிய தருணத்தில் மானாமதுரை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதி ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், மானாமதுரை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஒற்றை ஊர்திகொண்ட நிலையமாகும். மானாமதுரையில் உள்ள அரசு மருத்துவமனையில் ஒரு நோயாளர் ஊர்தியும், தனியார் மருத்துவமனையில் இரண்டு நோயாளர் ஊர்திகளும் உள்ளன. மேலும், மேற்கண்ட நிலையத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் பெறப்பட்ட மீட்புப் பணி அழைப்புகள் மிகவும் குறைவாக உள்ளதால், அவசரக் காலங்களில் மீட்புப் பணி அழைப்புகளை மானாமதுரை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் உள்ள நீர்தாங்கி வண்டியினைக் கொண்டே மேற்கொள்ள இயலும் என்பதாலும், மானாமதுரை அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள நோயாளர் ஊர்திகளைக் கணக்கில்கொள்ளும்போதும், இந்நிலையத்திற்கு நோயாளர் வண்டி ஒப்பளிக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

மானாமதுரை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஏற்கெனவே ஒரு நீர்தாங்கி வண்டி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், இந்நிலையத்தில் கடந்த மூன்றாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தீ விபத்து அழைப்புகளின் புள்ளிவிவரங்களை நோக்கும்போது, மாதாந்திர சராசரி தீ விபத்து அழைப்புகளின் எண்ணிக்கை 3-க்கும் குறைவாக உள்ளது. மேலும், இந்நிலையத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் சிவகங்கையில் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு



வருவதால், அவசரக் காலங்களில் அருகில் உள்ள சிவகங்கை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலுள்ள ஊர்தியினை தீயணைக்கும் பணியில் ஈடுபடுத்த இயலும் என்பதால், மானாமதுரை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கூடுதலாக தீயணைப்பு ஊர்தி வழங்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

**12—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 3934—செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் சார்நிலைக் கருவூலம் சொந்தக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:**

(அ) 2007-2008 நிதியாண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் சங்கராபுரம் சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.33.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) சார்நிலைக் கருவூலம், சங்கராபுரத்திற்கு புதிய கட்டடத்திற்கான கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு, தற்போது மேற்கூரை அடிப்புறம் வரையிலும் மற்றும் சுற்றிலும் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

**13—**

## நவினமயமாக்குதல்

**வினா எண் 15538—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள கருவூலத்தை நவீனமயமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மாவட்டக் கருவூலத்தின் மின் மற்றும் கட்டட உள் அமைப்பு தொடர்பான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

**14—**

## கணினிமயமாக்குதல்

**வினா எண் 15539—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தலைமைக் கருவூலத்துடன் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கருவூலங்களையும் கணினிமயமாக்கி இணைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கருவூலம் மற்றும் அனைத்து சார்நிலைக் கருவூலங்களும் நவீனமயமாக்கப்பட்டு கணினிமூலமாக மாவட்டக் கருவூலத்துடன் இணைப்பதற்கு அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. (அரசு ஆணை நிலை எண் 146, நிதித் துறை, நாள் 20-3-2006) அரசு ஆணையின்படி ஒப்பந்தம் பெறப்பட்டு, மாவட்டக் கருவூலம், கோவை, கோவை (தெற்கு) சார்நிலைக் கருவூலம் ஆகிய கருவூலங்களில் கட்டுமானப் பணி மற்றும் மின் தொடர்பான பணி முடிக்கப்பட்டுள்ளது. மேட்டுப்பாளையம் சார்நிலைக் கருவூலத்தில் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது மற்றும் மின் தொடர்பான பணி முடிக்கப்படவுள்ளது. பொள்ளாச்சி சார்நிலைக் கருவூலத்தில் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது; மின் தொடர்பான பணி இன்னும் தொடங்கப்படவில்லை. அவிநாசி சார்நிலைக் கருவூலம் மற்றும் உடுமலைப்பேட்டை சார்நிலைக் கருவூலம் ஆகிய கருவூலங்களில் கட்டுமானப் பணி மற்றும் மின் தொடர்பான பணி முடிக்கப்படவுள்ளது. பல்லடம் சார்நிலைக் கருவூலம், திருப்பூர்



சார்நிலைக் கருவூலம் மற்றும் வால்பாறை சார்நிலைக் கருவூலம் ஆகிய கருவூலங்களில் கட்டுமானப் பணி முடிக்கப்படவுள்ளது; மற்றும் மின் தொடர்பான பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. அனைத்து கட்டுமான மற்றும் மின் தொடர்பான பணிகள் முடிவடைந்தவுடன், தயார் நிலையில் உள்ள கணிப்பொறிகள் மாவட்ட மற்றும் சார்நிலைக் கருவூல அலுவலகங்களில் பொருத்தப்பட்டு, நவீனமயமாக்கும் பணி முடிவடையும்.

**15—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 42951—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, பள்ளிப்பட்டு சார் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:**

ஆம், பள்ளிப்பட்டு சார் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் சுமார் 15 சென்ட் நிலம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**16—**

## தனி மயானம்

**வினா எண் 6112—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, எம்.ஜி.ஆர். காலனிக்குத் தனி மயானம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

[2008 மே 7

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, எம்.ஜி.ஆர். காலனிக்குத் தனி மயானம் அமைப்பதற்கு மேற்படி காலனியில் சுற்றியுள்ள பகுதியில் அரசு புறம்போக்கு நிலமோ அல்லது நகராட்சிக்குச் சொந்தமான இடமோ ஏதும் இல்லை. மேலும், எம்.ஜி.ஆர் காலனியில் வாழும் பொதுமக்கள் தற்பொழுது உசிலம்பட்டி கண்மாய் அருகில் வடக்குப் பகுதியில் உள்ள மயானத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

**17—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 8986—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களுக்குத் தொகுப்பு மாடி வீடுகள் கட்டித் தர அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகராட்சியின் துப்புரவுப் பணியாளர்களுக்குத் தொகுப்பு மாடி வீடுகள் கட்டித் தர கருத்துரு எதுவும் இல்லை.

**18—**

## கட்டட வசதி

**வினா எண் 10578—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 7]

(அ) கொளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோவில் ஒன்றியம், உறவிக்காடு கிராமத்தில் சுய உதவிக் குழு கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், செட்டிபட்டி ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு சுய உதவிக் குழு கட்டடம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. எனவே, ஒரே ஊராட்சியில் இரண்டாவது சுய உதவிக் குழு கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

**19—**

## கடனுதவி

**வினா எண் 15520—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு ஊதுபத்தி தயாரிக்க கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, பெண்கள் சுய உதவிக் குழுவிற்கு, ஊதுபத்தி தயாரிக்க, குழு உறுப்பினர்கள் வட்டார வளர்ச்சி அலுவலரை நேரில் அணுகினால் வங்கிமூலம் கடனுதவி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

[2008 மே 7

20—

## மின் விளக்கு வசதி

**வினா எண் 17325—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, புதியிருப்புவிளை கிராமத்திற்கு மின் விளக்கு வசதி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, புதியிருப்புவிளை கிராமத்தில் ஒரு தெரு மட்டும்தான் உள்ளது. அங்கு 5 தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

21—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 18853—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, தொட்டிப்பாளையம் கிராமம், சத்யா நகர், மேல்காலனி, வாய்க்கால்மேடு, குருப்பநாயக்கன் பாளையம் கிராமம், வேதகிரிபுரம், சின்னப்புலியூர் கிராமம், கரட்டுப்புதூர், ஒரிச்சேரி கிராமம், இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



2008 மே 7]

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, தொட்டிப்பாளையம் கிராமம், சத்யா நகர், மேல்காலனி, வாய்க்கால்மேடு, குருப்பநாயக்கன்பாளையம் கிராமம், வேதகிரிபுரம், சின்னப்புலியூர் கிராமம், கரட்டுப்புதூர், ஒரிச்சேரி கிராமம், இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகள் பின்வருமாறு தற்போது பழுதுநீக்கம் செய்யப்பட்டுள்ளன:

| *சிற்றூராட்சி பெயர்.* | *குடியிருப்பு பெயர்.* | *வீடுகளின் எண்ணிக்கை.* | *பழுதுநீக்கம் செய்யப் பட்டது.* | *பழுதுநீக்கம் செய்யப் பட்ட ஆண்டு.* | *பழுதுநீக்க செலவிடப் பட்ட தொகை ரூ.* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| தொட்டிப் பாளையம் | 1. சத்யா நகர்<br>2. மேல்காலனி<br>3. வாய்க்கால்மேடு | ஜம்பை பேரூராட்சி மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்டுள்ளது | | | |
| குருப்பநாயக்கன் பாளையம் | வேதகிரிபுரம் | 12 | 12 | 2007–2008 | 1,20,000/– |
| சின்னப்புலியூர் | கரட்டுப்புதூர் | 25 | 25 | 2007–2008 | 2,50,000/– |
| ஒரிச்சேரி | இந்திரா நகர் | 47 | 47 | 2005–2006 | 4,70,000/– |

22—

## தடுப்புச் சுவர்

**வினா எண் 23491—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு ஊராட்சி, லட்சுமாயூர் நடுநிலைப் பள்ளிக்குத் தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு ஊராட்சியில் லட்சுமாயூர் நடுநிலைப் பள்ளிக்கு

100 மீட்டர் நீளத்தில் தடுப்புச் சுவர் அமைக்க ரூ. 1.50 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணிக்கு நமக்கு நாமே திட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு பொதுமக்கள் பங்குத் தொகை பெறப்படும்பட்சத்தில், இப்பணியினைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

23—

**நிதியுதவி**

**வினா எண் 32877—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, காணை மற்றும் முகையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்மூலம் விவசாயிகளுக்குக் கறவை மாடுகள் வாங்க நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், காணை மற்றும் முகையூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்குக் கறவை மாடுகள் வாங்க நிதி உதவி வழங்க உள்ளாட்சித் துறைத் திட்டங்களில் வழிவகை இல்லை.

24—

**கட்டட வசதி**

**வினா எண் 32957—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ஏரிப்பாளையம் கிராமம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் கூடுதலாக ஒரு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூர் ஊராட்சி, ஏரிப்பாளையம் கிராமத்தில் 5 ஆம் வகுப்பு வரையிலான பள்ளிக்கட்டடம்



உள்ளது. அப்பள்ளியில் தற்போது உள்ள கட்டடம் போதுமானதாக உள்ளதால் கூடுதல் கட்டடம் தேவைப்படவில்லை.

25—

**கட்டட வசதி**

**வினா எண் 33713—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, காணை ஒன்றியம், கொரளூர் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கஞ்சனூர் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. கஞ்சனூர் ஊராட்சியில் குக்கிராமமான கொரளூர் கிராமத்தில் மேலும் ஒரு சுய உதவிக் குழு கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

26—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 42083—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, கோம்பைபட்டி ஊராட்சி, மேல் கோவில்பட்டி அம்பேத்கர் நகரில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மே 7

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். நிலக்கோட்டை தொகுதி, கோம்பைபட்டி ஊராட்சியில் மேல்கோவில்பட்டி இந்திரா நகர் என்ற குடியிருப்பு, 2006 மறு ஆய்வின்படி புது குடியிருப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இக்குடியிருப்பில் அம்பேத்கர் நகர் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பிற்கு 2008-2009 ஆம் ஆண்டில் மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய தனி மின் விசைத் திட்டம் அமைக்கும்பொருட்டு, நீராதாரம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் பின்னர், இங்கு ஒரு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படும்.

**27—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 6794—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமம், கொட்டாய்காரன் வளவு, மேட்டுக்காரனூர், பொந்தனூர், செலப்பன்காடு பகுதிகளில் உள்ள மக்களுக்கு பொந்தனூரை மையமாக வைத்து புதிய நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கொட்டாய்காரன் வளவு கிராமத்தில் மொத்தம் 21 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்குடும்ப அட்டைதாரர்கள் இக்கிராமத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தூரமே உள்ள சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையால் 570 குடும்ப அட்டைகளுடன் நடத்தப்பட்டு வரும் ஒண்டிக்கடை பகுதிநேரக் கடையில் அவர்களுக்கான அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். மேலும், மேட்டுக்காரனூர் கிராமத்தில் 3 குடும்ப அட்டைகளும், பொந்தனூர் கிராமத்தில் 25 குடும்ப அட்டைகளும், செலப்பன்காடு கிராமத்தில் 5 குடும்ப அட்டைகளும் உள்ளன. மேற்படி மூன்று கிராம குடும்ப அட்டைதாரர்களும், சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையால் 1 கிலோ மீட்டர் தொலைவில் 337 குடும்ப அட்டைகளைக்கொண்டு நடத்தப்பட்டு வரும் கரையானூர் முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து அவர்களுக்கான பொருட்களைப் பெற்று வருகின்றனர்.





எனவே, இந்நேர்வில் பகுதிநேரக் கடை அமைக்க அரசு விதித்துள்ள நிபந்தனைகளில், அமைக்கவிருக்கும் பகுதிநேரக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இணைக்கப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையும், இரு நியாய விலைக் கடைகளுக்கிடையே குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் பூர்த்தியாகாத நிலையில், பொந்தனூரில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**28—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 10619—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரம், 19-வது வார்டு பகுதிக்கு புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையால், எடப்பாடி நகரத்தில் அங்களாம்மன் கோயில் தெருவில் 989 குடும்ப அட்டைகளும், கடைவீதி கடையில் 1,070 குடும்ப அட்டைகளும் கொண்டு இரண்டு முழுநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. எடப்பாடி நகரம் 19-வது வார்டு, நைனாம்பட்டி பகுதியில் மூன்று தெருக்கள் அடங்கியுள்ளன. 1. புதுப்பேட்டை தெருவில் 424 குடும்ப அட்டைகளும், 2. பழையபேட்டை தெருவில் 152 குடும்ப அட்டைகளும், 3. காந்திநகர் ரோட்டு தெருவில் 162 குடும்ப அட்டைகளும், ஆக மொத்தம் 738 குடும்ப அட்டைகள் கடைவீதி நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. நைனாம்பட்டியிலிருந்து (19-வது வார்டு) கடைவீதி நியாய விலைக்கடை ½ கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்நிலையில், தற்போது நடைமுறையிலுள்ள அரசு விதிகளின்படி 19-வது வார்டு நைனாம்பட்டி பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 மே 7

29—

### கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 17921—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்ட புளி உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்ட புளி உற்பத்தியாளர்களுக்கென தனியே கூட்டுறவுச் சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஏனெனில், தருமபுரி மாவட்டத்தில் அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாக்களையும், மொரப்பூர் வட்டாரத்தையும் விவகார எல்லைகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பெண்ணாகரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், தருமபுரி, பெண்ணாகரம் மற்றும் பாலக்கோடு தாலுகாக்களை எல்லைகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அதன் நிதிநிலைமை சீரழிந்த காரணத்தினால், அக்கூட்டுறவு விற்பனைச் சங்கம் தற்போது செயலிழந்துள்ளது. அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் புளி உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, அவர்களிடமிருந்து உற்பத்தியாகும் புளியை நல்ல விலைக்குக் கொள்முதல் செய்து, வியாபார நடவடிக்கைகளைச் செய்து வருகிறது. பெண்ணாகரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் புளி உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து, வியாபாரம் செய்யக்கூடிய உள்ளாற்றல் இருப்பினும், அவ்விற்பனைச் சங்கத்தின் நிதிநிலைமையினால் அவ்வியாபார நடவடிக்கையைச் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் தற்போது அவ்விற்பனைச் சங்கத்தில் இல்லை. மேலும், பெண்ணாகரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நிதி ஆதாரங்களைப் பெருக்கி, இதற்கென தனியாக கூடுதல் ரொக்கக் கடன், நிதி வசதி ஏற்படுத்திக் கொடுத்து, நலிவடைந்த அவ்விற்பனைச் சங்கத்தினை செயல் திறனுள்ள சங்கமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில், தருமபுரி மாவட்டத்திற்கென வேறு ஒரு புதிய கூட்டுறவு விற்பனைச் சங்கம் புளி உற்பத்தியாளர்களுக்கென அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.



2008 மே 7]

30—

### நியாய விலைக் கடை

**வினா எண் 34972—திரு. பி. தங்கமணி, திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. ல. ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. கோ. அரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு தொகுதி, ஆலாம்பாளையம் பேரூராட்சி, அலமேடு பகுதியில் நியாய விலைக் கடை கட்டப்பட்டு வருவதை விரைந்து முடிக்க அரசு அவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு தொகுதி, ஆலாம்பாளையம் பேரூராட்சியின் அலமேடு பகுதியில் திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 9-7-2007 முதல் அலமேடு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

31—

### வேலைவாய்ப்பு

**வினா எண் 43666—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னாள் படைவீரர்களின் விதவைகளுக்கு கல்வித் தகுதிக்கேற்ப அரசுத் துறையில் வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

போரில் வீரமரணமடைந்த படைவீரர்களின் விதவைகள்/படைப் பணியில் இறந்த படைவீரர்களின் விதவைகள் ஆகியோருக்கு கல்வி தகுதிக்கேற்ப, அரசுத் துறையில் வேலைவாய்ப்பு வழங்குவது

தொடர்பாக மேற்குறித்த வினா எழுப்பப்படுவதாக இருந்தால், அதற்குக் கீழ்க்காணும் பதில் தெரிவிக்கப்படுகிறது:

"போரில் வீரமரணம் அடைந்த/ஊனமுற்ற மற்றும் படைப் பணியில் பணிபுரியும் காலத்தின்போது இறந்த படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கு அரசாணை நிலை எண் 1218, பொது (முன்னாள் படைவீரர்)த் துறை, நாள் 3-09-1999-ல் வழிவகை உள்ளது. இந்த அரசாணையின்படி 143 வாரிசுதாரர்களுக்கு பல்வேறு அரசுத் துறைகளில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2006-க்கு முன்னர் போரில் வீரமரணம் அடைந்த/படைப் பணியில் பணிபுரியும் காலத்தின்போது உயிரிழந்த படைவீரர்களின் விதவைகள் மற்றும் ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம், அவர்களது கல்வித் தகுதிக்கேற்ப அனைத்து பிரிவுகளிலும் (A, B, C & D) வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அரசாணை நிலை எண் 61, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (Q1)த் துறை, நாள் 19-7-2006-ல் கருணை அடிப்படையில் பணி நியமனம், குரூப் சி மற்றும் டி பிரிவுகளில் மட்டுமே வழங்கிட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

படைப் பணியிலிருந்து விலகியபின் மரணமடைந்த படைவீரர்களின் விதவைகளுக்கு கல்வித் தகுதிக்கேற்ப அரசுத் துறையில் வேலைவாய்ப்பு வழங்க விதிமுறைகளில் வழிவகையில்லை. எனினும், அரசாணை நிலை எண் 1161, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்)த் துறை, நாள் 22-11-1984-ல் முன்னாள் படைவீரரின் மனைவி, மகன் அல்லது மகள் ஒருவருக்கு முன்னாள் படைவீரர் வேலை வாய்ப்பிற்கு முன்னுரிமைச் சான்றினைப் பெற்றுக்கொள்ளாத தருணத்தில், இவர்களில் ஒருவருக்கு வேலைவாய்ப்பிற்கு முன்னுரிமைச் சான்று வழங்கலாம் என உள்ளது. இந்த அரசாணையின்படி 2,663 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு வேலைவாய்ப்பிற்கு முன்னுரிமைச் சான்று மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது. இந்த முன்னுரிமைச் சான்றின் அடிப்படையில் ஆசிரியர் தேர்வாணையத்தின்மூலம் 316 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது."





மேற்குறிப்பிட்ட அனைத்து விவரங்கள்மூலம் முன்னாள் படைவீரர்களின் விதவைகளுக்கு அவர்களின் கல்வித் தகுதிகேற்ப வேலைவாய்ப்பு வழங்க இயலும்.

**32—**

## தொழிற்சாலை

**வினா எண் 11232—திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை பகுதியில் விவசாயம் தொடர்பான தொழிற்சாலை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

குளித்தலை பகுதியில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலை துவங்குவது தொடர்பாக வேளாண்மைத் துறை சார்பாக நடவடிக்கை ஏதுமில்லை.

**33—**

## கதிர் அடிக்கும் களம்

**வினா எண் 13600—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நவத்தாவுக்கிராமம், மிளகனூர், தெற்குச் சந்தனூர் ஆகிய கிராமங்களில் கதிர் அடிக்கும் களம் புதிதாகக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, நவத்தாவுக்கிராமம், மிளகனூர், தெற்குச் சந்தனூர் ஆகிய கிராமங்களில் 2008-2009 ஆம்

ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் கதிரடிக்கும் களம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**34—**

## விற்பனை நிலையம்

**வினா எண் 44937—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மண்புழு உரம், இயற்கை பூச்சி விரட்டிகள், ஊக்கிகளை விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மண்புழு உரம், இயற்கை பூச்சி விரட்டிகள், ஊக்கிகளை விற்பனை செய்ய அரசிடம் தற்போதைக்கு திட்டம் ஏதும் இல்லை.

இயற்கை வேளாண்மையின் முக்கிய நோக்கம், விவசாயிகள் தங்கள் பண்ணைகளிலேயே அனைத்து இடுபொருட்களையும் உற்பத்தி செய்து, பயிர் சாகுபடி மேற்கொள்வதாகும். எனவே, அனைத்து இடுபொருட்களையும் விவசாயிகள் தங்கள் பண்ணைகளிலேயே உற்பத்தி செய்து உபயோகித்துக்கொள்ளும்வண்ணம், விவசாயிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**35—**

## சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி

**வினா எண் 44938—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்புழு உரம், மக்கும் உரங்கள் மற்றும் இயற்கை இடுபொருட்கள் தயாரிக்க சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையால் இயற்கை இடுபொருட்கள் தயாரிக்கும் விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு பற்றிய பயிற்சித் திட்டங்களும், இயற்கை உரங்கள் உற்பத்தி பற்றிய பயிற்சி மற்றும் வயல்வெளி விளக்கங்களும் அடங்கும்.

**36—**

## தூர் வாருதல்

**வினா எண் 11168—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, சீர்காழி ஒன்றியம், வானகிரி ஊராட்சி, ஓடைகொண்டான் வாய்க்காலைத் தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, ஏ.127 ஓடைகொண்டான் வாய்க்கால் காவிரி ஆறு பிரிவாகும். இதன் நீளம் 6.00 கி.மீ. பாசனப் பரப்பு 85.39 எக்டேர். இந்த வாய்க்கால் 2007 ஆம் ஆண்டு தூர் வாரும் திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டது.

**37—**

## தூர் வாருதல்

**வினா எண் 14778—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சதுப்பேரி கிராம ஏரிக்கு வரும் நீர்வரத்துக் கால்வாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சதுப்பேரி கிராம ஏரிக்கு வரும் நீர்வரத்துக் கால்வாயில் தூர் வாரும் பணிகள் கடந்த 2005-2006-ல் மொத்த நீளமான 2,500 மீட்டர் நீளத்திற்கு வந்தவாசி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 22-8-2005-ல் முடிக்கப்பட்டன.

**38—**

## கண்மாய் மடைகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 26756—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், அரிமண்டபம், அய்யனார்குளம், அரசகுளம், துத்திக்குளம், விடத்தக்குளம் ஆகிய கண்மாய் மடைகளைப் புதுப்பிக்கவும், கண்மாய் மடைகளைப் புதிதாகக் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், அரிமண்டபம், அய்யனார்குளம், அரசகுளம், துத்திக்குளம், விடத்தக்குளம் ஆகிய கண்மாய் மடைகளைப் புதுப்பிக்கவும், கண்மாய் மடைகளைப் புதிதாகக் கட்டவும், பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் பணிகள் செயல்படுத்தப்படும்.



**39—**

## கூடுதல் தண்ணீர்

**வினா எண் 29043—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், உள்வயல் வாய்க்காலின் சி.எம்.பி. பாசனப் பகுதிக்கு கூடுதல் தண்ணீர் வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கல்லணைக் கால்வாய் தொலைதூரம் 62.62 கி.மீ. வலது கரையில் உள்வயல் வாய்க்கால் பிரிகிறது. இந்த வாய்க்காலின் பாசனப் பரப்பு 8,278 ஏக்கர் ஆகும். இதன் கொள்ளளவு, வினாடிக்கு 113 கன அடியாகும். இந்தப் பாசனப் பகுதிக்கு 113 கன அடிதான் முழுக் கொள்ளளவு ஆகும். இதற்கு மேலும் இவ்வாய்க்காலில் கூடுதல் தண்ணீர் எடுக்க இயலாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**40—**

## அடைப்புப் பலகை

**வினா எண் 29236—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, பழையபாளையம் கிராமம், புதுமண்ணியாற்றின் கிட்டியணையில் அடைப்புப் பலகைகளை மாற்றி, புதிய அடைப்புப் பலகை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி தொகுதியில் புதுமண்ணியாறு தூரம் 35.219 கி.மீ. மற்றும் 35.254 கி.மீ. ஆகியவற்றில்

[2008 மே 7

கிட்டியணை பழைய மிகை நீர்ப்போக்கி மற்றும் புதிய மிகை நீர்ப்போக்கி ஆகிய இரண்டு உள்ளன. கடந்த 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் கொள்ளிடம் ஆற்றின் அளக்குடி உடைப்பினால் ஏற்பட்ட பெரும் வெள்ளம் புதுமண்ணியாற்றில் புகுந்தபோது ஏற்பட்ட அழுத்தத்தால் இரும்பு அடைப்புப் பலகையில் சிறிது வளைவு ஏற்பட்டது. இது 2007-2008 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியின்கீழ் சீர்செய்யப்பட்டு, நல்ல முறையில் தற்போது செயல்படுகிறது.

**41—**

## ஆய்வு மாளிகை

**வினா எண் 34795—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர் ஊராட்சியிலுள்ள ஆய்வு மாளிகையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர் ஊராட்சியிலுள்ள ஆய்வு மாளிகை 2006-2007 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியின்கீழ் ரூ.4.80 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டது.

**42—**

## தமிழ்க் கல்லூரி

**வினா எண் 14294—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் தமிழ்க் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மே 7]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர் :**

(அ) வால்பாறை மலைப் பகுதியில் தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**43—**

## நூலகர் நியமனம்

**வினா எண் 29460—திரு. கோ. அரி:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அரசு சுப்ரமணிய சுவாமி கலைக் கல்லூரியிலுள்ள நூலகத்திற்கு நூலகரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள நூலகர் பணியிடங்களை நிரப்பும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனினும், அரசால் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் வரையில், சார்ந்த கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் அல்லது நூலகக் குழு தலைமையில் கல்லூரியின் நூலகம் செயல்படுவதால் திருத்தணி அருள்மிகு சுப்ரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரியின் நூலகமும் அக்கல்லூரியின் வணிகவியல் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**44—**

## பேருந்து வசதி

**வினா எண் 16825—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ராம்ஜி நகருக்கு மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இரவு நேரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ராம்ஜி நகர், திருச்சி-திண்டுக்கல் நெடுஞ்சாலையில், திருச்சியில் இருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இவ்வூர் வழியாக மணப்பாறை மற்றும் திண்டுக்கல் ஆகிய ஊர்களுக்கு ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் இரவு முழுவதும் அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் ராம்ஜி நகர் பயணிகளை ஏற்றி, இறக்கி செல்கின்றன. ராம்ஜி நகர் வழியாக இரவு நேரத்தில் அதிகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால், பிரத்தியேகமாக இரவு நேரப் பேருந்து இயக்கினால் அப்பேருந்தின் பயணிகள் பயன்பாடு மிக மிகக் குறைவாக இருக்கும்.

**45—**

## அறிவிப்பு விளக்கு

**வினா எண் 26252—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-காஞ்சிபுரம் சாலை இணைப்பில் அறிவிப்பு விளக்குகள் (Signal lamps) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு-காஞ்சிபுரம் சாலை இணைப்பில் அறிவிப்பு விளக்குகள் (Signal lamps) அமைக்க மாவட்ட நிர்வாகத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**46—**

## மகளிர் பேருந்து

**வினா எண் 42944—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையம் முதல் சேலம் மாநகரப் பேருந்து நிலையம் வரை இயங்கி வந்த மகளிருக்கான சிறப்புப் பேருந்தை மீண்டும் அதே வழித்தடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம் மண்டல நகரப் பேருந்து தடம் எண் 104, ஓமலூரில் காலை 8.15 மணிக்குப் புறப்பட்டு, மாமாங்கம், 5 ரோடு, சாரதா கல்லூரி, அஸ்தம்பட்டி வழியாக அரசு மகளிர் கலைக் கல்லூரி வரை மகளிர் பேருந்தாக இயக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு முதல் இக்கல்லூரி பகுதிநேரக் கல்லூரியாகச் செயல்பட்டு வருகின்றது. எனவே, கல்லூரி முதல்வர் அவர்கள் வேண்டுகோளினை ஏற்று, காலைப் பகுதி மாணவிகள் பயனடையும் வகையில் மேற்கண்ட பேருந்து ஓமலூரில் 7.25 மணிக்குப் புறப்பட்டு, அதே வழித்தடத்தில் கல்லூரியினை 8.20 மணிக்குச் சென்றடையுமாறு நேரம் மாற்றி, தற்போதும் தவறாமல் இயக்கப்பட்டு வருகின்றது.

**47—**

## போக்குவரத்து சிக்னல்

**வினா எண் 43729—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியில் பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு, ஆர்.கே. பேட்டை ஆகிய இடங்களில் டிராஃபிக் சிக்னல்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் பொதட்டூர் பேட்டை, பள்ளிப்பட்டு மற்றும் ஆர்.கே. பேட்டை ஆகிய இடங்களில் போக்குவரத்து சிக்னல் அமைக்க மாவட்டக் காவல் துறை பரிந்துரை செய்துள்ளது. அதனை ஆய்வு செய்து விரைவில் சிக்னல் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 மே 7

48—

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 4503—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, பெத்தநாய்க்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் பெத்தநாய்க்கனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் பெரியபோது, முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படுகிறது. அரசின் கொள்கைப்படி, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள்கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருங்காலங்களில் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தகுதிவாய்ந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது பெத்தநாய்க்கனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறு இல்லை.

## ஆரம்ப சுகாதார நிலையம்

49—

**வினா எண் 10148—திரு. கோ. அரி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி, கடம்பத்தூர் ஒன்றியம், செஞ்சி, பனம்பாக்கம் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட அரசு முன்வருமா?



2008 மே 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் செஞ்சி மற்றும் பனம்பாக்கம் ஆகிய கிராமங்களில் மக்கள்தொகை முறையே 1,352 மற்றும் 1,095 ஆகும். மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டருக்கு மேல் இடைவெளி இருத்தல் வேண்டும். செஞ்சி கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் பேரம்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், பனம்பாக்கம் கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் கடம்பத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. எனவே இவ்விரு கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

50—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 11880—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாற்றில் தூரத்தின் அடிப்படையினை (Distance related) கருதி போதிய (ஆரம்ப சுகாதார நிலையம்) P.H.C.s உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

செய்யாறு சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் மொத்தம் 35 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் செய்யாறு சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் தற்போது உள்ள 35 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானவையாக உள்ளதால், செய்யாற்றில் தூரத்தின் அடிப்படையினைக் கருதி மேலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 மே 7

51—

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 13464—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தலைமை மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், உதகை அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் (உதவி மருத்துவர் / முதுநிலை மருத்துவர் / குடிமை மருத்துவர்) பணியிட எண்ணிக்கை 19. இவை அனைத்தும் தற்சமயம் நிரப்பப்பட்டுள்ளன.

52—

## ஸ்கேன் கருவி

**வினா எண் 15756—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மட்டும் தற்போது படிப்படியாக வழங்கப்பட்டு



2008 மே 7]

வருகிறது. 500 படுக்கைகளுடன் இயங்கும் ஈரோடு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கு இந்தக் கருவி வழங்கிய பின்னர், வேட்டைக்காரன்புதூர் மருத்துவமனை போன்ற வட்டார மருத்துவமனைகளுக்கு இக்கருவி வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

53—

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 16574—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறைச்சாலை மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட இரண்டு உதவி மருத்துவர் பணியிடங்களில், ஒரு மருத்துவர் பணிபுரிகிறார். மீதமுள்ள ஒரு காலிப் பணியிடத்தை விரைவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர் நியமிக்க அவசியம் எழவில்லை.

54—

## படுக்கை வசதியை அதிகரித்தல்

**வினா எண் 22801—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மே 7

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தாலுகா மருத்துவமனை தற்போது 34 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனைக்கு வரும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், படுக்கை வசதியை அதிகரிக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**55—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 23356—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மானத்தாள் ஊராட்சி, ஓலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுப்பாட்டின்கீழ் ஓலைப்பட்டி துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. ஓலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அல்ல. மேற்கண்ட துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. ஓலைப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.



2008 மே 7]

**56—**

**செவிலியர் பணியிடம்**

**வினா எண் 23369—திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதி, தொட்டியம் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள செவிலியர் பதவியை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொட்டியம் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட மூன்று செவிலியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன.

**57—**

**கட்டட வசதி**

**வினா எண் 25066—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, மன்சூரபாத் கிராமத்தில் சுகாதாரக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் வட்டம், தச்சாம்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்டது, மன்சூரபாத் துணை சுகாதார நிலையம். இதற்கு சொந்தக் கட்டடம் உள்ளது. இந்தக் கட்டடம் பழுதடைந்துள்ளதால், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பழுதுநீக்கம் செய்து தர சட்டமன்ற உறுப்பினரின் நேரடி ஆய்வின்

போது கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. நிதி பெறப்படின், கட்டடப் பழுது நிவர்த்திப் பணி மேற்கொள்ளப்படும்.

58—

### மருத்துவர் நியமனம்

**வினா எண் 25863—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மகப்பேறு மருத்துவர் பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர் பணியிடங்களின் எண்ணிக்கை ஆறு. இந்த ஆறு உதவி மருத்துவர் பணியிடங்களும் தற்சமயம் நிரப்பப்பட்டுள்ளன. இதில் ஒரு மகப்பேறு மருத்துவரும் அடங்குவார். தற்சமயம் இம்மருத்துவமனையில் உதவி மருத்துவர் பணியிடம் ஏதும் காலியாக இல்லை.

59—

### சிறப்பு சிகிச்சை

**வினா எண் 28411—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் அரசு பொது மருத்துவமனையில் வளரிளமை சுகாதாரத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படும் சிறப்பு சிகிச்சை முறையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஓமலூர் அரசு பொது மருத்துவமனையில் வளரிளமை சுகாதாரத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படும் வளரிளமைப் பெண்களுக்கான சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.



60—

### மருத்துவர் நியமனம்

**வினா எண் 30332—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, காயல்பட்டினம் அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காயல்பட்டினம் அரசு மருத்துவமனை 73 படுக்கை வசதிகளுடன் இயங்கி வரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சுமார் 273 வெளி நோயாளிகளும், 23 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு 20 பெரிய அறுவை சிகிச்சைகளும், 13 பிரசவங்களும் நடைபெற்று வருகின்றன. இம்மருத்துவமனையில் மூன்று உதவி மருத்துவர்களும், ஒரு பல் மருத்துவரும் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, இம்மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கணக்கிலிடும்போது, தேவைக்கதிகமாக மருத்துவர்கள் உள்ளனர். எனவே, இம்மருத்துவமனைக்கு தற்போது கூடுதல் மருத்துவர்கள் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

61—

### சுற்றுச் சுவர்

**வினா எண் 30334—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, காயாமொழி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மே 7

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் காயாமொழி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகின்றது. அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.அதி2) துறை, நாள் 17-5-2007-ன்படி 2007-2008 ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வரையறுக்கப்படாத செலவினமான ரூ.60 இலட்சத்தில் தடை செய்யப்பட்ட பணிகளாக இருப்பினும், சிறப்பினமாக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசாணையின் வழிகாட்டு நெறிகளின்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று, இவ்வாண்டிலேயே சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**62—**

## குடியிருப்பு

**வினா எண் 30365—திரு. கோ. அரி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இரவில் பணியாற்ற குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பேரம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலர் குடியிருப்பில் மின் இணைப்பு பழுதடைந்து. கதவு மற்றும் ஜன்னல்கள் சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மருத்துவ அலுவலர் குடியிருப்பினைப் பழுது நீக்கம் செய்ய 2008-2009-ஆம் நிதியாண்டில் பராமரிப்புப் பணியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டபின், உடனடியாக மருத்துவ



2008 மே 7]

அலுவலர் குடியிருப்பு சரி செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**63—**

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 31922—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு பொது மருத்துவர் மற்றும் எலும்பு மூட்டு, அறுவை சிகிச்சை, குழந்தைகள், கண், காது, மூக்கு, தொண்டை ஆகியவற்றிற்கான மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசினர் தலைமை மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர்கள் பணியிட எண்ணிக்கை 14. இந்த மருத்துவர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன. ஒரு பொது மருத்துவர், ஒரு எலும்பு மூட்டு மருத்துவர், ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர் தற்சமயம் பணிபுரிந்து வருகின்றனர். இம்மருத்துவமனையில் தற்சமயம் குழந்தைகள் மற்றும் கண், காது, மூக்கு, தொண்டை மருத்துவர்களைக் கொண்டு நிரப்பிட மருத்துவர் காலிப் பணியிடம் ஏதுமில்லை.

**64—**

## பணியாளர்களை அதிகப்படுத்துதல்

**வினா எண் 33149—திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையின் மருத்துவர்கள், பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனை 50 படுக்கை வசதிகளுடன் இயங்கி வரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சுமார் 890 புற நோயாளிகளும், 38 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு 15 பிரசவங்கள் நடைபெற்று வருகின்றன. இம்மருத்துவமனையில் ஒரு முதுநிலை குடிமை மருத்துவரும், ஐந்து உதவி மருத்துவர்களும், ஒரு பல் மருத்துவரும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், மருத்துவர் தவிர பிற பணியாளர்கள் 44 பணியிடங்கள் போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கணக்கிலிடும்போது, தேவையான பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளனர். எனவே, இம்மருத்துவமனைக்கு தற்போது கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

65—

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 37193—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் அரசு மருத்துவமனையில் இரவு நேர மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை இரண்டு. இந்த இரு உதவி மருத்துவர் பணியிடங்களும் ஒரு மகப்பேறு மற்றும் ஒரு குழந்தைகள் நல



மருத்துவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. மேலும், இவ்விரு மருத்துவர்களில் யாராவது ஒருவர் இரவு நேரங்களில் பணிபுரிவர்.

66—

## செவிலியர் நியமனம்

**வினா எண் 37920—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகர அரசு தலைமை மருத்துவமனைக்கு கூடுதலாக பெண் செவிலியர்களை அமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 7 செவிலியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. செவிலியர் பணியிடம் எதுவும் வெற்றிடமாக இல்லை. கூடுதலாக செவிலியர் பணியிடங்கள் தேவைப்படின் அரசு பரிசீலிக்கும். தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 39452—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் மற்றும் கூடுதல் கட்டடம் கட்டி, புதிய தளவாடப் பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தில் பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆர்.சி.எச்., ஆர்.எஸ்.வி.ஓய்., கிராம நல்வாழ்வு திட்டம், நோயாளிகள் நலச் சங்கம் ஆகியவற்றின்மூலம் புதிய தளவாடப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதலாக அறுவை சிகிச்சை வார்டு மற்றும் கூடுதல் உபகரணங்கள் ஆகிய வசதிகள் இனி வருங்காலங்களில் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**68—**

## கட்டட வசதி

**வினா எண் 40648—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, அவளூர் ஊராட்சி, அவளூர் கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர், படுக்கை வசதியுடன் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் அவளூர் கிராமத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அவளூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் இல்லை. அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி2) துறை, நாள் 17-5-2007-ல் கூறப்பட்ட



வழிகாட்டி நெறிமுறைகளின்படி அவளூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6,50,000/- நிதி உதவி கோரப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப்பெற்றவுடன் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவளூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 1996-1997 பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.6 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. இங்கு நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கைக்கேற்ப படுக்கை வசதி உள்ளது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் திருப்புக்குழி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகளுடன் அனைத்து வசதிகள்கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்படுவதால், அவளூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு படுக்கை வசதியுடன்கூடிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**69—**

## மருத்துவமனை

**வினா எண் 41271—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் தாய்-சேய் நல மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் ஏற்கெனவே அரசு மருத்துவமனை இயங்குகிறது. இது தவிர மானாமதுரை தொகுதியில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 27 துணை சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. இத்தகைய நிலையில் மானாமதுரையில் மேலும் ஒரு தாய்-சேய் நல மருத்துவமனை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 மே 7

70—

## மகப்பேறு பிரிவு

**வினா எண் 42569—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 10 படுக்கை வசதியுடன் கூடிய மகப்பேறு பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 படுக்கை வசதிகள் உள்ளன. ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. சரக்கப்பிள்ளையூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாகவும், கருப்பூர் மற்றும் பாகல்பட்டி ஆகியவை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும், தொளசம்பட்டி மற்றும் வெள்ளாளப்பட்டி ஆகியவை ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும் செயல்படுகின்றன. ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சரக்கப்பிள்ளையூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் ஆறு படுக்கைகள் கொண்டது. இந்நிலையம் பேறுகால அவசர சிகிச்சை (மற்றும்) இளம் சிசு கவனிப்பு மையமாகச் செயல்படுகிறது. பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து ஓமலூர் அரசு மருத்துவமனை 8 கிலோ மீட்டர் தொலைவில் செயல்படுகிறது. சரக்கப்பிள்ளையூர், பாகல்பட்டி, தொளசம்பட்டி, வெள்ளாளப்பட்டி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரம் செயல்படுகின்றன. 17 உள்நோயாளிகள் சராசரியாக மாதமொன்றுக்குப் பயனடைகின்றனர். தற்போதுள்ள பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள படுக்கை வசதிகளே போதுமானதாக உள்ளது. எனவே, தற்போது பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

71—

## கரையைப் பலப்படுத்துதல்

**வினா எண் 30390—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 7]

(அ) பூம்புகார் தொகுதி, பொறையார் பகுதியில் கன்னப்படுவை, உப்பனாறு கரைகளைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, பொறையார் பகுதியில் கன்னப்படுவை, உப்பனாறு கரைகளைப் பலப்படுத்துவது தொடர்பாக அறிக்கை பெறப்பட்டு, ஆய்வு செய்து உலக வங்கி உதவியுடன் தேசிய புயல் இடர் தணிக்கும் திட்டத்தின்கீழ் (NCRMP) பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரம்) யால் கொடுக்கப்பட்ட பிரேரணையில் (வரிசை எண் 10) முதன்மையாக எடுக்கப்படும் பணிகளில் சேர்த்து முன்மொழிவுகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் பணிகள் தொடங்கப்படும்.

72—

## ஆக்கிரமிப்பை அகற்றல்

**வினா எண் 38257—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி ஆற்று ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி நீர்ப்பிடிப்பு ஆற்றுப் பகுதியில் ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யப்படவில்லை. தற்போது ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

73—

**தரம் உயர்த்துதல்**

**வினா எண் 11493—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, கருநாகமுத்தன்பட்டியிலுள்ள அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கம்பம் தொகுதி, கருநாகமுத்தன்பட்டியிலுள்ள அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

74—

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 12028—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, ஜி. தும்மல்பட்டி ஊராட்சி, தும்மல்பட்டி அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாணவியர் விடுதிகளுக்கு மட்டுமே சுற்றுச் சுவர் கட்டுவதில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.



ஜி. தும்மல்பட்டியிலுள்ள கள்ளர் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்த திட்டம் ஏதும் தற்போது இல்லை.

75—

**வேலை வாய்ப்பு**

**வினா எண் 43876—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழ வாய்ப்பில்லை.

76—

**பயிற்சி மையம்**

**வினா எண் 40673—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் ஆட்டோமொபைல் பயிற்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரையில் அமைந்துள்ள சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று, 6 தொழிற் பிரிவுகளுடனும் 240 இருக்கைகளுடனும் இயங்கி வருகிறது. அத்துடன்

[2008 மே 7

2007-2008 ஆம் ஆண்டில், சிவகங்கையில் 6 தொழிற் பிரிவுகளுடனும், 224 இருக்கைகளுடனும் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஆகஸ்ட் 2007 முதல் துவங்கப்பட்டுள்ளது. 6 தொழிற் பிரிவுகளில் ஒரு தொழிற் பிரிவு ஆட்டோமொபைல் சம்பந்தப்பட்ட தொழிற் பிரிவாகும். மேலும், இம்மாவட்டத்தில் 13 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 1,541 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இதில் 8 தொழிற்பயிற்சி மையங்களில் கம்மியர் மோட்டார் வண்டி தொழிற் பிரிவு (ஆட்டோமொபைல் தொழிற் பிரிவு) இயங்கி வருகிறது. எனவே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் ஆட்டோமொபைல் பயிற்சி மையம் என தனியாகத் துவக்க உத்தேசம் ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**77—**

## கூடுதல் பாடப் பிரிவுகள்

**வினா எண் 42499—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கூடுதலாக பாடப் பிரிவுகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகளுடன் இயங்கி வருகிறது:—

1. உலோகத் தகடு வேலையாள்
2. பற்ற வைப்பவர்
3. சுருக்கெழுத்துத் தட்டச்சர் (ஆங்கிலம்)
4. கம்மியர்—டீசல்
5. பொருத்துநர்
6. கடைசலர்
7. இயந்திர வேலையாள்



2008 மே 7]

8. கம்பியாள்
9. கம்மியர்—மோட்டார் வண்டி
10. கம்மியர் விவசாயக் கருவிகள்

2007-2008 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட மூன்று புதிய தொழிற்பிரிவுகள் துவங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது:

1. இரு சக்கர வாகனங்கள் பழுதுபார்ப்பவர்
2. தானியங்கி வாகனங்களுக்கு மின்சாரம் மற்றும் கம்மியர் மின்னணுவியல்
3. ஓட்டுநருடன் கூடிய கம்மியர்

மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் இத்தொழிற்பயிற்சி நிலையம் திறன்மிகு மையமாக (உற்பத்தியும் மற்றும் தயாரிப்பும், தொழிற்பிரிவு) மேம்படுத்தப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 888 இருக்கைகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. (முதல் வருடம், இரண்டாம் வருடம் மற்றும் திறன்மிகு தொழிற்பிரிவு இருக்கைகள் சேர்த்து). எனவே, இத்தொழிற்பயிற்சி நிலையத்திற்குத் தேவையான மற்றும் அருகில் உள்ள தொழிற்சாலைகளின் வேலைத் திறனின் தேவைக்கேற்ப மனித ஆற்றல் உருவாக்கப்பட்டு வருகிறது. ஆகவே கூடுதலாகப் பாடப் பிரிவுகள் துவக்க தற்போது உத்தேசம் இல்லை.

**78—**

## இலவசப் பேருந்து வசதி

**வினா எண் 16643—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பள்ளிக்குச் செல்ல இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

பள்ளிக்குச் செல்லும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு, பேருந்துகளில் பயணம் செய்து வருகிறார்கள். ஆனால், இதேபோல் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

[2008 மே 7

**79—**

**வீரச் சாதனை**

**வினா எண் 18148—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீயணைப்புத் துறையைப் பற்றியும் வீரச் சாதனைகளைப் பற்றியும் பள்ளிகளில் பாடத் திட்டத்தில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

தீயணைப்புத் துறையைப் பற்றியும் வீரச் சாதனைகளைப் பற்றியும் தற்போது பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனவே தீயணைப்பு வீரச் சாதனை சார்ந்து அடுத்து புதிய பாடத் திட்டம் அமைத்திடும்போது பரிசீலித்து பாடத் திட்டத்தில் சேர்க்கப்படலாம்.

**80—**

**ஆய்வக உதவியாளர்கள் நியமனம்**

**வினா எண் 30300—திரு. ஒ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உதவியாளர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆய்வக உதவியாளர் பணியிடம் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மட்டுமே ஏற்படுத்தப்பட்ட பணியிடமாகும். அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உதவியாளர் பணியிடம் ஏதும் அரசால் ஏற்படுத்தப்படவில்லை. தற்போது காலியாக உள்ள அனைத்து ஆய்வக உதவியாளர் பணியிடங்களையும் உடனடியாக நிரப்புவதற்கு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



2008 மே 7]

**81—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 37783—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை நூலகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை கிளை நூலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும் நூலகத்தைச்சுற்றி சுற்றுச் சுவர் அமைப்பதற்கு காலி மனை இல்லாததால் சுற்றுச் சுவர் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**82—**

**கல்வி அலுவலர் அலுவலகம்**

**வினா எண் 38463—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யார் தொகுதி, செய்யாரில் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்குச் சமமான அனைத்து வசதிகளைக் கொண்ட துணை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகமும், இரண்டு அல்லது மூன்று மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை திருவண்ணாமலையில் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகமும், திருவண்ணாமலை மற்றும் செய்யாரில் மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களும் செயல்பட்டு

வருகின்றன. செய்யாறில் உள்ள பள்ளிகளைக் கண்காணிக்க மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் உள்ள நிலையில் அங்கு துணை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் ஒன்றினை அமைப்பது நடைமுறை விதிகளின்படி சாத்தியமில்லை.

**83—**

## வளர் கல்வித் திட்டம்

**வினா எண் 40422—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியில் பெத்தநாய்க்கனூர், அர்த்தநாரிபாளையம், ஜல்லிப்பட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துரை, ரமணமுதலிபுதூர், கரியஞ்செட்டிபாளையம், கம்பலாபட்டி, பிலிசின்னம்பாளையம், காளியாபுரம் ஆகிய ஊராட்சிகளில் வளர் கல்வித் திட்டத்தைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியில், பெத்தநாய்க்கனூர், அர்த்தநாரிபாளையம், ஜல்லிப்பட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துரை, ரமணமுதலிபுதூர், கரியஞ்செட்டிபாளையம், கம்பலாபட்டி, பிலிசின்னம்பாளையம், காளியாபுரம் ஆகிய ஊராட்சிகளில் கோவை வளர் கல்வித் திட்டத்தின் சார்பில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தேர்வுக் குழுவின் சார்பில் வளர் கல்வி மையப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு இப்பகுதிகளில் வளர் கல்வி மையங்கள் துவங்கப்படவுள்ளன.

**84—**

## விற்பனை வரி

**வினா எண் 39321—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் சுய உதவிக் குழுக்கள்மூலம் தயாரிக்கும் பொருட்களுக்கு விற்பனை வரியை நீக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்படி சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் மீது முதலாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 1%, 4% மற்றும் 12.5% என பொருட்களைப் பொறுத்து வரி விதிக்கப்படுகிறது. விற்பனைத் தொகை ரூ.5 இலட்சம்வரை வரிவிலக்கு உண்டு. நான்காம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருட்களாக இருப்பின், அந்தப் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. இந்நிலையில் சுய உதவிக் குழுக்கள்மூலம் தயாரிக்கும் பொருட்களுக்கு விற்பனை வரியைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**85—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 42917—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஓமலூர் தொகுதியில் பொது விளையாட்டு மைதானம் நவீன வசதியுடன் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* ஓமலூர் தொகுதியில் பொது விளையாட்டு மைதானம் நவீன வசதியுடன் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* நிலை எழவில்லை.

**86—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 44535—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, தென்சங்கம்பாளையம் ஊராட்சியில் இளைஞர்களும், பெண்களும் விளையாட கைப்பந்து, பூப்பந்து,

[2008 மே 7

கூடைப்பந்து மைதானம் கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சி, இளைஞர்களும், பெண்களும் விளையாட கைப்பந்து, பூப்பந்து மற்றும் கூடைப்பந்து மைதானம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, தென்சங்கம்பாளையம் ஊராட்சியில் இளைஞர்களும், பெண்களும் விளையாட கைப்பந்து, பூப்பந்து, கூடைப்பந்து மைதானம், கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சி, இளைஞர்களும், பெண்களும் விளையாட கைப்பந்து, பூப்பந்து மற்றும் கூடைப்பந்து மைதானம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**87—**

## மரக் கன்றுகள் நடுதல்

**வினா எண் 30669—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் அனைத்துக் கிராமச் சாலைகளிலும், வனத் துறையின்மூலம் மரக் கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமச் சாலைகளிலும் வனத் துறையின்மூலம் மரக் கன்றுகள் நடும் திட்டம் ஏதும் நடப்பு ஆண்டில் அரசின் பரிசீலனையில் இல்லை.



2008 மே 7]

**88—**

## குடியிருப்புகளைப் பழுது பார்த்தல்

**வினா எண் 39190—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் வனத் துறை அலுவலகக் குடியிருப்புகளைப் பழுது பார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் தமிழ்நாடு அரசு வனத் துறைக்குச் சொந்தமான வனச் செயல் திட்ட அலுவலர் குடியிருப்பு மட்டும் உள்ளது. இக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. கோயம்புத்தூர் நகருக்கு வெளியே அமைந்துள்ள வனத் துறை குடியிருப்புகள், அரசு அவ்வப்போது ஒதுக்கீடு செய்யும் நிதியிலிருந்து உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில், திட்டம்சாராத் தலைப்பின்கீழ் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்றுள்ளன.

**89—**

## சாலையை மேம்படுத்துதல்

**வினா எண் 25978—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல்-கொம்புக்காரனேந்தல் (வழி) மிளகனூர் சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல்—கொம்புக்காரனேந்தல் (வழி) மிளகனூர் சாலையின் சரியான பெயர் முத்தனேந்தல்—மிளகனூர் சாலை கி.மீ. 0/0—10/3 ஆகும். இது சிவகங்கை (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள ஒரு மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 4/2—5/0 வரை காலமுறை புதுப்பித்த திட்டத்தில் 2007-2008-ல் சேர்க்கப்பட்டு ரூ.7.8 இலட்சம் செலவில் தற்போது பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இச்சாலையில் கி.மீ. 7/4—10/3 வரை கிராமச் சாலைகள் மற்றும் நபார்டு திட்ட அலகின் மூலம் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைகள் தார்நொடிகள் போடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**90—**

## வேகத் தடை

**வினா எண் 37701—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு—திருக்கழுக்குன்றம்—புதுப்பட்டினம் நெடுஞ்சாலையில் ஈச்சன்கருணை 'L' வடிவ வளைவில் வேகத் தடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையான சட்ராஸ்—செங்கல்பட்டு—காஞ்சிபுரம்—அரக்கோணம்—திருத்தணி சாலை கி.மீ. 11/8-ல் பிரிந்து புதுப்பட்டினம் (வழி) விட்டிலாபுரம் சாலை கி.மீ. 0/0—17/0 வரை செங்கல்பட்டு (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலை விரைவு வழியாக உள்ளதால், மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சக விதிகளின்படி, இச்சாலையில் வேகத் தடை அமைப்பதற்கு அனுமதி இல்லை என்பதால், அப்பகுதியில் வளைவு உள்ளதால் எச்சரிக்கை செய்யும் வகையில் அறிவிப்புப் பலகை மற்றும் வழிகாட்டிக் கம்பம் பொருத்தப்பட்டுள்ளது.



**91—**

## தார்ச் சாலை

**வினா எண் 39797—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், இடைக்காட்டூர் சாலையிலிருந்து சிறுகுடி வரையுள்ள இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், இடைக்காட்டூர் சாலையிலிருந்து சிறுகுடி வரையுள்ள இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக அமைக்கக் கோரும் சாலையானது, மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த முத்தனேந்தல் இடைக்காட்டூர், பெரிய கோட்டை சாலையில் கி.மீ. 0/6-ல் பிரிந்து சிறுகுடி வரை கி.மீ. 0/0-1/4 வரையுள்ள சாலையாகும். இச்சாலையானது 12-வது நிதிக் குழுவின் உதவி நிதியின்கீழ் தேர்வு செய்யப்பட்டு 2007-2008 ஆம் நிதியாண்டில் தனிப்பழுது பார்த்தல் பணியின்கீழ் ரூ.10.45 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்சமயம் சாலை வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**92—**

## அலுவலர் நியமனம்

**வினா எண் 22493—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து (குழந்தை வளர்ச்சி) திட்ட அலுவலரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மே 7

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்ட ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து (குழந்தை வளர்ச்சி) திட்ட அலுவலராக திருமதி அ. சந்திரா தேவி என்பவர் நியமிக்கப்பட்டு, 14-3-2008 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

**93—**

## கூர்நோக்கு இல்லம்

**வினா எண் 39631—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் கூர்நோக்கு இல்லம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது துவங்கும் உத்தேசம் இல்லை. எனினும், இளைஞர் நீதித் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) திருத்தப்பட்ட சட்டம் 2006-ன்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் நீதி குழுமம் துவங்கப்பட நடவடிக்கை உள்ளது. மேலும், சிவகங்கை மற்றும் அதன் அருகில் உள்ள மாவட்டங்களில் பதியப்படும் வழக்குகள் அதிகமாகும் பட்சத்தில், சிவகங்கை மாவட்டத்தை உள்ளடக்கிய பணி எல்லை கொண்ட இளைஞர் நீதிக் குழுமம் தனியாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது அவ்விளைஞர் நீதிக் குழுமத்துடன் இணைந்தாற்போல, கூர்நோக்கு இல்லமும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**94—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11652—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 7]

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, அழகுசமுத்திரம் ஊராட்சி மற்றும் எலவம்பட்டி கிராமப்பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அழகுசமுத்திரம் கிராமத்திற்கு அருகில் தாரமங்கலம் கால்நடை மருந்தகமும், தோப்பூர் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது. எலவம்பட்டி கிராமத்திற்கு அருகில் தாரமங்கலம் கால்நடை மருந்தகம் 6 கி.மீ. தொலைவிலும், ஓலைப்பட்டி மற்றும் மாட்டையாம்பட்டி கால்நடை மருந்தகங்கள் 9 கி.மீ. தொலைவிலும் மற்றும் தோப்பூர் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், இணைப்புத் தம்பதியினர்மூலம் கால்நடைகளுக்குச் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாலும், மேற்படி கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் நேரடியாக புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**95—**

## நோய் ஆய்வுப் பிரிவு

**வினா எண் 38611—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கால்நடை நோய் ஆய்வுப் பிரிவு துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்க் கிளர்ச்சிகளை உடனுக்குடன் கண்டறிய, சிவகங்கை கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அலுவலர்களால், நோய் தாக்கிய கால்நடைகளிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், கால்நடைகளில் ஏற்பட்டுள்ள நோயினை உறுதி செய்து கொள்ளும்பொருட்டு, சென்னையில் செயல்பட்டுவரும் மத்திய தொடர்பு ஆய்வுக் கூடத்திற்கு (Central Referral Lab) கால்நடைகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் அனுப்பப்படுகிறது. அங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தகுந்த நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க சம்பந்தப்பட்ட கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், இதுவே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் தனியாக ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**96—**

**கட்டட வசதி**

**வினா எண் 42244—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டம், உடுக்கம்பாளையம் கிராம கால்நடை கிளை நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை வட்டம், உடுக்கம்பாளையம் கிராம கால்நடை கிளை நிலையத்திற்கு ஏற்கெனவே கட்டடம் உள்ளது. அதைப் புதுப்பிக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



**97—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 33505—திரு. வி.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சிபுரம் ஆதி திராவிடர் நல விடுதியில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சிபுரம் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதியில் 60 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர். தாட்கோ மூலம் அமைக்கப்பட்ட bore well மூலம் குடிதண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. தற்போது கிணற்றிலும் தண்ணீர் நிறைய உள்ளது. இது தவிர, கண்டாச்சிபுரம் டவுன் பஞ்சாயத்து மூலம் இணைப்புக் குழாய் கொடுத்து, குடிநீர் வசதி ஏற்படுத்தித்தரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, குடிநீர் வசதி இவ்விடுதிக்கு உள்ளது. ஆதி திராவிடர் நலத் துறை நிதி ஒதுக்கீட்டின்மூலம் டவுன் பஞ்சாயத்துமூலம் இணைப்புக் குழாய் கொடுத்து தொடர்ந்து குடிதண்ணீர் வசதி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**98—**

**சிறப்புப் பயிற்சி முகாம்கள்**

**வினா எண் 41141—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீனவர்களுக்கு சுனாமி குறித்த அச்சத்தைப் போக்க சிறப்புப் பயிற்சி முகாம்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மே 7

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) கடலோர மாவட்டங்களில் இம்மாதிரியான இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் அச்சத்தைத் தவிர்க்க, அந்தந்த மாவட்ட நிர்வாகமானது சமூக நலத் துறை, தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புசாரா நிறுவனங்கள்மூலம் சிறப்பு முகாம்கள் நடத்தி வருகிறது.

(ஆ) அரசுமூலம் தமிழக மீனவர்களுக்கு சுனாமி குறித்த அச்சத்தைப் போக்க சிறப்புப் பயிற்சி முகாம்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**99—**

**ஆவின் பால் நிலையம்**

**வினா எண் 23811—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பேரூராட்சிப் பகுதியில் ஆவின் பால் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பேரூராட்சிப் பகுதியில் ஆவின் பால் நிலையம் அமைப்பதற்கு ஓமலூர் பேரூராட்சி நிருவாக அலுவலர் மற்றும் வட்டாட்சியரிடமிருந்து உரிய அனுமதி கிடைக்காததால், ஓமலூர் ஒன்றியம், பேரூராட்சிப் பகுதியில் ஆவின் பால் நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை.

**100—**

**பால் விற்பனை நிலையம்**

**வினா எண் 43023—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், சூரமங்கலம் உழவர் சந்தையில் 24 மணி நேரமும் பால் வழங்கும் நிலையமும், பால் பொருள்கள் விற்பனை நிலையமும் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2008 மே 7]

விடை—

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

சேலம், சூரமங்கலம் உழவர் சந்தை தற்போது காலை 4 மணி முதல் 10 மணிவரை இயங்கி வருகிறது. உழவர் சந்தை செயல்படும் நேரத்தில், ஆவின் பெட்டி வைத்து முகவர்மூலம் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மற்றும் உழவர் சந்தையின் எதிர்ப்புறம், பின்புறம் அருகில் காலை, மாலை, இரு வேளைகளிலும் ஆவின் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் உழவர் சந்தை காலை 10 மணிக்கு முடிந்தவுடன் கதவு பூட்டப்பட்டு, மீண்டும் மறுநாள் அதிகாலை 4 மணிக்குத் திறக்கப்படுவதால், சேலம், சூரமங்கலம் உழவர் சந்தையில் நாள் முழுவதும் பொது மக்கள் நடமாட்டம் இல்லாததால், சேலம் சூரமங்கலம் உழவர் சந்தையில் 24 மணி நேரமும் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை நிலையம் செயல்பட வாய்ப்பு இல்லை.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

D V211, 31/08 P08.53

**உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, விபத்துகளில் உயிர் இழந்தவர்கள், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள்/ பலியானவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் பேரவையிலே இந்த அறிக்கையினைப் படிக்க தங்களுடைய அனுமதியைப் பெற்றுள்ளேன்:

கடந்த சில வாரங்களாக அவை தொடங்கியதிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த [illegible] தங்களுடைய தொகுதிகளில் நடைபெற்ற சில [illegible]

228388
சென்னை-600 009

இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பலியானவர்களுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி அளிக்க வேண்டுமென்று அளித்த விண்ணப்பங்களை அதிகாரிகள்மூலம் பரிசீலித்து, குறிப்பாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைத்து, அவர்களுடைய அறிக்கைகளைக் கேட்டுப் பெற்றதன் அடிப்படையில் நான் இப்பொழுது இங்கே படிக்க இருக்கின்ற பட்டியலின்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்ப உதவிகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வால்பாறை தொகுதி காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்களுடைய கோரிக்கையையேற்று, வால்பாறை நீர்வீழ்ச்சி குடியிருப்பு அருகில் நீர்வீழ்ச்சியில் வழுக்கி விழுந்து தண்ணீர் அடித்துச் சென்று உயிரிழந்த திருமதி வசந்தாமணியின் கணவர் டி. ரவி என்பவருக்கும்-செல்வி கீர்த்தனாவின் தந்தை ஜெயக்குமாருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படுகிறது.

உடுமலைப்பேட்டை, சிங்காநல்லூர், பேரூர், மேட்டுப்பாளையம் தொகுதிகளைச் சேர்ந்த அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. சி. சண்முகவேலு, திரு. ஆர். சின்னசாமி, திரு. சு.ப. வேலுமணி, திரு. ஓ.கே. சின்னராஜ் ஆகியோர்—பில்லூர் அணையில் தோண்டை என்னும் ஆதிவாசிகள் கிராமத்தில் அணையைக் கடக்க பரிசலில் சென்றபோது, காளியூர் கிராமத்தைச் சேர்ந்த 5 பேர் பரிசல் கவிழ்ந்ததன் காரணமாக 3-10-2007 அன்று இறந்துவிட்டார்கள் என்றும், அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கவேண்டுமென்றும் அளித்த கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி, அவருடைய பரிந்துரையைப் பெற்றதன் அடிப்படையில், ஐந்து பேரில் நீலன் என்பவருக்கு ஏற்கெனவே விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ரூபாய் உதவி நிதி வழங்கப்பட்டுவிட்டதுபோக, அந்த விபத்தில் இறந்து போன எஞ்சிய நான்கு நபர்களின் பொருளாதார நிலையைக் கருதி, அவர்களின் வாரிசுதாரர்களுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் உதவி நிதி வழங்கப்படும்.

*(முற்பகல் 10-30)*

கபிலர்மலை தொகுதியைச் சேர்ந்த, பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நெடுஞ்செழியன் கொடுத்த மனுவில்,





நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பில்லூர் கிராமத்தில் வசித்து வரும் திருமதி பூங்கொடி என்பவரின் 10 வயது மகன் சஞ்சய், 20-12-2007 அன்று மழையின் காரணமாகத் திருமணிமுத்தாற்றில் அடித்துச் செல்லப்பட்டதால், கணவனாலும் கைவிடப்பட்ட நிலையில், மகனையும் இழந்த பரிதாப நிலையைக் கருதி, மாவட்ட ஆட்சியருடைய பரிந்துரையை ஏற்று, திருமதி பூங்கொடிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் குடும்ப நிவாரண நிதியாக வழங்கப்படும்.

குடியாத்தம் தொகுதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திருமதி ஜி. லதா அவர்கள், அவரது தொகுதியைச் சேர்ந்த தாஜ் ஷெரீப் என்ற இஸ்லாமிய இளைஞர், வனத் துறையினரின் மிரட்டலுக்குப் பயந்து, தற்கொலை செய்துகொண்டார் என்றும், அவரது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் உதவி நிதி வழங்கவேண்டுமென்றும் மனு கொடுத்துள்ளார். மறைந்த தாஜ் ஷெரீப் என்பவருடைய குடும்ப நிலையைக் கருதி, அவரது மனைவி சம்சாத் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

மதுரை கிழக்கு தொகுதியைச் சேர்ந்த, மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்களும், மதுரை மேற்கு தொகுதியைச் சேர்ந்த, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்களும், மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட 22-வது வட்டத்தில், காலரா காரணமாக உயிர் நீத்த 5 வயது சிறுவன் சுரேஷ் குடும்பத்திற்கு உதவி நிதி வழங்கவேண்டுமென்று கோரியுள்ளார்கள். அவர்களின் கோரிக்கையினையேற்று, மறைந்த சிறுவனின் தந்தை திரு. பாண்டிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் உதவி நிதி வழங்கப்படுகிறது.

அரூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. டில்லி பாபு, அவரது தொகுதியைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவரின் மகன் அமுது இனியவன், மகள் கிருஷ்ணம்மாள் ஆகிய இரண்டு பேரும் 5-5-2007 அன்று பேரையாற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்கள் என்றும், அவர்கள் குடும்பத்திற்கு உதவி நிதி வழங்கவேண்டுமென்றும் கோரிக்கை வைத்துள்ளார். அவரது கோரிக்கையையேற்று, இரண்டு குழந்தைகளின் இழப்பிற்குத் தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் உதவி நிதி வழங்கப்படுகிறது.

காங்கேயம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த, காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் கொடுத்த மனுவில், காங்கேயம் நகரில் நடைபெற்ற விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தும்,

15 பேர் காயமடைந்தும் உள்ளார்கள் என்றும், அவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி அளித்திட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். அவரது பரிந்துரையையேற்று, உயிரிழந்த மூன்று பேருடைய குடும்பத்தினருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதமும், படுகாயமடைந்தவர்களுக்குத் தலா ஐந்தாயிரம் ரூபாய் வீதமும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

காவேரிப்பட்டினம் தொகுதியைச் சேர்ந்த, பா.ம.க. உறுப்பினர் திரு. மேகநாதன் கொடுத்த மனுவில், தனது தொகுதியிலே சென்னப்பன் என்பவரின் மகன் குடியரசு தின விழாவில் கலந்துகொண்டுவிட்டு இல்லம் திரும்பும்போது விபத்தில் உயிரிழந்துவிட்டதாகவும், அவருடைய மற்றொரு மகனும் கடந்த ஓராண்டிற்கு முன்பு அதே குடியரசு நாளில் இறந்துவிட்டதாகவும், அந்தக் குடும்பத்திற்கு உதவி நிதி அளிக்கவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். அந்தக் குடும்பத்தின் பரிதாப நிலையை எண்ணிப் பார்த்து, ஐம்பதாயிரம் ரூபாய் இழப்பு நிதியாக வழங்கப்படுகிறது.

திருத்தணி தொகுதியைச் சேர்ந்த, அ.தி.மு.க. உறுப்பினர் திரு. அரி கொடுத்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், திருத்தணி நகர், ஸ்டாலின் நகர் பகுதியில் 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பலத்த காற்று அடித்தபோது சுவர் இடிந்து, மங்கம்மாள் என்பவர் உயிரிழந்து விட்டதாகவும், அவருடைய குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்கவேண்டுமென்றும் கேட்டுள்ளார். அவருடைய பரிந்துரையையேற்று, மங்கம்மாளின் வாரிசுதாரரான அவரது மகள் திருமதி கலா என்பவருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

முற்பகல் 10-35

குடியாத்தம் தொகுதியைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திருமதி லதா கொடுத்துள்ள மனுவில், அவரது தொகுதியில் கோபி-ஸ்ரீதேவி ஆகியோரின் இரண்டு குழந்தைகளான சூர்யா, சரவணன் ஆகியோர் கல் குவாரியில் தேங்கியுள்ள குட்டையில் 13-4-2008 அன்று விழுந்து இறந்துவிட்டதாகவும், அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். அவரது பரிந்துரையையேற்று, இரண்டு குழந்தைகளின் இழப்பீட்டுத் தொகையாகத் தலா ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்படும்.

அடுத்து, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களின் தொகுதியான அம்பாசமுத்திரம் தொகுதியில் அகஸ்தியர்பட்டி கிராமத்தில் மைக்கேல்



என்பவரின் 16 வயதான மகன் திலீபன் தாமிரபரணி ஆற்று நீரில் மூழ்கி இறந்துவிட்டார் என்றும், அவரது குடும்பத்திற்கு உதவி நிதி வழங்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார். அந்தக் கோரிக்கையையும் ஏற்று, மறைந்த திலீபனின் தந்தை மைக்கேலுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் உதவியாக வழங்கப்படும்.

வேறு சில சட்டப் பேரவை உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைக்காகவும், நிருவாக நடவடிக்கைக்காகவும் பரிசீலனையிலே உள்ளன என்று அந்த உறுப்பினர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விபத்தில் இறந்தவர்களுக்கும், மற்றுமுள்ள நிலையிலுள்ளவர்களுக்கும் கட்சி பாரபட்சம் இல்லாமல் பொது நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கியதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. தகவல் கோரல்

### (அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் யோகா பயிற்சியைத் தொடர வேண்டுகோள்

**திரு. ஜி.கே. மணி:** வருமுன் காப்போம், நோயற்ற வாழ்வு, உடல் பருமன் பேராபத்து என்பதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு யோகா பயிற்சி அளிக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தேன். அதை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நேற்றும், இன்றும் யோகா பயிற்சி அளித்திருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். 25 பேர் பங்கேற்றது மகிழ்ச்சி என்று எல்லோரும் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வருகிற 14 ஆம் தேதி வரையிலே அந்த யோகா பயிற்சியைத் தொடர வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கிறேன்.

[2008 மே 7

## (ஆ) தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மூன்று மானியக் கோரிக்கைகள், மூன்று அமைச்சர்கள் பதிலுரை வழங்க இருக்கிறார்கள். எனவே நேரத்தின் அருமை கருதி ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

"தமிழகத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை" குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், அ.இ.அ.தி.மு.க. சார்பாக திரு. ஓ. பன்னீர்செலவம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், ம.தி.மு.க. சார்பாக திரு. நா. இராமகிருஷ்ணன் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குத் தேவைப்படுகிற மிகவும் முக்கியமான அடியுரங்கள், D.A.P., சூப்பர் பாஸ்பேட், காம்ப்ளக்ஸ் *17:17, 20:20, 16:20* போன்ற உரங்களுக்குக் கடுமையாகத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பல இடங்களிலே மேற்கண்ட உரங்கள் கிடைக்காத நிலையில், பல இடங்களில் இன்று உரங்கள் பதுக்கப்பட்டு, கள்ளச் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. பெரிய நிறுவனமாக இருக்கிற ஸ்பிக் போன்ற நிறுவனங்கள் இன்றைக்கு மூடப்பட்ட நிலையில், உரத் தட்டுப்பாடு கடுமையாக உயர்ந்திருக்கிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில்கூட போதிய உரங்கள் இருப்பும் இல்லை. விற்பனையும் இல்லாத நிலை நிலவி வருகிறது. தமிழகத்தில் போதிய அளவுக்கு உரங்கள் இருப்பு இல்லாத காரணத்தால், அரசு இதிலே உரிய கவனம் செலுத்தியபோதிலும், உரங்கள் இறக்குமதி செய்யப்படும் என்று அரசு அறிவித்தாலும், கள்ளச் சந்தையிலே இது கூடுதலாக விற்கப்படுகிற நிலை உருவாகி இருக்கிறது.





ஆக, கள்ளச் சந்தையிலே சென்று அந்த உரங்களைப் பார்க்கிறபொழுது, அதன் விலை கடுமையாக உயர்ந்திருக்கிற நிலை இருக்கிறது. இறக்குமதி செய்யப்படுகிற உரங்கள் தரமற்றதாக உள்ளதாக விவசாயிகள் கூறி வருகிறார்கள். ஆகவே, *175* ரூபாய்க்கு விற்கப்படுகிற அம்மோனியம் குளோரைடு இன்றைக்கு *350* ரூபாய்க்கு விற்கப்படுகிறது. *450* ரூபாய்க்கு விற்கப்படுகிற டி.ஏ.பி. *750* ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆக, விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், தேவையான காலத்திலே அடியுரங்களை அவர்கள் வேளாண்மை செய்கிற அந்தப் பயிர்களுக்கு இட முடியாத காரணத்தினால், இப்போதே விலைவாசிகள் உயர்ந்துகொண்டிருக்கிற நிலையில், இதுபோன்ற தட்டுப்பாடுகள் ஏற்படுகிறபோது அடுத்த ஆண்டு உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிற நிலையும் தமிழகத்தில் உருவாகும். ஆகவே, அரசு இதிலே முழுக் கவனம் செலுத்தி, இறக்குமதி செய்யப்படுகிற உரங்கள் தரமான உரங்களாகவும், அதே நேரத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற நிறுவனங்களுக்கு அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய மானியத்தை மத்திய அரசை வலியுறுத்திப் பெற்றுத் தருவதோடு, விவசாயிகளுக்குத் தேவையான நேரத்தில் அந்த உரங்கள் கிடைக்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்ளவில்லை என்று சொன்னால், எதிர்காலத்திலே தமிழகத்திலே உணவுப் பஞ்சத்தை நாம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் நான் தெரிவித்து, அமர்கிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே நம்முடைய முதன்மைத் தொழிலாக இருக்கிற விவசாயம் பாதிக்கிற ஒரு நிலைக்கு சென்றுகொண்டிருக்கிறது. அதிலும் இப்போது யூரியா, டி.ஏ.பி. போன்ற உரங்கள் கிடைக்கவில்லை என்ற புகார் பல்வேறு இடங்களிலே வந்துகொண்டிருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்று சொன்னால், நாட்டிலே இருக்கிற உர வியாபாரிகள் பதுக்கல் செய்து வைத்திருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. அது மட்டுமல்லாமல், கலப்பட மருந்துகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவலும் சொல்லப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தலையிட்டு, தமிழகத்திலே இருக்கிற இந்த விவசாயிகளுடைய நலனைக் காப்பதற்கு ஒரு பெருமுயற்சியாக—ஏற்கெனவே வெள்ளம் ஒரு பக்கம், இன்னொரு பக்கம் வறட்சி இருக்கிறது. இந்நிலையிலே விவசாயிகளைக்

காப்பாற்றுவதற்கு ஒரு பெரும் முயற்சி எடுத்து, மானிய விலையிலே தரமான மருந்துகளை அரசே விற்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் எனப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.ஏ.பி., யூரியா போன்ற உரங்கள் கிடைக்கவில்லை என்ற கருத்து பரவலாகத் தமிழகம் முழுவதிலும் வருகிறது. அதுவும் இந்த நேரம் என்பது கோடைக் காலம். அதிகமாக உரம் தேவையில்லாத காலத்திலேயே உரம் இல்லை என்ற அந்தச் செய்தி வருவது என்பது, பின்னாலே சாகுபடி செய்யக்கூடிய காலங்களிலே மிகப் பெரிய தட்டுப்பாடாக வந்துவிடுமோ என்ற ஒரு கவலையின் காரணமாக இந்தக் கவன ஈர்ப்பைக் கொடுத்து இருக்கிறோம். இதிலே குறிப்பாக, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதிலே என்ன நிலைமைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். குறிப்பாக, நமது மாநிலத்திலே தயாரிக்கக்கூடிய உர நிறுவனங்களிலே, குறிப்பாக ஸ்பிக் உர நிறுவனம் மூடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, டி.ஏ.பி., உரம் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த ஆலை மூடப்பட்டது குறித்து நம்முடைய அரசு என்ன நிலை கொண்டிருக்கிறது? உடனடியாக அதைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றனவா? ஏன் அந்த ஆலை மூடப்பட்டு இருக்கிறது? இப்படித் தனியார் மூடிவிட்ட காரணத்தினாலே, நமது தமிழகத்திலே அப்படிப்பட்ட பாதிப்பு ஏற்பட்டு, விவசாயிகளுக்கு மிகப் பெரிய இன்னல் ஏற்படுகிற சூழ்நிலை வருகிறது. ஆகவே, அதை நம்பி நாம் இருக்கிறபோது, அந்த ஸ்பிக் உர ஆலை மூடப்பட்டிருக்கக் கூடாது. அதை உடனடியாகத் திறந்து உற்பத்தியைத் தொடங்குவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரசு சார்ந்து இருக்கிற நிறுவனங்களில் இருக்கக்கூடிய உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். TANFED நிறுவனத்தின்மூலமாக எங்களது மன்னார்குடி பகுதியிலே பாமினியிலே பாமினி உரமணி ஆலை இருக்கிறது. அது நலிவடைந்த நிலையிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், அதில் உற்பத்தி செய்யப்படுகிற உரம் தரமானதாக இருக்கிறது. ஆகவே, அந்த



ஆலையை மேம்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்துவதன்மூலமாக, இப்படிப்பட்ட குறைபாடுகளையும் போக்குவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும், நம்முடைய தமிழகத்திலே அரசின் சார்பிலே உர உற்பத்தி செய்வதற்குரிய முயற்சிகளைப்பற்றி அரசு ஏதாவது புதிய கொள்கையை ஏற்பாடு செய்ய இருக்கிறதா? அப்படிச் செய்வதன்மூலமாகத்தான் இதை நிவர்த்தி செய்ய முடியும். பதுக்கல் பேர்வழிகளுக்கு வாய்ப்பு அளிக்காமல், உரத் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு என்ன முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே விவசாயம் என்பது முதன்மைத் தொழிலாகக் கருதப்படுகிறது. கடந்த 2007 ஆம் ஆண்டில் இருந்து உரத் தட்டுப்பாடு தமிழ்நாட்டில் கடுமையாக நிலவி வருகிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தகவல் தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் 55 இலட்சம் எக்டேர் நெல் மற்றும் தானியப் பயிர் விவசாயம் நடைபெறுவதாகவும், வருடத்திற்கு 26 இலட்சம் மெட்ரிக் டன் உரம் தேவை எனவும் சொல்லி இருக்கின்றார்கள். இவ்வளவு தெளிவான தகவல் தந்தும்கூட, தொடர்ந்து உரத் தட்டுப்பாடு, உர உற்பத்தி, உர விநியோகம் சரியாக இல்லாததனால் விவசாயிகள் கடந்த ஆண்டே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு முக்கியமான காரணம், உரம் தயாரிப்பதற்குண்டான மூலப் பொருள் பாஸ்ஃபோரிக் அமிலம் கிடைக்கவில்லை என்பதனால்தான் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

இந்த விஷயம் கடந்த ஆண்டு பூதாகரமாக வெடித்தபோது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு, 23-11-2007-ல் மத்திய அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். அதன் அடிப்படையில், Indian Potash Limited சார்பாக 55,000 மெட்ரிக் டன் உரம் வருவதாகவும், அதைப்போல இஃப்கோ மூலமாக 7,300 மெட்ரிக் டன் உரம் வருவதாகவும், அதைப்போல, ஸ்பிக் மூலமாக 3,000 மெட்ரிக் டன் உற்பத்தி வருவதாகவும், அதைப்போல, மெங்களூர் கெமிக்கல்சிலிருந்து 6,200 டன்னும், அதைப்போல 14-2-2007-ல் தூத்துக்குடி துறைமுகத்திற்கு 20,000 டன் உரம் வருவதாகவும்

ரூபாய் 10 கோடியும், இரண்டாவது கட்டமாக 24-8-2007 அன்று ரூபாய் 20 கோடியும், வட்டியில்லாத வழிவகை முன்பணமாக ரூபாய் 30 கோடி வழங்கப்பட்டு, Indian Potash Limited மற்றும் Rashtriya Chemicals போன்ற இறக்குமதியாளர்களிடமிருந்து கடந்த ஆண்டு மட்டும் 1.04 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரத்தைக் கொள்முதல் செய்து, தமிழகத்திலுள்ள அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் விவசாயிகளுக்கு வழங்கி, எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு டி.ஏ.பி., உரம் 18 சதவீதம் கூடுதலாக விநியோகம் செய்து தமிழக அரசு சாதனை படைத்துள்ளது.

கடந்த 5 ஆண்டு சராசரி டி.ஏ.பி., உரப் பயன்பாடு 2,82,853 மெட்ரிக் டன். 2007-2008 ஆம் ஆண்டு விநியோகம் செய்யப்பட்ட டி.ஏ.பி., அளவு 3,35,230 மெட்ரிக் டன், வழங்கியிருக்கின்றோம். 2008-2009 ஆம் ஆண்டு கரீஃப் பருவத்திற்கு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை யூரியா 4.35 இலட்சம் மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி., 2.00 இலட்சம் மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் உரம் 2.00 இலட்சம் மெட்ரிக் டன்னும் தேவையெனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 2008 மே மாதத்திற்கு யூரியா 60,000 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி., 23,000 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 25,000 மெட்ரிக் டன்னும் தேவைப்படுகிறது. தமிழகத்திலுள்ள உர உற்பத்தியாளர்களைக் கொண்டு நடைபெற்ற மே 2008 மாதத்திற்கான மாநில அளவிலான உரம் வரவு மற்றும் விநியோகத் திட்ட ஆய்வுக் கூட்டத்தில், யூரியா 86,245 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 60,775 மெட்ரிக் டன்னும் விநியோகம் செய்வதாக உற்பத்தியாளர்கள் இசைவு தெரிவித்தனர். மே மாத டி.ஏ.பி. உரத் தேவையான 23,000 மெட்ரிக் டன்னுக்குப் பதிலாக 9,900 மெட்ரிக் டன் மட்டுமே விநியோகம் செய்ய இயலும் எனத் தெரிவித்தனர். இந்த நிலைமையை அரசு கவனத்திலே கொண்டு, மீண்டும் நமது முதலமைச்சர் அவர்கள் 4-4-2008 அன்று மத்திய அரசின் இரசாயனம், உரம் மற்றும் எஃகுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஜூன் மாதம் வரை தேவையான 73,500 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரத்தைத் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு கடிதம் அனுப்பினார்கள்.

*முற்பகல் 10-55*

இக்கடிதத்திற்கு மாண்புமிகு இரசாயனம், உரம் மற்றும் எஃகுத் துறை அமைச்சர் அவர்கள் 11-4-2008 அன்று பதில் அனுப்பி, தமிழகத்திற்குத் தேவையான டி.ஏ.பி., உரத்தை வழங்கிட மத்திய உரத் துறைக்கு உத்தரவிட்டார். அதன்பேரில், 22-4-2008 அன்று புது டெல்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், மத்திய அரசின் உரச்



செயலாளர், தமிழகத்திற்கு Coromandel Fertilizers Ltd., மூலம் 20,000 மெட்ரிக் டன்னும், இந்தியன் பொட்டாஷ் நிறுவனத்தின்மூலம் 10,000 மெட்ரிக் டன்னும், IFFCO நிறுவனத்தின் மூலம் 7,500 மெட்ரிக் டன்னும், Mangalore Chemicals Ltd., மூலம் 1,500 மெட்ரிக் டன்னும், Zuari Industries Ltd., மூலம் 1,680 மெட்ரிக் டன்னும், ஆக மொத்தம் 40,680 மெட்ரிக் டன்னை உடனடியாக வழங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அக்கூட்டத்திலேயே ஆணை வழங்கப்பட்டது.

இந்நிறுவனங்கள் இந்த இரகங்களை 12-5-2008-க்குள் தமிழகத்திற்கு விநியோகம் செய்யவுள்ளன. இன்றைய நிலையில், தமிழகத்தில் 61,049 மெட்ரிக் டன் யூரியா, பொட்டாஷ் 32,000 மெட்ரிக் டன், டி.ஏ.பி., 5,396 மெட்ரிக் டன்னும் கையிருப்பில் உள்ளது. இதன்மூலம் மே மற்றும் ஜூன் மாதங்களில் டி.ஏ.பி., உரத் தேவையை தமிழக அரசு எவ்வித இடர்பாடுகளுமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இங்கு நம்முடைய திரு. செங்கோட்டையன் அவர்கள், உரங்கள் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதாகச் சொன்னார்கள். கள்ள மார்க்கெட்டில் உரம் விற்பனை செய்வதைக் கண்காணிக்க மாவட்ட அளவில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் புகார்கள் அரசின் அதிகாரிகளுடைய கவனத்திற்கு வந்ததில், விற்பனையாளர்களிடத்திலே சோதனை செய்ததில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** கள்ள மார்க்கெட்டில் உரங்களைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வதைத் தடுக்க, மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்காணிப்புக் குழுக்கள், உர உரிமம் பெற்றுள்ள விற்பனை நிலையங்களை ஆய்வு செய்து, அரசு நிர்ணயம் செய்துள்ள விலைக்கு விவசாயிகளுக்கு உரம் விற்கப்படுவதைக் கண்காணித்து வருகின்றன. மேலும், எந்தவொரு உர விற்பனை நிலையங்கள்மீதும் துறைக்குப் புகார் வருமேயானால், அந்த உர நிறுவனத்தை ஆய்வு செய்து, உரக் கட்டுப்பாட்டுச் சட்டம், 1985-ன்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

உதாரணமாக, செந்தில் ஏஜென்சீஸ், 372, திண்டுக்கல் ரோடு, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம் என்ற உர விற்பனை நிலையத்தின்மீது, உரங்களைப் பதுக்கி வைத்து கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்யவுள்ளதாகப் புகார் வந்தவுடன், அந்த உர விற்பனை நிலையத்தைக் கண்காணிப்புக் குழு ஆய்வு செய்து, 12.75 மெட்ரிக் டன் பாக்டம்பாஸ் உரத்தை முடக்கி வைத்திருந்ததைக் கண்டுபிடித்து,

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2008 மே 7

அவ்வுர நிலையம் 22 நாட்களுக்கு உரம் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது. விற்பனைத் தடை நீக்க காலம் முடிந்தவுடன், கடந்த 28-4-2008 அன்று அவ்வுர நிலையத்தை ஆய்வு செய்து, 12.75 மெட்ரிக் டன் பாக்டம்பாஸ் உரம் TANFED நிறுவனத்திற்கு மாற்றம் செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இதுபோன்ற புகார்கள் வேளாண்மைத் துறைக்கு வந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், தமிழக அரசு TANFED நிறுவனத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டு வழங்கிய ரூ.30 கோடியை 2008-2009 ஆம் ஆண்டில் தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ளவும், 2008-2009 ஆம் ஆண்டு கூடுதலாக ரூபாய் 20 கோடி வட்டியில்லா வழிவகை முன்பணமாக வழங்கப்படவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ரூபாய் 50 கோடி நிதியினைக் கொண்டு கடந்த ஆண்டு கொள்முதல் செய்ததைப்போலவே இந்த ஆண்டும் டி.ஏ.பி., உரத்தை அதிக அளவில் இறக்குமதியாளர் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து, தமிழகத்திலுள்ள 3,709 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் டி.ஏ.பி., உரம் மட்டுமின்றி எந்த உரத்திற்கும் தட்டுப்பாடின்றி வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தை இங்கே தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையைச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கினால் எங்கெங்கே கிடைக்கவில்லை என்பதைத் தெரிந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அதைத் தெரிவிப்பதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கும்.

இரண்டாவதாக, வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களிலே இந்த உரங்கள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். கடன் வாங்கியவர்களுக்கு மட்டும்தான் அது வழங்கப்படுகிறதே தவிர, கடன் வாங்காமல் இருக்கிற விவசாயிகளுக்கு அந்த உரங்கள் ஒரு மூட்டைகூட கிடைப்பதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2008 மே 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் சென்று விவசாயத்திற்காகக் கடன் வாங்குகிறார்கள். அப்படிக் கடன் வாங்கி விவசாயிகள் தொழில் செய்கிறபோது அவர்களுக்குத் தேவையான உரத்தை நாம் வழங்குகிறோம். அதுதான் நடைமுறையிலே இருந்து வந்தது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நினைத்து நினைத்து, உங்களுக்குச் சந்தேகம் வரும். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் கேட்டீர்கள் இல்லையா? (குறுக்கீடு) திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வாங்காத பெரிய விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் கடன் வாங்கியவர்களுக்குக் கொடுத்ததுபோக மீதம் இருந்தால் வழங்குகிறார்கள். இல்லாவிட்டால், தனியார் கடை லைசென்ஸ் கொடுத்த Agents, private-ல் இருக்கிறார்கள். அவர்கள்மூலமாக விற்பனை செய்யப்படுகிறது, அவர்களிடத்திலே அந்த உரத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## (இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டப் பேரவைத் தொகுதியில், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வலையங்குளம் ஊராட்சியில் நேற்றையதினம் ஒரு கோயில் திருவிழாவில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். ஆய்விலே இருக்கிறது, பார்த்து எடுப்போம். அறிவிப்பு வந்தவுடனே எடுக்கப்படும். (குறுக்கீடு) பார்க்கலாம், அதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு எதுவுமில்லை.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்களுக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 24-வது மற்றும் 25-வது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

### (ஆ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை)

### (இ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை)

---

### (அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.84,04,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.79,78,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 44, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.84,04,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 256, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

மின் தடையால், மின்சார விடுமுறையால் ஏழையெளிய மக்கள், தொழிலாளர்கள், வணிகப் பெருமக்கள், வியாபார நிறுவனங்கள், நூற்பாலைகள், நெசவாளர்கள், கொசு வலை உற்பத்தியாளர்கள், பஸ் பாடி தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அகண்ட தமிழகம், இன்று இருண்ட தமிழகமாக மாறிவிட்டதே இன்றைய ஆட்சியாளர்களின் சாதனை என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்டுகிறேன்.

மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க, நூல் உற்பத்தியாளர் மில்களுக்கு S.K.O. ᒧ Superior Kerosene Oil என்ற எண்ணெயை இறக்குமதி செய்யத் தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நூற்பாலைகளில் S.K.O. எண்ணெயைப் பயன்படுத்தி தங்கள் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதுடன், நூற்பாலைகள் தற்சமயம் பயன்படுத்தும் மின்சாரத்தை அரசு மற்ற தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கரூர் உட்பட தமிழகத்தில் இயங்கி வரும் ஜவுளி ஏற்றுமதி நிறுவனங்கள் வெளிநாட்டினருக்குக் கொடுக்கும் தரகருக்கான கமிஷன் தொகைக்கு 2004 ஆம் ஆண்டு முதல் service tax கட்ட வேண்டுமென்ற ஓர் ஆணையை மத்திய அரசு பிறப்பித்துள்ளது. 2004 ஆம் ஆண்டு முதல் கட்ட வேண்டிய அந்த service tax-க்கான உத்தரவு 2007 நவம்பரிலே பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு என்பது ஜவுளி ஏற்றுமதியாளர்கள் மத்தியிலே மிகுந்த குழப்பத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஜவுளி உற்பத்தி மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதற்குத் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து மத்திய அரசை வலியுறுத்தி இந்த service tax முறையை இரத்துச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல, தமிழகத்திலிருந்து கர்நாடகா வழியாக வட மாநிலங்களுக்கு ஜவுளி ஏற்றுமதி செய்கின்றபொழுது, கர்நாடக அரசு வணிக வரித் துறை அதிரடியாக checking என்ற முறையிலே அங்கே லாரிகளை நிறுத்தி, பல இலட்சம் ரூபாயை வரியாக வசூல் செய்கின்ற



முறையைப் பின்பற்றி வருகிறார்கள். அரசு இந்த ஜவுளித் துறைக்கு மிகுந்த இடையூறு ஏற்பட்டுள்ளதைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சாயப் பட்டறைகள் குடிசைத் தொழிலாக Cottage Industries என்ற பிரிவின்கீழ் இயங்கி வருகின்றன. முறையாக சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துச் செயல்பட்டாலும், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரில் உள்ள உப்புத் தன்மை என்பதை நீக்க முடியாமல் சுற்றச்சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாகத் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சாயப் பட்டறைகள் நீதிமன்றங்களின் ஆணைப்படி மூடப்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டுகளிலே இந்த அரசு அறிவித்த அந்தக் கழிவு நீரைக் கடல் நீரில் சேர்க்கும் திட்டம் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்திற்கு இன்று வரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

தேசிய நெடுஞ்சாலைகளிலே சாலைகள், மேம்பாலங்கள் போன்றவற்றை B.O.T. system-ல் கட்டுவதைப்போல, தனியார் துறையைப் பயன்படுத்தி மத்திய அரசோ அல்லது மாநில அரசோ அல்லது தனியாரோ இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, ஒரு சாயப் பட்டறையிலிருந்து வெளியேறுகின்ற நீரின் அளவைப் பொறுத்து, அவர்களிடத்திலே கட்டணத்தை வசூல் செய்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

கரூர் உட்பட ஜவுளி ஏற்றுமதி நிறுவனங்கள், மதிப்புக் கூட்டு வரியைத் திரும்பப் பெறுவதிலே அதிக இடைஞ்சல்களைச் சந்தித்து வருகின்றன. இந்த மதிப்புக் கூட்டு வரியைத் திரும்பப் பெறுகின்ற அலுவலகத்திலே பணிபுரிபவர்களுக்குத் தொகைக்கு ஏற்ப தொகை வழங்கினால் மட்டுமே திரும்பக் கிடைக்கின்ற சூழ்நிலை தமிழக அரசு அலுவலகங்களில் நடைபெற்று வருகிறது. இதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் ஜவுளி ஏற்றுமதி நிறுவனங்கள் ஏற்றுமதி செய்யும் பொருட்களில் சுமார் 50 சதவிகிதம் அமெரிக்கக் கண்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அமெரிக்கக் கண்டங்களுக்கு அனுப்பப்படுகின்ற சரக்குகளினுடைய அளவு என்பது தமிழகத்திலே இதுவரை inch tape

மூலம் அளக்கப்பட்டு வந்தது. இன்று அரசினுடைய அதிகாரிகள் inch tape-ஐப் பயன்படுத்தக்கூடாது என்று தடை விதிக்கிறார்கள். உடனடியாக அந்த inch tape முறையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கொண்டு வரப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தில் 2006-07 ஆம் ஆண்டில் 70,971 நெசவாளர்கள் ரூபாய் 950 இலட்சம் பயன்பெற்றார்கள். 2007-2008-லே 29,485 நெசவாளர்களாக அந்தத் திட்டத்தில் அதன் பயனாளிகள் குறைக்கப்பட்டுள்ளனர். அந்தத் திட்டத்திற்குண்டான நிதியும் 492 இலட்சம் ரூபாயாக, 50 சதவிகிதம் பயனாளிகள் அந்தத் திட்டத்திலே குறைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

2008-2009-க்கு நிதி என்பது ரூபாய் 417 இலட்சம், அதாவது சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூபாய் 80 இலட்சம் நிதி குறைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தை, அதிக நிதியை ஒதுக்கி நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-30*

அதேபோல, இந்தியத் திருநாட்டின் ஒப்பற்ற தலைவியாய், ஏழையெளிய நெசவாளர்களின் நல்வாழ்வில் ஒளி விளக்காய்த் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2004-2005 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தின்மூலம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 468 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டிலே 153 இலட்சம் ரூபாயும், 2008-2009 ஆம் ஆண்டிலே 160 இலட்சம் ரூபாயும் நிதியொதுக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டிலே 2 இலட்சத்து 25 ஆயிரம் நெசவாளர்கள் பயன்பெறுவார்கள் என்று இந்த அரசு கூறுகின்றது. அதற்குத் தேவையான தொகை 180 இலட்சம் ரூபாய். ஆனால், ஒதுக்கப்பட்ட தொகை 160 இலட்சம் ரூபாய்தான் என்பதை இந்த அவையிலே பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.



அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, தமிழகத்தில் கூட்டுறவு நெசவாளர் குடும்பங்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை கடந்த 1-1-1992 முதல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள். அந்தக் குடும்பத்திலுள்ள நெசவாளர்கள் இறந்தால், 10 ஆண்டுகளுக்கு ஓய்வூதியம் வழங்குகின்ற திட்டத்திலே 2007-2008 ஆம் ஆண்டில் 66.73 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்படவில்லை. அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படுமா, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

நெசவாளர்களின் வாழ்க்கை மேம்பட, அவர்களுடைய அடிப்படைத் தேவையான கைத்தறி நெசவாளர்கள் கூடம், அதாவது தறிக் கூடம் அமைப்பதற்கான திட்டம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டது. ஆனால், இன்றைய தி.மு.க. ஆட்சியில் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு இதுவரை நிதியுதவி வழங்கப்படவில்லை, அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் ஜவுளிகளை மாநிலச் சங்கம் கொள்முதல் செய்வதில், அடக்க விலையிலிருந்து 14½ சதவிகிதம் இலாபம் வைத்துக் கொள்முதல் செய்து வருகிறார்கள். தற்போது இச்சங்கத்தின் நடைமுறைச் செலவினங்களைக் கருத்தில் கொண்டு, அதை 18 சதவிகிதமாக உயர்த்துவதற்கு அரசு முன்வர வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், கரூர், ஆண்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டத்தை விரைந்து முடிக்க இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா, அந்தத் திட்டத்தினுடைய நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

காஞ்சிபுரத்தில் பட்டு உற்பத்தியாளர்களுக்குத் தேவையான சூரத் சரிகையை, நெசவாளர்களுக்குத் தேவையான அளவை அரசினால்

வழங்க முடியவில்லை. பட்டுக்குப் பெயர்பெற்ற காஞ்சிபுரத்தில் இன்று நெசவுத் தொழில் நசிந்து வரும் நிலையில் உள்ளது. நெசவாளர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு கிடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் 36,434 மெட்ரிக் டன் தேயிலைத் தூளை விற்பனை செய்து சாதனை புரிந்தது. ஆனால், இன்றைய தி.மு.க. ஆட்சியிலே 13,343 மெட்ரிக் டன்னாக விற்பனை குறைந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் கூட்டமைப்பின் சார்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான "ஊட்டி டீ" என்ற திட்டத்தின்மூலம் 13,391 மெட்ரிக் டன் விற்பனை செய்து, சாதனை படைக்கப்பட்டது. ஆனால், இன்றைய தி.மு.க. ஆட்சியிலே 3,045 மெட்ரிக் டன்னாக அந்த விற்பனை குறைந்துள்ளது என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்டி, அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைக் கேட்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சேலம் மரவள்ளிக் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவைத் தொழிற்கூட்டுறவுச் சங்கம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே சுமார் 872 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்து, சாதனை படைத்தது. ஆனால், இன்றைய நிலை, தி.மு.க. ஆட்சியின் இரண்டு ஆண்டுகளிலே 236 கோடி ரூபாய்க்குத்தான் அந்த விற்பனை எட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நடைபெற்ற திட்டங்களைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். தமிழகத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் ஊரகப் பகுதிகளில் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியின் தொடர்ச்சியாக, இன்று ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற தி.மு.க. அரசு, தமிழகத்திலே 19 தொழிற்பேட்டைகளை அமைப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்துள்ளது. அந்த 19 தொழிற்பேட்டைகளிலே, கரூர் மாவட்டம், ஆத்தூரில் அமைக்கப்படவுள்ள தொழிற்பேட்டைக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள



இடம் விவசாய நிலமாக உள்ளது. அவர்கள் சிறு, குறு விவசாயிகள். அவர்கள் அந்த இடத்தை விட்டால் அவர்களுக்கு வேறு வழியில்லையென்பதை இந்த அவையிலே பதிவு செய்து, அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான திட்டத்தை இரத்துச் செய்து, மாற்று இடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன்.

புதிதாக 19 தொழிற்பேட்டைகளை உருவாக்க இருப்பதாகக் கூறுகின்ற தி.மு.க. அரசு, 20 ஆண்டுகளுக்கு முன்பாக சிறு தொழில்களுக்கெனத் தொடங்கப்பட்ட கோவை, கருமத்தம்பட்டி அண்ணா தொழிற்பேட்டைக்கான 100 ஏக்கர் நிலத்தை "சுஸ்லான்" தனியார் கம்பெனிக்குப் பரிவர்த்தனை செய்ததன் காரணமாக 100 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை இந்த அவையிலே பதிவு செய்கின்றேன். கதர்த் துறை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மீண்டும், மீண்டும் சில தவறான தகவல்களை அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். 1989 ஆம் ஆண்டு Industrial Co-operative Society என்ற அமைப்பின்மூலம், அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு 310 ஏக்கர் நிலம், அன்றைக்கு அந்த உறுப்பினர்களால் வாங்கப்பட்டது. அதற்குப் பின்னால், இப்பொழுது தனியார் கம்பெனியான சுஸ்லான் என்ற நிறுவனம் Special Economic Zone என்ற அமைப்பிலே சுமார் 300 ஏக்கர் நிலத்தை வாங்கினார்கள். அந்த அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டை நிலமும், சுஸ்லான் நிறுவனத்தினுடைய நிலமும், இரண்டும் பின்னிப் பிணைந்த காரணத்தினால், இரண்டு தொழிற்பேட்டைகளையுமே சரியான முறையில் அமைக்க முடியவில்லை. ஆகவே, அந்தத் தொழில் நிறுவனர்கள்—ஏறத்தாழ 5,000 பேருக்குத் தொழில் கொடுக்கக்கூடிய சுஸ்லான்—நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அன்றைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் அணுகிக் கேட்டார்கள். நானே இரண்டு, மூன்று முறை அந்த இடத்திற்குச் சென்று, நேர்கோடாக அமைத்து, அவர்களுக்கு நம்மிடமிருந்து 100 ஏக்கர் நிலம் கொடுத்து, அதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து 110 ஏக்கர் நிலம் பெற்று, மாற்றாக அந்தத் தொழிற்சாலைக்குரிய, அண்ணா தொழிற்சங்கத்திற்குரிய கடன் தொகை 98 இலட்சம் ரூபாயையும் அந்த சுஸ்லான் நிறுவனம் கட்டுமாறு செய்து,

மேலும் அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்குச் சொந்தமான பகுதியையெல்லாம் சரி செய்து கொடுத்துள்ளார்கள். இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக 585 மனைகள்—கடந்த பல ஆண்டுகளாக, 1989-லிருந்து கைவிடப்பட்ட அந்தத் தொழிற்சாலைக்குரிய மனைகள் 585 பேருக்கு விரைவிலே வழங்கப்படும். முன்பு அந்த நிலம் இரண்டு இலட்சம் ரூபாய் என்ற அளவிலே இருந்தது. இன்றைக்கு-ஏறத்தாழ 75 இலட்சம் ரூபாய் அளவிலே-ஏறத்தாழ மொத்தமாக 200 கோடி ரூபாய் அளவிலே அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டையின் அந்த நிலத்தின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. மேலும், 585 நபர்களுக்கும் சுஸ்லான் தொழிற்சாலையின்மூலமாக உப தொழில்கள் தொடங்குவதற்கு ஏராளமான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, தவறான தகவல்களை இங்கே கூறவேண்டாம் என்று திரு. செந்தில் பாலாஜி அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே கதர்த் துறை புத்துயிர் பெற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. 1996-2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கதர்த் துறைக்கென்று ஒரு பைசா நிதிகூட ஒதுக்கப்படவில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே-2001-ல் ஆட்சிக்கு வந்த பிறகு சுமார் 40 கோடி ரூபாயைத் தள்ளுபடி மானியமாகக் கதர்த் துறைக்கு வழங்கி பொற்கால ஆட்சியை நடத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த அவையிலே பதிவு செய்கின்றேன். அதேபோல, இந்த இரண்டாண்டு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர்கள், answer பண்ணும்போது, விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன், Please. (குறுக்கீடு) I will suggest to the Ministers. (குறுக்கீடு) Sir, மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருந்தாலும், உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே தந்துகொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செந்தில் பாலாஜி, ஏன் தவறான தகவலைக் கொடுக்கிறீர்கள்?



**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** கடந்த ஆட்சிக் காலத்தில் கதர்த் துறையில் 862 பேர் அதிகமாக உள்ளனர் என்று அவர்களையெல்லாம் பணி நீக்கம் செய்தார்கள். மீண்டும் நமது கழக ஆட்சி வந்த பின்னால், தலைவர் கலைஞர் அவர்களின் உத்தரவின்பேரில் அரசாங்கத்தில் 96 பேரைப் பணியமர்த்தி, கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு விற்பனையும், உற்பத்தியும் 10 கோடி ரூபாய் அளவிற்கு அதிகம் இந்த ஆண்டு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) தயவுசெய்து அமைதியாக இருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத் தந்ததை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கதர் மானியக் கோரிக்கையிலே கதருக்கு அவர்களுடைய கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியிலே தொடர்ந்து மானியம் வழங்கப்பட்டதாகச் சொன்னார். ஆனால், அது முழுக்க, முழுக்கத் தவறு. அவர்கள் ஆட்சியில் இருந்த ஐந்து ஆண்டுகளில் மானியம் வழங்கப்படவில்லை என்பதை நாங்கள் இந்த மன்றத்திலே எழுப்பி, இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆறு ஆண்டுகள் வழங்கப்படாத இந்த மானியத் தொகைக்கு சுமார் 12½ கோடி ரூபாய் வழங்குவதற்கான உத்தரவினை இந்த ஆண்டு பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம். (குறுக்கீடு) திரு. செந்தில் பாலாஜி, உங்களால் முடிக்க முடியாது. (குறுக்கீடு) உங்களுக்கு finishing trouble. உங்களால் முடிக்க முடியாது.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களால் முடிக்க முடியாது. (குறுக்கீடு) நேரம் இல்லை. (குறுக்கீடு) ஒன்றும் வேண்டாம். திரு. ஓ. சுப்பிரமணியம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புசித்திருந்த நாட்களைவிட பசித்திருந்த நாட்களே

அதிகமாக இருந்த ஏழை விவசாயியினுடைய குடும்பத்திலே பிறந்து, பள்ளியிலே கல்வி கற்று, நடத்துனர் உரிமம் பெற்று, தலைவர் கலைஞர் அவர்களால் நாட்டுடைமையாக்கப்பட்ட அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே, சேரன் போக்குவரத்துக் கழகத்திலே நடத்துனராக இணைந்து, கொடிவேரி, நால்ரோடு, ஏழூர், வாணிப்புத்தூர், தூக்கநாயக்கன்பாளையம், பங்களாபுதூர், அத்தாணி, ஜம்பை, தளவாய்பேட்டை, ஆப்பக்கூடல், பவானி, ஈரோடு என்று சிறப்பான முறையிலே பணியாற்றியதன் விளைவாக தணிக்கையாளராகப் பதவி உயர்வு பெற்று, இன்று மக்களுக்குப் பணியாற்றுவதற்காக நல்லதொரு மகத்தான வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற, உலகத் தமிழினத்தினுடைய ஒப்பற்ற தலைவரும், எங்கள் இன்னுயிர் இதயத் தலைவருமாகிய தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இளமைக் காலத்திலேயிருந்து, நட்பிற்கு இலக்கணமாக இன்றளவும் வாழ்ந்துகொண்டு, இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல பல நலத் திட்டங்களை நிதிநிலை அறிக்கையின்மூலம் வழங்கியிருக்கின்ற நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அண்ணன் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அருளாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எழுச்சியுகம் காண்பதற்கு எழுந்து வந்த காளைகாள்! வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் தீரம் மிக்க இளைஞர்காள்! விருப்பம்போல், பலர் பதவியில் இருந்திடினும் அவர் வேண்டாம், நெருப்பின் பொறிகளே நீங்கள்தான் தேவை என்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய இளமைக் கால அறைகூவலுக்கேற்ப மாணவனாக, இளைஞனாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்து, இன்றைக்குத் தமிழக மக்களுடைய அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்து, நாட்டு மக்களுக்காக நல்லாட்சி நடத்தி வந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றலும், பரிவும் கொண்ட அமைச்சர் பெருமக்களுக்கும், உலகிலேயே உணர்வு பூர்வமானதும், உணர்விழந்து போனதும், வளமைக்குரியதாய் இருந்ததும், வாழ்வாங்கு வாழ்ந்ததும், வகையற்றதுமாய்க் கிடந்த தமிழினத்தின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி, தன்மான உணர்வுகளை ஊட்டி, தலை நிமிரச் செய்த தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனிதன் எதை வேண்டுமானாலும் இழக்கலாம், மீண்டும் சம்பாதித்துக்கொள்ளலாம். ஆனால், மானத்தை இழந்துவிட்டால் திரும்பப்பெற முடியாது. அந்த மானத்தைக் காப்பாற்றுகின்ற ஆடையை உருவாக்குகின்ற கைத்தறித் துறையின்மீது உரையாற்றுவதற்கு வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

55 ஆண்டுகளுக்கு முன்பு கைத்தறித் துறை நசிவடைந்திருந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள், நெசவாளர்கள் கஷ்டத்தைக் கண்களால் கண்டேன், மனம் உருகிவிட்டேன், அவர்கள் துயரைத் தீர்க்க வேண்டுமானால், கைத்தறித் துணியை நாட்டு மக்கள் வாங்க வேண்டும், அவர்கள் தொழில் மீண்டும் நடக்க வேண்டுமென 1953 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் நாள் அண்ணா அவர்கள் திருச்சியிலும், தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையிலும் கைத்தறித் துணிகளைச் சுமந்து விற்று 55 ஆண்டுகளுக்கு முன்பாகவே கைத்தறித் தொழிலுக்கும், தொழிலாளர்களுக்கும் பாடுபட்டவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்வாட் வரியை நீக்கப் பாடுபட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்; நெசவாளர்களின் துயர் துடைக்க இலவச மின்சாரம் வழங்கியவர் தலைவர் கலைஞர்; கைத்தறித் தொழில் அபிவிருத்தி அடைய சிட்டா நூலுக்கு இரண்டு விழுக்காடு விற்பனை வரி விலக்கு அளித்தவர் தலைவர் கலைஞர்; நெசவாளர்களுக்கு வங்கி வீட்டுக் கடன் இரத்து, மருத்துவக் காப்பீட்டுத் தொகை அரசே ஏற்பு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தள்ளுபடி மானிய நிலுவைத் தொகையை உடனுக்குடன் வழங்குவது தலைவர் கலைஞர் அரசு; பள்ளி மாணவ, மாணவியர்க்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கல்வி உதவித் தொகை வழங்குவது தலைவர் கலைஞர் அரசு; நெசவாளருக்கு ஓய்வூதியத் தொகை ரூ.400/- ஆகவும், வாரிசுதாரர்களுக்குக் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.550/- ஆகவும் உயர்த்தியவர் தலைவர் கலைஞர்; தமிழக அரசு சுமார் 256 கோடி அளவிற்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தால் கைத்தறி நெசவாளர்களுக்கும், விசைத்தறித் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்தவர் தலைவர் கலைஞர்; நெசவுத் தொழில் வளர்ச்சி அ[illegible]வும், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் [illegible] பூங்காக்களை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்; கைத்தறித் துறையில் வியத்தகு அசல் பட்டுச் சேலை 1,64,498 கலரிலும்,

திருவள்ளுவர் உருவம் பதித்த 1,330 திருக்குறள் கொண்ட அசல் பட்டுச் சேலையும் வடிவமைத்து சாதனை படைத்தது தலைவர் கலைஞர் அரசு; விசைத்தறித் தொழிலாளர்களுக்குத் தனி நல வாரியம் அமைத்தவர் தலைவர் கலைஞர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பவானிசாகர் தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் 8 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 20 இலட்சம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும், நிலத்தடி நீராதாரத்தைப் பெருக்கவும் அவினாசி--அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி இல்லாத என்னுடைய பவானிசாகர் தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன். சமத்துவபுரம், உழவர் சந்தை அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன். பவானிசாகரில் உள்ள மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டியை மீன் குஞ்சு வளர்த்திட சீர்மைத்திடக் கேட்டுக்கொள்கிறேன். தெங்குமரஹாடா பாதையை தார்ச் சாலையாக மாற்றித் தரக் கேட்டுக்கொள்கிறேன். பவானி ஆற்றில் தொட்டம்பாளையத்தில் பாலம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன். பவானிசாகர் பகுதியை சுற்றுலா மையமாக அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில் மூடப்பட்ட பவானிசாகர் கதர் சாயச் சாலையைத் திறக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் செங்குந்தர் மாநாட்டில் தந்தை பெரியார் அவர்களைச் சந்தித்துப் பொது வாழ்வில் தன்னை இணைத்துக்கொண்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைப்போல, திருவாரூருக்குச் சென்று திராவிடத் தூண் டி.என். இராமன் அவர்கள் இல்லத்திற்குத் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து, தன்னுடன் இணைத்துக்கொண்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்தப் பேரறிஞர் அண்ணாவினுடைய நூற்றாண்டு விழாவைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கின்ற காலத்தில் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதாகும்.

தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு, சமத்துவபுரங்கள், மகளிருக்குத் திருமண நிதியுதவி, மகப்பேறு நிதி உதவி, இலவச எரிவாயு அடுப்பு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, 3,500 புதிய அரசுப்



பேருந்துகள், ஆதி திராவிட விவசாயிகள், நலிந்த பிரிவினருக்கு தாட்கோ கடன், வீட்டுக் கடன் தள்ளுபடி, வருமுன் காப்போம் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பயிர்க் காப்பீடு, ஆறுகளை இணைக்கும் திட்டம், அரசின் சார்பாக இரண்டரை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு, தனியார் நிறுவனங்கள்மூலம் பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு, கால்நடை மருத்துவ முகாம், புத்தகப் பதிப்புத் துறை மற்றும் நரிக்குறவர்களுக்குத் தனி நல வாரியம்;

'ஊரோரம் புளியமரம் உலுப்பிவிட்டா சலசலன்னு. . . ,

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் எதிர்பார்த்தேன். அதுதான் எதிர்பார்த்தேன். *(சிரிப்பு)*

**திரு. ஓ. சுப்பிரமணியம்:**

'நான் பிறந்த நாட்டினிலே ஆளாளுக்கு நாட்டாமையே
கூடுனமே கூடுனமே கூட்டுவண்டி காளபோல
மாட்டுனமே மாட்டுனமே நாரப்பய கையிமேலே'

என்ற கேலிக்குள்ளான அரவாணிகளையும் மனித ஜீவன்களாக மதித்து நல வாரியம் அமைத்துக் கொடுத்தவர் தலைவர் கலைஞர். *(மேசையைத் தட்டும் ஒலி)* மகளிருக்கு, தொழிலாளர்களுக்கு, மாணவ, மாணவியர்க்கு, விவசாயிகளுக்கு எனப் பல்வேறு நலத் திட்டங்கள்.

இன்று இந்தியாவிலே இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களெல்லாம் பின்பற்றக்கூடிய அளவிற்கு, எதிர்பாராத, நிறைவேற்ற முடியாத இத்தனை பல நல்ல திட்டங்களையெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கின்றபோது, செய்ய முடியாவிட்டாலும், குறை கூறுவதை எண்ணிப் பார்க்கின்றபோது, ஒரு கவிஞன் எழுதிய கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது. வாழை மரம் தன்னுடைய சுய சரிதையைக் கூறுவதாக அமைந்த அந்தக் கவிதையில், இலைப் பகுதியைப் பற்றிக் கூறுகின்றபோது, 'இந்த மனிதர்கள் உண்பதற்கு முன்னர் உணவு இலை என்பார்கள், உண்டு முடித்த பின்னர் எச்சில் இலை என்று எறிந்துவிடுவார்கள்; கூடத்தில் மரியாதைப் பூச்சு, குப்பைத் தொட்டிகளில் ஆயாச மூச்சு, தொட்டி இலையையும் துடைத்துச் சாப்பிட இந்த தேசத்துத் தெரு ராஜாக்கள் ஒருவரோடு ஒருவர் கட்டிப் புரள்கிறபோது, எதிர்கால இருட்டை

எண்ணிப் பதைக்கின்ற என் இதய வேதனைக்கு உவமைகள் ஏது என்பதைப்போல, இவ்வளவு நல்ல பல நலத் திட்டங்களையெல்லாம் குறை கூறுகின்றபோது மனம் வேதனை அடையத்தான் செய்கின்றது. நமது தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு உழைப்பதற்காக தேசத்து ராஜாக்களாக நம்மை இங்கே அனுப்பி வைத்திருக்கின்றார்கள். எனவே, நாம் தேசத்து ராஜாக்களாகத்தான் நடந்துகொள்ள வேண்டுமேயொழிய, வேறு ராஜாக்களாக நடந்துகொள்ளக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்குள்ளே காரசாரமாக நடந்துகொள்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அருகிலே இருக்கக்கூடிய உணவகத்திற்குச் சென்றால், காரமாக பக்கோடாவோ, வடையோ வாங்கி, கட்சி வித்தியாசம் பார்க்காமல் ஆளாளுக்குக் கொஞ்சமாகச் சாப்பிட்டு அகம் மகிழ்கின்றார்கள். அந்த மகிழ்வும், உறவும் இந்த சபைக்குள் வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். *(சிரிப்பு)*

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், நமக்கு இருப்பது ஒரு உயிர், அது போகப் போவது ஒரு முறை, அந்த ஒரு முறையும் இந்தத் தமிழ் சமுதாயத்திற்குப் போவதிலே நான் பெருமைப்படுகிறேன் என்றார்கள்.

உணர்ச்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்,

'பத்துத் தடவை பாடை வராது
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா!
செத்து மடிவது ஒருமுறை தானடா
சிரித்துக்கொண்டே போர்க்களம் வாடா!'

என்றார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள், 'வாளும் வேலும் உண்டாக்கிய இரத்தக் கடலில் மிதந்து செல்லும் வீரர்களின் மண்டையோடுகளைப் பயணமிட்டபடி முத்தம் நடத்தும் எலும்புத் துண்டுகளையும், அறுந்து போன நரம்புத் துகள்களையும் பார்த்து முகாரி பாடாமல், முதுகு காட்டாமல், முகம் சுளிக்காமல் முன்னேறு நீ, முன்னேறு என்று முரசொலித்து, எஞ்சிய வீரர்களை நெஞ்சுரம் கொள்ளச் செய்து, எந்த நேரத்தில் எதிரியின் ஈட்டி வருமோ, எதிரியின் கணை வருமோ என சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பது வீரர்களுக்கு அழகில்லை, மரணம் மாவீரர்களுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு, அது மங்கையின் இதழைவிட சுவையானது என்ற மனோபலத்தோடு படையை நடத்திச் செல்பவனே பராக்கிரமசாலி என்ற சிறப்புப் பாயிரத்தைப் பயின்றவன்தான் தமிழன், அவன் சாவுக்கு அஞ்சமாட்டான். ஆனால், காரணமில்லாமல் சாகமாட்டான்' என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த உணர்வுகள் நம் எல்லோருக்கும் வர வேண்டும். இந்தத் தமிழ்நாடும், தமிழினமும் காப்பாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒரு சிறிய பாடலைப் பாடுவதற்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒருவர்தான் மானியத்தை ஒட்டிப் பேசிய உறுப்பினர். *(சிரிப்பு)*

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'மண்மீது மானம் ஒன்றே பிரதானம்
என்று எண்ணும் குணம் வேணும்
இதை மறந்தாலே வாழ்வில் கிடைக்கும்
சன்மானம் மாறாத அவமானம்!

மண்மீது மானம் ஒன்றே பிரதானம்
என்று எண்ணும் குணம் வேணும்
இதை மறந்தாலே வாழ்வில் கிடைக்கும்
சன்மானம் மாறாத அவமானம்!
கண்ணான கணவன் தன்மானம் தன்னைக்
காப்பாற்றும் பெண் தெய்வம்
மனம் புண்ணாகி சிந்தும்
கண்ணீரைக் காணப் பொறுக்காதடா தெய்வம்
எண்ணாத துன்பம் எது வந்தபோதும்
எதிர்கொள்ளத் தயங்காதே!

எண்ணாத துன்பம் எது வந்தபோதும்
எதிர்கொள்ளத் தயங்காதே!
எளியோருக்காக நீ செய்த தியாகம்
இதை லோகம் மறவாதே!

எண்ணாத துன்பம் எது வந்தபோதும்
எதிர்கொள்ளத் தயங்காதே!'

*(முற்பகல் 11-50)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம் அவர்கள் திரைப்படத் துறையிலே பாடுவதற்கு நாங்கள் பரிந்துரை செய்கின்றோம். (சிரிப்பு) எனவே, அவர் மானியக் கோரிக்கையின்மீது பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** "அந்த இன்பம் புவியோர்கள் என்னும் பணம் காசிலே இல்லை"

(குறுக்கீடு) ஒரே ஒரு வரியைப் பாடிவிடுகின்றேன்.

"மெய்யன்பே எந்நாளும் அழியாத இன்பம், அதற்கீடு வேறில்லை."

நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, கதர்த் துறைக்கான மானியத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வழங்கவில்லை என்று சொன்னார்கள். 1996-லிருந்து 2001 வரை இருந்த arrears-ஐ 2003-ல் 40 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கியிருக்கின்றோம் என்பதை நான் இங்கே தெரிவித்து, அமர்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு காலங்களில் ஒரு ரூபாய்கூட சர்வோதய சங்கங்களுக்கு மானியம் தராமல், ஐந்தாண்டு காலத்தில் 25 கோடி ரூபாய் பாக்கி வைத்திருந்ததை, இப்போது தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 12.5 கோடி ரூபாயை இந்த வருடம் கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான புள்ளிவிவரங்களை இங்கே சொல்லிக்கொண்டிருக்கின்றார். கடந்த இரண்டு ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்கின்றதா? எந்தெந்த



ஆண்டுக்கு எவ்வளவு தொகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். 2003-ல் 40 கோடி ரூபாய் நாங்கள் வழங்கியது உண்மை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் பதில் சொல்லும்போது விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடு) டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் காமராசரின் பிறந்த தினத்தன்று கதர்த் துணிகளுக்கு 50 சதவீதம் தள்ளுபடி அறிவிப்பார்கள். ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே 2004-லே அப்படிப்பட்ட எந்தத் தகவலும், எந்த அறிவிப்பும் வரவில்லை. இதை எதிர்த்து நான் அப்போது மாநில இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, இராட்டை ஏந்திப் போராட்டம் என்று அறிவித்த பிறகுதான், மூன்று நாட்களுக்குப் பின்பு அந்த அறிவிப்பைச் செய்தார்கள். எனவே, இதிலிருந்து கதர்த் துணியின்மீது இவர்களுக்கு எத்தனை அக்கறை இருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன். (குறுக்கீடு) அ.தி.மு.க. சார்பில் இன்னொருவர் பேசும்போது நீங்கள் சொல்லலாம். திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் நிதியாண்டில் நான் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அவரது அமைச்சரவை சகாக்கள் அனைவருக்கும், மக்கள் தளபதி ஜி.கே. வாசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி, என்னுடைய உரையை ஆரம்பிக்கின்றேன்.

"செய்யும் தொழிலிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை"

என்று பாடினார் ஒரு புலவர். அப்படிப்பட்ட பெருமை பெற்ற நெசவுத் தொழிலான கதர்த் துறை, கைத்தறித் துறை, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆகிய துறைகள் விவசாயத்திற்கு அடுத்த தலையாய துறைகளாகும். கைத்தறித் துறையை மேம்படுத்த

பேரறிஞர் அண்ணா அவர்கள், தோளில் கைத்தறியைப் போட்டு விற்பனை செய்த வழித் தோன்றலில் வந்த இந்த அரசு, இத்தொழிலின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர் அய்யா மூப்பனார் அவர்கள் பிறப்பால் ஒரு விவசாயி, உணர்வால் ஒரு நெசவாளி என்று பாராட்டப்படுபவர். அவருடைய பகுதிக்கு உட்பட்ட திருப்புவனம் பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கத்தைப் பொறுத்தவரை, கடந்த 2004 ஆம் ஆண்டு அடிப்படைக் கூலியில் 10 சதவீதம் உயர்த்தித் தரப்பட்டது. அதன் பிறகு அதில் எந்தவொரு மாற்றமும் இல்லை. அந்த அடிப்படைக் கூலியில் மீட்டர் ஒன்றுக்கு 20 ரூபாய் உயர்த்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதே சங்கத்தில் இப்போது வழங்கப்படும் பஞ்சப்படி 50 சதவீதத்தைக் கூலியுடன் சேர்த்து வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தைப் பொறுத்தவரை, 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு சாயம் போடுதல், துணி விற்பனை, ஆயத்த ஆடை தயாரிப்பு போன்ற பல்வேறு செயல்பாடுகளைத் தவிர்த்து, நடைமுறை மூலதனக் கடன் மட்டுமே நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. எந்தவொரு வங்கியும் நெசவாளர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு முன்வரவில்லை. இந்தக் கழகம்தான் கடன் கொடுக்கும் நிறுவனமாக இருந்து வருகின்றது. ஏற்கெனவே, அபராத வட்டியான ரூபாய் 48 இலட்சத்தைத் தமிழக அரசு தள்ளுபடி செய்திருக்கின்றது. இதைத் திரும்பவும் re-imbursement செய்து, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்திற்குத் திரும்ப வழங்கினால், கழகம் இலாபகரமாக நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

வருடந்தோறும் செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தொடர் மழையின் காரணமாக நெசவாளர்கள் வேலையிழந்து, வருமானம் இழந்து அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, நெசவாளர்களைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே, ஆந்திரா, புதுச்சேரி அரசுகள் போல மழைக் கால நிவாரணம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

தமிழ்நாட்டில் சான்றளிக்கப்பட்ட கதர் நிறுவனங்கள் தொடர்ந்து கிராமங்களில் நல்ல முறையில் பணியாற்ற, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் 2000 ஆம் ஆண்டிற்கு முன் இருந்த நிலைக்கு தமிழக அரசு நிலையாணைகளில் மாறுதல் செய்து கொடுத்தும், கடந்த 8 ஆண்டுகள் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட rebate தொகையிலிருந்து, 75 percent rebate முன்பணமாக வழங்கியும், நிறுவனத்தை நம்பி வாழும் பல ஆயிரக்கணக்கான ஏழை நூற்போர், நெய்வோர், கைவினைஞர்கள் நலன் கருதி தாங்கள் இந்த உதவியை செய்து கொடுக்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



கேரள மாநிலத்தில் உள்ளதுபோல, அரசு அலுவலர்கள் கைத்தறித் துணியையே கண்டிப்பாக உடுத்த வேண்டுமென அரசாணை பிறப்பிக்க வேண்டுகிறேன். மேலும் சில பள்ளி, கல்லூரி மாணவர்கள் கைத்தறியை ஆதரித்து, கைத்தறி ஆடைகளையே உடுத்தி ஆதரவு தேடினார்கள். தமிழக அரசும், அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் 50 சதவீதத் தள்ளுபடியில் கைத்தறி ஆடைகளை விற்பனை செய்தால் கைத்தறித் துறை மேம்பாடு அடையும்.

ஏழையெளிய மக்களுக்கு இலவச வேஷ்டி, சேலைகள் வழங்கும் திட்டம்மூலம் 25 ஆயிரம் விசைத்தறித் தொழிலாளர்களுக்கும், 15 ஆயிரம் கைத்தறி நெசவாளர்களுக்கும் தமிழக அரசு வேலைவாய்ப்பு வழங்கியிருக்கின்றது. ஏழை மக்களுக்கு இலவச வேஷ்டி, சேலை 2007-2008 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அதேபோல, 2008 ஆம் ஆண்டும் அனைத்து ஏழையெளிய மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது. சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவர்களுக்கு சமூக நலத் துறையின் மூலம் வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் அனைவருக்கும் சீருடைத் துணிகள் உற்பத்தி செய்ய ரூ.16.54 கோடியில் தேவைப் பட்டியல் பெற்றுள்ளது. இந்தக் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகம் வழங்கும்போது, பள்ளிச் சீருடைகளையும் வழங்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். சத்துணவில் மூன்று முட்டைகள் போடுவதைப்போல, மாணவர்களுக்கு மூன்று சீருடைகள் வழங்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், தமிழக அரசு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதில் மைய அரசும் தனது பங்கினை வழங்கி வருகிறது. நலிவடைந்த நெசவாளர்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியம் ரூபாய் 550-லிருந்து ரூபாய் 700 ஆக உயர்த்தி வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ், மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவினை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 'மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா' என்ற காப்பீட்டுத் திட்டம், மைய அரசின் நிதியுதவியுடன் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், அனைத்து கைத்தறி நெசவாளர்களும் பயன்பெற்று வருகின்றார்கள். இந்த ஆண்டும் 2,25,000 நெசவாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகளை, ஆலைத் துணிகளுடன் போட்டி போட்டு சந்தையில் விற்பனை செய்யும் நோக்கத்தோடு விலையினைக் குறைத்து, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யும் கைத்தறித் துணிகளின் சில்லரை விற்பனை மற்றும் மொத்த விற்பனைக்குத் தரம் வாரியாக வரையறுக்கப்பட்டு, தள்ளுபடி மானியம் வழங்கப்படுகின்றது. கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் விற்பனையை ஊக்கப்படுத்துவதற்காக மைய அரசு தனது பங்கினை மானியமாக வழங்குகின்றது. மாநில அரசின் கொள்கைப்படி ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் விற்பனையை அதிகரிக்க மைய அரசும், மாநில அரசும் சேர்ந்து குறைந்த விலையில் ஏழை, நடுத்தர மக்கள் பயன்பெறுகின்ற வகையில் கைத்தறித் துணிகளின் விலையைக் குறைத்து, ஆண்டுதோறும் விற்பனை செய்ய ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகரில் நிலவி வரும் கடும் போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்க, மதுரையைச் சுற்றிலும் ஆரச் சாலைகளைப் போர்க் கால அடிப்படையில் விரைவில் முடித்துத்தர வேண்டுகிறேன். மதுரை கோரிப்பாளையம், செயின்ட் மேரீஸ் சர்ச், பெரியார் பேருந்து நிலையம் சுழல் மேம்பாலங்களை ஏற்படுத்தித் தர வேண்டுகின்றேன். தத்தனேரி, எல்லீஸ் நகர் மேம்பாலப் பணிகளைத் தாமதமின்றி விரைந்து முடிக்க வேண்டுகின்றேன். அரசு இராஜாஜி மருத்துவமனை விரிவாக்கப்



பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, நிற்கின்றது. தென் மாவட்ட மக்களுடைய மிகப் பெரிய மருத்துவமனையான இராஜாஜி மருத்துவமனை விரிவாக்கப் பணிகளை விரைவாக முடித்துத் தர வேண்டுகின்றேன்.

நண்பகல் 12-00

இரண்டாம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் மிக, மிகத் தாமதமாக நடந்து வருகின்றன. இந்தப் பணிகளை விரைவாக முடிப்பதன்மூலம் மதுரை மக்களுக்குத் தினசரி குடிநீர் கிடைக்க ஏதுவாக இருக்கும். குறிப்பிட்ட காலத்தில் விரைந்து முடிக்க உத்தரவிட வேண்டுகின்றேன்.

மேலும், மதுரை மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் தொடங்கி வெகு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தை விரைவிலே முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு உதவி புரியுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரையின் சிறப்பு மிக்க சின்னமான மீனாட்சி அம்மன் திருக்கோயில் அருகிலுள்ள சென்ட்ரல் மார்க்கெட்டை மதுரை மாநகரின் வெளிப்புறத்திற்கு மாற்றிட உடனடியாக ஆணைகள் வழங்கிட வேண்டுகின்றேன்.

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டு ஏறத்தாழ 25 ஆண்டுகள் முடிந்துவிட்டன. அவ்விடத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு, உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடம் கட்டுவதற்கு விரைவாக உத்தரவிட வேண்டுகின்றேன்.

சென்னையைச் சுற்றிலும் பெருகி வரும் பல்வேறு தொழிற்சாலைகளைக் குறைத்து, தென் மாவட்ட மக்களின் நலன் கருதி, மதுரை மாவட்டத்தைத் தொழில் நகரமாக மாற்றிட வேண்டுகின்றேன். அதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பெருகும்.

மதுரை மேற்கு தொகுதியில் செல்லூர் கண்மாய் புனரமைப்பிற்காக ரூபாய் 12 கோடியை நிதியாக ஒதுக்கிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். அந்தத் திட்டத்தை அறிவித்ததோடு, உடனடியாக திட்டத்தைச் செயல்படுத்தி நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை மாநகராட்சியில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், குப்பைகளை மதுரைக்கு அருகில் உள்ள வெள்ளக்கல் பகுதியில் கொண்டு சென்று எரிக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு இடர்பாடுகளும், சுற்றுச்சூழல் கெடுதியும் உண்டாகி அவதியுறுகிறார்கள். இந்தக் குறைபாட்டினைக் களைந்து, மதுரை மாநகராட்சிக்கு வெளியே கொண்டு செல்ல உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோருகின்றேன்.

மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில். இந்தத் திருக்கோயிலைச் சுற்றி ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு 50 அடி உயரத்திற்குள்ளாகக் கட்டடம் இருக்க வேண்டும் என்று Bye-law No. 164—விதி உள்ளது. சரித்திரப் பாரம்பரியம்மிக்க மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற நகரங்களில் 50 அடி உயரத்திற்குமேல் கட்டடங்களைக் கட்டக் கூடாது என அரசாணை எண் 22 கூறுகிறது. என்னைப்போன்று மீனாட்சி அன்னையை வணங்குபவர்கள் மட்டுமல்லாது, மதுரை மாநகரில் வசிக்கும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகிய அனைத்து மதத்தினரும் அன்னை மீனாட்சியைத் தாய் உள்ளத்தோடு நேசிக்கின்றவர்கள்தான். அரசாணை 22-ன்படி மதுரையில் பெரிய கட்டடங்கள் வரவில்லையென்றால், மதுரை வளர்ச்சி அடையாது. மதுரையில் தொழில் வளர்ச்சி பாதிப்பு அடைகின்றது.

அதே சமயத்தில், திருச்சி போன்ற நகரங்கள் பெங்களூருவுக்கு இணையாக வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கின்றன. அதனால் மதுரையில் தொழில் வளர்ச்சி பாதிப்பு அடைகிறது. எனவே இவ்வாணையைத் தளர்த்தி மதுரையைச் சுற்றி ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் உயர்ந்த கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிலேயே எந்த மாநகராட்சிக்கும் இன்றி, மதுரை மாநகராட்சியை மட்டும் ஆய்வு நடத்திச் சென்றுள்ளதற்கு நன்றி கூறுகின்றேன். அந்த ஆய்வின் அடிப்படையில் மதுரை மாநகர வளர்ச்சிக்காகவும் ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் 50 அடி உயரத்திற்கு மேல் கட்டடங்கள் கட்டுவது சம்பந்தமாகவும் அரசு உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுகின்றேன்.

மதுரை மாநகராட்சியில் அனுமதியில்லாத 25 ஆயிரம் கட்டடங்களுக்கு மேலாக இருக்கின்றன. 2004-ல் முந்தைய அரசு அந்தக்



கட்டடங்களை வரைமுறைப்படுத்த ஒரு G.O. பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில் 4,500 நபர்கள் வரைமுறைப்படுத்தக் கோரி அரசுக்குப் பணம் செலுத்தியுள்ளார்கள். கோவையில் தனி நபர் ஒருவர் இதற்கு stay order பெற்றுள்ளார். மதுரையில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. ஆகவே, மதுரைக்குத் தனியாக ஒரு G.O. வழங்குவதன்மூலம் இந்தக் கட்டடங்கள் வரைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம் பொது மக்களும் பெரிதும் பயன்பெறுவார்கள். அரசிற்கும், மதுரை மாநகராட்சிக்கும் சுமார் 25 கோடி ரூபாய் வருமானம் வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆகவே, மதுரை மாநகராட்சிக்குத் தனியாக உத்தரவு பிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழக முதல்வரின் பொற்கால ஆட்சியில் அனைத்து சமுதாயத்தினரும் சிறப்புடன் வாழ்கிற இந்தத் தருணத்தில், காட்டு நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க மதுரையில் மறுக்கப்படுகின்றது. இதன் காரணமாக, காட்டு நாயக்கர் சமூகத்தினரின் வாரிசுகள் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தாட்கோ போன்ற அரசு நலத் திட்ட உதவிகளைப் பெற இயலாமல் தவிக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் கனிவுடன் இவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கிட அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** உடனே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, (குறுக்கீடு) இருங்கள், அவர் முடிக்கட்டும். திரு. ராஜேந்திரன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 12-05*

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** பாரதப் பிரதமர் அவர்கள் தொழில் வளர்ச்சி குறித்து ஆற்றிய உரையில், நாட்டின் சில பகுதிகளில் மட்டுமே தொழில் வளர்ச்சி உள்ளது; நகர்ப்புறங்களுக்கு இணையான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுகின்றன; மீதப் பகுதிகள் விடுபட்டுப் போகின்றன; இது கவலையளிப்பதாக உள்ளது என்று தன் வருத்தத்தைக் கூறியுள்ளார்கள். சிறிய, நடுத்தரத் தொழிற்சாலைகள் அதிகம் வருவதனால்தான் நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், நமது தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், கிராமப்புறங்களில் அனைத்து

கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் நகர்ப்புறத்திற்கு இணையாக கிராமப்புறங்களைத் தரம் உயர்த்தியதன் காரணமாக கிராமப்புறங்களிலும் தொழில் தொடங்கும் நிலை உருவாகியுள்ளது. மேலும், தமிழகத்தில் சுய உதவிக் குழுக்கள், (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் முடிந்துவிட்டது.

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** நான் கூறிய கோரிக்கைகளை ஏற்று, கழக அரசு தொடர்ந்து மக்கள் நல்வாழ்விற்காக உத்தரவுகளைப் பிறப்பித்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கோரிக்கைகளையும், உத்தரவாகப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன் அவர்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; 2008-2009 ஆம் ஆண்டிற்கான கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் எங்கள் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்களுடைய கட்சியின் தலைவர், தியாகச் செம்மல், ஓய்வறியா உழைப்பாளி தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உயர் கல்வியில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தருவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளைக் கூற விரும்புகின்றேன்.

கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த முதியோர் ஓய்வூதியம் ரூ.200/- ஆக இருந்ததை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாதம் ரூ.400/- ஆக உயர்த்தி வழங்கியதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அதே வேளையில், இத்திட்டத்தில் சேர்க்கப்படும் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக



இருந்து, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் இரண்டு ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்ற நிபந்தனைகளைத் தளர்த்தி, சங்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் திட்டத்தில் சேர்த்து ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

1-8-2006 முதல் வீட்டில் தறிக் கூடம் அமைத்துள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டு மாதத்திற்கு 110 யூனிட்டுகளும், விசைத்தறிக் கூடங்களுக்கு 500 யூனிட்டுகளும் இலவச மின்சாரம் வழங்கிய இவ்வரசைப் பாராட்டுகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில், ஏழைகளுக்கு வழங்கப்படாமல் நிறுத்தப்பட்ட இலவச வேஷ்டி, சேலைத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தும் இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதே வேளையில், இத்திட்டத்தில் வழங்கப்படும் வேஷ்டி, சேலைகள் பாலியஸ்டர் பாவு மற்றும் பருத்தி ஊடைக் கொண்டு தயாரிக்கப்படுவதால் தரம் குறைவாகக் காணப்படுகின்றன. அளவு பாவு ஊடை இரண்டு இழைகளுக்கும் 60-வது நெம்பர் பருத்தி நூல் கொண்டு தரமாகத் தயாரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் கடந்த ஆட்சியில் ரூ.350/- வழங்கப்பட்டதை உயர்த்தி ரூ.550/- ஆக வழங்குவதை வரவேற்பதோடு, மேலும், இத்திட்டத்தில் வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் எவ்வித பாதிப்புமில்லாத வகையில் சம்பந்தப்பட்டவர்களின் வாரிசுகள் பாதிக்கப்படாத வகையில் வாழ்நாள் முழுவதும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தில் 60 வயதுக்கு முன்பாக நெசவாளர் விபத்தில் மரணம் அடைந்தால், வாரிசுதாரருக்கு ரூ. 1,50,000 நிதி வழங்கப்படுகின்றது. மேலும், 60 வயதுக்கு முன் இயற்கை மரணம் ஏற்பட்டால் அக்குடும்பத்திற்கு ரூ.60,000 வழங்கப்படுவதை வரவேற்கின்ற அதே வேளையில், இந்த இழப்புத் தொகையை ரூ. 1 இலட்சமாக உயர்த்தித் தரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு ரூ. 800/-ம், மாநில அரசு ரூ. 200/-ம், ஆக மொத்தம் ரூ. 1,000/- செலுத்தி நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி, நெசவாளர் குடும்பத்தார் மூவருக்கு ஆண்டுக்கு ரூ. 15,000 வரை மருத்துவ உதவி இலவசமாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தில் ICICI வங்கிமூலம் தொகை பெறப்படுகிறது.

ஆனால், இவ்வங்கி சரிவர இத்திட்டத்தைச் செயல்படுத்தாமல், சிறு சிறு காரணங்களுக்காக நிராகரிக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் ரூ. 58 இலட்சம் மதிப்புள்ள திட்டங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

*[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்) தலைமை]*

ஆகவே, இத்திட்டப் பணியை ICICI வங்கிக்கு மட்டுமின்றி, வேறு வங்கிகள்மூலமாகவும் செயல்படுத்தவும், ICICI வங்கிக்கு கடந்த ஆண்டு கட்டப்பட்ட பிரிமியம் தொகை மற்றும் மருத்துவ உதவித் தொகை வழங்கப்பட்ட விவரத்தை அவைக்கு அரசு தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் சுமார் 3 இலட்சம் நெசவாளர்கள் மட்டுமே கூட்டுறவின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள தொழிலாளர்கள், தனியார் முதலாளியிடம் முன் பணம் பெற்று குறைந்த கூலிக்கு நெசவுத் தொழில் செய்து வருகின்றனர். அந்தக் கொடுமையிலிருந்து அவர்களை மீட்டு, கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்து, நல்ல கூலியுடன் அனைத்து நாட்களிலும் வேலை கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

நெசவாளர்களுக்கு நலத் திட்டங்கள் உடனுக்குடன் சென்றடைய, கைத்தறித் துறையில் பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்தும், காலியான பணியிடத்தை உடனடியாக நிரப்பவும் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். நூல் விலை ஏற்றத்தினால் கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழில்கள் பாதிக்கப்படாவண்ணம் நூல் விலை ஏற்றத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன். கைத்தறி இரகங்களுக்கு ஆண்டுதோறும் 4, 5 மாதங்கள் 30 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது. இதனால், 20 சதவிகிதம் மானியம் வழங்கும் மற்ற மாதங்களில் ஜவுளித் தேக்கம் ஏற்படுகிறது. எனவே, ஆண்டு முழுவதும் மானியத்தை 30 சதவிகிதமாக உயர்த்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதி இரகமான 'மேட்' இரகம் தற்போது விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படுவதால், கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, 'மேட்' இரகத்தை கைத்தறி இரகமாக ஒதுக்கீடு செய்து சட்டம் இயற்ற வேண்டுமென இவ்வரசைக் கேட்டுக்கொள்கின்றேன். தமிழகத்தில் இயங்கி வந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளில், 13 ஆலைகள் மூடப்பட்டு



விட்டன. தொழிலாளர்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள். தொழிலாளர் குடும்பங்கள் மிகச் சிரமமான நிலையில் உள்ளதால், அவர்களுக்கு இவ்வரசு உதவ வேண்டுமெனக் கேட்டு, மூடிய ஆலைகள் திறக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, ஆண்டிப்பட்டி, எட்டயபுரம், அறந்தாங்கி, ஆரல்வாய்மொழி, ஊத்தங்கரை ஆகிய ஐந்து ஆலைகளைப் புனரமைத்து நன்கு செயல்பட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இவ்வரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நெசவு வேலைவாய்ப்பை உருவாக்கும் என்பதால், வேலைவாய்ப்பில்லாத வறட்சியான பின்தங்கிய தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் விசைத்தறித் தொழிலைப் பரவலாக்கி, தொழில் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலையை ஆய்வதற்காக ஒரு சிறப்பு நிலைக் குழு உருவாக்க வேண்டுமெனவும், நெசவாளர்கள் நலன் காக்கின்ற வகையில், நெசவாளர் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது போன்று அபராத வட்டி கட்டி அவதிப்படும் நெசவாளர் கடனும், வட்டியும் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்பட்ட துயர் காரணமாக, கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடந்த நிலையில், கஞ்சித் தொட்டி திறக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே. இந்நிலையைக் கருத்தில் கொண்டு, நமது கல்லூரி மாணவிகள் மற்றும் பொது மக்கள் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை வாங்கி உடுத்தி, கைத்தறி நெசவாளர்களுக்குத் தகுந்த பரிகாரம் ஏற்படுத்தினார்கள். ஆகவே, தமிழக அரசு இதை மேலும் ஊக்குவிக்கும்பொருட்டு, அரசுப் கைத்தறித் துணிகளை அரசு அலுவலகங்களிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வாங்க வேண்டுமென உத்தரவிட்டு, நடைமுறைக்குக் கொண்டு வந்தால் கைத்தறி நெசவாளர் துயர் துடைப்பதோடு, தமிழர் பண்பாடும் காக்கப்படும் என்பதை வேண்டுகோளாக வைக்கின்றேன்.

கடந்த 12 ஆண்டுகளாக ஊதிய நிர்ணயம் இன்றி பணிபுரியும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு உடனடியாக ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும். மேலும், கூட்டுறவுச் சங்க தற்காலிகப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க

வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். சட்டமன்றத் தொகுதி வாரியாக மாதத்தில் 2 முறை சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் நெசவாளர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கைத்தறி இரகமான புகழ்பெற்ற பவானி ஜமுக்காளத்தை கைத்தறியில் மட்டும் உற்பத்தி செய்து, தரம் குறையாமல் வழங்க, வேண்டுமெனவும், விசைத்தறிமூலம் ஜமுக்காளம் உற்பத்தி செய்து விற்பதால், பவானி ஜமுக்காளத்தின் தரமும், புகழும் பாதிக்கப்படுகிறது. எனவே, விசைத்தறியில் ஜமுக்காளம் உற்பத்தி செய்வதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், மேலும் பாரம்பரியம் மிக்க பவானி ஜமுக்காளத்திற்கு வழங்கப்பட்டுள்ள காப்புரிமையைப் பயன்படுத்தி இத்தொழிலை விரிவுபடுத்த பவானியில் ஜமுக்காளத் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் தற்போது 5.3 இலட்சம் சிறு தொழில் நிறுவனங்கள் உள்ளன. இதன் முதலீடு ரூ. 16,126 கோடி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** உங்கள் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். இதனால், இத்தொழில் தற்போது நலிவடைந்து வருகின்றது. இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா. (குறுக்கீடு) ஒரு நிமிடம். சீக்கிரம் உரையை முடியுங்கள். திரு. கே.வீ. ராமநாதன், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** ஆகவே, என்னுடைய ஈரோடு, கோவை ... (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி. இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏதோ கதர்மீது அக்கறை உள்ளவர்களைப்போலச் சொன்னார்கள். . .



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா. (குறுக்கீடு) திரு. வி.பி. கலைராஜன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உட்காருங்கள்.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்துடன், (குறுக்கீடு) தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான கொள்கை ஒன்றினைத் தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இந்த வெளியீட்டினை மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்கிறது, பாராட்டுகிறது. அத்துடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைப் பாதுகாத்திட, குறைந்த வட்டியில் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** திரு. செங்கோட்டையன், மாண்புமிகு உறுப்பினர் பேசி முடித்தவுடனே பேசுங்கள்.

**திருமதி ஜி. லதா:** வங்கிக் கடன், தொலைக்காட்சியில் விளம்பரம், மானியம் உள்ளிட்ட கடன் வழங்குதலை சிறு மற்றும் குறு . . .

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாற்றுத் தலைவர் அவர்களே . . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இலவச சேலை, வேஷ்டிகள் வழங்குவதை நிறுத்திவிட்டார்கள் என்ற ஒரு குறிப்பைச் சொன்னார்கள். அது நிறுத்தப்படவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோதுதான் இலவச வேஷ்டி, சேலை கொடுக்கின்ற திட்டமே தமிழகத்தில் உருவாக்கப்பட்டது என்பதும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பிறகு, போன ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டு . . .

(திரு. கே.வீ. ராமநாதன் தொடர்ந்து நின்றுகொண்டேயிருந்தார்.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், உட்காருங்கள், உங்களுக்கு வழங்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள். உங்களுக்கு 7 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டன. அதுதான் உங்களுக்குக் கொடுக்கப்பட்டது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** 1,65,00,000 சேலை, வேஷ்டிகள் வழங்கியது, அதற்குப் பிறகு 2,72,00,000 சேலை, வேஷ்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முதல் இரண்டு ஆண்டுகள் இலவச வேஷ்டி, சேலை நிறுத்தப்பட்டது. அது மட்டுமல்ல, இன்னும் பல திட்டங்கள்; சத்துணவு முட்டையை நிறுத்தியதிலேயிருந்து, அந்த இரண்டு ஆண்டு காலம் உங்களுடைய ஆட்சியில்தான் இந்தத் திட்டங்களெல்லாம் நிறுத்தப்பட்டன என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா. (குறுக்கீடு)

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இந்த நேரத்திலேயிருந்துதான் நீங்கள் எனக்கு நேரத்தைக் கணக்கிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண் சார்ந்த சிறு, குறுந்தொழிற்சாலைகளைப் பாதுகாத்திட தொழில் வளர்ச்சிக்கு அதிகச் சலுகைகள், கடன் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவற்றை அரசே வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, சேலம், நாமக்கல் மாவட்டங்களிலுள்ள 400-க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலைகளை நம்பி 4 இலட்சம் மரவள்ளி சாகுபடி



விவசாயிகளும், ஒரு இலட்சம் தொழிலாளர்களின் வாழ்க்கையும் உள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது என்று சொன்னேன். 7 நிமிடங்கள்தான் உங்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். நீங்கள் 7 நிமிடங்களும் பேசியிருக்கிறீர்கள்.

**திருமதி ஜி. லதா:** இந்தத் தொழிலைப் பாதுகாத்திட நவீனக் கருவிகள் வழங்குவதற்கும், மானிய உதவியும் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** திரு. கே.வீ. ராமநாதன், 12-06 மணிக்கு நீங்கள் உரையை ஆரம்பித்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம். (குறுக்கீடு) இல்லை, இதைக் கேளுங்கள். Mr. Arumugham, 12-06 மணிக்கு அவர் உரையை ஆரம்பித்திருக்கிறார். 12-06 மணிக்கு ஆரம்பித்து 12-17-க்கு உரையை முடித்திருக்கிறார். அப்புறம் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா. (குறுக்கீடு)

**திருமதி ஜி. லதா:** நவீனக் கருவிகள் வழங்குவது மட்டுமல்லாமல், மானிய உதவி வழங்க வேண்டும். VAT வரியையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டத்தில் சென்ட் தொழிற்சாலை அமைப்பதற்கும், குடியாத்தம் தொகுதியில் தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலையும், திருப்பத்தூர் பகுதியில் மரக்கூழ் தொழிற்சாலையும் அமைப்பதற்கும், அதன் வழியாக தொழில் வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பிற்கும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இரும்பு, அலுமினியம், தகடு, குரோமியம், ஃபாக்சைட் போன்ற மூலப் பொருட்களின் விலையேற்றத்தினால் கோவை, விருதுநகர், திருப்பூர் போன்ற மாவட்டங்களில் 70,000-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 30 சதவீதத்திற்கும்மேல் உற்பத்தி குறைந்துள்ளது. இரும்புத் தாது online மூலம் முன்பேர வர்த்தகம் செய்யப்படுவதால் இந்த விலையேற்றம் என சிறு தொழில் உரிமையாளர்களும், தொழிலாளர்களும் போராடி வருகின்றனர். மத்திய அரசும் இதை ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, தமிழக அரசு இரும்புத் தாதுவை online முன்பேர வர்த்தகத்தின்மூலம் விற்பனை செய்வதைத் தடை செய்ய முன்வரவேண்டுமென்றும்,

சட்டப் பேரவையில் முதல்வர் அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொள்வதோடு, இதற்கு உதாரணமாக, டான்சி நிறுவனம் இரும்பு விலையேற்றத்தால் முழுமையாக மூடப்பட்டிருக்கிறது, உற்பத்தி குறைந்திருக்கிறது. அதை மீண்டும் திறக்கச் செய்ய வேண்டும், தொழிலாளர்களுக்கு வேலைகளை அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பாரம்பரியம் மிக்க கைத்தறி நெசவுத் தொழிற்சாலை கடுமையாகப் பாதித்துக்கொண்டு வருகிறது. இதிலிருந்து கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாத்திட 1,103 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுள்ள ரூ.440 கோடிக்கும் அதிகமான கடன்களை அரசு இரத்துச் செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

கைத்தறி நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ.100/- ஆக வழங்கவேண்டும் என்றும், பென்சனும் வழங்கவேண்டுமென்றும், காப்பீட்டுத் திட்டம் உட்பட மற்ற மாநில அரசுகளைப்போல நெசவாளர்களுக்கு வழங்கவேண்டும் என்றும், சமூக நலத் திட்டத்தினை அனைத்து கூட்டுறவு மற்றும் தனியார் துறை நெசவாளர்களுக்கும் அமலாக்கிடவேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டம், 2001ஆம் ஆண்டுக்குப் பிறகு இன்று வரையில் இல்லாமல் இருப்பதனால், தமிழக அரசு புதியதாகக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அறிவித்திடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதோடு, விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு வங்கி மற்றும் நிலவள வங்கிகளில் பெற்றுள்ள பண்ணைசாராக் கடன்களை முழுமையாக இரத்துச் செய்து, தொழில்களை நடத்துவதற்கு அரசு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றிக்கொண்டிருக்கும் ஊழியர்கள், அவர்களின் பணிகள் உட்பட, ஏறத்தாழ கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஊழியர்கள்—1,806 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்த வேண்டும். ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்துச் சலுகைகளையும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.



தரமான பட்டு கிடைத்திட, கர்நாடகா சில்க் போர்டு நிறுவனத்திடமிருந்து இவற்றைப் பெறும்போது, தரமான பட்டு என்பது உற்பத்திக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள 1,748 ஜவுளி நூற்பாலைகளில் மத்திய அரசின் ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையினால் பருத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நூலுக்கு அன்னிய நாட்டை எதிர்நோக்கி நின்றுகொண்டு இருப்பதனால், தமிழ்நாட்டின் நூற்பாலைகள் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றன. எனவே, மத்திய அரசின் ஏற்றுமதி, இறக்குமதி கொள்கையை மாற்றியமைக்க நாம் திட்டமிடவேண்டிய அவசியம் இருக்கிறது.

தமிழகத்தில் இருக்கின்ற 18 நூற்பாலைகளில் 13 நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அந்த நூற்பாலைகளில் 5 நூற்பாலைகளைப் புனரமைப்பதாகவும், மீண்டும் செயல்படுத்துவதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே அவையில் 12-8-2006-ல் கூறினார்கள். ஆனால், இன்று வரையில் அந்த 5 ஆலைகளில் எது புனரமைக்கப்பட்டது, எது திறக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால், மீதி இயங்கிக்கொண்டிருக்கின்ற 5 ஆலைகள், ஆரல்வாய்மொழி—இன்னும் சொல்லப் போனால், ஊத்தங்கரையில் இயங்கிக்கொண்டிருக்கின்ற ஆலைகள், இன்றைய நிலையில் நூலை எதிர்நோக்கி மூடுகின்ற நிலைக்குத் தள்ளப்படுகின்ற ஒரு அவல நிலையில் இருக்கின்றன. அரசு அதை கவனத்தில்கொண்டு உடனடியாக சரிசெய்வதற்கு முன்வரவேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை, பல கோடி ரூபாய் மதிப்பில் உள்ள நூற்பாலை ரூ.9 கோடி ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது—இன்றைக்கு அது தடுத்து நிறுத்தப்பட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** ஒரு நிமிடம்தான் உள்ளது.

**திருமதி ஜி. லதா:** அந்த ஆலையை மீண்டும் திறக்கச் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் செயல்பட்டு வரும் கதர் வாரிய வசூலில் அவர்கள் செய்துகொண்டிருக்கின்ற சேவை வரி 3 சதவீதம் வரியை

முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு கதர் கிராம வாரியத்தில் சோப்பு மற்றும் காகிதம் செய்யும் தொழில்களுக்கு நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், அவை முழுமைபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அந்தத் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற 862 உபரித் தொழிலாளர்கள் என்று கூறிக்கொண்டு இருப்பவர்களுக்கு மாற்று வேலையையும், மாற்று உதவியையும் அரசு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

கோவை சாயப் பட்டறைக் கழிவுகள் உடனடியாக கடல் நீரோடு கலக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அதையொட்டி எந்தவித அறிவிப்பும் இந்த அறிக்கையில் இல்லை. எனவே, சாயப் பட்டறை தொழிற்சாலைகளைப் பாதுகாக்க உடனடியாக திட்டத்தையும், நிதியையும் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)* ஒரு நிமிடம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். *(குறுக்கீடு)* உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திருமதி ஜி. லதா:** குடியாத்தம் தொகுதி தீப்பெட்டித் தொழில், பீடித் தொழில், கைத் தொழில் நிறைந்த தொகுதி. அந்தத் தொகுதியில் பீடித் தொழிலுக்காக ஒதுக்கப்படுகின்ற மூலப் பொருட்களுக்கும், தீப்பெட்டித் தொழிலுக்காக ஒதுக்கப் பெறுகின்ற மூலப் பொருட்களுக்கும் முழுமையாக வரியினை இரத்துச் செய்து, பட்டாசுத் தொழில், தீப்பெட்டித் தொழில், பீடித் தொழில், சிறு தொழில்களை அரசு காப்பாற்ற முன்வரவேண்டும். அதற்கான சிறப்புச் சலுகைகளை அரசு வழங்கவேண்டும் என்று கேட்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையில் பேச அனுமதித்ததற்காக. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுத் துறை நிறுவனங்கள் இலாபகரமாக நடப்பது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகவும், அதே நேரத்திலே வரவேற்கத் தகுந்த ஒன்றாகும். குறிப்பாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இன்றைக்கு இலாபகரமாக இயங்கி வருவதை நாம் வரவேற்கின்ற நேரத்திலே, திருப்புவனம் கூட்டுறவுப் பட்டுச் சங்கத்திலே கடந்த 55 ஆண்டுகளாக அவர்கள் இலாபம் ஈட்டி வருகிறார்கள். நடப்பு ஆண்டில் மாத்திரம் அவர்கள் 31 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அங்கே 5 ஆண்டுகளாகக் கூலி உயர்வு தரப்படவில்லை. ஆகவே, அந்தக் கூலி உயர்வை தயவுசெய்து நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையில் பேச அனுமதித்ததற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பனைத் தொழிலை மேம்படுத்தத் தொடங்கப்பட்ட தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் செயல்படும் மாநில, மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு இணையங்கள் மூலதன நிதி இல்லாமல், ஊழியர்களுக்கு 7 ஆண்டுகளாகச் சம்பளம் வழங்க முடியாமல், செயலிழந்து உள்ளன. மாநிலம் முழுவதும் கிளைகளைக் கொண்ட தமிழ்நாடு மாநில பனை வெல்லக் கூட்டுறவு இணையத்திற்கு 4 ஆண்டுகளாகத் தனிப் பொறுப்பில் சிறப்பு அலுவலர் நியமிக்கப்படவில்லை. 7 ஆண்டுகளாக 115 ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காமல் ரூ.1,000/- முதல் ரூ.2,000/- வரை சம்பள முன்பணம் மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. பஞ்சப்படி உயர்வு, போனஸ் என ஏதும் வழங்கப்படவில்லை. பணியிலிருந்து ஓய்வுபெற்ற 100 பணியாளர்களுக்குப் பணிக்கொடை மற்றும் சம்பள பாக்கி இதுநாள் வரை வழங்கப்படவில்லை. பனைத் தொழில் நடத்திட ரூ.6 கோடி நிதியும், இணையங்கள் தொடர்ந்து செயல்பட மூலதன நிதி ரூ.4 கோடியும், மொத்தம் ரூ.10 கோடி தேவைப்படுகிறது. எனவே, அரசு பனை வெல்லக் கூட்டுறவு இணையங்களைப் புனரமைக்க மானியமாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் அல்லது ஏற்கெனவே பனை வெல்லக் கூட்டுறவு இணையங்கள் இலாபத்தில் ஈட்டிய 90 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களில், உபயோகப்படாத காலி இடங்களை விற்றாவது இந்த இணையம் செயல்படுவதற்கான

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து இந்தக் கருத்தை இரண்டு ஆண்டுகளாக வலியுறுத்தியும், இதுவரை செயல்படாததால் 250-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மிகவும் பாதிப்படைந்திருக்கிறார்கள். எனவே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்மூலமாக அவர்களுக்கு வாழ வழி ஏற்படுத்தித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு பனைத் தொழிலாளர்களுக்காக வழங்கிய கடன் ரூபாய் 14 கோடியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் தமிழகத்தில் இயங்கி வந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளை மூடுவதற்கு G.O. No. 39-ன்மூலம் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்மூலம் 13 ஆலைகள் கடந்த ஆட்சியில் மூடப்பட்டன. தற்போது 5 ஆலைகளே இயங்கி வரும் நிலையில், அந்த அரசு ஆணையை தமிழக முதல்வர் அவர்கள் இரத்துச் செய்ய வேண்டும். மீண்டும் 13 கூட்டுறவு நூற்பாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். 5 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்தவும், NCDC வங்கியின் நிதி கிடைக்கவும் நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். 10 ஆண்டு காலமாக ஊதிய உயர்வு இல்லை. தமிழக அரசு அமைத்த குழுவின் முடிவு அமல்படுத்தப்பட வேண்டும்.

மின் செலவைக் குறைக்க இவ்வாலைகளில் கூடுதல் காற்றாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு வழங்கப்படவேண்டும். கூலி உயர்வு வழங்கப்பட்டு 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, உடனடியாகக் கூலி உயர்வு வழங்க வேண்டுகிறேன். கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிக் கூடம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது வரவேற்புக்குரியது. ஆனால், தொடக்கக் கூட்டுறவுச் சங்கக் கணக்கின் அடிப்படையிலா அல்லது கோ-ஆப்டெக்ஸ் கணக்கின் அடிப்படையிலா என்பதை விளக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர் அல்லாத நெசவாளர்களுக்கும், பென்சன் மற்றும் நிவாரண நிதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பஞ்சாலைக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்த்து நூல் விலையைக் குறைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

காஞ்சிபுரம் பட்டு, ஜக்கம்பட்டி சேலை, தளவாய்புரம் பார்டர் சேலை போன்ற சில குறிப்பிட்ட இரகங்களை முக்கியத்துவப்படுத்தி, விளம்பரப்படுத்தி, விற்பனை செய்ய வேண்டுகிறேன்.



இலவச வேட்டி, சேலை தொடரவேண்டும். 30 சதவிகித rebate வருடம் முழுவதும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயம் சார்ந்த தொழிலான பட்டுத் தொழிலை வளர்க்கக் கூடுதல் கவனமும், சிறப்புத் திட்டங்களும் தேவை. தமிழகத்தின் உற்பத்தியாளர்களுக்கு சிறிய அளவிலான பட்டுக் கூடுகளைப் பட்டு நூலாக்க அலகுகள் இல்லாத நிலை நீடிக்கிறது. எனவே, இப்போது கர்நாடகத்தில் இருந்து பட்டு நூல்கள் வாங்கப்படுகின்றன. இதனால், பட்டு நெசவாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. தமிழத்திலேயே பட்டு நூல் தயாரிக்கும் நடவடிக்கையை அதிகப்படுத்த வேண்டுகிறேன்.

விவசாயத்தை ஒட்டிய உப தொழிலான தென்னை உரி மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழில்கள் கிராமப்புறங்களில் நடந்து வருகின்றன. சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில் சுமார் 5 இலட்சம் பேர் தமிழகத்தில் இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இந்தத் தொழிலைப் பாதுகாத்து, ஊக்கப்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும். இந்தத் தொழிலுக்குத் தென்னை உரி மட்டைகள் மூலப் பொருளாகும். இந்த மூலப் பொருட்களை மரபுசாரா மின்சாரம் தயாரிக்க சில தொழிற்சாலைகள் பயன்படுத்தி வருகின்றன. தொடர்ந்து இந்தக் கருத்தை வலியுறுத்துகிறோம். எனவே, அரசு உரிய நடவடிக்கை எடுத்து, கயிறு தொழிற்சாலைக்கு மட்டுமே இந்த மூலப் பொருள் பயன்படுகிற நடவடிக்கையை எடுக்க வேண்டும். எனவே, கயிறு தொழிற்சாலைகளைப் பாதுகாக்க தென்னை உரி மட்டைகளை மின்சாரம் தயாரிக்கப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** தமிழகத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டவை சுமார் 5½ இலட்சமும், பதிவு செய்யப்படாதவை சுமார் 6 இலட்சமும் உள்ளன. இதில் விவசாயத் தொழிலாளர்களுக்கு அடுத்து சுமார் 70 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இதில் குறுந்தொழில்கள் மட்டும் 94 சதவிகிதமும், வேலைவாய்ப்பு 84 சதவிகிதமும், உற்பத்தி 62 சதவிகிதமும் உள்ளன. ஏற்றுமதி 35 சதவிகிதமாக உள்ளதால், அந்நியச் செலாவணி ஈட்டப்படுகிறது. தமிழக முதல்வர் அவர்கள் இத்தொழிலை ஊக்குவிக்க

வங்கிக் கடன் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இத்தொழிலுக்கு 3 சதவிகித அளவில்கூட வங்கிக் கடன்கள் கிடைப்பதில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், உரையை முடித்துக்கொள்ளுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. சு. குணசேகரன்:** இத்தொழில் செய்பவர்களுக்கு ரூபாய் 5 இலட்சம் வரை ஜாமீன் இல்லாமல் கடன் வழங்கலாம் என்ற சட்டம் இருந்தும், வங்கிகள் நடைமுறைப்படுத்துவதில்லை. இத்தொழில்களுக்கு Credit Guarantee Scheme என்ற திட்டத்தின்கீழ் 25 சதவிகித முன்பணம் செலுத்தினால், 75 சதவிகிதக் கடன் வழங்கலாம். ரூபாய் 50 இலட்சம் வரை அக்கடன் தொகையை வழங்கலாம் என்று உயர்த்தப்பட்டும் கடன் வழங்குவதில்லை. பெரிய தொழில் நிறுவனங்களுக்குப் பல நூறு . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

***திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் துறையின் ஆசான், மனிதாபிமானத்தின் முன்னோடி, அறியாமையைச் சுட்டெரித்த ஆதவன், சுய மரியாதைச் சுடர், அடித்தட்டு மக்களுக்காகவே வாழும் அயர்வில்லாச் செம்மல், காவியத் தலைவர், கவிதை நாயகர், விமர்சனங்களின் வித்தகர், மாமனிதர், மக்கள் போற்றும் தலைவர், இந்திய வழிகாட்டி, தமிழகக் கையேடு, எங்கள் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) வரியில்லாத நிதிநிலை அறிக்கையை அவைக்கு அளித்த எங்கள் மாண்புமிகு நிதி அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களே, உதயசூரியனின் ஒளிக்கற்றை, நாளைய தமிழகத்தின் இன்றைய அரண், தமிழகத்தின் கீழ்வானம், இளைய ஞாயிறு, இளம் தலைவர், ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரிட்டு, பாரோர் போற்ற பவனி வரும் பண்பாளர், எங்கள் தளபதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) கழகப் பொருளாளர், அருளாளர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களே, நன்றே செய், அதை இன்றே செய் என எண் திசையிலும் அதை ஏற்றம் பெற வைத்துக் கொண்டிருக்கும் என் மரியாதைக்குரிய மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை



அமைச்சர் அவர்களே, இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், மாவட்டச் செயலாளர், சாதனைச் செம்மல், அண்ணன் ஆர். காந்தி அவர்களே, பேரவை உறுப்பினர்களே, வணக்கம்.

வேளாண்மைக்கு அடுத்து தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் நெசவுத் தொழிலே முக்கியப் பங்காற்றி வருகிறது. மனிதனின் அத்தியாவசியங்களான உணவு, உடை, உறையுள் என்பவற்றில் இடையிலே உள்ள உடைதான், அதாவது நமது இடையிலே உள்ள அந்த உடைதான் இப்போது மனிதர்களின் மானத்தைக் காப்பாற்றி வருகிறது. அப்படி நமது மானத்தைக் காப்பாற்றி வரும் அந்த நெசவுத் தொழிலின் மானத்தை இப்போது கழக அரசுதான் காப்பாற்றி வருகிறது என்பதை அந்தத் தொழிலிலே உள்ளவர்கள் அறிவார்கள்.

நெசவாளர்களும், இந்த அரசும், ஊடையும், பாவும்போல இருப்பதால் அதன்மூலம் நெசவாளர்களின் மானமிகு காவலராக இன்று முதல்வர் கலைஞர் அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். இதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

1953-லேயே, அதாவது ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே பேரறிஞர் அண்ணா அவர்களும், நம் தலைவர் கலைஞர் அவர்களும் தங்கள் தலையிலும், தோளிலும் கைத்தறித் துண்டுகளைத் தூக்கித் திரிந்து, தமிழகம் முழுக்க அந்த நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்கத் துணிந்து தோள் கொடுத்ததை இந்தத் தமிழகம் லேசில் மறந்திருக்காது; இங்குள்ள வரலாறும் மறந்திருக்காது; வேண்டுமானால், சிலர் வேண்டுமென்றே மறந்திருக்கலாம். ஆனால், காலம் அவர்களை மறக்கவில்லை.

'செய்யுந்தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால், நெய்யுந்தொழிலுக்கு நிகரில்லை' எனச் சொல்கிறார்களே, அந்த நெய்யுந்தொழிலை எந்த அரசு சீர்தூக்கிப் பார்க்கிறது என்று சொன்னால் அது இந்த அரசுதான். ஆம், இது கைத்தறி நெசவாளர்களின் காவலன்; இது நெசவாளர்களுக்கு ஆடை கொடுக்கும் அரசு. 1975-லே கோ-ஆப்டெக்ஸில் ஏற்றுமதிப் பிரிவு தொடங்கப்பட்டதும் கழக ஆட்சியிலேதான். அதனால் சென்னிமலை, கவுந்தப்பாடி, விஜயமங்கலம், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் கரூர் பகுதிகளில் ஏற்றுமதி இரகங்கள் தயார் செய்யப்பட்டன.

பிற்பகல் 12-35

1995-1996 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நெசவுத் துறையில் ஒரு மிகப் பெரிய அவல நிலை ஏற்பட்டது. நெய்வதற்குப் பாவு கிடைக்காத நிலை! உடனே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண, அந்த நெசவாளர்களின் வயிற்றில் பால் வார்க்க, 1996-ல் உயர்மட்டக் குழு அமைத்து, அதன் பரிந்துரைகளின்படி நெசவுத் துறை புனரமைப்புக்காக 24 அறிவிப்புகளை வெளியிட்டு, நெசவுத் தொழிலை மீட்டு எடுத்ததும் கழக அரசுதான்.

1997-ல் கழக ஆட்சிக் காலத்தில்தான் தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாகத் தமிழகத்திற்கென தனியாக ஒரு ஜவுளிக் கொள்கை உருவாக்கப்பட்டது. 1-4-1997 முதல் கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டம் கொண்டு வந்ததும் கழக ஆட்சிதான்.

27 ஆண்டுகளாக, அதாவது 1971 முதலே முடங்கிப் போயிருந்த அனைத்துப் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் எனப்படும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஜனநாயக முறைப்படி 1998-லே தேர்தல்களை நடத்தி, அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களைப் பொறுப்பேற்கச் செய்ததும் இந்தக் கழக ஆட்சிதான்.

ரூபாய் 365 கோடி மதிப்புள்ள, தேங்கியிருந்த கைத்தறித் துணிகளுக்கு மே 1998 முதல் அக்டோபர் 1998 முடிய ஆறு மாத காலத்திற்குக் கூடுதலாக 10 விழுக்காடு சேர்த்து, 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டு, ரூபாய் 202 கோடி அளவிற்குக் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ததும் கழக ஆட்சிதான்.

கடனில் வாங்கிய பட்டு நூலுக்கு தவணை தவறிய பாக்கிக்கு டான்சில்க் வசூல் செய்யும் 3 விழுக்காடு தண்ட வட்டி 1998 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டதும் இந்த ஆட்சியில்தான்.

1995-96 ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருந்த தள்ளுபடி நிலுவை மானியத் தொகை ரூபாய் 423,25,00,000/-ஐ 1998-99 ஆம் ஆண்டில் வழங்கியதும் கழக அரசுதான். அப்போது 1999 ஆம் ஆண்டு முதல் திறமை மிக்க நெசவாளர் மற்றும் கைவினைஞர்களை ஊக்குவிக்கும்பொருட்டு, சிறந்த கைவினைஞர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தியதும் கலைஞர் ஆட்சியிலேதான்.



பேரணாம்பட்டிலே நீண்ட காலமாகக் கல்லூரிகள் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, பேரணாம்பட்டிலே ஓர் அரசுக் கலைக் கல்லூரியும், ஒரு தொழில்நுட்பக் கல்லூரியும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மலைப் பகுதியில் அமைந்துள்ள அரவட்லா கிராமத்தையும், மிட்டாலம் கிராமத்தில் அமைந்துள்ள ஊட்லு பகுதியையும் இணைத்து அங்கு சுற்றுலாத் தலமாக்கிடக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆம்பூர்-சத்கர் சாலைப் பணியை விரைந்து முடித்திட வேண்டுமென்றும், மேலும், பேரணாம்பட்டில் நீண்ட காலமாகப் பேருந்து நிலையம் இல்லாமல் இருக்கின்றது. அங்கு ஒரு பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் மற்றும் மசிகத்திற்கும், மிட்டப்பள்ளிக்கும் இடையே ஓடுகின்ற மலட்டாற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்திடவும், சாரங்கல் கிராமத்திலே அங்கு செல்கின்ற ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்திடவும் மற்றும் தேவஸ்தானம் கிராமத்தின் அருகே செல்கின்ற ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்திடவும், மற்றும் எங்கள் பகுதிக்கு வேண்டிய. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** ஒரு நிமிடம். உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. சின்னசாமி:** நரியம்பட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருக்கிற குடியிருப்புகள் எல்லாம் இடிந்து விழுந்துள்ளன. புதிய குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்கும்படியும், கருவுற்ற தாய்மார்களுக்கு 30 படுக்கைகள்கொண்ட கட்டடம் அமைத்துக் கொடுக்கும்படியும், X-ray, Lab போன்ற வசதிகளைக்கொண்ட கட்டடம் அமைத்துக் கொடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு விடியல் எஸ். சேகர். (குறுக்கீடு)

**திரு விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** ஒரு நிமிடம். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. சின்னசாமி:** பத்தரபல்லி, குண்டலபல்லி கிராமங்களில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கிட வேண்டும் என்றும், மற்றும் எருக்கம்பட்டு ஊராட்சியிலுள்ள கோட்டையூருக்கும்,

கடப்பநத்தத்திற்கும், அதேபோன்று அரவட்லாவிற்கும் நெல்லுபட்லாவிற்கும் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி, கதர் மற்றும் சிறு தொழில் மானியவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மானியக் கோரிக்கைகளிலே தலைவர் ஐயா சுதர்சனம் அவர்களுக்கும், சட்டப் பேரவை காங்கிரஸ் தளபதி அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தினாலே, நன்றி தெரிவித்துக்கொண்டு, முன்பாக, ஈரோடு மாவட்டத்திலே மிகப் பெரிய பேரூராட்சியாக இருப்பது காங்கேயம் பேரூராட்சி. அந்த காங்கேயம் பேரூராட்சி 40 ஆயிரம் மக்கள் தொகை கொண்டிருக்கிற பேரூராட்சி. அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கிப் பெருமை சேர்க்குமாறு கேட்டுக்கொண்டு, தந்தை பெரியாருடைய குருகுலமான ஈரோட்டை மாநகராட்சியாக ஆக்கிப் பெருமை சேர்த்ததைப்போல், காங்கேயத்திற்கும் தங்கள் கருணைப் பார்வை கிடைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, ஆன்மீகமும், கைத்தறியும், விசைத்தறியும் இணைந்திருப்பது சென்னிமலை. அந்தச் சென்னிமலையை ஆன்மீகப் புராதன நகரமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை இரண்டு ஆண்டுகளாக வைக்கப்பட்டிருக்கிறது. அதுவும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. தளபதி அவர்கள் மனது வைத்தால், சென்னிமலை ஆன்மீகப் புராதன நகரமாக அறிவிக்கப்படும் என்கிற நல்ல செய்தியை எதிர்பார்த்து, இந்தக் கைத்தறித் துறையின்மீது சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

கைத்தறி நெசவாளர்களைக் கஞ்சித் தொட்டிக்கு அனுப்பிக் கொடுமைப்படுத்தியவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயிருந்து மீட்டு, கைத்தறியை வளர்ச்சிப் பாதையிலே அழைத்துச் செல்கிற ஆட்சி இப்போது நடந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) கடந்த காலத்திலே கஞ்சித் தொட்டியைத் திறக்க வைத்து, அவர்களை . . . (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** என்ன? (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் பேசி முடித்ததும் நீங்கள் கருத்துச் சொல்லலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. விடியல் எஸ். சேகர்:** கஞ்சித் தொட்டிக்கு அனுப்பினீர்களா, இல்லையா என்பதுதான் நம்முடைய கேள்வி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** உட்காருங்கள், திரு. விடியல் எஸ். சேகர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்).

**திரு. விடியல் எஸ். சேகர்:** எனவே, அப்படிப்பட்டவர்களை எல்லாம் மீறி இப்போது . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** அவர் பேசி முடித்ததும் சொல்லலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. விடியல் எஸ். சேகர்:** ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே நெசவாளர்களுக்கு 10 சதவிகிதக் கூலி உயர்வை, (குறுக்கீடுகள்) அகவிலைப் படியை உயர்த்தி, அதற்குப் பிறகு இப்போது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, அரசைப் பாராட்டுவதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால், வேண்டுமென்றே எங்களை வம்புக்கு இழுத்துக்கொண்டிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது) இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். சென்ற ஆட்சியில் கஞ்சித் தொட்டியைத் திறந்ததாக அவர் சொன்னார். இந்த ஆட்சியிலும் கஞ்சித் தொட்டியைத் திறக்கிறபோது, இங்கேயிருக்கிற உறுப்பினர் திரு. கோ. அரியை எல்லாம் கைது செய்தார்கள் என்பதை இன்றைக்கும் சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த கால. . .

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் சென்ற ஆட்சியைப்பற்றிக் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) சென்ற ஆட்சியைப்பற்றிக் குறிப்பிடவில்லை. சென்ற ஆட்சியிலே கஞ்சித் தொட்டி திறந்ததை இவர்களே ஒத்துக்கொண்டு, இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் க. அன்பழகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வேதனையையெல்லாம் இப்போது தவிர்த்து, கடனிலே வாழ்ந்துகொண்டிருந்த நெசவாளர்களுக்குக் கடந்த ஆண்டு 10 சதவிகிதம் அகவிலைப்படியை உயர்த்தி, நெசவாளர்களைத் தூக்கி விட்டிருக்கிறார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல, கைத்தறி நெசவாளர்கள் வீடு கட்டுவதற்கு 'ஹட்கோ'-விலிருந்து வாங்கிய கடனில் 15 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று கடந்த இரண்டு ஆண்டு காலமாகக் கேட்டிருந்தோம். அந்தக் கடனைத் தள்ளுபடி செய்து, இப்போது அவர்கள் வாழ்க்கையிலே ஒளி விளக்கேற்றிய அரசு இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு, 'ஹட்கோ' கடனில் 15 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து இப்போது பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இதற்கெல்லாம் நன்றி தெரிவிக்கும் இந்த வேளையில், எப்படி அகவிலைப்படியை உயர்த்தினீர்களோ, அதைப்போல 20 சதவிகிதம் கூலி உயர்வு வேண்டுமென்று 10 ஆண்டு காலமாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியிலே உயர்த்தப்பட்ட கூலி, இதுவரையில் உயர்த்தப்படவில்லை. எனவே, நீங்கள் அதை உயர்த்தித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கைத்தறி நெசவாளர் சங்கத்தினுடைய ஊழியர்களுக்குக் கூலி உயர்வு வேண்டுமென்ற கோரிக்கை 10 ஆண்டு காலமாக இருந்துகொண்டிருக்கிறது. 10 ஆண்டு காலமாகக் கைத்தறி நெசவாளர் சங்க ஊழியர்களுக்குக் கூலி உயர்வு அளிக்கப்படவில்லை.



அவர்களுக்கும் 20% கூலி உயர்வு அளித்து, அவர்களையும் வாழ வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி என்று சொன்னால், கைத்தறியினுடைய காவலர் 'பத்மஸ்ரீ எம்.பி. நாச்சிமுத்து' அவர்கள்தான் நினைவுக்கு வருவார்; கைத்தறிக்காகப் பாடுபட்டு, தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். சென்னையிலே, 'தில்லையாடி வள்ளியம்மை' என்ற மிகப் பெரிய மாளிகையை உருவாக்கி, கைத்தறிக்கு மரியாதை ஏற்படுத்திக் கொடுத்த எம்.பி. நாச்சிமுத்து அவர்களுடைய நினைவாக, அவர் பிறந்த நாளான ஏப்ரல் 28-ஐ நெசவாளர் தினமாக அறிவித்து, அவரது நினைவாகத் தபால் தலை வெளியிடுவதற்கு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்ற கோரிக்கையைப் பல முறை வைத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, இப்போது கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றுகின்ற நல்ல நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், கைத்தறி இரக ஒதுக்கீட்டினைக் கடுமையாக அமல்படுத்தவேண்டும். கைத்தறிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 இரகங்களை விசைத்தறியில் நெய்வதாகத் தொடர்ந்து செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. திருப்புவனத்திலும், காஞ்சிபுரத்திலும் பட்டு நெசவாளர்களுடைய நிலைமை பரிதாபகரமாக இருந்துகொண்டிருக்கிறது. அங்கே வேலைவாய்ப்பு முழுமையாகக் கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். காஞ்சிபுரத்திலே மாமல்லன் கூட்டுறவு பட்டு நெசவாளர்களுக்கு ஐந்து மாத காலமாகப் பணி வாய்ப்பு வழங்கப்படாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதை மாற்றியாக வேண்டும்.

எனது தொகுதி—ஈரோடு மாவட்டம், காங்கேயத்திலே, ஈங்கூர் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே இருந்த 235 உறுப்பினர்கள் சேர்ந்து வீடு கட்டுவதற்காக 12 ஏக்கர் நிலத்தை வாங்கி, அந்த நிலத்தினை வீடு கட்டுவதற்குப் பயன்படுத்துகிற அந்த நிலைமையில், அந்தச் சங்கம் நலிவடைந்து, அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த உறுப்பினர்கள் 235 பேரும், அந்த வீடுகளைக் கட்டுவதற்காக, வீட்டை ஒதுக்கிக் கொடுத்து—அந்தக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கடனாகச் செலுத்த வேண்டிய ரூ.30 இலட்சத்தைச் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதைத் திருப்பி, அந்த நிலத்தைக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஒரு மாத காலமாக நூல் விலை பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக

இருந்துகொண்டிருக்கிறது. நூல் விலையேற்றத்தாலே ஈரோட்டிலே, வெள்ளக்கோவிலிலே, முத்தூரிலே, சென்னிமலையிலே, விசைத்தறியாளர்கள் எல்லாம் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். நூல் விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசு waste cotton ஏற்றுமதியைத் தடை செய்யவேண்டும். அதற்கு, பயனாளிகள், மத்திய அரசு, மாநில அரசின் அதிகாரிகளைக் கொண்ட ஒரு முத்தரப்பு கமிட்டியை ஏற்படுத்தி, நூல் விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும். அந்த நூல் விலைக்கு ஒரு முக்கியமான தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

*பிற்பகல் 12-45*

இன்றைக்கு திருப்பூர் சாயக் கழிவு ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டு தமிழகத்திலே ரூ.15 ஆயிரம் கோடி அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற தொழில், திருப்பூர் சாயத் தொழிற்சாலை. அந்தச் சாயத் தொழிற்சாலைக்கு ஒரு pipe line திட்டத்தைக் கடந்த ஆண்டு முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்கள் இதே சட்டப் பேரவையில் அறிவித்தார்கள். 750 கோடி ரூபாய் செலவிலே மிகப் பெரிய pipe line திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு 25 சதவீதம் பங்கும், 15 சதவீதம் மாநில அரசு பங்கும், மீதியிருக்கிற 60 சதவீதப் பங்கை சம்பந்தப்பட்ட முதலாளிகளும் செலுத்துவார்கள் என்ற அடிப்படையிலே சொன்னார்கள். அப்படிப்பட்ட அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நெசவாளர்களுடைய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இன்றைக்கு நல்ல வளர்ச்சிப் பாதையிலே சென்றுகொண்டிருக்கிறது. அந்த நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, கோ-ஆப்டெக்ஸ் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டிரில் கோரா இரகத்தை ஏற்றுமதி செய்வதற்கு ஆண்டு முழுவதும் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னிமலையிலே இருக்கிற 1,010 நெசவாளர்கள் காலனியை தி.மு.க. அரசு உருவாக்கியது. அந்த காலனிக்குக் கொடி காத்த குமரன், தியாகி திருப்பூர் குமரனுடைய பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நெசவாளர் காப்பீட்டுத் திட்டத்தில் மிகப் பெரிய குளறுபடி நடந்துகொண்டிருக்கிறது. ICICI (Lombard) திட்டத்திலே நிதி கிடைக்கவேயில்லை என்கின்ற குறை வந்துகொண்டே இருக்கின்றது. இதைத் தீர்க்குமாறு கேட்டுக்கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர், உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** சிறு தொழில் துறையிலே ஒரு முக்கியமான கோரிக்கை. சிறு தொழில் துறையில் இன்றைக்கு 79 சிறு தொழில் பேட்டைகள் இருக்கின்றன. அதை 8 ஆயிரம் பேருக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். 5 ஆயிரம் சதுர அடிக்கு உள்ளே இருந்தால்தான் நீங்கள் இதுவரை sale deed கொடுத்திருக்கிறீர்கள். 5 ஆயிரம் சதுர அடிக்கு மேலே உள்ளவர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையை முடியுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள்தான் தினமும் பேசிக்கொண்டிருக்கிறீர்களே!

**திரு. விடியல் எஸ். சேகர்:** அவர்களுக்கு அரசாணைப்படி விரைவிலே sale deed வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கதர்த் துறையிலே ஒரே ஒரு கோரிக்கை. கதர்த் துறையிலே பூமிதான இயக்கம், வினோபா பாவேயால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம். அந்த பூமிதான இயக்கத்திற்கு கடந்த 1997 ஆம் ஆண்டுக்குப் பிறகு நிருவாகிகள் நியமிக்கப்படாமல், 28 ஆயிரம் ஏக்கர் நிலம் இன்றைக்குப் பாழ்பட்டு நிற்கிறது. வினோபா பாவே அவர்களின் அந்தச் சேவைப் பணி, சுதேசிப் பணி இன்றைக்குக் கைவிலகிக்கொண்டிருக்கிறது. அதைப்போல், காங்கேயத்தில் மிகப் பெரிய புகழ்பெற்ற படியூர் சர்வோதய சங்கத்தில் 5 கோடி ரூபாய்க்குமேல் உற்பத்தி செய்தால் அதற்குத் தள்ளுபடி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாகத்தால் நாங்கள் தவித்தபோது, தண்ணீராய் வந்து எங்களைக் காத்தவர், கோடை வெப்பத்தின் கொடுமை தாங்க முடியாமல் துன்புற்றபோது, ஆலமரமாய் எங்களுக்கு நிழல் தந்தவர், பாலைவனத்தில் நாங்கள் திசை அறியாமல் நின்றபோது, சோலையாய் இருந்தவர், அலைகடலில் நாங்கள் செய்வதறியாது திகைத்து நின்றபோது, எங்களுக்குக் கலங்கரை விளக்காய் நின்று கரை சேர்த்தவர்,

அவர்தான் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கெல்லாம் அரசியல் முகவரி தந்து வாழ வைத்த அந்த அன்பு தெய்வத்தை இந்த மாமன்றத்தில் நின்று வணங்கி, அவர் மீண்டும் முதல்வர் அரியாசனத்தில் அமரவேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்னுதுரை, உங்களுக்கு 10 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டுள்ளன.

**திரு. செ. பொன்னுதுரை:** இந்த ஊரகத் தொழில் துறை, கைத்தறி மற்றும் துணி நூல் துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் துறை மானியங்களின்மீது என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் பெருக வேண்டும், அதன்மூலம் வேலைவாய்ப்புகள் பெருக வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டதுதான் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலும், அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலும், சிறு தொழில்கள் வளர்வதற்குப் பெரிதும் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கப்பட்டன. அதே நேரத்தில், பெரிய தொழில்கள் அமைவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் 5 இலட்சத்து 57 ஆயிரம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 40 இலட்சம் பேர் வேலை பார்க்கிறார்கள். நேற்றைய முன்தினம் தொழில் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்த உள்ளாட்சித் துறை அமைச்சர், 'கடந்த 2 ஆண்டு காலத்தில் மட்டும் சுமார் 18 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் 14 ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும், அதன்மூலம் 1½ இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்' என்றும் குறிப்பிட்டார். அந்த அறிவிப்பு கேட்பதற்கு இனிமையாகத் தோன்றலாம். அதே சமயத்தில் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய தொழில்களுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெருமளவு ஒதுக்கீடு செய்வதால், சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் மின் தடையாலும், நூல் விலையேற்றத்தாலும் பாதிக்கப்படும் சூழ்நிலையினால், அவற்றில் பணிபுரிந்த 40 இலட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, அரசு குறு மற்றும் சிறு தொழில்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



பிற்பகல் 12-50

மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அறிவித்து, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 1 கோடி ரூபாய் ஒதுக்கி, வேளாண் சார்ந்த உணவு பதப்படுத்தப்படும் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார்கள். இதனால் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அதிகரித்தது. ஆனால், நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு இந்தத் திட்டத்தையே இரத்துச் செய்துவிட்டீர்கள்.

அண்ணா, அண்ணா என்று நொடிக்கு நூறு தரம் சொல்லிக்கொண்டு வரும் இந்த அரசு, எங்கள் அம்மா அவர்கள் கொண்டு வந்தார் என்ற ஒரே காரணத்திற்காகப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் பெயரை எடுத்துவிட்டீர்கள். இதுதான் நீங்கள் அண்ணாவுக்குச் செய்யும் நன்றிக் கடனா? கைத்தறி நெசவாளர் குடும்பத்தினரின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் 1986 ஆம் ஆண்டில் நெசவுத் தொழிலாளர் குழந்தைகள் மேற்படிப்புப் படிப்பதற்கு 'டாக்டர் எம்.ஜி.ஆர். நல்வாழ்வு அறக்கட்டளை' உருவாக்கப்பட்டது என்பதை நாடு அறியும்.

அதேபோன்று, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தினை ஏற்படுத்தி, கைத்தறி நெசவாளர் குடும்பங்களில் ஒளியேற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அதேபோன்று, கைத்தறி நெசவாளர்கள் உடல்நலத்தைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை 2005-06 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கி, நெசவாளர்களின் குடும்பங்களில் வாழ்வு வளம் பெறச் செய்தவர் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் இடம் பெறாத கைத்தறி நெசவாளர்களுக்கு நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப்படாமல் இருக்கிறது. இந்தச் சங்கத்தில் சேராத 1,94,000 பேரில் 68,000 பேர்தான் இந்தப் பயனை அனுபவிக்கின்றனர். மீதி உள்ளவர்களுக்கு இது கிடைக்கவில்லை. எனவே, இந்த அரசு அவர்களை இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு கைத்தறிக் கூடத்துடன் வீடு கட்டுவதற்காக அரசு நிதியுதவி வழங்குகிறது. கிராமப்புறங்களில் 68,000 ரூபாயும், நகர்ப்புறங்களில் 72,000 ரூபாயும் வழங்குகிறது. இது போதுமானதல்ல. கட்டுமானப் பொருட்களின் விலை கண்டபடி உயர்ந்துள்ளது. இந்த நிலையில் 68,000 ரூபாய்க்கும், 72,000 ரூபாய்க்கும் கைத்தறிக் கூடம் கட்டுவதென்பது நடக்காத காரியம். எனவே, இந்தத் தொகையைக் கிராமப்புற நெசவாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயாகவும் நகர்ப்புறத்தில் உள்ளவர்களுக்கு 1,50,000 ரூபாயாகவும் உயர்த்திக் கொடுத்தால் ஓரளவு அவர்களுக்குப் பயன் கிடைக்கும்.

கைத்தறிக் கூடத்துடன் வீடு கட்டும் திட்டத்திற்கும், கைத்தறிக் கூடம் அமைக்கும் திட்டத்திற்கும் இந்த ஆண்டு நிதி ஒதுக்காதது நெசவாளர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது.

கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவதாக இந்த அரசு பெருமைப்பட்டுக்கொள்கிறது. ஆனால், ஒரு நாளைக்கு 4 மணி நேரம் முதல் 5 மணி நேரம் வரை மின் வெட்டு ஏற்படுகிறது. மின்சாரம் எப்போது வரும் என்று அவர்கள் ஏங்கிக்கொண்டிருப்பதுதான் மிச்சம். இருண்ட தமிழகத்தில், இலவச மின்சாரம் என்பது கண்துடைப்புதான். எனவே, அரசாங்கம் நெசவாளர்களுக்குத் தடையில்லாமல் தொடர்ந்து மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், வருமான வரி அலுவலகத்திற்குக் கணக்குகள் சமர்ப்பித்த பின்னர் வரி விலக்கு பெறும் நடைமுறை உள்ளது. அதை மாற்றி, கைத்தறித் தொழில் குடிசைத் தொழில் என்பதால் விவசாயக் கூட்டுறவு வங்கிகளைப்போல், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வருமான வரியில் இருந்து முழு விலக்குப் பெற்றுத் தர வேண்டும். பெருந்துறை பகுதியில் உள்ள ஆயத்த ஆடைத் தயாரிப்புத் தொழில் அதிக அளவில் வளர்ந்து வருகிறது. அதில் பெண்கள் அதிகமாக வேலை செய்து வருகின்றனர். எனவே, பெருந்துறையில் பெண்களுக்கான ஆயத்த ஆடை குறித்த பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள், குமாரபாளையம், ஆண்டிப்பட்டி, பல்லடம், ஈரோடு ஆகிய இடங்களில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவற்றில், ஈரோடு தவிர மற்ற நெசவுப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. மத்திய, மாநில அமைச்சர்கள்



இருவரும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தும், அவர்கள் அதற்குரிய இடத்தைப் பார்வையிட்டுச் சென்ற பின்னர்கூட, உயர்தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைப்பது குறித்த அறிகுறியே இல்லை. மேலும், இந்த பட்ஜெட்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில் இதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என்ற விவரத்தையும் வேதனையோடு இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். ஈரோடு மாவட்டம் என்ன பாவம் செய்தது? ஈரோடு மாவட்டம், செங்கம்பள்ளியில் ஒருங்கிணைந்த தொழில் பூங்காவும், ஈரோட்டில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவும் அமையும் என்ற அறிவிப்பை உடனடியாக இந்த அரசு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2006 ஆம் ஆண்டு 1,232 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின் ஓர் ஆண்டிலேயே 2007 ஆம் ஆண்டில் இந்தக் கூட்டுறவு சங்கங்கள் 1,117 ஆகக் குறைந்துவிட்டன. கொள்கை விளக்கக் குறிப்பில் இந்த ஆண்டும் 1,103 ஆக உள்ளது என நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டு வருகிறது. இதுதான் கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த அரசு செய்யும் உதவியா? இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்ததற்குக் காரணம் என்னவென்று அமைச்சர் பதிலுரையில் தெரிவிப்பார் என்று கருதுகிறேன்.

கைத்தறித் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடியும், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செப்டம்பர் முதல் பொங்கல் வரை 30 விழுக்காடு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. அதனை ஆண்டு முழுவதும் 30 விழுக்காடாகவும், சிறப்புத் தள்ளுபடியாக 40 விழுக்காடும் உயர்த்தினால், கைத்தறித் துணிகளும் அமோகமாக விற்பனையாகும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்வும் வளம் பெறும்.

*பிற்பகல் 12-55*

"கூலி உயர்வு கேட்டான், அத்தான் குண்டடிபட்டுச் செத்தான்" என்று இன்றைய முதல்வர், காங்கிரஸ் ஆட்சியைப் பார்த்துக் கேலி பேசினார். இன்று அவரது ஆட்சியில், விலைவாசி விஷம்போல் ஏறிவிட்டது. கேட்டால், வாங்கும் சக்தி அதிகரித்துவிட்டது என்கிறார். கொட்டைப் பாக்கு என்ன விலையென்று கேட்டால், பட்டுக்கோட்டைக்கு வழி சொல்கிறார். கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி மிகவும் குறைவாக உள்ளது. அதை 30 சதவிகிதம் கூடுதலாக வழங்கிட வேண்டுமென இந்த அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு 1997 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம்தான் இன்னும் வழங்கப்பட்டு வருகிறது. இதனை மாற்றியமைப்பதற்குக் குழு அமைக்கப்படும் என்று அறிவித்தீர்கள். கோரிக்கைகளைக் கிடப்பில் போட குழு அமைப்பது என்பதுதான் நடைமுறைப் பழக்கமாக உள்ளது. எனவே, நெசவாளர்களுடைய சம்பள விகிதங்களை மாற்றியமைக்க அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது தொகுதி சம்பந்தப்பட்ட சில கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பெருந்துறை தொகுதியிலுள்ள நல்லாம்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில், வார்டு 12-ல் சாக்கடைக் கழிவு நீர் தேங்கியிருப்பதால், சுகாதாரக் கேடுகளும், தொற்று நோய்களும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதைப் போக்க, அரசு பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தொடங்கப்பட்ட திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், பெருந்துறை தொகுதி, வழியோரக் கிராமங்கள் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பணிகளைச் செய்து முடிக்க உத்தரவிடப்பட்டது. அந்தத் திட்டம் இன்னும் முழுமையாக நடைபெறவில்லை. பகுதி-3-ல் 16 ஊராட்சிகளில் உள்ள 274 குக்கிராமங்களுக்குக் குடிநீர் கிடைப்பதற்கான திட்டப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெறுகின்றன. அத்திட்டத்தை விரைவுபடுத்தி, அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் கிடைக்க போர்க் கால அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்னுதுரை, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) சரி, பேசி முடியுங்கள்.

**திரு. செ. பொன்னுதுரை:** பட்டுக் கூடுகளுக்கும், பட்டு நூலுக்கும் கடந்த 20 ஆண்டுகளாக விலை உயர்வு இல்லை. ஆனால், பட்டுத் துணியின் விலை மட்டும் பல மடங்கு உயர்ந்துள்ளது. எனவே, பட்டு



உற்பத்தியாளர்களும், சிறு பட்டு நூல் நூற்பாளர்களும் நசிந்துவிடாமல் பாதுகாக்க பட்டு நூல் இறக்குமதியை மத்திய அரசு கட்டுப்படுத்த, தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல், பட்டு வளர்ப்பு உற்பத்தியை அதிகரிக்க இயந்திரங்கள் வாங்க 50 சதவிகிதம் மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரேயொரு கோரிக்கையை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தாலுகாவிலுள்ள பாண்டியம்பாளையம் கிராமத்தில், குஞ்சரமடை காலனி, எடையம்பாளையம் கிராமத்தில் திருவள்ளுவர் நகர், பொன்முடி கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி, கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் கருக்கம்பாளையம் நரிக்குறவர் காலனி ஆகிய இடங்களில் பல ஆண்டுகளாகக் குடியிருந்து வரும் ஏழையெளிய மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் பல ஆண்டுகளாகக் குடியிருந்து வருபவர்களை வெளியேறுமாறு அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அவர்களுக்கு மாற்று இடமாக ஈரோடு தாலுகாவில் உள்ள புத்தூர் புதுப்பாளையம் கிராமத்தில், நத்தம் புறம்போக்கில் உள்ள ரீ.ச.எண் 3/2-ல் 4.20 ஏக்கர் இடத்திலும், குன்னத்தூர் பேரூராட்சி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்னுதுரை, உரையாற்றியது போதும். உட்காருங்கள். உங்களுக்கு 10 நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டன. அதை உபயோகமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய பெருமக்களின் சிந்தனையில் உதித்த, சமுதாயப் புரட்சித் திட்டங்களுக்குச் செயல் வடிவம் தந்து சட்டப்பூர்வமாக்கியும் சிறுபான்மையின மக்களுக்கு ஆணையத்தை உருவாக்கியும், அதனை சட்டப்படியான அதிகாரம் கொண்ட ஆணையமாக உயர்த்திய, சிறுபான்மை மக்களின் சீரிய பாதுகாவலராக வாழ்ந்து வரும் முத்தமிழ் அறிஞர் அய்யா கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மனித வாழ்க்கை நிரந்தரமற்றது, வாழும் காலத்தில் மனித சமுதாயத்திற்கு ஏதாவது நன்மைகள் செய்வதை மறந்து, தேவைக்கு அதிகமான பணத்தையும், சொத்தையும் சேர்த்து, அழிவை மறந்து,

எல்லாம் எனக்குத்தான் என்று வாழ்கின்றவர்கள் மத்தியில், சொந்தப் பணத்தில் ரூ.3.20 இலட்சத்தை தமிழ் மக்களின் கல்விக்கும் மருத்துவத்திற்கும் மாதம் தவறாமல் வழங்கி வரும் வாழும் வள்ளல் பெருந்தகையே, தங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகில் அடையாளம் தெரியாத மிக, மிகச் சிறுபான்மை விவசாய இனமான எமது படுக இனத்தை நாட்டு மக்கள் மத்தியில் வெளிச்சத்திற்குக் கொண்டு வர, கழகத்தில் படுகர் இனத்தின் முதல் மாவட்டச் செயலாளராக்கி, முதன்முதலில் அமைச்சர் என்ற பெருமையைத் தந்த மனித நேயத்தின் திருவுருவம், மாண்புமிகு அய்யா கலைஞர் அவர்களை மீண்டும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

மலை குலைந்தாலும், நிலை குலையாத தமிழரின் சுய மரியாதைக்காக வாழ்நாள் முழுவதும் கலைஞரின் உண்மை நண்பராக உழைத்து வரும் அப்பழுக்கற்ற தன்மானத் தலைவர் மாண்புமிகு அய்யா பேராசிரியர் அவர்களையும் வணங்கி, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் வழி நின்று, அதில் வாழும் வரை கழகத்தை வலுவுடன் காப்பாற்ற பள்ளிப் பருவம் முதல் இளைஞர் பட்டாளத்தை ஒன்று திரட்டி, தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாதுகாப்பை ஏற்படுத்தி, எடுத்த பணி முடிக்க, உழைப்பால் உயர்ந்தவர் என்ற பெருமைக்குரிய உள்ளாட்சியில் நல்லாட்சி நாயகர் மாண்புமிகு தளபதியாரையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயத்திற்கு மாற்றுருவமாக, தன்னிடம் வருவோருக்கு முகம் கோணாமல் வேண்டியதைச் செய்து, கலைஞரின் நிழலாக நின்று, கழகம் காத்து வரும் மாண்புமிகு அய்யா ஆற்காட்டாரையும் வணங்கி, கழகத்தின் முதன்மைச் செயலாளர் அண்ணன் துரைமுருகன், மூத்த அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு அய்யா கோ.சி. மணி, அண்ணன் வீரபாண்டியார் உட்பட அனைத்து அமைச்சர்கள், சபை உறுப்பினர்கள், பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, என்னை உருவாக்கிய மாமா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. குண்டன் மற்றும் எனது கூடலூர் தொகுதி மக்களையும் வணங்கி, 2008-2009 ஆம் ஆண்டிற்கான கதர் வாரியத் துறையின் மானியக் கோரிக்கையைச் சபையில் சமர்ப்பிக்கின்றேன்.

பட்டு வளர்ச்சித் துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு வளர்ப்புத் தொழிலானது விவசாயத்தைச் சார்ந்த தொழிலானதால் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினையும்



இத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் தொடர் வருவாயையும் ஈட்டித் தருகிறது. உலக அளவில் சீனாவுக்கு அடுத்து, அதிக கச்சாப்பட்டு உற்பத்தி செய்யும் நாடாகவும், அதிக அளவு பட்டு நூல், பட்டு ஆடைகள் நுகர்வு செய்யும் நாடாகவும் இந்தியா விளங்குகிறது. இந்திய அளவில் பட்டுத் தொழிலில் தமிழகம் 4-வது இடத்தில் உள்ளது.

2005-2006ஆம் ஆண்டு இறுதியில் தமிழகத்தில் மல்பரி சாகுபடிப் பரப்பு 16,909 ஏக்கராக இருந்தது. கழக ஆட்சி பொறுப்பேற்ற பின், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் மாநிலத்தில் மல்பரிப் பரப்பு 108 சதவீதம் அதிகரித்து, தற்போது 35,117 ஏக்கராக உயர்ந்துள்ளது.

கடந்த நிதி ஆண்டில் 9,676 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கச்சாப் பட்டு உற்பத்தியில், கடந்த நிதி ஆண்டு சாதனை 1,368 மெட்ரிக் டன் ஆகும்.

இந்திய அளவில் 2006-2007 ஆம் ஆண்டில் 100 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக் கூடு அறுவடை 47.7 கிலோ ஆகும். ஆனால், தமிழகத்தில் கடந்த ஆண்டில் 63.9 கிலோ அறுவடை செய்யப்பட்டு, இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை வகிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக் கூடுகளை தமிழ்நாட்டிலேயே விற்பனை செய்ய ஏதுவாக, மாநிலத்தில் பட்டு நூற்புப் பிரிவினை விரிவுபடுத்தப் பலதரப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த 2006-2007ஆம் ஆண்டில், புதியதாக 59 காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகுகளும், 62 மின் மோட்டாருடன் இயங்கும் சர்க்கா நூற்பு அலகுகளும் நிறுவப்பட்டன. நடப்பாண்டிலும் 34 புதிய நூற்பு அலகுகள் நிறுவ நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. கழக ஆட்சி பொறுப்பேற்ற பின், இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.20.30 கோடிக்குத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் 10,000 ஏக்கர் பரப்பளவில் மல்பரி நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.16.00 கோடி நிதியுதவி மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசால் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம். பாரம்பரியம் மிக்க கைவினைப் பொருட்களுக்கு வளமான பின்னணியை இத்தமிழகம் கொண்டுள்ளது. கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 1-8-1973 முதல் தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் பூம்புகார் என்ற பெயரில் இயங்கி வருகிறது. இதன்

நோக்கம், தமிழகக் கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்குச் சீரான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல், கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்த முறையான பயிற்சி அளித்தல், தரத்தை மேம்படுத்தி, அதிலுள்ள இடர்பாடுகளைக் களைதல், வடிவமைப்புகளில் புதிய உத்திகளைப் புகுத்துதல், கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல் போன்றவையாகும். தற்பொழுதுள்ள 18 பூம்புகார் விற்பனை நிலையங்கள்மூலம் கடந்த ஆண்டு சாதனையாக ரூ.2,130 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

இந்நிறுவனம், பஞ்சலோக சிலைகள், பித்தளை அலங்காரப் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம், நாச்சியார்கோவில், மதுரை, தஞ்சாவூர், வாகைக்குளம், சுவாமிமலை, கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களிலுள்ள தனது உற்பத்தி நிலையங்கள்மூலமாகப் பல்வேறு கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. கடந்த ஆண்டு இந்நிறுவனம் ரூ.254.88 இலட்சத்திற்கு உற்பத்தியை எட்டியுள்ளது. இதில், 3,592 பித்தளைச் சலவைப் பெட்டிகள் மிகப் பிற்படுத்தப் பட்டோர் நலத் துறைக்கு ரூ.85 இலட்சம் மதிப்பில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

*பிற்பகல் 1-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிறுவனம் தங்கத் தேர், மரத் தேர், செப்புத் தகடு மற்றும் வெள்ளித் தேர் ஆகிய பணிகளை ரூ.100 இலட்சம் செலவில் செயல்படுத்தி வருகிறது. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் ஆண்டுக்கு ரூ.50 கோடி விற்பனை அளவை எட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

கதர் மற்றும் கிராமத் தொழில்கள். 1967-இல் கழக அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, தலைவர் அவர்களே, கதர்த் திட்டம் கைவிடப்படுமோ என்ற அச்சம் பலரிடம் இருந்தது உண்டு. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்தத் திட்டம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது, உழைத்து வாழும் உணர்வைப் போதிக்கிறது, ஆகவே, இதை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன்தான் காணவேண்டும் என்று கூறினார்கள் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அய்யா அவர்கள் 1970 ஆம் ஆண்டு கூறியதை இம்மாமன்றத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



குறைந்த மூலதனத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு இராமக் கைவினைஞர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கதர்த் தொழில்களை மேம்படுத்தி, தமிழ்நாடு முழுவதும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவது இத்துறையின் நோக்கமாகும். 142 கிராமிய நூற்பு நிலையங்கள், 59 கதர் உபகிளைகள், 10 நேபாளி தறி நிலையங்கள்மூலம் 20 ஆயிரம் குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. இதில் 12,500 பேர் ஊரகப் பகுதியில் வசிக்கும் பெண்கள் ஆவர். நெசவாளர்கள் ஊதியம் பல ஆண்டுகளுக்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னால்தான், கடந்த ஆண்டு 25 சதவிகிதம் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.639 இலட்சம் கதர் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, நடப்பாண்டில் ரூ.1,000 இலட்சமாக உற்பத்தியை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2007-2008-இல் ரூ.1,015 இலட்சமாக இருந்த பட்டு உற்பத்தியை நடப்பு ஆண்டில் ரூ.15 கோடியாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின்கீழ் 27 கதர் பட்டு உபகிளைகள் இயங்கி வருகின்றன. சுமார் 1,500 பட்டு நெசவாளர்கள் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பை இதனால் பெறுகிறார்கள். இந்தத் துறையில் நெசவாளர்களுக்கு குழுக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் கொலு கண்காட்சிமூலமாக பொம்மைகள் மட்டும் ரூ.70 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. கதர் ஆணையத்தின் சான்று பெற்ற நிறுவனங்களிலிருந்து கதர் கிராமப் பொருள்களை வாங்கி விற்பனை செய்து, கதர் அங்காடிகளை இலாபகரமாக இயக்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கதர் கிராமப் பொருட்கள் 2006-2007-இல் விற்பனை ரூ.2,795 இலட்சமாக இருந்தது, 2007-08-இல் விற்பனையை ரூ.3,715 இலட்சமாக உயர்த்தி, நடப்பாண்டில் ரூ.5,700 இலட்சமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு பேசிய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி அவர்கள் கூறுகையில், இந்தத் துறை கடைசியில் உள்ள அமைச்சரிடம் கடைசியில் உள்ளது என்று கூறினார். கடந்த 10 ஆண்டு காலத்தில், கதர்த் துறையில் 2007-2008-இல் கடந்த நிதியாண்டில்தான் அதிகப்படியான உற்பத்தியும், விற்பனையும் ரூ.10 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள். வாரியத்தில் 9 தச்சு மற்றும் கருமாரத் தொழில் கூடங்கள் உள்ளன. 2007-2008-இல் ரூ.556 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை ஆணைகள் பெறப்பட்டு, விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு விற்பனையை ரூ.1,000 இலட்சமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கைமுறை காகிதத் தொழில்—உயர் நீதிமன்றம், ஆவணக் காப்பகம் போன்ற துறைகளுக்கு மெல்லிய பாண்டு பேப்பர் மற்றும் பிற துறைகளுக்கு கோப்பு அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2007-2008-இல் ரூ.41 இலட்சத்திற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இந்த உற்பத்தியினை ரூ.75 இலட்சமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தோல் தொழில் வாரியத்தில் 18 காலணி உற்பத்திக் கூடங்கள் உள்ளன. இதில் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த சுமார் ஆயிரம் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. 2007-2008-இல் ரூ.650 இலட்சம் மதிப்பில் விநியோக ஆணைப் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் ரூ.1,000 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சோப்புத் தொழில் வாரியத்தில் 24 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த நிதியாண்டில் ரூ.500 இலட்சமாக இருந்த சோப்பு உற்பத்தி, நடப்பாண்டில் ரூ1,000 இலட்சமாக உயர்த்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-10

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜமுனாமரத்தூர் ஆகிய பகுதிகளில் தேனீ வளர்ப்போரிடமிருந்து பச்சைத் தேன் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

வரும் ஆண்டுகளில் வாரியமே ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் 2,000 தேன் பெட்டிகளை தேனீ வளர்ப்பு மையங்களில் வைத்து, உற்பத்தியைப் பெருக்கிட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் ரூ.86 இலட்சத்திற்குத் தேன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில், ரூ.200 இலட்சம் மதிப்பில் தேன் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தேனீ வளர்ப்போருக்கு



ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் தேன் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கதர் மற்றும் பட்டு இரகங்களின் விற்பனைக்கான தள்ளுபடி. வாரியத்தால் ஆண்டு முழுவதும் கதர் இரகங்களின் விற்பனைமீது 30 விழுக்காடு தள்ளுபடியும், பட்டு இரகங்களின்மீது 20 விழுக்காடு தள்ளுபடியும், பட்டு ரொக்க விற்பனைக்கு 10 விழுக்காடு தள்ளுபடியும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசால் ஆண்டுக்கு வாரியத்திற்கு இரண்டு கோடி ரூபாய் தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது. சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ஐந்து கோடி ரூபாய் அளிக்கப்பட்டு வருகிறது. இதுதான் கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டு காலமும் ஒரு ரூபாய்கூட வழங்காமல், தற்போது தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.12.5 கோடியை இப்போது கொடுக்க உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

2008-2009 ஆம் ஆண்டு, பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.40.00 இலட்சத்திற்குத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. நாகர்கோவில் கதர் அங்காடியினை ரூ.5.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

கோவை, கதர் கிராமத் தொழில் உதவி இயக்குனர் அலுவலகத்தில் ரூ.5 இலட்சம் செலவில் பழுதுபார்ப்புப் பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சென்னை, குறளகக் கட்டடத்தில் உள்ள பிரதான கதர் அங்காடியினை ரூ.25 இலட்சம் செலவில் புதுப்பித்து நவீனப்படுத்திட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி ஆணை வழங்கியுள்ளார்கள்.

பனை வாரியம். தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் உள்ள ஒரு மாநில இணையம் மற்றும் 8 மாவட்ட சம்மேளனங்களில் 2007-2008 ஆம் ஆண்டு ரூ.660.53 இலட்சத்திற்கு பனைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.705.52 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டு உற்பத்திக் குறியீடாக ரூ.1,230 இலட்சமும், விற்பனைக் குறியீடாக ரூ.1,430 இலட்சமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. மேலும், மாநில இணையம் மற்றும் மாவட்ட சம்மேளனங்களின்மூலம் சுமார் 6 இலட்சம் ஆண்/ பெண் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

நடப்பாண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் 3,747 பனைத் தொழிலாளர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.4,000 மதிப்பில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க, ரூ.1.5 கோடி மதிப்பில் இலவசமாக வழங்க, மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பனை மரம், தென்னை மரம், ஈச்ச மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கும் ஓராண்டிற்கு உரிமம் வழங்கப்பட்டதை, கடந்த ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு (2007 முதல் 2009 முடிய) முதல் முறையாக உரிமம் நீட்டித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

குறைந்த முதலீட்டில் அதிகப்படியான வேலைவாய்ப்பினை கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு இன்று இத்துறைமூலம் தந்து, தேசப் பிதா காந்தியடிகளின் கனவை மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்கள் நனவாக்கி வருகிறார்.

மேலும், இத்துறை சிறப்புடன் நடக்க முழு மனதுடன் ஒத்துழைக்கும் துறைச் செயலாளர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்கர், ஐ.ஏ.எஸ்., தலைமைச் செயல் அலுவலர் திரு. விவேகானந்தன், ஐ.ஏ.எஸ்., மற்றும் அலுவலர்கள், ஊழியர் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசும்போது, இத்துறை சம்பந்தமான சில கேள்விகளை எழுப்பினார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த திருமதி ஜி. லதா அவர்கள் பேசும்போது, 862 பேருக்கு அரசு மாற்றுப் பணி வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். நிச்சயமாக அந்தப் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம், நிச்சயமாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 3 சதவிகித சேவைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது என்று சொன்னார்கள். அரசுத் துறைப் பணிகளை எடுத்துச் செய்யும்போது மட்டும்தான் 3 சதவிகித சேவைக் கட்டணம் செலுத்தப்படுகிறது. தனியார் மற்றும் சில்லறை விற்பனையில் சேவைக் கட்டணமாக 3 சதவிகிதம் செலுத்தப்பட்டு வந்தது. இரத்துச் செய்யப்பட்டுவிட்டது என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சகோதரர் திரு. குணசேகரன் அவர்கள், பனை வாரியத்தில் உள்ள பிரச்சினை



குறித்து தெரிவித்த கருத்துகளையேற்று, அதனை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள், பூமிதான இயக்கத்திற்கு ஆலோசனைக் குழு அமைக்கக் கேட்டுக்கொண்டார். அந்த முயற்சியை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை சம்பந்தப்பட்ட புதிய அறிவிப்புகள் புத்தக வடிவில் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த அறிவிப்புகளை* நான் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், உறுப்பினர்கள் கொடுத்துள்ள 262 வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் மிக்க கவனத்துடன் படித்துப் பார்த்தேன். எதிர்காலத்தில் அதில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதி கூறி, அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, இத்துறையின் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) எல்லோரும் கடைசியில் விளக்கம் கேளுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் கடைசியில் கேட்கலாம், உட்காருங்கள். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா பணியாற்றிய, அய்யா கலைஞர், அய்யா பொதுச் செயலாளர் அவர்கள் பணியாற்றுகின்ற இந்தப் புனிதமான மாமன்றத்தில், எனது தந்தையாருக்கும் வாய்ப்பளித்து, இன்று எனக்கும் வாய்ப்பளித்த எங்கள் இனத் தலைவர் அய்யா கலைஞர் அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இனமானப் பேராசிரியர், அய்யா

* 376 முதல் 379 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பொதுச் செயலாளர் அவர்களே, இன்று எங்களை வழிநடத்துகின்ற, நாளை இந்த நாட்டை வழிநடத்த இருக்கின்ற, எங்கள் ஆருயிர் அண்ணன் தளபதியார் அவர்களே, அய்யா ஆற்காட்டார் அவர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

நெசவுத் தொழிலை சுவாசிக்கும், நெசவாளரை நேசிக்கும் அரசு, இந்தக் கலைஞர் அரசு. கனாக்களும், வினாக்களுமாயிருந்த நெசவாளர் வாழ்வை, இன்று காட்சிகளாய், மாட்சிகளாய் மாற்றியது, இந்த கலைஞர் அரசு.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"-இது தலைப்பாகை கட்டிய பாரதியின் முரசு. "உழவுக்கும் தொழிலுக்கும் உயர் நெசவுக்கும் வந்தனை செய்வோம்"—இது, இந்தக் கலைஞர் தரும் பரிசு. (மேசையைத் தட்டும் ஒலி)

"உறவுக்குக் கைகொடுப்போம், உயர் கைத்தறிக்கும் கை கொடுப்போம்"—இது இந்த அரசு கொட்டும் முழக்கம்.

திட்டங்களை அறிவிப்போடு நிறுத்தாமல், திட்டங்களைச் செயல்களாய் மாற்றி வழங்குவதும், நமது கலைஞர் அரசுதான். தலைவர் கலைஞர் ஆட்சியில் இருந்தாலும் சரி, ஆட்சியிலே இல்லாதபோதும் சரி, என்றென்றும் நம்மை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவிற்கும், தலைவர் கலைஞருக்கும், நெசவாளர்மீது நேசம் இருக்கிறது என்பது வரலாறு கூறும் உண்மை. அதற்கு உதாரணமாக, 1952 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14 ஆம் நாள், தஞ்சையிலே நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவில், கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஆதரவு தரும் வகையிலும், பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும், தென்னாட்டு கைத்தறி நெசவாளர் துயரைத் துடைக்கவும், 1953 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 ஆம் நாளை "கைத்தறியாளர் ஆதரவு நாள்" எனக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொண்டது மட்டுமல்லாமல், அந்த நாளில், நம்மை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் திருச்சியிலும், நம் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையிலும் கைத்தறித் துணிகளைத் தோளிலே சுமந்து விற்று, கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாத்தார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்வது என்னுடைய கடமை.

அதுமட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களுடைய கட்டளையை ஏற்று, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், தூத்துக்குடியில் என்.வி. நடராசன், தஞ்சையிலே கே.கே. நீலமேகம், சிதம்பரத்திலே அரங்கண்ணல், காஞ்சிபுரத்திலே நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, சி.வி.எம். அண்ணாமலை, மாயவரம் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார், காரைக்குடியிலே இரா. நெடுஞ்செழியன், கண்ணதாசன், அருப்புக்கோட்டையிலே ஏ.வி.பி. ஆசைத்தம்பி, கோவையிலே ஈ.வி.கே. சம்பத், கோவை செழியன், மதுரையிலே சி.பி. சிற்றரசு, சேலத்திலே கே.ஏ. மதியழகன், ஈரோட்டிலே எஸ். சத்தியவாணிமுத்து, நாஞ்சில் கி. மனோகரன், நெல்லிக்குப்பத்திலே இ.ரெ. இளம்வழுதி, ராஜபாளையத்திலே தோழர் மாசானம், சைதையிலே சி.வி. ராஜன், வேலூர் - காஞ்சி மணிமொழியார், திருமங்கலத்திலே இரா.சு. தங்கப்பழம், நாகர்கோவிலிலே என்.எஸ். இளங்கோ, விருதுநகர் - ஏ.கே. வேலன், ஸ்ரீவில்லிபுத்தூர் - எம்.எஸ். இராமசாமி, அம்பாசமுத்திரம் - வீரபாகு, இராமநாதபுரம் - சௌந்திரபாண்டியன், பவானி - எஸ்.எஸ்.எம். சுப்பிரமணியம், வளவனூரிலே இராம. பழனிச்சாமி, செங்கல்பட்டு - நவநீதநாதம், திண்டுக்கல் - எஸ்.வி. தொந்தி, எஸ். முத்து, ஆம்பூர் - கிருஷ்ணய்யா, சேவூர் - கே. நடேசன், சாத்தூர் - ஜி. ராஜதுரை, அரியலூர் - எம்.ஆர். செல்லப்பா, சின்னாளப்பட்டி - சவுடையா, கள்ளக்குறிச்சி - பகதூர், அரூர் - எச்.எல். முருகேசன், திசையன்விளை - எஸ்.என். ராமசுந்தரம், களம்பூர் - என்.எஸ். அண்ணாமலை உள்ளிட்ட அனைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னோடிகளும் தங்களுடைய தோளிலே கைத்தறித் துணிகளைச் சுமந்து, தமிழகம் முழுவதும் விற்று, கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்றியவர்தான் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களும், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும் என்பதை இந்த நேரத்திலே சொல்வது என்னுடைய கடமை. அது மட்டுமல்ல . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மலரவன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** உங்களுக்கு இதிலே என்ன சந்தேகம் இருந்தாலும், கன்னிமாரா லைப்ரரிக்குப் போய், திராவிட நாடு பத்திரிகையை எடுத்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். உங்களுக்கு சந்தேகம் இருந்தால் நான் தீர்த்து வைக்கின்றேன். (குறுக்கீடுகள்) எம்.ஜி.ஆரும் கைத்தறித் துணியை வாங்கினார், இப்போது சொல்கின்றேன், தலைவர் கலைஞர் சென்னை மாநகரத்திலே விற்றுவிட்டுச் செல்கின்றபோது, கலைவாணர் அவர்கள் 400 ரூபாய்க்கு வாங்கினார், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் 250 ரூபாய்க்குக் கைத்தறித் துணியை வாங்கினார். இதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மலரவன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிடக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வைத்திலிங்கம், உட்காருங்கள்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** தலைவர் கலைஞர் அவர்களுடைய ஊர்வலத்தினரை, கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களும், மதுரம் அம்மையார் அவர்களும் வரவேற்று—தலைவர் அவர்களுடைய பெயர் அங்கே இருக்கிறது—மாலை அணிவித்து சுமார் 400 ரூபாய்க்குத் துணிகள் வாங்கினார்கள். பின்னர் இலாயிட்ஸ் ரோடு வழியாக, வியாபாரம் செய்துகொண்டு மயிலாப்பூர் சென்றார்கள். வழியில் தோழர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தோழர்களை வரவேற்று, 250 ரூபாய்க்குக் கைத்தறித் துணிகளை வாங்கிக்கொண்டார்கள். (குறுக்கீடுகள்) இது திராவிட நாடு பத்திரிகையில் உள்ளது. சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள்.

அதேபோல, 1953 ஆம் ஆண்டு புயல் நிவாரண நிதிக்காக, திராவிட முன்னேற்றக் கழகம் சார்பிலே தலைவர் கலைஞர் அவர்கள் திராவிட நாடு பத்திரிகையின்மூலமாக, புயல் நிவாரண நிதியை வசூலித்து, அதுவும், 23,156 ரூபாய், ஒரு அணா, 6 பைசா, அதைத் தலைவர் கலைஞர் வசூல் செய்து, 2,500 கைத்தறி வேஷ்டிகள், 3,005 கைத்தறிச் சேலைகளை, 21 பண்டல்களாக வாங்கி, 28-8-1953 அன்று திரு. கே.ஏ. மதியழகன் மூலமாக அரசிடம் ஒப்படைத்து, கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாத்தார் தலைவர் கலைஞர் அவர்கள். இவர் வசூல் செய்துவிட்டு, இவற்றைத் தருகின்றபோது எங்கே போனார் என்றால், இன்னொரு மக்கள் போராட்டத்திற்காக, திருச்சி சிறையிலே 6 மாதம் இருந்தார் என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்வது என்னுடைய கடமை. அந்த அளவிற்கு கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாப்பதிலே அறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கைத்தறிக்கு என்றும் பாதுகாவலர்களாக இருந்து வந்தார்கள் என்பதை இந்த நாடே அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றைய காலகட்டத்தில், பாரத திட்டக் குழு விவாதத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது, 'ஒரு பயனுள்ள காரியத்திற்குப் பல இலட்சக்கணக்கானவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்ற முறையில் கைத்தறித் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் காவலராக சர்க்கார் இருக்கவேண்டும். கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைத்தல், அவர்களுக்குத் தேவையான குடியிருப்பு



வசதிகளைத் தேடித் தருதல், இதுபோன்ற வேலைகள் அனைத்தும் மேற்கொள்வது ஒரு சர்க்காரின் வள்ளல் தன்மையை எடுத்துக் காட்டுவதாக அமையும். தற்போது தேவைப்படக்கூடியது என்னவென்றால், கைத்தறித் தொழில் நிலையானதாக, இலாபம் தரக்கூடியதாக அமையவேண்டுமென்று "நான் தருகிறேன் 1,000 கோடித் திட்டம்" என்று அன்றே பாரத திட்டக் குழு விவாதத்தில் நம் அறிஞர் அண்ணா அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள். அதன் வழி அமைந்ததுதான் நம் கலைஞர் சர்க்கார் என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்வது என்னுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர்களுக்கு கழக அரசு செய்த பல சாதனைகளில் சில சாதனைகளை இம்மான்றத்தில் எடுத்துரைக்கின்றேன்.

இந்தியாவிலேயே முதன்முதலாக கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் 78 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் இலவச மின்சாரம் வழங்கியது நம் தலைவர் கலைஞருடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்று இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், நெசவாளர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு நெசவாளர் செலுத்த வேண்டிய ரூபாய் 50-ஐ மாநில அரசே ஏற்கிறது. இதன்மூலம் அரசுக்கு ஆகும் செலவு, நான்கு கோடியே 17 இலட்சம் ரூபாயாகும். எப்படி விவசாயிகளுடைய ஒரு தலைமுறையினுடைய கடனைத் தலைவர் கலைஞர் எடுத்தாரோ, மத்திய அரசினுடைய செயல்பாட்டிற்கும் நம் தலைவர் கலைஞர் அவர்கள் வழிகாட்டியாக இருந்தாரோ, அதேபோல நெசவாளர் வீடு கட்ட வழங்கப்பட்ட ஹட்கோ கடன் நிலுவைத் தொகை 18 கோடி ரூபாயை இரத்துச் செய்து, நெசவாளர் துயர் துடைத்தது நமது கலைஞர் அரசு. இது கோ-ஆப்டெக்ஸ் அக்கௌன்ட்படிதான் வரும். கூட்டுறவு கணக்குப்படி வராது. இவ்விவரம் அண்ணன் திரு. குணசேகரன் அவர்கள் கேட்டார்கள் என்று நினைக்கின்றேன், கோ-ஆப்டெக்ஸ் கணக்குப்படிதான் வரும்.

இதுவரை இரத்துச் செய்யப்பட்டிருந்த 3 சதவீத வட்டி மானியத்தை, நெசவாளர்கள் 3 சதவீதத்தை திருப்பிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். ஆனால், எடுத்தது யார் என்று எடுத்தவர்களுக்கே தெரியும். அதை இன்னொரு சதவீதம் சேர்த்து 4 சதவீதமாக நெசவாளர்களுக்குக் கொடுத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாழ்வளித்தது நமது தலைவர் கலைஞர் அரசு.

கைத்தறி நல வாரியம் அமைத்ததுபோல, மூன்று இலட்சம் விசைத்தறி நெசவாளர் நலன் காக்க விசைத்தறி நல வாரியம் அமைத்ததும் நமது கலைஞர் அரசு. 1,92,220 கைத்தறி நெசவாளர்களின் நலம் காக்கும் வகையில், ஒரு கோடியே 53 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் காப்பீட்டுத் திட்டம் வழங்கியதும் நம்முடைய கலைஞர் அரசு.

256 கோடி ரூபாய் மதிப்பில், 3 கோடியே 28 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ஒரு கோடியே அறுபத்தி நான்கு இலட்சம் வேட்டிகளும், ஒரு கோடியே அறுபத்து நான்கு இலட்சம் சேலைகளும் வழங்கி, இலவச வேட்டி, சேலைத் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தி வருவது தலைவர் கலைஞருடைய அரசு. 2001-2003-இல் இந்தத் திட்டமே உங்களுடைய ஆட்சியில் இல்லை. உங்களுடைய அரசு வந்ததற்குப் பின் 2 ஆண்டுகளிலே திட்டம் எடுக்கப்பட்டது என்பதும் அதற்குப் பின்னாலே இருந்தது. ஒரு காலக்கட்டத்திலேகூட பொங்கலுக்கு முன்பு கொடுத்தது இல்லை. இன்றைக்கு நாங்கள், பொங்கலுக்கு முன்னால் கொடுக்கிறோம். (குறுக்கீடு) சொல்லுங்கள். இன்றைக்குத் தலைவர் கலைஞருடைய அரசாங்கம் வந்தவுடனே கட்டளையிட்டார், பள்ளிக்கூட சீருடையும், இலவச வேட்டி, சேலை கொடுப்பதும் பொங்கலுக்கு அல்லது பொங்கலுக்கு முன்னால் கொடுக்க வேண்டும் என்று. அதைவிட இன்னொன்று, தலைவர் கலைஞரே இந்த ஆண்டு அவரே 1 ஆம் தேதி வந்து இலவச வேட்டி, சேலையை ஒரு தெரு முனையிலே கொடுத்துவிட்டுப் போனார். அவ்வளவு ஒரு உன்னதமான திட்டமாகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தப் பள்ளிச் சீருடையினையும், இலவச வேட்டி, சேலையினையும் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 1-25

அதேபோல் 45 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பில் 59 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகள் வழங்கி, இலவச சீருடைத் திட்டத்தினை முனைப்போடு செயல்படுத்தி வருகிறது நம்முடைய கலைஞர் அரசு. இதுவும் பள்ளிப் பாடப் புத்தகம் தருகிறபோதே கண்டிப்பாகத் தரவேண்டும் என்ற கட்டளையையும் தலைவர் கலைஞர் அவர்கள் இட்டிருக்கிறார்.



அதேபோல், மத்திய அரசு உதவியுடன் நெசவாளர்களுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்க, தமிழ்நாட்டில் 28 கைத்தறிக் குழுமங்களை அமைத்து வருவது நம்முடைய கலைஞர் அரசு.

மத்திய அரசின் உதவியுடன் காஞ்சிபுரம், நாகை, நாகர்கோவில், விருதுநகரில் கைத்தறி ஏற்றுமதி மண்டலம் உருவாக்கித் தருவது நம்முடைய கலைஞர் அரசு. கைத்தறி இன்று மக்கள் இயக்கமாக, இளைஞர்களின் இயக்கமாக மாற்றப்பட்டதும் நம்முடைய கலைஞர் அரசில்தான்.

அண்மையில் வெளிவந்த கருத்துக் கணிப்பின்படி, இளைய தலைமுறையினரில் 50 விழுக்காட்டினர் விரும்பி அணிகிற ஆடையாக கைத்தறி ஆடைகள் மாறியுள்ளன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

அதேபோல், 'கைத்தறிக்குக் கை கொடுப்போம்' என்ற திட்டத்தின்மூலம் மாநிலம் முழுவதுமுள்ள 18 பல்கலைக்கழகங்கள் மற்றும் 196 கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள்மூலம் 4 கோடியே 15 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கைத்தறி ஆடைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 4 கோடியே 15 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டதற்கு, இந்த நேரத்திலே எங்களை வழிநடத்துகிற எங்களுடைய அண்ணன் தளபதியார் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் இந்தத் திட்டத்தை எடுத்து, இதைச் சிறப்புடன் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லி, எங்களை ஊக்கப்படுத்திய எங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், அதை வழிநடத்திக் கொடுத்த நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்களுக்கும் இந்த நேரத்திலே துறையின் சார்பாகவும், நெசவாளர்களின் சார்பாகவும் நன்றி சொல்வதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

அதேபோல, அண்ணன் தளபதி அவர்களால் தொடங்கப்பட்ட "தேசிய கைத்தறிக் கண்காட்சி—2008"—21 நாட்களில், 4 கோடியே 28 இலட்சம் ரூபாய்க்கான கைத்தறித் துணிகளை விற்பனை செய்து சாதனை புரிந்திருக்கிறது நம்முடைய கலைஞர் அரசு.

மத்திய அரசின் 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜவுளித் துறை மேம்பாட்டிற்காக, தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உரிய ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுத்தது நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

மத்திய அரசின் துணையுடன், அகில இந்தியாவிலேயே முதல் உயர் தொழில்நுட்பப் பூங்காவை பல்லடத்திலும், இரண்டாவது உயர் தொழில்நுட்பப் பூங்காவை குமாரபாளையத்திலும் அமைத்தது நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சொல்வது என்னுடைய கடமை.

இதன் தொடர்ச்சியாக, இங்கே பல பேர், தொழில் துறையிலே பேசிய அண்ணன், சகோதரர் மாண்புமிகு செ.ம. வேலுசாமி அவர்கள்கூட துறையிலே இருக்கிற பிரச்சினைகளைப்பற்றிப் பேசினார்கள்.

நூற்பாலைகளைப் பொறுத்தவரை, 13 நூற்பாலைகளை கடந்த காலத்திலே, கடந்த அரசு முடிவெடுத்து மூடிவிட்டது என்பதையும், இருக்கிற 5 நூற்பாலைகளைப் பாதுகாக்கிற நிலையிலே இன்று இந்தத் துறையும், அரசும் இருந்துகொண்டிருக்கிறது. அதைச் சொல்வதற்குக் காரணம், இன்று வியாபாரம் என்பது வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த வியாபாரத்திலே அரசாங்கம் தொழில்ரீதியான போட்டியைச் சந்திக்கிற சூழ்நிலை என்பது, சகோதரி லதா அவர்கள் பேசுகிறபோது, அரியூர் ஆலையைத் திறப்பதாக அமைச்சர் 2006 மானியக் கோரிக்கையிலே சொன்னதாகச் சொன்னார். உண்மைதான். அதற்குரிய நடவடிக்கைதான் எடுக்கப்பட்டது. அதோடு, முதல் நடவடிக்கையாக இந்த 5 மில்களையும் பாதுகாக்கிற நிலையையும், தொடர்ந்து, 4 மில்லையாவது புதிதாகத் தொடங்குகிற கோப்பும் இருக்கிறது. ஆனால் இந்த வேகமான வியாபார யுகத்தில் அதை எந்த அளவிற்கு இந்த அரசால் சாத்தியமாக்க முடியும் என்கிற ஒரு மிகப் பெரிய தொய்வான நிலைமையில்தான் நின்றுகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, அதில் நடக்கிற மில்களை முதலில் காப்பாற்றிவிட்டு, புதிய மில்களுக்கு நம்முடைய முதல்வரிடம் கேட்டு ஏதாவது செய்கிற நிலையை உருவாக்குவோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறோம்.

அதேபோல், விடியல் எஸ். சேகர் கேட்கிறபோது மாசுக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினுடைய நிலை பற்றி கேட்டார். 11-3-2008-ல் நம்முடைய முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். கண்டிப்பாக அது சம்பந்தமாக தொடர்ச்சியான வேலை நடந்துகொண்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் செய்ய முடியும் என்கிற ஒரு நிலையை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.



இதோடு ஒன்றே ஒன்று. இங்கே நிறையக் கேள்வி கேட்டார்கள். இதிலே குறை, அதிலே குறை என்று கேட்டார்கள். கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே—குறை சொல்வதற்காக அல்ல—இப்பொழுது இவ்வளவு நிறையைப் பார்க்கிறோமே என்று பின்னாலே திரும்பிப் பார்த்தோம். ஐந்தாண்டுகளிலே இந்தத் துறைக்குக் கொடுக்கப்பட்ட நிதி ரூ. 1,061 கோடி. ஆனால் இந்த மூன்று ஆண்டுகளிலே மட்டும் தலைவர் கலைஞர் அரசு ரூ. 1,610.61 கோடி ஒதுக்கியிருக்கிறது. எந்தத் திட்டத்திலும் எங்கேயும் குறையென்றே சொல்ல முடியாது.

நூல் விலையைப் பற்றிச் சொன்னார்கள். அது இரண்டு முதலாளி வர்க்கத்திலே இருக்கின்ற பிரச்சினை. கூட்டுறவு அடிப்படையிலே இருக்கிற நெசவாளிகள், எங்கேயும் ஒருவர்கூட பாதிக்கப்பட்டார் என்று சொல்ல முடியாது. இன்னொரு பக்கம் காஞ்சிபுரத்திலே சில பிரச்சினைகள் சொன்னார்கள். நூறு சதவிகிதம் கூட்டுறவு நெசவாளிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கவே முடியாது. அதுவும் கலைஞர் அரசில் இருக்கவே முடியாது. அப்படியிருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். நூல் விலை, நூல் கம்மியாகக் கிடைக்கிறது என்று சொன்னார்கள். இது விற்கிறவர்களுக்கும், வாங்குகிறவர்களுக்கும் இருக்கிற பிரச்சினை. இதை அரசாங்கம் நேரடியாக அல்ல. ஆனால், ஒரு கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டும். அமெரிக்காவில் டாலர் விலை வீழ்ச்சி என்பதால் இங்கே பிரச்சினைகள் வருவதுபோல், நூல் விலை ஏறியதுபோல் தெரிகிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** ஆனால் இது 15 சதவிகிதம் ஏறி இருக்கிறது. எனவே, இதைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில், மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து துறையின்மூலம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். பல்லடத்திற்கு—15 நாட்களுக்கு முன்னால், நம் நாட்டின் நிதி அமைச்சர் அவர்கள்கூட இதைப்பற்றி அங்கே கலந்துரையாடினார். அந்த அளவிற்கு, இதனை அரசாங்கம் கண்ணும் கருத்துமாக எடுத்துச் செய்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், எம்.பி. நாச்சிமுத்து அவர்களுடைய பிறந்த நாளை நெசவாளர் தினமாக அறிவிக்கச் சொன்னார். இக்கோரிக்கை

அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. தியாகி குமரன் சென்னிமலை பெயரை, 1010 நெசவாளர் வீட்டிற்கு வைக்க வேண்டும் என்று கேட்டார். அது இப்போது சற்று சர்ச்சையில் இருக்கிறது. தியாகியின் பெயரை வைக்கும்போது தயவுசெய்து அங்கே சர்ச்சை இருக்கக்கூடாது. ஒருசாரார் அதை எதிர்க்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, அவர்களிடத்திலே அதைப் பேசி, சரி செய்து கொடுக்கலாம் என்கிற ஒரு நிலையை அவர்களிடம் சொல்லி, தீர்க்கலாம். இதிலே இருக்கிற பல விஷயங்கள், வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் நாங்கள் துறையின்மூலம் பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

2008-2009 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்[a] அனைத்தையும் நான் படித்ததாகக் கருதி இந்த மாமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே பதிவு செய்துகொள்ள வேண்டும். இதில் நான்கை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

கடந்த 10 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த கைத்தறி நெசவாளர்களின் அடிப்படைக் கூலி, 10 சதவிகிதம் 1-6-2008 முதல் தலைவர் கலைஞர் அரசு உயர்த்திக் கொடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான ஊதிய விகிதம் 1-1-2008 முதல் திருத்தியமைக்கப்படும். இதன்மூலம், பணியாளர்கள் ரூ.500 முதல் ரூ.2,500 வரை பயனடைவார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், கோ-ஆப்டெக்ஸ் பணியாளர்களுக்கு 1-4-2008 முதல் 12 சதவிகித அகவிலைப்படி அரசு ஊழியர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.

நெசவாளர்களுக்கு இலவச மருத்துவ உதவி கிடைக்கும் வகையில், 45 சுகாதார மையங்கள், வெளி நோயாளிகளின் பிரிவு மையங்களாக மாற்றி அமைத்துச் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்து, மற்ற அறிவிப்புகளை நான் படித்ததாகக் கருதி மாமன்றத்திலே பதிவு செய்து, உங்கள் வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

---

[a] 380 முதல் 383 வரையிலான பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பிலே மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது எனது உரையை இந்த மாமன்றத்திலே நிகழ்த்த வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தினைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

85 வயது இளைஞனே, எண்ணெண் கலை அறிந்த கலைஞனே, தித்திக்கும் முத்தமிழின் அறிஞனே, திராவிடப் பேரியக்கத்தின் ஒரே தலைவனே, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நீ வானத்தைப் புகழால் வளைத்தவன், சங்கம் வளர்த்த தமிழ் இன்பத்தில் திளைத்தவன், ஓயாமல் காலம் எல்லாம் உழைத்தவன், உதயசூரியன் கைகொடுக்க அழைத்தவன், (மேசையைத் தட்டும் ஒலி) எம் மொழி, தமிழ் மொழி, செம்மொழி என்பதை வையகம் ஏற்றிட வைத்தவன், எங்கள் நெஞ்சினில் பொங்கிடும் அன்பெனும் தேனினில் வண்டென மொய்த்தவன், விண்ணுக்கு ஒரு முறை, மண்ணுக்கு ஒரு முறை, நீருக்கு ஒரு முறை, தீயிற்கு ஒரு முறை, காற்றுக்கு ஒரு முறை, 5 முறை என்றாலும் சரி, முல்லைக்கு ஒரு முறை, குறிஞ்சிக்கு ஒரு முறை, பாலைக்கு ஒரு முறை, நெய்தலுக்கு ஒரு முறை, மருதத்திற்கு ஒரு முறை, 5 முறை என்றாலும் சரி, நீ 5 முறை தமிழ்நாட்டை ஆண்டவன், என்றும் அழியாத பேர் பூண்டவன், (மேசையைத் தட்டும் ஒலி) ஆம், நீதான் எங்கள் ஆண்டவன், உன்னை வணங்குவதும், அன்னைத் தமிழ்தன்னை வணங்குவதும் ஒன்றுதான் என்றுதான் இன்று நான் உன்னை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரம் பிறை கண்ட அற்புதத் தலைவர், பாயிரம் பாடப் பண்பு பெற்ற தலைவர், எங்கள் கழகத்தின் சொத்து, செந்தமிழ்ச் செல்வர், என் வழிகாட்டி இனமானப் பேராசிரியர் அவர்களையும் வணங்குகிறேன். என் அண்ணனை விடவும் அதிகமான பாசத்துடன், நேசத்துடன் இருக்கும் அன்பு அண்ணன் ஆற்காட்டார் அவர்களையும் வணங்குகிறேன். உருவத்தில் வசீகரத் தோற்றம், அறிவாற்றலில் அகவையையும் தாண்டிய முதிர்ச்சி, அரவணைப்பதிலே பெற்ற தாயையும் மிஞ்சிய அன்பு, ஏழை எளியோரிடத்திலே பரிவு, நிர்வாகத்திலே திறமை, அனைத்தையும் ஒருங்கே பெற்று, இன்று உள்ளாட்சியில் நல்லாட்சி வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) நாளை இந்த சபையின் நாயகராக உலா வர இருக்கும் எங்களது மாண்புமிகு தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனைய சக அமைச்சர்கள்

மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்கி, எனது உரையைத் தொடங்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கூரிய, நேரிய, சீரிய சிந்தனை மற்றும் தொலைநோக்குப் பார்வை காரணமாகத் தமிழகம் இன்று அன்னியத் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவுக்கே கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், கடந்த நவம்பர் மாதம் 5 ஆம் தேதி அன்று, பெரிய தொழில்களுக்கான, இந்தியத் துணைக் கண்டமே வியக்கும்வண்ணம் 'புதிய தொழில் கொள்கை—2007'-ஐ வெளியிட்டார்கள். இந்தப் புதிய தொழில் கொள்கையில், சிறு தொழில்களை ஊக்கப்படுத்தும் வகையில், பெரும் தொழில்களுக்காக உருவாக்கப்படும் சிப்காட் தொழிற்பேட்டைகளில் ஏற்படுத்தப்படும் மனை ஒதுக்கீடுகளில், சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு 20 சதவிகிதம் கட்டாய ஒதுக்கீட்டினை செய்து கொடுத்தார்கள். தமிழகத்தில் ஏற்றுமதி அதிகரிக்க, எங்கள் தொழில் வணிகத் துறையின் ஆணையாளரை, மாநில ஏற்றுமதி ஆணையாளராக நியமனம் செய்தார்கள். மாவட்டத் தொழில் மையங்களில் இயங்கி வரும் மாவட்ட ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவினை பலப்படுத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் மொத்தத் தொழிலகங்களில் 95 சதவிகிதமாக உள்ளது. இதன் உற்பத்தியின் பங்கு 40 சதவிகிதம் ஆகும். ஏற்றுமதியில் இதன் பங்கு 30 சதவிகிதமாகும். இதை நன்கு அறிந்த நமது தலைவர், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான தனிக் கொள்கையைக் கடந்த 22-2-2008-ல் வெளியிட்டார்கள். இக்கொள்கையின் சிறப்பு அம்சங்களை அனைத்துப் பத்திரிகைகளும், தொழிலதிபர்களும், விஞ்ஞானிகளும் பாராட்டியுள்ளார்கள். குறிப்பாக, Business Line, Economic Times, Times of India, The Hindu, The New Indian Express, Malayala Manorama, The Financial Express ஆகிய பத்திரிகைகளைக் குறிப்பிடலாம். India Today பத்திரிகையில் "பல நூறு கோடி முதலீடு போட்டு, சில நூறு பேருக்கு வேலை கொடுக்கும் இயந்திரமயமான பன்னாட்டு நிறுவனங்களுக்கே தொடர்ந்து வந்த பல அரசுகள் சிறப்புக் கவனம் தந்து வந்தன. அதிலே ஒரு மாற்றாக, சில இலட்சங்கள் முதலீடு போட்டு, பல நூறு பேருக்கு வேலை தரும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு தற்போது



சிறப்புக் கவனம் தருகிறது கலைஞருடைய அரசு" என்று பாராட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், The Deccan Chronicle நாளேட்டில், Laudable efforts என்ற தலைப்பில் ஒரு பெரிய தலையங்கமே எழுதிப் பாராட்டியுள்ளது.

தமிழகத்தில் சுமார் 5.57 இலட்சம் சிறு தொழில்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 19,364 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 40 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மூலமாக தமிழகத்தில் 11-வது ஐந்தாண்டு காலத் திட்டத்தில் 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்ற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 10 விழுக்காடு வளர்ச்சி இதன்மூலம் ஏற்படும் என்ற நோக்கத்தில் அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் சிறு, குறு தொழில்களுக்கென்று தனிக் கொள்கை இதுவரை வகுக்கப்படவில்லை. பெரிய தொழிற்கொள்கையில், சிறிய தொழிற்கொள்கைக்கு ஒரு பத்தி அல்லது ஒரு பக்கம் மட்டுமே இருக்கும். ஆனால், இங்கு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு மிகப் பெரிய தொழில் கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். அதனுடைய சிறப்புக் கூறுகள், முக்கியமாக குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு ரூ. 25 இலட்சம் முதலீட்டுக்கு கீழே இருக்கின்ற நிறுவனங்கள் அத்தனையும் குறு தொழில் நிறுவனங்களாகக் கருதப்படும். இந்த நிறுவனங்கள் மாநிலத்தின் எந்தப் பகுதியில் ஆரம்பித்தாலும், இயந்திரங்கள்மீதான மதிப்பில் 15 விழுக்காடு முதலீட்டு மானியம் வழங்கப்படும். சென்னையில் ஆரம்பித்தாலும் வழங்கப்படும். கோவையில் ஆரம்பித்தாலும் வழங்கப்படும். மதுரையில் ஆரம்பித்தாலும் வழங்கப்படும். 20 விழுக்காடு மின்சார மானியம் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். அ.தி.மு.க. அரசு நிறுத்தியிருந்த மின்சார மானியம் 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். முதல் 6 ஆண்டுகளில் செலுத்தப்படும் மதிப்புக் கூட்டு வரி, VAT-க்கு ஈடான மானியம் வழங்கப்படும். வங்கிகளில் அடமானம் வைக்கப்படும் ஆவணங்களில் பதிவு செய்வதற்கான முத்திரைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக வரி விலக்கு அளிக்கப்படும்.

பிற்பகல் 1-40

**சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கு மானியம்**

சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கு, தமிழகத்தில் எந்தப் பகுதியில் ஆரம்பித்தாலும் மூலதன மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, மின் மற்றும் மின்னணுப் பொருட்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள், வாகன உதிரிப் பாகங்கள், மருந்து மற்றும் மருந்துப் பொருட்கள், சூரிய சக்திப் பயன்பாட்டு உபகரணங்கள், ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள், மாசுக் கட்டுப்பாட்டு உபகரணங்கள், விளையாட்டுப் பொருள்கள், சிக்கனக் கட்டுமானப் பொருட்கள், ஆயத்த ஆடைகள் ஆகிய இனங்களுக்கு 15 விழுக்காடு முதலீட்டு மானியம் தமிழகத்திலே எந்தப் பகுதியிலே ஆரம்பித்தாலும் உண்டு.

வேளாண் சார் தொழில்களுக்கு தமிழ்நாட்டில் மொத்தம் 385 வட்டாரங்களில் எங்கு அமைத்தாலும் அங்கு அவர்களுக்கு 15 சதவீதம் முதலீட்டு மானியம், 3 ஆண்டுகளுக்கு 20 சதவீதம் மின் மானியம், 25 பேர்களுக்குமேல் வேலைவாய்ப்புக் கொடுப்பவர்களுக்கு மானியம் 5 விழுக்காடு, சிறப்பு வகை தொழில் முனைவோர் மானியம், 25 விழுக்காடு சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில்நுட்ப இயந்திரத்திற்கு மானியம் ஆகிய மானியங்கள் வேளாண் சார்புத் தொழில் செய்பவர்களுக்கு வழங்கப்படும். ஏறத்தாழ இது அவர்கள் போட்ட முதலீட்டில் 25-லிருந்து 30 சதவீதம் வரை மானியமாகக் கிடைக்கும். மத்திய அரசு மானியம் பெற்றாலும், மாநில அரசின் மானியத்தையும் பெற்று, அதனுடைய வேறுபாட்டுத் தொகையைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**பின்தங்கிய பகுதிகளிலே அமைக்கப்படும் நிறுவனங்களுக்கு உதவிகள்**

தமிழ்நாட்டிலுள்ள 385 வட்டாரங்களில் பல்வேறு காரணிகளை வைத்து 251 வட்டாரங்கள் பின்தங்கிய வட்டாரங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் அமைக்கப்படும் சிறு, குறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு 15 விழுக்காடு மூலதன மானியம், 5 விழுக்காடு வேலைப் பெருக்க மானியம், மகளிர், ஊனமுற்றோர் மற்றும் அரவாணிகள் ஆகிய தொழில் முனைவோர்களுக்கு 5 விழுக்காடு கூடுதல் மானியம் வழங்கப்படும்.

மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில்நுட்ப இயந்திரங்கள் வாங்க 25 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியம்



வழங்கப்படும். மற்றும் மின் மானியம் 20 விழுக்காடு 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். மேலும், பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் அரசுத் தொழிற்பேட்டைகளில் வாங்கப்படும் மனைகளுக்கு 50 விழுக்காடு முத்திரைத்தாள் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

**தொழில்நுட்ப மேம்பாடு**

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களுடைய தொழில்நுட்பத்தை மேம்பாடு செய்துகொள்ள, Technology upgradation பின்முனை வட்டி மானியமாக ரூபாய் 10 இலட்சம் வரை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை அரசுதான் தொழிற்பேட்டைகளை அமைத்து வந்தது. அங்கு தொழில் அமைத்தால்தான் பல்வேறு சலுகைகளைப் பெறலாம். ஆனால், கலைஞருடைய அரசு, இனிமேல் தனியார்கள் தொழிற்பேட்டை அமைப்பதற்கும் இப்போது வழிவகை செய்துள்ளது. தனியார்மூலம் குறைந்தபட்சம் 50 ஏக்கர் அளவிலே உருவாக்கப்படும் தொழிற்பேட்டைகளுக்கு 20 சதவீதம் அடிப்படைக் கட்டமைப்பு மானியம் ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமல் வழங்கப்படும்.

அதேபோல, தொழிற்சங்கங்கள்மூலம் நடத்தப்படும் தொழில் நிறுவனப் பணியாளர் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்திற்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக தனிக் குழு இந்தத் துறையின் அமைச்சர் தலைமையிலே அதிகாரம் பெற்ற குழுவாக—Empowered Committee—அமைக்கப்பட்டு, அதன்மூலமாகப் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

இதுவரை ஒற்றைச் சாளரத் தீர்வு முறை வெறும் ஒரு அமைப்பாக, ஆலோசனை அமைப்பாக மட்டுமே இருந்து வந்தது. இனிமேல் அது Statutory Body ஆக, சட்டம் மூலமாக இந்த Single Window System செயல்படும்.

ஏற்றுமதிக்காகத் தனிச் சட்டம் விரைவில் வரும் என்று உள்ளாட்சித் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் தளபதி அவர்கள் 2 நாட்களுக்கு முன்பு அறிவித்தார்கள். அதிலே சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்வதற்கும் வழிவகை செய்யப்படும்.

அதேபோல, இதுவரை இந்தியாவிலே வேறு எங்குமில்லாதபடி, நலிவுற்ற நிறுவனங்கள் புனரமைப்பிற்கான வழிகள் இந்தச் சிறு, குறுந்தொழில்கள் சட்டத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளன. நலிவுற்ற நிறுவனத்தின் நிலுவை வரி, நிலுவை விற்பனை வரி மற்றும் அதன்மீதான வட்டியை மென் கடனாக மாற்றுதல், அதனை 4 ஆண்டுகள் கழித்து 9 விழுக்காடு வட்டியுடன் திரும்பச் செலுத்துதல், ரூ.15 இலட்சம் வரை பெறப்படும் கடன்களுக்கு 4 விழுக்காடு வட்டி மானியம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது நலிவுற்ற தொழில்களுக்கு உயிர் நீராக அமையும்.

பிற்பகல் 1-45

அதேபோல், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குழும மேம்பாடு என்ற அடிப்படையில் கோவையில் கௌமா என்ற அமைப்புக்கு ரூ. 2.8 கோடி மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சேலத்தில் ஜவ்வரிசித் தொழில் குழும மேம்பாட்டிற்காக ரூ.4.98 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம். அதுபோல், தமிழகத்தில் விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, கழுகுமலை, குடியாத்தம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய 6 இடங்களில் தீப்பெட்டிக் குழும மேம்பாட்டுப் பணிகள் ரூ.9.36 கோடியில் செயல்படுத்தப்படும். SFURTI திட்டத்தின்கீழ் வேலூர், கடலூர், சேலம், பட்டுக்கோட்டை, பெரியகுளம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் கயிறு குழும மேம்பாட்டுப் பணிகளுக்காக தமிழக அரசு ரூ. 75 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் 60 குழுமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 10 குழுமங்களுக்கான முன்மொழிவுகளை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளோம்.

**உள்கட்டமைப்பு மேம்பாடு**

மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ.150 கோடியில் திருப்பூரில் பின்னலாடைக் குழும மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று முடிந்துவிட்டன. கோவையில் சமீபத்தில் ரூ.69 கோடியில் கோ-இந்தியா என்ற அமைப்பின்மூலம் மோட்டார் பவுண்ட்ரிக்கான குழும மேம்பாட்டுப் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. சென்னையில் வாகன உதிரிப் பாக மேம்பாட்டிற்காக ரூ.61 கோடியில் தொழிற்பேட்டை மேம்பாட்டுப் பணிகள் இப்போது நடந்து வருகின்றன. வேலூர், ஆம்பூரில் தோல் தொழில் குழும மேம்பாட்டுப் பணிகள் ரூ.67 கோடியில் நடைபெற்று வருகின்றன. மதுரையில் தானியம், பயறு, பருப்பு மற்றும் குழும மேம்பாட்டுப் பணிக்காக ரூ.39 கோடியில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ.386 கோடி ஆகும்.



**பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 25,022 நபர்களுக்கு ரூ.97.4 கோடி கடனாக வழங்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில் சாதனை அளவாக ரூ.133.13 கோடி கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில்தான் இந்தத் திட்டம், இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. அரசு அறிவித்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி நான் சொல்லத் தேவையில்லை என்று நினைத்தேன். ஆனாலும்கூட சில நண்பர்கள் பேசும்போது சொன்னார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு முடக்கிவிட்டது என்று சொன்னார்கள். ஆகவே, இதைச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ.1 கோடி அளவிற்கான வேளாண் சார் தொழில்கள் ஆரம்பிக்க அறிவித்தார்கள். ஆனால் நடந்தது என்னவென்றால், 385 ஊராட்சி ஒன்றியங்களில், 275 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. 103 ஊராட்சிகளில் மட்டுமே ரூ.1 கோடி முதலீட்டில் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியமாக ரூ.60 கோடி வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் காலத்தில் வெறும் ரூ.9 கோடி ரூபாய் மட்டுமே மானியமாக வழங்கப்பட்டது. நாங்கள் மீதியுள்ள மானியம் ரூ.7 கோடியை இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

**ஒப்பீடு**

1996-2001 வரை நடைபெற்ற ஐந்தாண்டு கால கழக ஆட்சியில் ரூ.137.83 கோடி ரூபாய் சிறு தொழில்களுக்கு மானியமாக வழங்கப்பட்டது. ஆனால், 2001-2006 வரை நடைபெற்ற ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் சிறு தொழில் மானியமாக வெறும் ரூ.56 கோடி மட்டுமே வழங்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுளுக்குள்ளாகவே இதுவரை ரூ.25.6 கோடியை மானியமாகப் பட்டுவாடா செய்துள்ளது. மேலும், இந்த 2008-2009 ஆம்

ஆண்டில் ரூ.47.5 கோடி சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்) இன்னும் பத்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்**

தொழில் வணிகத் துறையின்கீழ் தற்போது 360 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் 58,004 நபர்கள் உறுப்பினராக உள்ளனர். இச்சங்கங்கள் 2007-2008 ஆம் ஆண்டு ரூபாய் 432.87 கோடி அளவுக்கு விற்பனை சாதனை செய்துள்ளன. இதன்மூலம் 1 இலட்சத்து 2 ஆயிரத்து 151 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது, அவர்களுக்கு ரூபாய் 25.47 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-50

தேயிலைக் கூட்டுறவுச் சங்கம், நீலகிரி மாவட்டத்தில் 63 ஆயிரம் விவசாயிகள் 30 ஆயிரம் எக்டேரில் தேயிலை பயிரிட்டு வருகிறார்கள். இங்கு 15 தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இதிலே 20 ஆயிரம் விவசாயிகள் உறுப்பினராக உள்ளனர். 2007-2008 ஆம் ஆண்டில் 537 இலட்சம் கிலோ பச்சைத் தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு, 141 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்யப்பட்டு, 67.4 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. சராசரி ஒரு கிலோ 46.4 ரூபாய் என்ற அளவிலே விலை உள்ளது. தேயிலை விவசாயிகளுக்குக் கடந்த ஆண்டு நாங்கள் கிலோ ஒன்றிற்கு 7 ரூபாயாக பச்சைத் தேயிலைக்கு வழங்கினோம். இந்த ஆண்டு ரூ.8¼-லிருந்து ரூ.9¼ வரை வழங்குகிறோம். ஆனால், உங்கள் ஆட்சிலே 4 ரூபாயிலிருந்து 5 ரூபாய் வரை மட்டுமே வழங்கப்பட்டது, புள்ளிவிவரங்கள் இங்கே இருக்கின்றன.

சேலம், சேகோசர்வ் தொழில் கூட்டுறவு நிறுவனம், நண்பர் திரு. பாலாஜி அவர்கள் பேசும்போது, ஆண்டுக்கு 850 கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடைபெற்றதாகச் சொன்னார்கள். 5 ஆண்டுகளிலே 850 கோடி ரூபாய் வியாபாரம் செய்யப்பட்டது. ஆண்டிற்கு 200 கோடி ரூபாய்தான். புள்ளிவிவரம் இருக்கிறது. 2001-2002-லே 205 கோடி ரூபாய், 2002-2003-லே 195 கோடி ரூபாய். 2003-2004-லே ரூ.155 கோடி, 2004-2005-லே 175 கோடி ரூபாய், 2005-2006-லே 165 கோடி ரூபாய், ஆக 850 கோடி ரூபாய். ஆனால், தி.மு.க. ஆட்சியிலே 2006-2007-லே 189 கோடி ரூபாய். 2007-2008-லே 236.22 கோடி ரூபாய், ஆக சுமார்



ரூ.400 கோடி ரூபாய் அதிகமாகத்தான் உங்கள் ஆட்சியைவிட இந்த ஆட்சியில் starch-ஐ நாங்கள் வியாபாரம் செய்திருக்கிறோம் என்று புள்ளிவிவரத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாய்கோ வங்கி எனப்படும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி தமிழகத்தில் 25 மாவட்டங்களில் 33 கிளைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் புதியதாக 5 கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த வங்கி 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.316 கோடி வைப்புத் தொகை திரட்டி, ரூ.247.7 கோடியைக் கடனாக வழங்கியுள்ளது. இந்த வங்கி 3,177.92 கோடி அளவுக்கு வர்த்தகம் செய்து ஏறத்தாழ 2.19 கோடி ரூபாயை இலாபமாக ஈட்டியுள்ளது. இந்த வங்கிக்கு இப்போது இருக்கும் பழைய மந்தைவெளியிலே இந்த வங்கியுடைய தலைமையகம் அதிலே கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, வங்கியுடைய தலைமையகம் அதிலே விரைவிலே செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிட்கோ. 1970 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சியிலேதான் சிறு தொழில்களுக்காக இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. மொத்தம் இதுவரை 70-லிருந்து 78 தொழிற்பேட்டைகள்தான் உள்ளன. ஆனால் இதை 100 தொழிற்பேட்டைகளாக்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு, இன்றைக்கு அந்த 100 தொழிற்பேட்டைகளுக்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளிலே மட்டும் புதியதாக 20 தொழிற்பேட்டைகளுக்கு நிலம் தேர்வு செய்துள்ளோம். இன்னும் இரண்டு தொழிற்பேட்டைகளுக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதியதாக 4 இடங்களிலே தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்க இருக்கின்றோம். பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிறுவனம் 6.6 கோடி ரூபாயை இலாபமாக ஈட்டியிருக்கிறது.

டான்சி. கொஞ்சம் மோசமான subject. கடந்த ஆட்சி காலத்தில் டான்சி மூடப்படும் நிலைக்கு வந்ததை யாரும் மறக்க முடியாது. இந்த அரசின் சீரிய முயற்சியினால், இயங்காத தொழிற்கூடங்களை மீண்டும் இயக்கச் செய்து, டான்சியின் 23 தொழிற்கூடங்கள் தற்பொழுது மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) டான்சியில் வரலாறு காணாத அளவிற்கு 2007-2008-லே சாதனை புரிந்துள்ளது. இதனுடைய விற்பனை இன்று ஆண்டிற்கு 114.23 கோடி ரூபாய். இலாபம் மட்டும் இந்த ஆண்டு 6 கோடி ரூபாய்க்கு மேல் வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்வித் துறைக்குத் தேவையான

டேபிள், பெஞ்சுகள், மேசைகள் மற்றும் ஆசிரியர் இருக்கைகள், நமது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்பால் இந்தத் துறைக்கு 70 கோடி ரூபாய்க்கு வழங்கப்பட்டு, குறித்த காலத்தில், இன்றைய தேதியில் அந்த 70 கோடி ரூபாய்க்குண்டான அத்தனை பொருட்களும் அவர்களுக்கு despatch செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

அடுத்த ஆண்டு மீண்டும் எங்களுக்கு 50 கோடி ரூபாய் அளவிற்கு உங்களுடைய வேலையை டான்சி நிறுவனத்திற்குக் கொடுக்குமாறு இந்த நேரத்திலே வேண்டுகோளை விடுக்கின்றேன். (குறுக்கீடு) இப்போது டான்சி நிறுவனத்திற்கு வியாபாரம் செய்து கொண்டிருக்கிறேன். டான்சி நிறுவனம் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படத் தேவையான பணியாளர்களை மீண்டும் நியமனம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) உரையை முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான். (குறுக்கீடு)

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

என்றார் வள்ளுவர் பெருமான். அரியவற்றை, உரியவற்றைச் சொல்லுவோம். கூறியவற்றைக் கூறியபடிச் செய்வோம். வெல்வோம். அதுமட்டுமின்றி, நல்லவை எவர் மனதிலேனும் பட்டிருந்தால், அதைச் சொல்லாமல் விட்டிருந்தால், அவற்றையும் செய்து தருவோம் என்று கூறி, இந்த சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மானியக் கோரிக்கையை வைத்து உரை நிகழ்த்தும் பேரினை மீண்டும் எனக்குத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 215 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 9 பேர் இந்த மானியக் கோரிக்கையிலே உரையாற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய அரிய கருத்துகளையெல்லாம் இந்தத் துறை பரிவுடன் பரிசீலிக்கும். புதிய அறிவிப்புகளை நாங்கள் வெளியிட்டிருக்கின்றோம். அதோடு இன்னொன்று. (குறுக்கீடுகள்) புதிய அறிவிப்புகளோடு இன்னொரு செய்தியாக, கலைஞர் அவர்களுடைய மிகப் பெரிய அறிவிப்பான, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கைகள் எளிதாக



எல்லோருக்கும் விளங்கும்வண்ணம் கேள்வி-பதில் வடிவிலே 50 கேள்விகளை உருவாக்கி, அவற்றிற்கு அழகான பதில்களைத் தந்து, எல்லோரும் தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக ஒரு கையேடு ஒன்றையும் ஒவ்வொருவருடைய table-இலும் வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 215 வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். அவற்றைக் கடந்த இரண்டு நாட்களாகப் படித்து, கலந்து பேசி, முடிந்தவைகளுக்குத் தீர்வு காண இருக்கின்றோம்.

துறையின் புதிய அறிவிப்புகளைப்[@] புத்தகமாக அச்சிட்டு வழங்கியுள்ளோம். அதனை நான் இந்த மன்றத்திலே படித்ததாகக் கருதி அவைக் குறிப்பேட்டிலே பதிந்துகொள்ள வேண்டுமென்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, எனது மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறித்து இங்கே உரையாற்றினார். நம்முடைய முதலமைச்சர் கலைஞருடைய ஆட்சியில் முதன்முதலாக ஒரு கொள்கைக் குறிப்பு தயாரிக்கப்பட்டு, இதுவரையிலே இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு இன்று இந்த அரசு அதை நடைமுறைப்படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்கூட தொழில் தொடங்க வேண்டுமென்றால், 5 இலட்சம் ரூபாய் முதல் போட்டால், இந்த சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையிலே அவர்கள் தொழில் தொடங்கலாம். அவர்களுக்கு மானியங்கள் கிடைக்கும், மின்சாரச் சலுகை கிடைக்கும் என்கிற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர்கள் தொழில் தொடங்குவதற்கு முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

---

[@] 384 முதல் 387 வரையிலான பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் 1953-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னணித் தலைவர்கள் நெசவாளர்களுடைய துயர் துடைப்பதற்கு கைத்தறித் துணிகளைத் தோளில் சுமந்து, வீதி, வீதியாக விற்றார்கள் என்று மேற்கோள் காட்டி, எடுத்துக்காட்டாகப் பேசினார்கள். அவர்களுடைய வழியைப் பின்பற்றி நம்முடைய கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கதர் ஆடையையும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கைத்தறி ஆடையையும் அணிய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கட்டாயமாகக் கைத்தறி ஆடைதான் அணிய வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. அதைத்தான் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று துறைகள் சம்பந்தமாக நம்முடைய அமைச்சர் பெருமக்கள் பல்வேறு நல்ல அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள், வரவேற்கத்தக்கது. நான் ஒரே ஒரு செய்தியைக் கேட்க விரும்புவது, நம்முடைய நிதிநிலை அறிக்கையில், சாயக் கழிவு நீருக்கும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவு நீருக்கும் அமைக்கப்படுகிற பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நேன்றைய முன்தினம் தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவிப்புகளை வெளியிடுகிறபோது, தோல் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே அந்தப் பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு—மத்திய அரசு 60 சதவீதமும், மாநில அரசு 15 சதவீதமும், உற்பத்தியாளர்கள் 25 சதவீதமும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள். ஒரு வேளை வணிகத் தொழில் அல்லது சாயத் தொழில் சிறு தொழில் லிஸ்டில் வந்திருக்குமோ என்றுதான் அந்த அறிவிப்பில் இடம்பெறாதபோது, இன்று அது அறிவிக்கப்படும் என்றுகூட எதிர்பார்த்தேன். இன்றைய அறிவிப்பிலும் அது அறிவிக்கப்படவில்லை. ஆகவே, திருப்பூரில் ஒரு முக்கியமான பிரச்சினை—அமைச்சர் அவர்கள் நன்கு—எல்லோரும் அறிவார்கள். சாயத் தொழிற்சாலைக்கான பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் சற்றேறக்குறைய 700 கோடி ரூபாயிலே கடன் வாங்கி நடைபெற்று வருகிறது. வங்கிகளுக்கெல்லாம் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் தொழில் உடைமையாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, சாயத் தொழிற்சாலைக்கும் நம்முடைய தோல் தொழிற்சாலைக்கு வழங்கியதைப்போல மத்திய, மாநில அரசினுடைய மானியம் வழங்குவதற்கு அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையே நம்முடைய முதலமைச்சர் அவர்களாலே தயாரிக்கப்பட்டு, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் கலந்து விவாதித்து, தொழிற்துறைச் செயலாளரும் அதிலே கலந்துகொண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதுவாக இருந்தாலும் இந்த ஆட்சியாலே நிச்சயமாக அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. செந்தில் பாலாஜி, சொல்லுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் விலை உயர்வினால் கடந்த திங்கட்கிழமை முதல் கரூர், பல்லடம் போன்ற பகுதிகளிலே ஜவுளித் துறையைச் சேர்ந்தவர்கள் வேலைநிறுத்தம் செய்து கடையடைப்பு நடைபெற்று வருகிறது. வருகின்ற பதினாறாம் தேதி தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம், கடையடைப்பு போன்ற போராட்டங்களை ஜவுளித் துறையினர் அறிவித்துள்ளனர். மாண்புமிகு அமைச்சர் இது குறித்துப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் அரசு இதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவது என்பது மத்திய அரசினுடைய பணி. இருந்தாலும், நம்முடைய மாநில அரசினுடைய பணியும், அதை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதைக் கட்டுப்படுத்துகிற நிலையை இன்று மட்டுமல்ல, டாலர் எப்பொழுது வீழ்ச்சியடைந்ததோ, அன்றிலிருந்து இதனுடைய நடவடிக்கைகள் மத்திய அரசின்மூலமாகத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கண்டிப்பாக நூல் விலை கட்டுப்படுத்தப்படும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.84,04,05,000/-, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.79,78,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



## (ஆ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17-கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.573,49,59,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.30,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (இ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 18-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.63,67,15,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

பிற்பகல் 2-05

## 7. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் அளிக்கும் விருந்திற்குச் செல்லப் பேருந்து வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று (7-5-2008) இரவு 7-30 மணிக்கு, சென்னை, தாஜ் கோரமண்டல் ஓட்டலில் விருந்து அளிக்கவுள்ளார்கள். இது குறித்த அழைப்பிதழ்கள் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அனைவரும் அவ்விருந்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் விருந்தில் கலந்துகொள்வதற்கு வசதியாக, சட்டமன்றக் குடியிருப்பு வளாகம், 'D' Block-லிருந்து, இன்று மாலை 6-30 மணி, 6-40 மணி, 6-50 மணி மற்றும் 7-00 மணியளவில் நான்கு பேருந்துகள் புறப்படும் என்பதையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-5-2008) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

190. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

191. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

192. மானியக் கோரிக்கை எண் 17-கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

193. கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய செயல் முறைத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

194. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய "மக்கள் சாசனம்" 2008. (தமிழ், ஆங்கிலம்)

195. மானியக் கோரிக்கை எண் 18-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

196. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

197. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2008. (தமிழ், ஆங்கிலம்)

198. உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

199. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை. (2007-2008)

200. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை. (2007-2008)

201. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)





## இணைப்பு 1

*(173 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

நமது நாடு மற்றும் மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. இத்துறையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்கில், தனது சிறப்புமிக்க தொழிற் கொள்கைகளால் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உரிய பங்களித்து ஒரு வலுவான தொழில் அடித்தளம் அமைப்பதை ஊக்குவிப்பது நமது மாநிலத்தின் சமச்சீரான தொழிற் கொள்கையின் சிறப்பான அம்சங்களுள் ஒன்றாகும். குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் நாட்டிலுள்ள மொத்த தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் 95 சதவீதம் என்ற அளவையும், உற்பத்தியில் 40 சதவீதம், ஏற்றுமதியில் 30 சதவீதம் பங்கையும் வகிக்கிறது என்பதிலிருந்து இத்துறையின் முக்கியத்துவத்தை உணரலாம். தற்போது 5.57 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களின் மொத்த முதலீடு ரூ.19,36,406 இலட்சமாகும். அவை கிட்டத்தட்ட 40 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

### 2. தொழில் வணிகத் துறை ஆணையரகம் :

2.1. தொழில் வணிக ஆணையரகம் தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு முகமையாக விளங்குகிறது. இவ்வாணையரகம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2.2. தமிழகத்தில் சென்னையைத் தவிர 29 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்களும் சென்னையில் மண்டல இணை தொழில் இயக்குநர் அலுவலகமும் செயல்பட்டு வருகின்றன. தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைத் தொடங்குவதற்குரிய அனைத்து உதவிகளையும் அவை செய்து வருகின்றன. மாவட்ட தொழில்

மையங்கள் தொழில் முனைவோர்க்கு தொழில் பிரிவுகளைக் கண்டறிதல், தொழில் திட்டங்களைத் தயாரித்தல், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றுத் தருதல், தொழில் துவங்க அரசின் பல்வேறு துறை சார்ந்த ஒப்புதல் பெற்று அளித்தல் மற்றும் அரசின் மானியங்கள் மற்றும் ஊக்குவிப்புத் தொகைகளுக்கு ஒப்பளித்தல் மற்றும் பட்டுவாடா செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன.

## 3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், – 2006:

3.1. சிறு தொழில் நிறுவனங்களின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றும் முகமாகவும் இத்துறையின் வளர்ச்சியைக் கவனிக்கும் பொருட்டு வளர்ச்சிப் பணிகளுக்கு சட்ட வடிவம் கொடுக்கும் வகையிலும் உலக அளவில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் என்று அறியப்படும் இத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006-ஐ இயற்றியது. இச்சட்டம் சிறு தொழில் துறை என்ற பெயரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் என மாற்றி நிறுவன உட்பிரிவிற்கு உரிய முக்கியத்துவம் வழங்கியிருப்பதுடன் நடுத்தரத் தொழில் நிறுவனங்களையும் இப்பிரிவின்கீழ் கொண்டு வந்துள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் உற்பத்தி நிறுவனங்களை அவற்றின் இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் அடிப்படையில் (நிலம் மற்றும் கட்டட மதிப்பு நீங்கலாக) கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி உள்ளது:

| | |
|---|---|
| குறு நிறுவனங்கள் | ரூ.25 இலட்சம் வரை உள்ளவை |
| சிறு நிறுவனங்கள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை உள்ளவை |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை உள்ளவை |

என்றும், அதே போன்று சேவை நிறுவனங்களை அவற்றின் தளவாடங்களின் மீதான முதலீட்டின் அடிப்படையில் (நிலம் மற்றும் கட்டட மதிப்பு நீங்கலாக) கீழ்க்கண்டவாறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன:





| | |
|---|---|
| குறு நிறுவனங்கள் | ரூ.10 இலட்சம் வரையும் |
| சிறு நிறுவனங்கள் | ரூ.10 இலட்சத்திற்கு மேல் 2 கோடி வரையும் |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ.2 கோடிக்கு மேல் 5 கோடி வரையும் |

## 4. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை, 2008:

23-1-2008 அன்று சட்டசபையில் ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன பிரிவுகளுக்கான தனிப்பட்ட கொள்கையாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை-2008, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22-2-2008 அன்று வெளியிடப்பட்டது.

### 4.1. தொலைநோக்குப் பார்வை

- தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் போட்டியிடும் திறமையினை அதிகரிக்கச் செய்து அவற்றின் செயல் திறனை படிப்படியாக மேம்படுத்துதல்.
- மதிப்புக் கூடுதலை அதிகப்படுத்தவும், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்திடச் செய்யவும் வேளாண்சார் தொழில்களை ஊக்குவித்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10 விழுக்காடுக்கும் அதிகமாக உயர்த்த இலக்கு நிர்ணயம் செய்தல்.
- 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 10 இலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-ன் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:—

### 4.2. உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்

- மாநிலத்தில் முதன்முதலாக குறுந்தொழில் நிறுவனங்களுக்கு அடுக்குமாடித் தொழிற்பேட்டைகள் நிறுவுதல்.

[2008 மே 7

- தொழிற் கூடங்களுக்கு தாராள தளப்பரப்பளவு குறியீடு FSI 1.5 முதல் 1.75 வரையிலும் அடுக்குமாடி தொழிற் கூடங்களுக்கு 2.5 வரையிலும் நிர்ணயம் செய்தல்.

- இனிமேல் ஏற்படுத்தப்படும் சிப்காட் நிறுவனத்தின் அனைத்து தொழிற்பேட்டைகளிலும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிலத்தில் 20 விழுக்காடு வரையிலும், சிட்கோ தொழிற்பேட்டைகளில், குறுந்தொழில்களுக்கு நிலத்தில் 30 விழுக்காடு வரையிலும் ஒதுக்கீடு செய்தல்.

- மாநிலத்தில் முதன்முதலாக தனியார் மேம்படுத்தும் தொழிற்பேட்டைகளுக்கு 20 விழுக்காடு, அதிகபட்சம் ஒவ்வொரு தொழிற்பேட்டைக்கும் ரூ.1 கோடி உள் கட்டமைப்பு மானியம்.

- தொழிற்பேட்டைகளிலும் மற்றும் தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதிகளிலும், நிறுவப்படும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு முத்திரைக் கட்டணம் மற்றும் பத்திரப் பதிவுத் தொகையில் 50 சதவீதம் தள்ளுபடி.

### 4.3. மானியத் திட்டங்கள்

அ. மாநிலத்தில் எப்பகுதியிலும் நிறுவப்படும் குறுந்தொழில் (Micro) உற்பத்தி நிறுவனங்களுக்காக மட்டும் என கீழ்க்கண்ட மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

- தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- தொழில் முனைவோர் முறையேடு பகுதி 2-க்கு எண் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு 20 விழுக்காடுகள் குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்படும்.

- தொழில் முனைவோர் முறையேடு பகுதி 2-க்கு எண் ஒதுக்கீடு செய்யப்படும்போது உள்ள இயந்திர தளவாடங்கள்மீது செய்யப்பட்டிருக்கும் முதலீட்டின்மீது முதல் 6 ஆண்டுகளுக்கு செலுத்தப்படும் நிகர மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான 100 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.



2008 மே 7]

- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்காக அடமானம் வைக்கப்பட்ட (அல்லது) பிணையமாக வைக்கப்பட்ட ஆவணங்களை பதிவு செய்வதற்கான முத்திரைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

ஆ. தொழில்ரீதியாக பின்தங்கிய வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கும் மற்றும் மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் உற்பத்தி நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் மானிய திட்டங்கள்.

அரசால் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக 251 வட்டாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் அரசு மற்றும் அரசு முகமைகளான சிப்காட், சிட்கோ ஆகியவை உருவாக்கும் தொழிற்பேட்டைகளும் (சென்னை நகரின் மையப் பகுதியில் இருந்து 50 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் அமைந்துள்ள தொழிற்பேட்டைகள் தவிர்த்து) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக அங்கீகரிக்கப்பட்டு எல்லா குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கும் மற்றும் மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் நிறுவனங்களும் கீழ்க்கண்ட மானிய உதவித் திட்டங்களின்கீழ் பயன்பெற தகுதியுடையனவாகும்:

- தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் முதலீட்டு மானியமாக வழங்கப்படும்.

- உற்பத்தி தொடங்கிய 5 ஆண்டுகளில் மூன்று ஆண்டுகள், குறைந்தபட்சம் 25 வேலையாட்களை பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்கு அவற்றின் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- மகளிர், பட்டியலிடப்பட்ட இனம் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர் மற்றும் அரவாணிகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில் அவற்றின் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.2 இலட்சம், கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

[2008 மே 7

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு, அதற்கான சுற்றுப்புறத் தூய்மையினை காக்கும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சான்றளிப்பதன் அடிப்படையில் நிறுவப்பட்ட குறிப்பிட்ட, தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25 விழுக்காடு அதிகபட்சம் ரூ.3 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- தொழில் முனைவோர் முறையேடு பகுதி 2-க்கு எண் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு 20 விழுக்காடுகள் குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்படும்.

**இ. மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்**

- தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் 10 சிறப்பு வகை உற்பத்தி தொழில் பிரிவுகளான மின் மற்றும் மின்னணுப் பொருட்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள், வாகன உதிரிப் பாகங்கள், மருந்து மற்றும் மருந்துப் பொருட்கள், சூரிய சக்திப் பயன்பாட்டு உபகரணங்கள், ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள், மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் மற்றும் சிக்கன அடக்க விலை கட்டுமானப் பொருட்கள் மற்றும் ஆயத்த ஆடைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டு மதிப்பில் 15 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.30 இலட்சம் சிறப்பு மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

எனினும் மேலே 'ஆ'-வில் குறிப்பிடப்பட்டுள்ள மானியங்களைப் பெறுவதற்கு, தொழில் ரீதியில் பின்தங்கிய பகுதியில் அமைக்கப்படும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்கள் மட்டுமே தகுதியுடையனவாகும்.



2008 மே 7]

**4.4. தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பான உதவித் திட்டங்கள்**

- நிதி நிறுவனத்திடம் பெற்ற கடன் தொகையைக் கொண்டு திறன் மேம்பாடு மற்றும் நவீனப்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 விழுக்காடு, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 5 ஆண்டுகளில் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் பின்முனை வட்டி மானியம் வழங்கப்படும்.

- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் உரிமைக் காப்பு (கண்டறிதல் உரிமை) பதிவு விண்ணப்பத்திற்கான தொகையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் மற்றும் வர்த்தக குறியீடு பதிவுத் தொகையில் 50 சதவீதம் அல்லது ரூ.25,000 இதில் குறைவான தொகை எதுவோ அது உதவியாக அளிக்கப்படும்.

- தொழில் குழுமங்கள் உருவாக்குதல் மற்றும் சிறு கருவி மையம் ஆகியவற்றை பொதுவாகவும் மற்றும் கூட்டாண்மை முயற்சியில் நிறுவப்படும் நிறுவனங்களுக்கு அவற்றின் திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.1 கோடி சலுகை வழங்கப்படும்.

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் உற்பத்திப் பிரிவில் தூய்மையான சக்தி திறனுள்ள தகவல் தொழில்நுட்பம் தொடர்புடைய தொழில்நுட்பங்களை ஏற்படுத்த வசதி செய்து தருவதில் உதவுதல்.

- திறன்மிகு மையங்கள் மற்றும் தொழில்நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகங்கள் உருவாக்கி அதன்மூலம் நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு செய்ய ஒவ்வொரு தொழில்நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகம் / திறன்மிகு மையத்திற்கும் ரூ.50 இலட்சம் உதவுதல்.

**4.5. திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள்**

தொழில் தொடர்புடைய சங்கங்களால் ஏற்பாடு செய்யப்படும் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு திட்டங்களாகிய குறுகியகால பயிற்சி வகுப்புகள் நடத்த 50 விழுக்காடு பயிற்சிக் கட்டணம் திரும்ப வழங்கப்படும்.

[2008 மே 7

**4.6. சந்தை வாய்ப்பு உதவி:**

- தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998-ல் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு குறு மற்றும் சிறு தொழில்களுக்கான 15 விழுக்காடு விலை முன்னுரிமை அளித்தல்.
- மாநில அரசால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் அறிவிக்கைகளின்படி அறிவிக்கப்படும் இனங்களுக்கு கொள்முதல் முன்னுரிமை அளித்தல்.
- ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொள்வதற்கு அளிக்கும் முன்வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் நடத்தும் பொருட்காட்சிகளில் கலந்துகொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் 50 விழுக்காடு, அதிகபட்சமாக சென்னையில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நேர்வுக்கும் ரூ.5 இலட்சம், மாவட்டங்களில் பங்கேற்கும் ஒவ்வொரு நேர்வுக்கும் ரூ.1 இலட்சம் மற்றும் பிற மாநிலங்களில் பங்கேற்கும் ஒவ்வொரு நேர்வுக்கும் ரூ.5 இலட்சம் மானியம் அளிக்கப்படும்.
- பொதுவான பெயர் அல்லது பொது வணிக சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவளித்தல்.

**4.7. கட்டுப்பாடு நீக்கம் மற்றும் எளிதாக்குதல்**

அரசின் துறைகளிடமிருந்து சட்டப்படியான அனுமதி பெறுவதற்கு பொது விண்ணப்பப் படிவம் அறிமுகம்.

- அனுமதி பெறுவதற்கான சட்டப்படியான தேவைகளைப் பூர்த்தி செய்ய சுய சான்றொப்பம் வழங்குதல்.
- தொழில் துவங்க அனுமதி பெற தொழில் ஒற்றைச்சாளர குழு தீர்வு சட்டம் இயற்றுதல்.

**4.8. நிருவாகச் சீர்திருத்தம்**

- மாநிலத்தின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கொள்கைகளையும் திட்டங்களையும் மறு ஆய்வு செய்வதற்காகவும் பரிந்துரைப்பதற்காகவும் குறு, சிறு



2008 மே 7]

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான வாரியம் அமைத்தல்.

- கொள்கைகள் செயல்படுத்தப்படுதலை கண்காணிக்க ஊரகத் தொழில் துறை அமைச்சரின் தலைமையில் ஒரு அதிகாரம் பெற்ற குழு அமைத்தல்.
- மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தொழில் வணிகத் துறையின் நிர்வாக அமைப்பை உரிய முறையில் மாற்றியமைத்தல்.

**4.9. கொள்கை ஆதரவு**

**4.9.1. நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் புனரமைப்புக்கான கொள்கை**

முதல்முறையாக குறு, சிறு மற்றும் நடுத்தர நலிவடைந்த நிறுவனங்களைப் புனரமைப்பதற்கான கொள்கை உரிய உதவித் திட்டத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையானது நலிவுற்ற நிறுவனங்களை புனரமைப்பது தொடர்பான விரைவான பகுப்பாய்வு, வழங்கப்பட வேண்டிய நிவாரணம் பற்றிய பரிந்துரைகளை இந்திய ரிசர்வ் வங்கி அமைக்கும் மாநில அளவிலான நிறுவனங்களுக்கிடையிலான குழுவினால் வழங்கப்பட்டு (ஸ்லிக்), மாநில அளவிலான நிறுவனங்களுக்கு இடையிலான புனரமைப்புக் குழுவின் துணைக் குழுமூலம் தகுதிவாய்ந்த நிறுவனத்தைக் கண்டறிந்து கீழ்க்குறிப்பிட்ட உதவிகள் புனரமைப்பதற்கு உதவும்.

1. நிலுவை விற்பனை வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி மற்றும் இவற்றின் மேலுள்ள வட்டியினை 9 விழுக்காடு, வட்டியுடன் கூடிய நான்கு வருட மென் கடனாக மாற்றுதல்.
2. ரூ.15 இலட்சம் வரையிலான புனரமைப்பு நிதி / கடன்கள் மீதான வட்டிக்கு 2 வருடங்களுக்கு, 4 விழுக்காடு வட்டி மானியம் வழங்குதல்.
3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006-ன்கீழ் மைய அரசால் அறிவிக்கப்படவுள்ள தொழிலை விட்டு வெளியேறும் கொள்கையினை நடைமுறைப்படுத்துதல்.

[2008 மே 7

4. புனரமைப்பு காலத்தில் ஈவுத் தொகை மற்றும் இலாப பங்கிடலை ஒழுங்குபடுத்துதல்.

5. நலிவுற்றவை என அறிவிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அரசுடமை நிதி நிறுவனங்களின் கொள்கைகளுக்கு ஏற்ப ஒரு தவணைத் தீர்வுத் திட்டத்தை அமலாக்குதல்.

6. புனரமைப்புக்கு தகுதியில்லை எனக் கருதப்படும் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரி / மதிப்புக் கூட்டு வரியின்மீது நிலுவையிலுள்ள வட்டியைக் கணக்கிட்டு அவை அரசால் தள்ளுபடி செய்யப்பட பரிந்துரைத்தல்.

7. புனரமைப்பு உதவித் திட்டங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருப்பின் நிறுவனத்தின் மின் சக்தித் திறனை குறைக்க ஆணை வழங்குதல்.

நலிவுற்ற நிறுவனங்களின் பகுப்பாய்விற்காக ஏற்படும் செலவின் 75 சதவீதத் தொகையை ஏற்பதற்கும், புனரமைப்பு உதவியை நீட்டிப்பதற்கும் புனரமைப்பை நிர்வகிக்க ஆகும் செலவுத் தொகை வழங்குவதற்கும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ஆகும் நிர்வாகச் செலவிற்காகவும் ஆரம்பக் கட்டத்தில் ரூ.5 கோடிக்கான புனரமைப்பு நிதியம் ஏற்படுத்தப்படும். இச்சலுகைத் திட்டம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புப் பிரிவு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் துவக்கப்படும்.

### 4.9.2. உத்தேசித்துள்ள ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை

மாநிலத்தின் தொழில் பொருளாதார வளர்ச்சியில் ஏற்றுமதியின் மிக முக்கியப் பங்கினை கருத்திற்கொண்டு, புதிய தொழிற் கொள்கை, 2007 மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற் கொள்கை, 2008 ஆகியவற்றில் அறிவித்ததைப் போல் ஏற்றுமதி மேம்பாட்டிற்கான தனிக் கொள்கையை அரசு வகுக்க உள்ளது. அதற்கேற்ப தொழில் வணிக ஆணையரகம் மற்றும் அனைத்து மாவட்ட தொழில் மையங்களிலும் உள்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்படும். மேலும், நவீன கணினி பயன்படுத்தலுக்கான பயிற்சி, மின் ஆளுமை பயிற்சி, தொழில் நுட்ப மேம்பாடு, குழும மேம்பாடு, ஏற்றுமதிக்கான வழிமுறைகள், செயல்முறை மற்றும் மேம்பாடு போன்றவற்றில் இயக்குநரக மற்றும் மாவட்ட தொழில் மைய அலுவலர்களுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களின் போட்டியிடும் தன்மையை உயர்த்தவும் உலகளாவிய சந்தையில் அவர்களின் வளர்ச்சியை நிலைப்படுத்தவும் உதவும்.



2008 மே 7]

### 5. சிறு தொழில் துறை என்ற பெயரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை என பெயர் மாற்றம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பிரிவுக்கான ஒருங்கிணைந்த கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்கவும், இம்மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பற்றி எத்துறையில் கையாளப்படுகிறது என்பதை பொது மக்களுக்கு அடையாளம் காட்டுவதற்கும் சிறு தொழில் துறை என்ற பெயரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை என 22-2-2008 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 6. தொழில் முனைவோர் முறையேடு பதிவு செய்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006-ன்படி சிறு தொழில் பதிவு முறைக்குப் பதிலாக தொழில் முனைவோர் முறையேடு பதிதல் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களும் நடுத்தர சேவை நிறுவனங்களும் விரும்பினால் தொழில் முனைவோர் முறையேடு பதிவு செய்யலாம்; கட்டாயமல்ல. நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு இது கட்டாயமானது ஆகும். குறு மற்றும் சிறு தொழில் தொடங்க விருப்பம் உள்ள எவரும் தாமாக முன் வந்து தேவைப்படும் உரிய படிவத்திலான தொழில் முனைவோர் முறையேட்டை அந்தந்த மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரிடம் பதிவு செய்யலாம். சென்னையைப் பொறுத்தவரை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்யலாம்.

### 7. ஒற்றைச் சாளர முறையின்கீழ் வழிகாட்டுச் சேவைகள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் தகுதியுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், தீயணைப்புத் துறை, பொது சுகாதார துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய துறைகளிடமிருந்து பெற வேண்டிய சட்டபூர்வமான அனுமதிகளை விரைவில் பெற்றுத்தரும் ஒற்றைச் சாளர முகமைகளாக மாவட்டத் தொழில் மையங்கள் திகழ்கின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை

[2008 மே 7

2008-ல் அறிவிக்கப்பட்டுள்ளபடி, மாநிலம் மற்றும் மாவட்ட நிலைகளில் ஒற்றைச் சாளரக் குழுக்களை முறையான அமைப்பாக ஏற்படுத்தி, அனுமதி வழங்குதற்கும் மற்றும் அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படுவதற்கும் உரிய கால அளவினை நிர்ணயிக்கவும் ஒற்றைச் சாளர தீர்வுச் சட்டம் ஒன்றை அரசு இயற்றும்.

**8. பரிசோதனை, பயிற்சி மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்:**

**8.1. பரிசோதனைக் கூடங்கள்**

சிறு தொழில் நிறுவனங்களுக்கு சட்டபூர்வ தேவைகளின்படி மூலப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்ட பொருட்களைப் பரிசோதனை செய்வதில் உதவுவதற்காக இத்துறை பரிசோதனைக் கூடங்களை நடத்தி வருகிறது.

**8.2. மின் ஆய்வு மையங்கள்**

காக்களூரில் உள்ள மத்திய மின் ஆய்வுக் கூடம் மின் பொருட்கள்/ மின் சாதனங்களைப் பரிசோதிக்கும் வசதி வழங்குகிறது. சுமார் 160 மின் சாதனங்கள் மற்றும் புதிய மின் மற்றும் மின்னணுப் பொருட்களாகிய காம்பேக்ட் பிளோரோஸன்ட் பல்புகள், ஸ்மார்ட் கார்டு ரீடர் ஆட்டோமேடிக் பவர் சேவிங் டிவைஸ் போன்ற பொருட்களும் இச்சோதனை கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன. ஓசூரில் உள்ள பொது வசதி மையம், அப்பகுதியிலுள்ள மின் மற்றும் மின்னணு அலகுகளின் சாதனங்கள் உற்பத்திப் பொருட்களை மேம்பாடு செய்ய சோதனை செய்யும் வசதியை அளிக்கிறது. இவ்விரண்டு பரிசோதனைக் கூடங்களிலும் 6,517 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு ரூ.140.99 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**8.3. மின் மற்றும் மின்னணு தொழில் தகவல் மையம்**

இம்மையம் மின்சாரம் மற்றும் மின்னணு தொழில்களைத் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்குத் தேவையான அடிப்படைத் தகவல்கள் மற்றும் வழிமுறைகளை விரிவான முறையில் அளிக்கிறது. மேலும் இம்மையம் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களுக்கான திட்ட வரைவுகள் தயாரித்தல், சிறு மற்றும் பெரிய மின்னணு தொழிற்சாலைகள் பற்றிய மாநில அளவிலான தகவல் தொகுதி மற்றும் சிறு மின் தொழிற்சாலைகளின்



2008 மே 7]

தகவல் தொகுதி போன்றவை, தொழில் முனைவோர்கள், வாங்குவோர் மற்றும் விற்பனையாளர்களைத் தேர்ந்தெடுக்க உதவியாக தயாரித்து வழங்குகின்றது. தொழில் முனைவோரின் பயன்பாட்டுக்காக 1,400 புத்தகங்கள் மற்றும் 100 சஞ்சிகைகளைக் கொண்ட ஒரு தொழில்நுட்ப நூலகம் உள்ளது.

**8.4. தரக் கட்டுப்பாட்டு ஆணைகளை அமலாக்குதல்**

தொழில் வணிக இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தரக் கட்டுப்பாடு ஆணைகள் அமலாக்க மையம் 1981 ஆம் ஆண்டு வீட்டு மின் உபகரணங்கள் (தரக் கட்டுப்பாடு) ஆணை, 2003 ஆம் ஆண்டு மின்கம்பி, உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் துணைபொருட்கள் (தரக் கட்டுப்பாடு) ஆணை, ஆகியவற்றை அமலாக்கம் செய்கிறது. முதல் ஆணையை மீறுவது 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இரண்டாம் ஆணை குறிப்பிட்ட பொருள்களை இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவன முத்திரை இல்லாமல் தயாரிப்பது அல்லது விற்பனை செய்வது அல்லது விநியோகத்திற்காக சேமித்து வைப்பது ஆகியவற்றை தடை செய்கிறது. இவ்வாணையை மீறுவது இந்திய தரக் கட்டுப்பாடு நிறுவனச் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். மாவட்டங்களில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் இவ்வாணைகளை நடைமுறைப்படுத்த "உரிய அலுவலர்"களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னையைப் பொறுத்தவரை துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு) அந்த அதிகாரம் படைத்த அலுவலர் ஆவார்.

**8.5. பயிற்சி நிறுவனங்கள்**

தொழில் வணிகத் துறை, அரசு தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி, கருவிப் பொறியியல் நிறுவனம், திண்டுக்கல் மற்றும் பீங்கான் தொழில்நுட்ப நிறுவனம், விருத்தாச்சலம் ஆகியனவற்றை நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனங்கள் கருவி பொறியியல், குளிர்பதனிகள் மற்றும் பீங்கான் தொழில்நுட்பம் ஆகிய சிறப்புப் பிரிவுகளில் பயிற்சி அளிப்பதற்காக 3 ஆண்டு பட்டய வகுப்புகளை நடத்துகின்றன. சென்னை, கிண்டியிலுள்ள அறிவியல் கண்ணாடி பயிற்சி நிலையம் கண்ணாடி தயாரிப்பில் இரண்டு ஆண்டு சான்றிதழ் படிப்பு வழங்குகிறது.

[2008 மே 7

### 8.5. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்

போட்டிமிகுந்த உலகளாவிய சந்தையில் போட்டியிட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் மிகவும் இன்றியமையாதது. மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் பயிற்சி அளிப்பதுடன், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியும், அவர்களிடையே விழிப்புணர்வு முகாம்களை நடத்தியும் வருகிறது. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் 5,175 பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புப் பயனாளிகளுக்கு 2007-08-ல் பயிற்சி அளித்துள்ளது. மேலும், கல்லூரிகளில் இரண்டு தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பாரத பிரதமரின் சுய வேலைவாய்ப்பு பயிற்சி அளித்தல் திட்டத்தின் நிறைவேற்றம் குறித்த மாதிரி கணக்கெடுப்பினை 5 மாவட்டங்களில் நடத்தியும் உள்ளது:

## 9. அரசு தொழிற்பேட்டைகள் :

### 9.1. பீங்கான் தொழிற்பேட்டை

1964-லிருந்து 64 தொழிற்கூடங்களை உள்ளடக்கிய பீங்கான் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்பேட்டை ஒன்று விருத்தாச்சலத்தில் இயங்கிவருகின்றது. இங்குள்ள நிறுவனங்கள் குறைந்த மின்னழுத்த இன்சுலேட்டர்கள், குளியலறை மற்றும் கழிவறை சாதனங்கள், கலைப்பொருட்கள், உயர் வெப்பம் தாங்கக்கூடிய செங்கற்கள் மற்றும் இதர உயர் வெப்பம் தாங்கக்கூடிய பொருட்களைத் தயாரிக்கின்றன.

### 9.2. மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்

மின் மற்றும் மின்னணு தொழிற்சாலைகளுக்காக தமிழ்நாட்டில் எட்டு தொழிற்பேட்டைகளை அரசு அமைத்துள்ளது. இவற்றில் இரண்டு சென்னையிலும் (திருவான்மியூர் மற்றும் பெருங்குடி), திருவள்ளூர் (காக்களூர்), மதுரை (கப்பலூர்), சேலம் (சூரமங்கலம்), கோயம்புத்தூர் (நகரம்), கிருஷ்ணகிரி (ஓசூர்) மற்றும் திருச்சி (துவாக்குடி) ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் உள்ளன. இத்தொழிற்பேட்டைகளில் 515 மனைகளும், 140 தொழிற்கூடங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன.



2008 மே 7]

## 10. இத்துறையால் செயல்படுத்தப்படும் முதன்மையான திட்டங்கள் :

### 10.1. பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம்

1993 ஆம் ஆண்டு அக்டோபர் 2 முதல் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் இத்திட்டம் குறைந்த அளவு படித்த ஏழைகளுக்குச் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டின் இலக்கு 28,700 பயனாளிகள் ஆகும். இதில் 20,179 பயனாளிகளுக்கு வங்கிகளிடம் இருந்து கடன் ஒப்புதல் ஆணை ரூ.146.78 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது. 10,751 பயனாளிகளுக்கு ரூ.57.95 கோடி கடனுதவியாகப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

### 10.2. பின்முனை வட்டி மானியம்

தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம், தேசிய பங்கு மூலதன நிதித் திட்டம், ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் பெறுவதற்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின்மூலம் அறிவார்ந்த கண்டுபிடிப்புகளின் காப்புரிமை பதிவு செய்யும் திட்டம் மற்றும் கடன் உத்தரவாத நிதிக் குழுமத் திட்டம் போன்றவற்றிற்காக காலக் கடன் பெற்ற குறு மற்றும் சிறு உற்பத்தி நிறுவனங்களுக்கு 2003 ஆம் ஆண்டிலிருந்து பின்முனை வட்டி மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு இத்திட்டத்தினை மேலும் அதிக அளவிலான பயனாளிகளுக்கு பயனளிக்கும் வகையில் மாற்றியமைக்க அரசாணை எண் 60 சிறு தொழில் (வளர்ச்சி 2) துறை, நாள் 14-6-2007-ன்படி ஒரே அளவிலான 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்தை தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கலுக்காகக் காலக்கடன் பெற்ற நிறுவனங்களுக்கு வழங்குகிறது.

### 10.3. தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டமானது மத்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்தின்கீழ் வரும் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையால் பொது மற்றும் கூட்டாண்மை முறையில் அமைக்கப்படும் குழுமங்களின் தரமான அடிப்படைக் கட்டமைப்பை வழங்குவதற்காகச் செயல்படுத்தப்படுகிறது. திட்ட மதிப்பில் 75 விழுக்காடு வரை,

[2008 மே 7

அதிகபட்சமாக ரூ.50 கோடி வரை ஒவ்வொரு தொழில் குழுமத்திற்கும் உதவித் தொகையாக மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 25 விழுக்காட்டில் திட்ட மதிப்பில் 15 விழுக்காட்டிற்கு குறையாமல் பயனாளி தொழிலகங்களின் பங்களிப்பாகவும் எஞ்சிய தொகை அந்தந்த தொழில் குழுமம் / தொடர்புடையவர்களின் பங்களிப்பாகவும் இருக்கும். இத்திட்டம் இந்திய நிறுவனங்கள் சட்டம் மற்றும் கூட்டாண்மை சட்டங்களின்கீழ் அமைக்கப்படும் சிறப்பு முகமைகள்மூலம் செயல்படுத்தப்படும். அந்த சிறப்பு முகமைகள் சம்பந்தப்பட்ட தொழில் தொடர்புடைய சங்கங்களால் தொடங்கப்படும். கீழ்க்காணும் 5 குழும செயற்குறிப்புகள் மைய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

1. திருப்பூர் பின்னலாடை குழுமம், திருப்பூர்
2. தானியம், பயறு, பருப்பு மற்றும் இழைகள் அரைத்தல் குழுமம், மதுரை
3. வாகன உதிரிபாகங்கள் குழுமம், சென்னை
4. தோல் தொழில் குழுமம், ஆம்பூர்
5. பம்ப் மோட்டார் மற்றும் பவுண்டரி குழுமம், கோயம்புத்தூர்

மேற்கூறப்பட்ட தொழில் கட்டமைப்பு பணிகளான சாலை, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீரகற்று திட்டம், கழிவு நீர் சுத்திகரிக்கும் திட்டம், திடக்கழிவு, தகவல் தொழில் நுட்பம் மற்றும் மேம்பாட்டுத் திட்டம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம், பொது வசதி மையம், சந்தைப்படுத்துதலுக்கான கட்டமைப்பு மேலும் பல வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு ரூ.361.69 கோடியில் மத்திய அரசின் பங்காக ரூ.191.23 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் மொத்தம் 16,370 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்றுள்ளன. இவற்றில் பம்ப் மோட்டார் மற்றும் பவுண்டரி குழுமம், கோயம்புத்தூர் ரூ.4,706 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு 5-4-2008 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மற்ற திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. அவை விரைவில் முடிக்கப்படும்.



2008 மே 7]

**10.4. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் குழும மேம்பாட்டுத் திட்டம் (MSECDP) (முன்னாள் சிறு தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் (SICDP)**

இத்திட்டம் மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. மைய அரசின் உதவி ஒவ்வொரு திட்டத்திற்கும் அதன் திட்ட மதிப்பீட்டில் 80 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.10 கோடி ஆகும். நிலையான சொத்துக்கள் வாங்கப்படாமலும், நிறுவப்படாமலும் இருக்கும், திறனாய்வு நடவடிக்கைகளுக்கான மென் செயல்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் உள்ளடக்கியதாகும் (soft activities).

ரூ. 288.20 இலட்சம் மதிப்பீட்டில் வெட் கிரைண்டர் குழுமம் ஒன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைக்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், மொத்த திட்ட மதிப்பீடு ரூ.498 இலட்சத்தில் சாகோ மற்றும் ஸ்டார்ச் தொழில் குழுமம் அமைப்பதற்கு சேலம் மற்றும் நாமக்கல் மண்டலத்தில் மைய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோல் கையினால் செய்யப்படும் தீப்பெட்டி தொழில் குழுமத்திற்கு தமிழ்நாட்டில் 6 இடங்களில் ரூ. 936 இலட்சம் (6 x 156 இலட்சம்) மொத்த திட்ட மதிப்பீட்டில் பொது வசதி மையங்கள் அமைக்க மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைக்க இதுவரை 60 குழுமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதில் 15 குழுமங்கள், 2007-08-ல் தமிழகத்தில் பகுப்பு ஆய்வு மேற்கொள்ள மைய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## 11. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள் :

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006 அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வசதிக்காக குழுக்கள் அமைத்துள்ளது. இக்குழு இம்மாநிலத்திலுள்ள 67 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் காலதாமத பணப் பட்டுவாடா நேர்வுகளில் நான்கு விவாதங்கள் நடத்தி 14 இனங்கள்மீது சுமுகமான தீர்வு மேற்கொள்ளப்பட்டு ரூ.59.48 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

[2008 மே 7

**12. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கணக்கெடுப்பு :**

நான்காவது அனைத்திந்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கணக்கெடுக்கும் பணி (All India Census) 2008-09 ஆம் ஆண்டில் மத்திய அரசின் நிதியுதவியுடன் எடுக்கப்படும்.

**13. தொழிற்கூட்டுறவு**

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் பதிவாளர் ஆவார். இத்துறையின்கீழ் 360 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 197 சங்கங்கள் இலாபம் ஈட்டி வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் இத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 432.87 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து சாதனை படைத்துள்ளன.

பொருளாதார நிலையில் நலிவடைந்த பிரிவினர், ஊரக கைவினைஞர் மற்றும் தொழிலாளர்களுக்குப் பயனுள்ள வகையில் வேலைவாய்ப்பு அளிப்பதில் தொழிற்கூட்டுறவு முதன்மை வகிக்கிறது. மேலும், தேயிலை மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு அவர்களுடைய விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் உதவி வருகிறது. தவிர, சிறு தொழில் முனைவோருக்குத் தொழிற்கூடங்கள், மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளை நல்கி தொழில் நடத்தவும் உதவியளிக்கப்படுகிறது. இதுபோன்ற தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், தேயிலை, சவ்வரிசி, தீப்பெட்டி, கயிறு, பாலிதீன், கைவினைப் பொருட்கள் உற்பத்தி, தையற் தொழில், ஆட்டோ சேவை, வங்கி சேவை மற்றும் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் முதலான முக்கிய தொழில்களுக்காகவும் அமைக்கப்பட்டு உள்ளன. இடைக்கால நடவடிக்கையாக, தற்போது இலாபகரமாக இயங்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் வலுப்படுத்தவும், நட்டத்தில் இயங்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களை இலாபகரமாக இயக்குவதற்கும் தேவையான பகுப்பாய்வுப் பணியை ஊரக மேலாண்மை பயிற்சி நிலையம், ஆனந்த் என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, ஆய்வு முடிக்கப்பட்டு, மேற்படி ஆய்வு அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.



2008 மே 7]

**13.1. தேயிலைப் பிரிவு :**

**13.1.1. தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்கள்**

நீலகிரி மாவட்டத்திலுள்ள 17 தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இதில் 15 தேயிலைத் தூள் உற்பத்திச் சங்கங்களாகவும், இரண்டு சேவை சங்கங்களாகவும் செயல்படுகின்றன.

**13.1.2. தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள்**

நீலகிரி மாவட்டத்தில் 20,000 சிறு தேயிலை விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 15 தேயிலைத் தொழிற்கூட்டுறவு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில், இத்தொழிற்சாலைகள் 537.34 இலட்சம் கிலோ பசுந்தேயிலையை சிறு தேயிலை விவசாயிகள் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்து, ரூ. 6744.25 இலட்சம் மதிப்புடைய 141.04 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்துள்ளன.

**13.1.3. இண்ட்கோசர்வ்**

1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு லிமிடெட் (இண்ட்கோசர்வ்) இந்தியாவின் மிகப்பெரிய தேயிலை விற்பனைக் கூட்டுறவு அமைப்பாகத் திகழ்கிறது. இந்நிறுவனம் "ஊட்டி டீ" என்னும் பெயரில் தேயிலைத் தூள் கலவை செய்து பொது விநியோக முறையின்கீழ் கூட்டுறவு நியாயவிலை அங்காடிகள் மற்றும் கூட்டுறவு மொத்தப் பண்டகசாலைகள்மூலம் விற்பனை செய்து வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில் 89,814 மெட்ரிக் டன் பச்சைத் தேயிலை விவசாயிகளிடம் கொள்முதல் செய்து, ரூ. 2489.87 இலட்சம் மதிப்புடைய 3,045 மெட்ரிக் டன் ஊட்டி தேயிலையை விற்பனை செய்துள்ளது. இந்நிறுவனம் இவ்வாண்டில் ரூ. 2577.23 இலட்சத்திற்கு மொத்த விற்பனை செய்து ரூ. 473.43 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

[2008 மே 7

**13.1.4. தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் (டீசெர்வ்)**

நீலகிரி மாவட்டம், குன்னூரில் 28-8-2002 அன்று டீசெர்வ் என்னும் பெயரில் அமைக்கப்பட்ட தேயிலை மின்னணு ஏல விற்பனை மையம் ஒளிவுமறைவற்ற தேயிலை ஏலம் நடைபெறுவதையும், தேயிலைத் தொழிற்சாலைகளின் தேயிலைத் தூளுக்கு நியாயவிலை கிடைப்பதையும் உறுதி செய்கிறது. டீசெர்வ் ஏல மையத்தின்மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலைத் தூளுக்கு மதிப்புக் கூட்டு வரியில் 1 சதவீதம் சலுகை தமிழக அரசு வழங்கியுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் இச்சங்கம் தேயிலை ஏலத்தின் மூலம் ரூ. 5727.86 இலட்சம் மதிப்புடைய 13,343 மெட்ரிக் டன் தேயிலைத் தூளை விற்பனை செய்து ரூ.0.52 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

**13.1.5. தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளைச் சரிவிலிருந்து மீட்டு மேம்படுத்தும் திட்டம்**

தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் இழப்பு ஏற்படுவதற்கான காரணங்களையும், தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்களின் குறைந்த உற்பத்தித் திறன் மற்றும் அதிக உற்பத்தி செலவிற்கான காரணங்களைக் கண்டறிந்து ஆய்வு செய்யவும், உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளின் தரம் உயர்த்துதல், தேயிலைத் தூள் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை ஆராய்தல், திறமையான நிதி நிர்வாகத்தை ஏற்படுத்துதல், இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் சந்தை வாய்ப்பை அதிகரித்தல், தொழிற்சாலைகளின் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான பகுப்பாய்வு செய்யும் பணி பெங்களூரிலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நிறுவனம் தமது பகுப்பாய்வு அறிக்கையில், தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், டீசெர்வ் மற்றும் இண்ட்கோசர்வ் நிறுவனங்களின் சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும் தகுந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளது. இவ்வறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகள் விரைவில் பரிசீலனை செய்யப்பட்டு, தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக விரைவில் செயல்படுத்தப்படவுள்ளன.



2008 மே 7]

**13.2. கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்**

மாநிலத்தில் தற்போது 77 கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், 10,737 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங்கங்களின் மொத்த பங்கு மூலதனம் ரூ.273.33 இலட்சம் ஆகும். இதில் அரசின் பங்கு மூலதனம் ரூ.217.73 இலட்சமும் அடங்கும். 2007-08 ஆம் ஆண்டில் ரூ.9.96 கோடி மதிப்புள்ள கயிறுப் பொருட்களைக் கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

**13.3. செங்கல் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாட்டில் ஏழை ஆதி திராவிடர் செங்கல் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடன், தற்போது ஏழு செங்கல் தொழிலாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் 1,202 உறுப்பினர்கள் பயன்பெறுகின்றனர். அரசு பங்கு மூலதனம் ரூ2.25 இலட்சம் உள்பட, இச்சங்கங்களின் மொத்த பங்கு மூலதனம் ரூ.8.08 இலட்சம் ஆகும்.

**13.4. பாலித்தீன் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்**

மாநிலம் முழுவதும் 12 பாலித்தீன் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் 924 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களுக்கு இலாபகரமான தொடர் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன. இச்சங்கங்கள் பாலித்தீன் பைகளை உற்பத்தி செய்து, வனத் துறை மற்றும் வேளாண்மைத் துறைகளுக்கு விநியோகித்து வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் அனைத்து பாலித்தீன் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களும் ரூ.283.26 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளன.

**13.5. சேகோசர்வ்**

சேலம் மரவள்ளிக்கிழங்குமாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவைத் தொழிற்கூட்டுறவுச் சங்கம் (சேகோசர்வ்) மிகவும் வெற்றிகரமாகச் செயல்படும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இச்சங்கம் தொடங்கப்பட்ட பிறகு, சிறு தொழில் பிரிவைச் சேர்ந்த மரவள்ளிக்கிழங்குமாவு மற்றும் சவ்வரிசி தயாரிக்கும் உற்பத்தியாளர்கள், தங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை பெறமுடிகிறது. 2007-08 ஆம் ஆண்டில் இச்சங்கத்தின் மொத்த விற்பனை ரூ.236.22 கோடியாகும். அதன் உத்தேச நிகர இலாபம் ரூ.1.95 கோடியாகும்.

[2008 மே 7

உறுப்பினர்களின் உற்பத்தி அலகுகளை நவீனப்படுத்த புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், உயர்அளவாக ஒரு நிறுவனத்திற்கு ரூ.4.00 இலட்சம் வரை மானியமாக சேகோசர்வ் வழங்கும். இதில் 50 விழுக்காடான உயர் அளவு ரூ.2.00 இலட்சத்தினை மாநில அரசு சேகோசர்விற்கு ஈடுசெய்யும். இத்திட்டத்திற்கு அரசு வழங்கிய மானியத் தொகையான ரூ.50 இலட்சம் மரவள்ளிக்கிழங்கு மற்றும் சவ்வரிசி உற்பத்தி செய்யும் 54 பயனாளிகளுக்கு முழுவதும் வழங்கப்பட்டுள்ளது.

**13.5.1. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள்—குழும வளர்ச்சித் திட்டம் சேகோ மற்றும் ஸ்டார்ச் தொழில் வளர்ச்சிக்கானக் குழுமம்**

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில், சேகோ மற்றும் ஸ்டார்ச் தொழில் குழுமங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ரூ.498 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு விரிவான திட்ட அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சேகோசர்வ் மூலம் செயல்படுத்தப்படும் மேற்படி திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ.120 இலட்சம் பொது வசதி மையத்தை நிறுவவும், ரூ.10 இலட்சம் மென் தலையீடுகளுக்காகவும் நிதி உதவி அளிக்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பெருமளவு துவக்க கட்டச் செயல்பாட்டு முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், ஒப்பளிக்கப்பட்ட எஞ்சிய நிதியை விடுவிக்குமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**13.6. தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி**

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதற்காக, இத்துறை தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கியை 1961-ல் தொடங்கியது. இவ்வங்கியை நபார்டு மறுநிதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கிமூலம் கடன் வசதி வழங்கும் நிறுவனமாக இந்திய ரிசர்வ் வங்கி அங்கீகரித்துள்ளது. தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதைத் தவிர, சிறு மற்றும் குறுந் தொழில்களுக்குக் கடன் வசதி அளிப்பதுடன், பொது மக்களுக்கு நகைக் கடன், வீடு அடமானக் கடன், ஊதியம் பெறும் பணியாளர்களுக்குத் தனி நபர்க் கடன், சிறு வணிகர் கடன் போன்ற பல்வகைக் கடன்களையும் வழங்கி வருகிறது. இந்த வங்கி இம்மாநிலத்தில் தற்போது 33 கிளைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் இவ்வங்கி ரூ.1.64 கோடி இலாபம் ஈட்டி உள்ளது.



2008 மே 7]

**13.7. கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்**

இத்துறை 11 கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. இத்தொழிற்பேட்டைகள் சென்னை, கோயம்புத்தூர், சேலம், சிவகாசி, தூத்துக்குடி, மதுரை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இவற்றில் 9 தொழிற்பேட்டைகள் தற்போது இயங்கி வருகின்றன. இரு தொழிற்பேட்டைகள் (அறிஞர் அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டை, கோயம்புத்தூர் மற்றும் பிரியதர்சினி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தென்காசி) செயல்பாட்டிற்கான அமலாக்கத்தில் உள்ளன. மேம்படுத்தப்பட்ட மனைகள், தொழிற்கூடங்கள் வழங்குதல் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளை சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது இத்தொழிற்பேட்டைகளின் முக்கிய நோக்கம் ஆகும். இக்கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளில் மொத்தம் 2,204 உறுப்பினர்கள்/அலகுகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**13.8. ஒப்பந்தத் தொழிலாளர் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்**

தொழில் வணிகத் துறையில் 31 ஒப்பந்தத் தொழிலாளர் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 7 சங்கங்கள் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் (எம்ஆர்எல்), நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் (என்எல்சி), பாரத மிகுமின் நிறுவனம் (பெல்) உருக்கு ஆணையம் லிமிடெட் (செயில்) மற்றும் கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகிய பொது நிறுவனங்களில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் நலனுக்காகப் பதிவு செய்யப்பட்டவை ஆகும். மீதமுள்ள 24 சங்கங்கள் அமைப்புசாரா துறையில் பணிபுரியும் தொழில்நுட்பம் மற்றும் பகுதி தொழில் நுட்பம் உடைய தச்சர், பிளம்பர், மின் கம்பியர் ஆகியோர் நலனுக்காக அமைக்கப்பட்டவை. 2006-07 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டம் மற்றும் சட்டமன்றத்தில் 2007-08 ஆம் ஆண்டின் அறிவிப்புகளின் அடிப்படையில் துவக்கப்பட்ட 20 ஒப்பந்தத் தொழிலாளர் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சங்கம் ஒன்றுக்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.20.00 இலட்சம் அரசு பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது.

**13.9. சென்னை தொழிற்கூட்டுறவுப் பகுப்பாய்வுக் கூடம் (மைக்கால்), சென்னை**

சென்னை தொழிற்கூட்டுறவுப் பகுப்பாய்வுக் கூடம் (மைக்கால்), மருந்துகள் உற்பத்தி செய்யும் உறுப்பினர் அலகுகளுக்கு அவர்கள் தயாரிக்கும் மருந்துகளின் மாதிரிகள் மற்றும் மருந்துகளுக்கான மூலப்

[2008 மே 7

பொருட்களைப் பரிசோதித்து நிர்ணயிக்கப்பட்ட தரம் உடையதா என்பதற்குத் தரச் சான்றிதழ்கள் வழங்கி வருகிறது. இச்சங்கம் 2007-08 ஆம் ஆண்டில் ரூ.43.75 இலட்சம் சேவை கட்டணம் ஈட்டியுள்ளது.

**13.10. இருளர், பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவுச் சங்கம்**

இச்சங்கம் 1979 ஆம் ஆண்டு 345 உறுப்பினர்களுடன் ரூ.11.03 இலட்சம் பங்கு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 232 உறுப்பினர்கள் பாம்பு பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 2007-08 ஆம் ஆண்டில் இச்சங்கம் ரூ.135.38 இலட்சம் விற்பனையில் ரூ.55.84 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

**13.11. இதர தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்**

இதர பல்வேறு வணிகங்களில் ஈடுபட்டுள்ள 168 பதிவு செய்யப்பட்ட பல்வேறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையில் செயல்படுகின்றன. இவற்றுள் ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்கள், அச்சகக் கூட்டுறவுச் சங்கங்கள், தையற் கூட்டுறவுச் சங்கங்கள், பொறியியல் கூட்டுறவுச் சங்கங்கள், நிலக்கரி வினியோக சேவை கூட்டுறவுச் சங்கங்கள், தோல் பதனிடுவோர் சேவை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறப்பு முறை செயல்பாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் முதலியன குறிப்பிடத் தகுந்தவையாகும்.

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாட்டில் சிறு மற்றும் குறுந்தொழில்களை வளர்க்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

**2. சிட்கோவின் முக்கியச் செயல்பாடுகள்:**

1. தொழிற்பேட்டைகளை நிறுவுதல் 2. மூலப்பொருட்கள் விநியோகித்தல் மற்றும் 3. சந்தைப்படுத்துதலில் உதவியளித்தல் ஆகியவை சிட்கோவின் முக்கிய செயல்பாடுகளாகும்.

**2.1. தொழிற்பேட்டைகள் அமைத்தல்**

சிட்கோவின் முக்கியச் செயல்பாடுகளில் சாலைகள், சாலை விளக்குகள், தண்ணீர் விநியோகம், மழைநீர் வடிகால் வசதி, கால்வாய்கள் ஆகிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய



2008 மே 7]

தொழிற்பேட்டைகளை உருவாக்குவதாகும். சிட்கோ நிறுவனம் தொழிற்பேட்டைகளில் மனைகளை மேம்படுத்துவதுடன், பல்வேறு அளவுகளில் தொழிற்கூடங்களை அவற்றைத் தவணை முறையிலும், முழுப்பணம் செலுத்தி, ஒட்டுமொத்த விற்பனை என்ற முறையிலும் ஒதுக்கீடு செய்கிறது. இந்நிறுவனம் 43 தொழிற்பேட்டைகளை உருவாக்கி உள்ளது. அரசின் 35 தொழிற்பேட்டைகளை முகமை அடிப்படையில் பராமரித்து வருகிறது.

**2.2. மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் விற்பனை**

2007-08 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் 262 மனைகள் மற்றும் 15 தொழிற்கூடங்களை விற்பனை செய்துள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் 746 மனைகளை பல தொழிற்பேட்டைகளில் மேம்படுத்தவும், 856 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளது.

**3. தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் வலுப்படுத்துதல் :**

மைய அரசு நிதி உதவி, தமிழக அரசு உதவி மற்றும் தனது சொந்த நிதியைக் கொண்டு இந்நிறுவனம் தற்போதுள்ள தொழிற்பேட்டைகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது:

2008-09 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் 19 தொழிற்பேட்டைகளை மேம்படுத்த சிட்கோ திட்டமிட்டுள்ளது:—

1. கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்
2. விச்சூர், திருவள்ளூர் மாவட்டம்
3. திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்
4. ஆலத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம்
5. மேட்டூர், சேலம் மாவட்டம்
6. கணபதிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்
7. கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்
8. உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்
9. காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்

[2008 மே 7

10. முகுந்தராயபுரம், வேலூர் மாவட்டம்

11. சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்

12. ஆத்தூர், கரூர் மாவட்டம்

13. கும்மிடிபூண்டி, திருவள்ளூர் மாவட்டம்

14. ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்

15. காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்

16. வத்தலகுண்டு, மதுரை மாவட்டம்

17. ஆர்.கே. பேட், திருவள்ளூர் மாவட்டம்

18. மார்த்தாண்டம், கன்னியாகுமரி மாவட்டம்

19. குடிமங்கலம், கோயம்புத்தூர் மாவட்டம்

**3.1. குறு, சிறு நிறுவனங்கள்–குழும வளர்ச்சித் திட்டம் (பழைய ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்)**

3.1.1. வேலூர் மாவட்டத்திலுள்ள முகுந்தராயபுரம் தொழிற்பேட்டையை மேம்படுத்துவதற்கு மத்திய அரசிடம் ஒப்பளிப்பு பெறுவதற்கான திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

3.1.2. மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆலத்தூர், திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி, சேலம் மாவட்டத்தில் மேட்டூர், திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூர், தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி ஆகிய ஊர்களில் அமைந்துள்ள ஐந்து தொழிற் பேட்டைகளை ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.816.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகள் 2008-09 ஆம் ஆண்டில் மைய அரசிற்கு அனுப்பப்படவுள்ளன.

3.1.3. கிண்டி தொழிற்பேட்டையில் சுமார் ரூ.2225.70 இலட்சம் மதிப்பில் உட்கட்டமைப்பு மேம்பாடுகளுக்காகக் கிண்டி தொழிற்பேட்டை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (M/s. GIEIUC) என்ற சிறப்பு நோக்க நிறுவனம் உருவாக்கப்பட்டு, அதன்மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிண்டி தொழிற்பேட்டையில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள் செப்டம்பர் 2008-க்குள் முடிவடையும்.



2008 மே 7]

3.1.4. மாநில அரசு உதவியுடன், மதுரை மாவட்டம் கப்பலூரில் இரண்டாவது கட்டப் பணிகள், விருதுநகர் மற்றும் கோவை மாவட்டம், குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மைய அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசு இணை மானியமாக ரூ.149.83 இலட்சம் வழங்கியுள்ளது. மேம்பாட்டுப் பணிகள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன.

**3.2. மத்திய அரசின் கூடுதல் உதவித் திட்டம்**

மத்திய அரசின் கூடுதல் உதவித் திட்டத்தின்கீழ் பேட்டை - திருநெல்வேலி மாவட்டம், இராணிப்பேட்டை - வேலூர் மாவட்டம் ஆகிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இராணிப்பேட்டை மற்றும் பேட்டை தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளன. கப்பலூர் தொழிற்பேட்டையில் முதல் கட்ட மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டு செப்டம்பர் 2008-க்குள் முடிக்கப்படும்.

**3.3. தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு பணிகள் சுமார் ரூ.61.10 கோடி திருத்திய திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட மேம்பாட்டுப் பணிகள், சென்னை வாகன உதிரி பாகங்கள் கட்டமைப்பு மேம்படுத்தும் நிறுவனம் என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்க நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு, அனைத்துப் பணிகளும் ஜூன் 2008-ல் முடிவடையும்.

**3.4. மாநில அரசு உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள பணிகள்.**

தருமபுரி, தேனி மற்றும் அரியமங்கலம் (திருச்சி) ஆகிய இடங்களில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளின் மேம்பாட்டிற்கான பகுதித் தொகையாக ரூபாய் 25 இலட்சம் 2007-08 ஆம் ஆண்டில் மானியமாக அரசு வழங்கியுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பேட்டைகளின் மேம்பாட்டுப் பணிகள் ரூ.114.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் விரைவில் முடிவடையும்.

[2008 மே 7

### 3.5. சிட்கோவின் சொந்த நிதி ஆதாரத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்

சிட்கோ, கீழே குறிப்பிடப்பட்ட தொழிற்பேட்டைகளை ரூ.151.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது:—

1. காட்பாடி, வேலூர் மாவட்டம்
2. திருவண்ணாமலை
3. கடலூரர்
4. பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்
5. மாத்தூர், புதுக்கோட்டை மாவட்டம்
6. கோணம், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும்
7. வடலூர், கடலூர் மாவட்டம்

இத்தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிவடையும்.

### 4. புதிய தொழிற்பேட்டைகள் :

4.1. 2006-07 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் திருச்சி மாவட்டத்தில் வாழவந்தான்கோட்டையில் ரூ.113.50 இலட்சம் திட்டச் செலவில் 83.55 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாவது கட்டமாக புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு வளர்ச்சிப் பணிகள் மேற் கொண்டது. அந்தப் பணிகள் டிசம்பர் 2007-ல் முடிவடைந்துவிட்டது.

4.1.2. மதுரை மாவட்டத்தில், கப்பலூரில் பெண்களுக்கானத் தொழிற்பூங்கா, நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை மற்றும் வேலூர் மாவட்டத்தில், விண்ணமங்கலம் ஆகிய இடங்களில் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்க வளர்ச்சிப் பணிகள் சம்பந்தப்பட்ட தொழிற்பேட்டைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்பணிகள் 2008 அக்டோபர் மாதம் முடிவடையும்.

4.1.3. தேனியில் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்காக, அரசுப் புறம்போக்கு நிலம் இல்லாததால், நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.



2008 மே 7]

5.1. 2007-08 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் புதிய தொழிற்பேட்டைகளை இந்நிறுவனம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது:

5.1.1. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள போளுப்பள்ளி, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள எலம்பலூர், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர், திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், ஆசனூர் ஆகியவற்றில் இரண்டாம் கட்டப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

5.1.2. திருவாரூர் மாவட்டம், வைப்பூரில் தனியார் மற்றும் அரசிற்குச் சொந்தமான 65.22 ஏக்கர் நிலங்கள் தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலங்களைக் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்பொழுது தெரிவு செய்யப்பட்டுள்ள நிலத்தில் ரூ.370.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த நிலங்கள் சிட்கோ வசம் பெறப்பட்டவுடன் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

5.1.3 எனவே 2006-07 மற்றும் 2007-08 ஆண்டுகளில், சிட்கோ 8 புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

5.1.4 மேலும் 2008-09 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் தொடங்க சிட்கோ நடவடிக்கை எடுத்து முடிக்கப்படும்:—

திருச்சி மாவட்டத்தில் வாழவந்தான்கோட்டை கட்டம் III மற்றும் கும்பக்குடி, தருமபுரி மாவட்டம் - கடகத்தூர், திருவாரூர் மாவட்டம் - வைப்பூர், காஞ்சிபுரம் மாவட்டம் - தண்டரை, திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை மற்றும் போளூர் அருகே முனியந்தாங்கல், சேலம் மாவட்டம் - சங்ககிரி, ஈரோடு மாவட்டத்தில் - மொடக்குறிச்சி அருகே நஞ்சை ஊத்துக்குளி, மற்றும் வடமுகம் காங்கேயம் பாளையம், மதுரை மாவட்டம் - சேடப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம் - புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் - வள்ளியூர் கட்டம் II, வேலூர் மாவட்டம் - அரக்கோணம் கட்டம் II, கோவை மாவட்டம் - திருப்பூர் அருகே கண்டியம்கோயில்.

இவ்வாறாக சிட்கோ 23 புதிய தொழிற்பேட்டைகளை நிறுவ உள்ளது.

## 6. அடுக்கு மாடித் தொழிற்கூடங்கள் :

2007-08 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, அடுக்கு மாடித் தொழிற் கூடங்களை கீழ்க்காணும் இடங்களில் அமைத்து குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:

1. கிண்டி, சென்னை மாவட்டம்
2. திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம்
3. மாதவரம், திருவள்ளூர் மாவட்டம் மற்றும்
4. பெருங்குடி, காஞ்சிபுரம் மாவட்டம்

2008-09 ஆம் ஆண்டில் கிண்டி தொழிற்பேட்டையில் 1.91 ஏக்கர் நிலப் பகுதியில் 1,65,765 சதுர அடி கட்டடப் பரப்பளவில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் அடுக்கு மாடித் தொழிற்கூடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அடுக்கு மாடித் தொழிற்கூடங்கள் திறந்தவெளித் தரைப் பகுதியுடன் நான்கு மாடிகளைக் கொண்டதாகவும், நில அமைப்பு 49.78 விழுக்காடு மற்றும் தரைதளக் குறியீடு-2 (எப்எஸ்ஐ) என்ற குறியீட்டினைக் கொண்டதாகக் கட்டப்படும். ஒவ்வொரு தளத்திலும் இரண்டு வகை மாதிரிகளாக 463 சதுர அடி அளவில் (28 எண்ணிக்கை) மற்றும் 663 சதுர அடியில் (20 எண்ணிக்கை) கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7. மூலப்பொருட்கள் விநியோகம்:

நியாய விலையின் அடிப்படையில் மூலப்பொருட்களைத் தன்னுடைய 17 கிடங்குகளிலிருந்து சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்குவது சிட்கோவின் முதன்மைப் பணிகளில் ஒன்றாகும்.

சிட்கோவின் டிப்போக்கள்மூலம் கீழ்க்கண்ட மூலப்பொருட்கள் கையாளப்படுகின்றன:—

1. இரும்பு மற்றும் எஃகு
2. மெழுகு
3. பொட்டாசியம் குளோரேட் மற்றும்
4. காகிதம்



2007-08 ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு சாதனை மற்றும் 2008-09 ஆம் ஆண்டிற்கான இலக்கு விவரம் பின்வருமாறு:—

(மெட்ரிக் டன்களில்)

| வ. எண் | விவரங்கள் | 2007-08 ஆம் ஆண்டிற்கான இலக்கு | 2007-08-ல் அடைந்த சாதனை | 2008-09 ஆண்டிற்கான நிர்ணயித்த இலக்கு |
|---|---|---|---|---|
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 10000 | 12607.100 | 12750 |
| 2 | மெழுகு | 1500 | 1786.350 | 1600 |
| 3 | பொட்டாசியம் குளோரேட் | 60 | 29.600 | 60 |
| 4 | காகிதம் | 2000 | 2241.640 | 2350 |

## 8. விற்பனை உதவித் திட்டம்:

மாநில அரசுத் துறைகள்மூலம் கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் சிட்கோவிடம் பதிவு செய்துள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நடத்துவோரின் சார்பாக சிட்கோ நிறுவனம் கலந்து கொண்டு, கொள்முதல் ஆணைகளைப் பெற்று, அவற்றைக் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குப் பகிர்ந்து அளித்து செயல்படுத்த உதவுகிறது.

2007-08 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் ரூ.116 இலட்சத்திற்கு கொள்முதல் ஆணைகள் பெற்று நிறைவேற்றி உள்ளது. மேலும் 2008-09 ஆம் ஆண்டில், ரூ.110 லட்சம் வரை கொள்முதல் ஆணை பெறுவதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்நிறுவனம் 2007-08 ஆம் ஆண்டிற்கு ரூ.575.14 இலட்சம் (தணிக்கைக்கு முன்) இலாபம் ஈட்டியுள்ளது.

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மிகவும் குறைவாக இருந்த ஆரம்ப திட்டக் காலங்களில், தொழில் வணிகத் துறையினால் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்ட 64 சிறு தொழில் கூடங்களைத் தொகுத்து 1965 ஆம்

[2008 மே 7

ஆண்டு, உருவாக்கப்பட்டது. டான்சி நிறுவனம், இரும்பு மற்றும் மர அறைகலன்கள், வார்ப்பு, இயந்திரக் கருவிகள், வார்ப்படங்கள், முலாம் பூசப்பட்ட கம்பிகள், மின்சாரக் கருவிகள், இயந்திர உற்பத்தி மற்றும் கருவிகள் உற்பத்தி அலகுகள் கனரகத் தளவாடங்கள், முலாம் பூசுதல், இலகுரக பொறியியல் கருவிகள் தயாரிக்கும் அலகுகளைக் கொண்டுள்ளது.

தனியார் தொழில் முனைவோர் பல தொழில் நிறுவனங்களை ஆரம்பித்ததால், டான்சி நிறுவனம் இப்பிரிவுகளில் தன்னுடைய தொழில் நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டது. தற்போது 23 உற்பத்தி அலகுகளும், 11 செயல் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும், சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரு இடங்களில் விற்பனை நிலையங்கள், டான்சியின் உற்பத்திப் பொருட்களை விளம்பரம் செய்யவும் விற்பனை செய்யவும் உதவுகின்றன.

முலாம் பூசப்பட்ட மின்கடத்தி கோபுரங்கள், நுண்அலை கோபுரங்கள், கனரகத் தளவாடங்கள் ஆழ்குழாய் கைப்பம்புகள், தரமான மரம் மற்றும் இரும்பு அறைகலன்கள் உற்பத்தி செய்வதில் டான்சி நிறுவனம் மிகவும் திறமை வாய்ந்ததாகும். சர்வ சிக்சா அபியான் திட்டம் மற்றும் கரும்பலகைத் திட்டம் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் பொருட்கள் வறட்சிக் காலத்தில் குடிநீர் பம்புகள் அமைத்தல் மற்றும் பம்புகளுக்கான உதிரி பாகங்கள் மாநிலம் முழுவதும் தயாரித்து விநியோகித்தல் ஆகிய பணிகளை டான்சி செயல்படுத்தி வருகிறது. இந்நிறுவனம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம், பாரத மிகு மின் மையம் மற்றும் இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் ஆகியவற்றிற்குத் தேவையான நுணுக்கமான உதிரி பாகங்களை வழங்கும் நிறுவனமாகவும் விளங்குகிறது.

இக்கழகம் 2007-08 ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் பள்ளிகளுக்கு அறைகலன்கள் (Benches and Desks) வழங்குவதற்காக ரூ.69.08 கோடி மதிப்பிலான பணி ஆணையினைப் பெற்று, ரூ.65 கோடி மதிப்பிற்கான அறைகலன்களை வழங்கியுள்ளது. மீதமுள்ள பணி விரைவில் முடிக்கப்படும்.

டான்சியின் இரு ஆழ்குழாய்ப் பம்பு அலகுகள் மற்றும் வேலூர், பழனி, இராஜபாளையத்திலுள்ள அறைகலன்கள் மற்றும் டான்சி துணை நிறுவனமான தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் லிமிடெட் (டாப்பாப்) தயாரிப்பு நிறுவனங்கள் ISO, 9001-2000 தரச் சான்றிதழ் பெற்றுள்ளன.



2008 மே 7]

டான்சி நிறுவனத்தின் கடந்த 5 ஆண்டுகளுக்கான செயல்பாட்டு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(ரூ. இலட்சத்தில்)

| விவரங்கள் | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007 | 2007–2008 |
|---|---|---|---|---|---|
| விற்பனை | 4978 | 5421 | 6180 | 5767 | 11423 |
| உற்பத்தி | 5119 | 5375 | 6040 | 6083 | 11300 |
| இலாபம்(+)/ நட்டம்(–) | (–) 90.07 | (+) 9.74 | (+) 52.21 | (+) 95.94 | (+) 695.90 |

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு**

**கோரிக்கை எண் 44**

(ரூபாய் ஆயிரங்களில்)

| கணக்குத் தலைப்பு | 2007–08 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | 2007–08 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு | 2008–09 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2851 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 559771 | 536333 | 772222 |
| 2852 தொழில்கள் | 50041 | 32372 | 42133 |
| 3451 தலைமைச் செயலகம் பொருளாதாரப் பணிகள் | 21480 | 18375 | 26051 |
| 4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 2817 | 2817 | 1974 |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 1 | 375 | 1 |
| 4851 கிராமத் தொழில்கள் சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 753 | 18679 | 6003 |
| 6851 கிராமத் தொழில்கள் சிறுதொழில்களுக்கான கடன்கள் | 0 | 982 | 0 |
| மொத்தம் | 634863 | 609933 | 848384 |

[2008 மே 7

## இணைப்பு II

*(173 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

### 1. முன்னுரை

"உழவுக்கும் நெசவுத் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்". நெசவாளர்கள் கைத்தறித் துணிகளை நெய்கிறார்கள். ஆனால், அவர்களின் வாழ்வு, இக்கொள்கை விளக்கக் குறிப்பில் எடுத்துரைக்கப் பட்டுள்ளவாறு பல்வேறு நலத் திட்டங்களின்மூலம் நெசவாளர்களின் வாழ்வினை மேம்படுத்த எடுக்கப்படும் உறுதியான நடவடிக்கைகளின் மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இவ்வரசினால் நெய்யப்படுகிறது.

தமிழ்நாட்டின் ஜவுளித் தொழிலானது, மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கும் சிறப்பினைப் பெற்றுள்ளது. ஜவுளித் தொழில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதுடன், ஏற்றுமதியின்மூலம் அந்நியச் செலாவணி ஈட்டவும் வழிவகுக்கின்றது. இத்தொழிலின் பல்வேறு பிரிவுகளான கைத்தறி, விசைத்தறி, நூற்பாலைகள், பதனிடும் ஆலைகள், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைத் தொழில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் வேலைவாய்ப்பு வழங்குவதில் முதன்மைப் பங்கு வகிக்கின்றன.

### கைத்தறி

தமிழ்நாட்டில், கைத்தறித் தொழில் பல்லாயிரம் ஆண்டு தொன்மையும், பாரம்பரியச் சிறப்புமிக்க கைவினைத் தொழிலாகும்.

தற்போது இந்தியாவிலுள்ள 34.86 இலட்சம் தறிகளில், தமிழகத்தில் 4.13 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. தமிழகத்திலுள்ள கைத்தறிகள் மூலம் 6.08 இலட்சம் நெசவாளர்கள் பணிவாய்ப்பு பெற்றுள்ளனர். தமிழகத்திலுள்ள 4.13 இலட்சம் கைத்தறிகளில், 2.35 இலட்சம் கைத்தறிகள் 1103 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்கீழும், மீதமுள்ள 1.78 இலட்சம் தறிகள் தனியார் அமைப்பிலும் இயங்கி



2008 மே 7]

வருகின்றன. மத்திய மற்றும் மாநில அரசுகளால் கைத்தறி நெசவாளர்களின் வளர்ச்சி மற்றும் நலன் கருதி அறிவிக்கப்படும் திட்டங்கள், மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில், ஆண்டொன்றிற்கு சராசரியாக ரூ.1700 கோடி மதிப்பிற்குக் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் பணிபுரியும் உறுப்பினர்களாகிய கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணி மதிப்பான சுமார் ரூ.700 கோடியும் அடங்கும். மாநிலத்தில், ஆண்டொன்றிற்கு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறித் துணி மதிப்பான ரூ.875 கோடி உட்பட, மொத்த கைத்தறித் துணி விற்பனையின் மதிப்பு ஆண்டொன்றிற்கு சராசரியாக ரூ.1,800 கோடி ஆகும்.

### விசைத்தறி

இந்தியாவில் உள்ள 19.03 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகளில், 3.66 இலட்சம் விசைத்தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 3.66 இலட்சம் விசைத்தறிகளில், 39,927 விசைத்தறிகள், 147 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன. விசைத்தறித் தொழிலின்மூலம் மாநிலத்தில் சுமார் 9.14 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

மாநிலத்திலுள்ள விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலும் அரசின் இலவச வேட்டி சேலை மற்றும் இலவச சீருடை வழங்கும் திட்டங்களுக்குத் தேவைப்படும் துணி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம், ரூ.252.53 கோடி மதிப்புள்ள 1562 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.269.19 கோடி மதிப்புள்ள விசைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### ஜவுளி மற்றும் நூற்பு ஆலைகள்

இந்தியாவில் உள்ள 3,039 பெரிய, நடுத்தர மற்றும் சிறு ஜவுளி ஆலைகளில், 1,248 ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இதில், 18 கூட்டுறவு நூற்பாலைகள் (5 செயல்படுகிறது), 17 தேசிய ஜவுளிக் கழக நூற்பாலைகள் (8 செயல்படுகிறது), 845 தனியார் நூற்பாலைகள் மற்றும் ·· ·டு ஆலைகளும் (Composite Mills) அடங்கும். இவ்வாலை சுமார் 2.11 இலட்சம் தொழிலாளர்களுக்கு

வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றன. மாநிலத்திலுள்ள நூற்பு ஆலைகளின் உற்பத்தித் திறன் 14.74 மில்லியன் கதிர்களாகும். தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு சுமார் 1,516 மில்லியன் கிலோ நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இது நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் சுமார் 40 விழுக்காடு ஆகும்.

**பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை**

பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தொழிலானது ஜவுளி ஏற்றுமதியில் முக்கியமான பங்கினை வகிப்பதோடு, ஜவுளித் தொழிலில் வேகமாக வளர்ந்துவரும் தொழிலாகவும் அமைந்துள்ளது. மாநிலத்தில் சுமார் 4,000 பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி ஆலைகள் உள்ளன. இவ்வாலைகள், மாநிலத்தில் சுமார் 5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றன.

**பதனிடுதல்**

ஜவுளித் தொழிலில், பதனிடும் தொழில் முக்கியமான மதிப்புக் கூட்டும் அங்கமாக உள்ளது. இந்தியாவில், 10,397 கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும், 2,510 மின் விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் உள்ளன. அவற்றில், 2,614 கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும், 985 மின் விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் உள்ளன.

**2. துறையின் செயல்பாடுகள்**

கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும், அனைத்துப் பிரிவுகளின் நலனுக்காகவும் குறிப்பாக, நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடுவதும் கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் முதன்மை நோக்கமாகும்.

நெசவாளர்களின் சமூக, பொருளாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன், அவர்களின் நலனுக்கென உருவாக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தும் பணியினையும் துறை மேற்கொண்டு வருகிறது. இத்தொழிலின் அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதும், நூல் மற்றும் துணியினை நியாயமான விலையில் உற்பத்திச் செய்வதுடன், உற்பத்திச்





செய்யப்பட்ட துணிவகைகளின் விற்பனையினை மேம்படுத்துவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதும் இத்துறையின் பொறுப்புகளாகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்களை விநியோகிப்பதும், உற்பத்திச் செய்யப்பட்ட துணி வகைகளை கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமும், ஹூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள், சங்கத்தின் சொந்தக் காட்சியறைகள் மற்றும் மாநிலத்திலுள்ள மற்றும் மாநிலத்திற்கு வெளியே உள்ள இதர விற்பனை நிலையங்கள்மூலமும், விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தும் தனிப் பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது.

இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:—

(1) 1,103 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

(2) 147 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

(3) 18 கூட்டுறவு நூற்பாலைகள் [அண்ணா (தேனி), பாரதி (தூத்துக்குடி), புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி ஆகிய 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.]

(4) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்), சென்னை

(5) தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

(6) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

(7) தமிழ்நாடு கூட்டுறவுத் துணி நூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

(8) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

(9) தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), சென்னை

மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், துறையின்கீழ் இயங்கும் இதர கூட்டுறவு அமைப்புகளுக்கும் செயற் பதிவாளராகச் செயல்படும் கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் மாநில மற்றும் மைய அரசு திட்டங்களைச்

[2008 மே 7

செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் 1988 ஆம் வருடத்திய விதிகளின்கீழ் இவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவர் "மாநில துணி நூல் அதிகாரக் குழுமமாக" செயல்படுவதன் வாயிலாக நூற்பாலைகள், துணி நூல் ஆலைகள், பதனிடும் ஆலைகள், பின்னலாடை, கைத்தறி மற்றும் விசைத்தறிப் பிரிவுகள் சீராக செயல்படத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொதுவான பொறுப்பும் இவருக்கு உள்ளது. மாநிலத்திலுள்ள 18 சரக கைத்தறி மற்றும் துணி நூல் துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்கள் மூலமாக சரக அளவில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 3. 2007–08 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் 2008–09 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள்

### 3.01. ஏழை மக்களுக்கு இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம்

2007-08 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உறுதி அளித்தவாறு, 15,000 கைத்தறி நெசவாளர்களுக்கும், 25,000 விசைத்தறி தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன், ஏழை மக்களுக்கு இலவச வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டம், 2007-08 ஆம் ஆண்டிலும் ரூ.256 கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 164 இலட்சம் வேட்டிகளும், 164 இலட்சம் சேலைகளும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்திற்கான வேட்டி, சேலைகள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, 2008 பொங்கல் பண்டிகையின்போது விநியோகம் செய்வதற்காக, வருவாய்த் துறைக்கு 31-12-2007-க்குள் வழங்கப்பட்டன. 2008, பொங்கல் விழாவிற்கான இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1-1-2008 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டத்தினை 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளதோடு, 2009 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகை விநியோகத்திற்குத் தேவைப்படும் 164 இலட்சம் வேட்டிகளும், 164 இலட்சம் சேலைகளும் உற்பத்தி செய்ய ரூ.256 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 2008-09 ஆம்



2008 மே 7]

ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.271.50 கோடி (கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்படும் எடுத்தாளும் தொகை உட்பட) (handling charges) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.02. பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம்

பள்ளிச் சிறார்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் 2007-08 ஆம் கல்வியாண்டிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், ரூ.43.24 கோடி மதிப்புள்ள 137.16 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ-மாணவியர்களுக்கு வழங்கும்பொருட்டு சமூகநலத் துறைக்கு வழங்கப்பட்டது. இதுதவிர, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைகளுக்குத் தேவையான 24.43 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, 2007-08 ஆம் கல்வி ஆண்டில் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தினை, 2008-09 ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தவும், ரூ.41.38 கோடி மதிப்புள்ள சீருடைத் துணிகள் உற்பத்தி செய்து சமூக நலத் துறைக்கு வழங்கவும், அரசு ஆணையிட்டுள்ளது. தேவைப்படும் மொத்த சீருடைத் துணிகளும், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைகளுக்கு ரூ.16.54 கோடி மதிப்பிலான சீருடைத் துணிகள் உற்பத்தி செய்ய தேவைப் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

2008-09 கல்வியாண்டு தொடக்கத்திலேயே, அதாவது 2008 ஜூன் திங்களில் பள்ளி மாணவ மாணவியருக்கு பாடப் புத்தகங்கள் வழங்கும்பொழுதே சீருடைத் துணிகளும் வழங்குவதற்கு ஏதுவாக, சீருடைத் துணிகளின் உற்பத்தியினை 2008, மே திங்கள் இறுதிக்குள் நிறைவு செய்ய தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. சீருடைத் துணிகளை பாடப் புத்தகங்களுடன் வழங்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, ஒரு முன்னோடியான பயனளிக்கும் முயற்சியாகும். இத்திட்டம், மாநிலத்தில் உள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பினை உருவாக்கவும் உதவி செய்கிறது.

[2008 மே 7

### 3.03. நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்

கைத்தறி நெசவாளர்களின் நீண்டநாள் கோரிக்கையான இலவச மின்சாரம் வழங்கக் கோரும் கோரிக்கை, இவ்வரசால் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 1,35,200 கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதத்திற்கு ஒரு முறை 100 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல், சொந்தமாக விசைத்தறிகள் உள்ள விசைத்தறி நெசவாளர்களின் 98,465 மின் இணைப்புகளுக்கு, இரு மாதத்திற்கு ஒரு முறை 500 யூனிட்டுகள் வரையிலும் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. இத்திட்டம், 1-8-2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் நிதி இழப்பினை ஈடு செய்யும் வகையில், அரசு 2006-07 ஆம் ஆண்டில் ரூ.62.68 கோடியும், 2007-08 ஆம் ஆண்டில் ரூ.74.22 கோடியும் வழங்கியுள்ளது. இத்திட்டம், 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2008-2009 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.78.04 கோடி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.04. கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், தமிழக அரசு, கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை, 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு முதல், மைய அரசும் இத்திட்டத்தில் பங்கு பெற்று, மைய அரசின் பங்கினை மைய சிக்கனத் திட்டத்தின்கீழ் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்குச் சந்தாவாக செலுத்துவார்கள். நெசவாளர் ஈட்டும் கூலியில் மாநில அரசு தனது பங்காக ரூபாய்க்கு 4 பைசாவும், மைய அரசு நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசாவும் மைய சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் வழங்கி வருகின்றது. அதனடிப்படையில், மொத்த சந்தாத் தொகை 16 பைசாவும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, இதற்கு மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது. இவ்வாறு பெறப்படும் 9.5 விழுக்காடு வட்டியில், 6.5 விழுக்காடு நெசவாளர்கள் கணக்கில் வரவு வைக்கப்படுவதோடு, எஞ்சிய 3 விழுக்காடு வட்டித் தொகை நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகிய



2008 மே 7]

கைத்தறி நெசவாளர்களின் நலத் திட்டங்களைச் செயல்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில், 31-03-2008 ஆம் தேதியில் 78,443 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ், 2007-08 ஆம் ஆண்டில் மாநில அரசு பங்காக ரூ.418.40 இலட்சம் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளதோடு, அதற்கு இணையாக மைய அரசு பங்காக ரூ.418.40 இலட்சம் மைய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென, 2008-09 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 850 இலட்சம் (மைய அரசு ரூ. 425 இலட்சம் + மாநில அரசு ரூ. 425 இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.05. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்காக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம், 1-4-1997 முதல் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2007-08 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, 60 வயதை அடைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியத் தொகை, 1-6-2007 முதல் ரூ.200-லிருந்து ரூ.400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 31-3-2008 தேதியில், 14,141 கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 2007-08 ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ.663.65 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தை 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

### 3.06. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் 1-1-1992 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர், 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால், அவரது வாரிசுக்கு, நெசவாளர் இறந்த தேதியிலிருந்து 10 ஆண்டுகளுக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

2007 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு, கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும்

[2008 மே 7

குடும்ப ஓய்வூதியத் தொகை 1-5-2007 முதல் ரூ.350-லிருந்து ரூ.550ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 31-3-2008 வரையில் இறந்த 1,029 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 2007-08 ஆம் ஆண்டிற்கென அரசு ரூ.66.73 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டம், 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.07. கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை 2005-2006 ஆம் ஆண்டு முதல் மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ஒரு நெசவாளர் குடும்பத்தில் 4 நபர்கள் ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.15,000 வரை மருத்துவ உதவி பெற்றுக்கொள்ளலாம். நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், அனைத்து கைத்தறி நெசவாளர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், 2006-07 ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்கள் மற்றும் தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறித் தொழிலுக்கு தொடர்புடைய, உபதொழில் புரியும் கைத்தறி தொழிலாளர்களுக்கும், 2007-08 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தும் வகையில் அரசு இத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் மாற்றி அமைக்கப்பட்ட வழிமுறைகளின்படி, ஓர் ஆண்டிற்கு, ஒரு நெசவாளருக்காக ரூ.781.60 ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்திற்குக் காப்பீட்டுக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இதில் மைய அரசு பங்காக ரூ.642.47-ம், மாநில அரசு பங்காக ரூ.89.13-ம் மற்றும் நெசவாளர் பங்காக ரூ.50-ம் அடங்கும். நெசவாளர் பங்காக செலுத்தப்பட வேண்டிய ஆண்டு காப்பீட்டுக் கட்டணத் தொகை ரூ. 50-ஐ, நெசவாளர்கள் சார்பாக மாநில அரசே செலுத்த முடிவு செய்து, இதற்கென 2007-08 ஆம் ஆண்டிற்கு ரூ.417.39 இலட்சம் வழங்கியுள்ளது.



2008 மே 7]

இத்திட்டத்தின்கீழ், கடந்த இரண்டு ஆண்டுகளில் மருத்துவ உதவி பெற்ற நெசவாளர்களின் எண்ணிக்கை மற்றும் ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்தால் வழங்கப்பட்ட மருத்துவ உதவித் தொகை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 2006–07 | 88377 | 70971 | 950.50 |
| 2. | 2007–08 | 37308 | 29485 | 492.75 |

இத்திட்டம், 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதோடு, பயனாளிகளின் எண்ணிக்கை 3 இலட்சம் நெசவாளர்களாக அதிகரிக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 2008-09ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், மாநில அரசின் பங்காக ரூ.417.39 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.08. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா (கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்)

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" என்ற காப்பீட்டுத் திட்டம், மைய அரசின் நிதி உதவியுடன், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து, நெசவாளர்களுக்காக 2004-05 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. "மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ், ஒரு நெசவாளருக்கு, ஓர் ஆண்டிற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய மொத்த காப்பீட்டுக் கட்டணம் ரூ 330-ல், ரூ. 150-ஐ மைய அரசும், ரூ.100/-ஐ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமும், ரூ. 80-ஐ நெசவாளர் சார்பாக மாநில அரசும், செலுத்தி வருகிறது.

[2008 மே 7

இத்திட்டத்தின்கீழ், பயன்பெறும் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1-10-2007 முதல் மைய அரசால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | விவரம் | ஏற்கெனவே வழங்கப்பட்ட காப்பீட்டுத் தொகை ரூ. | மாற்றி அமைக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை ரூ. (1-10-2007 முதல்) |
|---|---|---|---|
| 1 | இயற்கை மரணம் | 50,000 | 60,000 |
| 2 | விபத்தினால் ஏற்படும் மரணம் | 80,000 | 1,50,000 |
| 3 | விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | 1,50,000 | 1,50,000 |
| 4 | விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | 25,000 | 75,000 |

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மட்டுமே இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டத்தினை, கூட்டுறவு அமைப்பில் இல்லாத கைத்தறி நெசவாளர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், 2006-07 ஆம் ஆண்டு முதல் தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கும் அரசு விரிவுபடுத்தியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில், இறந்த 949 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.468.10 இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, 1,92,220 கைத்தறி நெசவாளர்கள் (கூட்டுறவு அமைப்பில் 1,25,054 மற்றும் கூட்டுறவு அமைப்பில் இல்லாதவர்கள் 67,166) இத்திட்டத்தின்கீழ் பதிவுபெற்று, இந்நெசவாளர்கள் சார்பில், காப்பீட்டுக் கட்டணமாக ரூ.1,53,77,600/- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு 2007-08 ஆம் ஆண்டில் மாநில அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதோடு, 2,25,000 நெசவாளர்கள் பயன்பெறும்



2008 மே 7]

வகையில் செயல்படுத்தப்படும். நெசவாளர்கள் சார்பாக மாநில அரசால் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதற்காக, 2008-09 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.160 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.09. தள்ளுபடி மானியத் திட்டம்**

கைத்தறித் துணிகளை விசைத்தறி மற்றும் ஆலைத் துணிகளுடன் போட்டியிட்டு, சந்தையில் விற்பனை செய்ய உதவும் வகையில், கைத்தறித் துணிகளின் விலையினைக் குறைத்து, நுகர்வோருக்கு விற்பனை செய்யும் நோக்கத்தோடு கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு மாநில அரசு தள்ளுபடி மானியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை விற்பனை மற்றும் மொத்த விற்பனைக்கு, ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. பருத்தி இரகங்களுக்கு, உருப்படி ஒன்றுக்கு ரூ.100/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ, அத்தொகை, அதேபோன்று பட்டுத் துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/- அல்லது 20 விழுக்காடு, இதில் எது குறைவோ, அத்தொகை, என்ற வரையறைக்குட்பட்டு தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ் தள்ளுபடி மானியத் திட்டத்திற்கு, மைய அரசும் தனது பங்கினை வழங்கி வருகிறது. மைய அரசின் வழிகாட்டுதலின்படி, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முந்தைய மூன்று ஆண்டுகளின் சராசரி ஆண்டு விற்பனை அளவில், 10 விழுக்காடு அளவிற்கு விற்பனை ஊக்குவிப்புத் தொகையாக மைய அரசு வழங்குகிறது.

மாநில அரசின் கொள்கையின்படி, ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ், மைய அரசினால் வழங்கப்படும் தொகையினைவிட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் ரூ.2001-க்குமேல் விற்பனை மதிப்புள்ள பட்டு இரகத் துணிகளுக்கு 2007-08 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட பண்டிகைக் காலங்களில் 135 நாட்களுக்கு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கி, விற்பனை செய்ய அரசு

[2008 மே 7

அனுமதி வழங்கியுள்ளது. 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியினைப் பயன்படுத்தி ரூ.119.50 கோடி மதிப்புள்ள பட்டுத் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதுதவிர, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு, வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி அதாவது பருத்தி துணி வகைகளுக்கு அதிகபட்சமாக ரூ.150/-ம், பட்டுத் துணி வகைகளுக்கு அதிகபட்சமாக ரூ.300/-ம் வழங்கி விற்பனை செய்ய 15-9-2007 முதல் 31-1-2008 வரை 139 நாட்களுக்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியது. கூடுதல் 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்தி, ரூ.222.97 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2007-08 ஆம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸிற்கு தள்ளுபடி மானியமாக மொத்தம் ரூ. 118 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில், மைய அரசின் பங்காக, ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ், ரூ.23,79,04,597/- விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், கைத்தறித் துணி வகைகளுக்கு 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கும் திட்டத்தின்கீழ், 2007-08 ஆம் ஆண்டில் மைய அரசு ரூ.4,07,02,439/- விடுவித்துள்ளது.

தள்ளுபடி மானியத் திட்டம், 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென 2008-09 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.118 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.10. ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம்**

கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டும், கைத்தறித் தொழிலை மேம்படுத்திடவும் "ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம்" என்னும் புதிய திட்டத்தினை, 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஏற்கெனவே மைய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த பல்வேறு திட்டங்களான தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா (அடிப்படை உள்ளீடு, விற்பனை ஊக்குவிப்பு போன்றவை), தறிக்கூடம் மற்றும் வீடுகள் கட்டும் திட்டம் ஆகிய திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.



2008 மே 7]

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் 4 முக்கிய இனங்கள் பின்வருமாறு:—

- செறிவுப் பகுதி மேம்பாடு
- கைத்தறி வளர்ச்சிக்கான குழும அணுகுமுறை
- கைத்தறி நிறுவனங்களுக்கு நிதியுதவி
- புதிய யுத்திகள், விளம்பரம், மேற்பார்வை, கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திட்டத்தினை மதிப்பீடு செய்தல் ஆகிய பல்வேறு இனங்களுக்கு உதவித் தொகை

**(அ) செறிவுப் பகுதி மேம்பாடு**

மைய அரசின் ஜவுளி அமைச்சகம், இனம் கண்டுபிடிக்கப்பட்ட செறிவுப் பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து, சுய ஆளுமையுடன் சந்தையில் போட்டியிடும் வகையில், சமூகப் பொருளாதார அலகினை உருவாக்க அண்மையில் ஒருங்கிணைந்த கைத்தறி செறிவுப் பகுதி மேம்பாட்டு திட்டத்தினைச் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மைய அரசினால் இந்தியாவில் முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்ட 20 செறிவுப் பகுதிகளில், திருவண்ணாமலை, குறிஞ்சிப்பாடி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவை அடங்கும். மைய அரசு, இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஒவ்வொரு செறிவுப் பகுதிக்கும் ரூ.2 கோடி வழங்கியுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், குறிஞ்சிப்பாடி மற்றும் திருவண்ணாமலை செறிவுப் பகுதிகளுக்கு செயல்படுத்தும் முகவராகவும், ஜவுளிக் குழு, திருச்சிராப்பள்ளி செறிவுப் பகுதிக்கு செயல்படுத்தும் முகவராகவும் நியமிக்கப்பட்டுள்ளன. இந்தச் செறிவுப் பகுதிகளில், இத்திட்டத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இரண்டாம் கட்டமாக, ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த, இந்தியாவில் உள்ள 300 முதல் 500 தறிகள் கொண்ட 100 செறிவுப் பகுதிகளை மைய அரசு தெரிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் செயல்படுத்த, தமிழ்நாட்டில் 25 செறிவுப் பகுதிகள் இனம் கண்டறியப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், 3 ஆண்டு காலத்திற்கு தறி மேம்பாடு, தறியில் மாறுதல்கள் செய்தல், தறி மற்றும் தறி உபகரணங்கள் கொள்முதல் செய்தல், சாயச்சாலை உருவாக்குதல், பொது வசதி மையம் நிறுவுதல், காட்சியறை நிறுவுதல், பொருட்காட்சி

[2008 மே 7

நடத்துதல், விளம்பரம் மற்றும் வடிவமைப்பு ஆகிய பல்வேறு இனங்களுக்கு ஒவ்வொரு பகுதிக்கும் அதிகபட்சமாக ரூ.60 இலட்சம் வரை நிதியுதவி வழங்கப்படும். கைத்தறிப் பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தி, அவர்களை தற்சார்பு அடையச் செய்யும் நோக்குடன், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினை, 25 கைத்தறி செறிவுப் பகுதிகளில் செயல்படுத்துவதற்காக ரூ.4,62,28,900/- (மைய அரசு பங்கு ரூ.4,02,88,700/- + மாநில அரசு பங்கு ரூ.59,40,200/-) முதல் தவணை மானியமாக, 2007-08 ஆம் ஆண்டில் அரசு வழங்கியுள்ளது.

**(ஆ) கைத்தறி வளர்ச்சிக்கான குழும அணுகுமுறை (Group approach)**

குழும அணுகுமுறை திட்டமானது, செறிவுப் பகுதி மேம்பாட்டு இனத்தின்கீழ் வராத கைத்தறி நெசவாளர்களுக்கு, தற்போதைய சந்தை நிலவரத்திற்கேற்ப மதிப்புக் கூட்டு துணி வகைகளை உற்பத்தி செய்து பயனடைய வழிவகுத்துள்ளது. குழும அணுகுமுறையின்கீழ் உள்ள பல்வேறு இனங்கள் பின்வருமாறு:—

**அடிப்படை உள்ளீடு** (Basic Input) இனங்களான விளிம்புத் தொகை, புதிய கைத்தறி, டாபி, ஜக்கார்டு, தறி உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்குத் தேவையான நிதியினை மைய அரசு, மாநில அரசு மற்றும் செயல்படுத்தும் நிறுவனம் அல்லது பயனாளிகளால் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**திறன் மேம்பாடு** இனத்தின்கீழ், 20 நெசவாளர்கள் கொண்ட குழுக்களுக்கு நெசவு நெய்தல், சாயம் தோய்த்தல், புதிய வடிவமைப்புகள் தயாரித்தல் ஆகியவற்றிற்கு பயிற்சி வழங்குதல்.

**தறிக்கூடம் கட்டுதல்** இனத்தின்கீழ், வீட்டின் அருகில் சொந்த நிலம் வைத்திருக்கும் நெசவாளர்களுக்கு தறிக்கூடம் கட்டுவதற்கான நிதியுதவி தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதுடன், வீடுகட்டும் திட்டம் “இந்திரா ஆவாஸ் யோஜனா” திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மைய அரசு, இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள நெசவாளர்களுக்கு, தறிக் கூடம் கட்ட ரூ. 25,000/-ம், வறுமைக் கோட்டிற்குமேல் உள்ள நெசவாளர்களுக்கு மைய அரசின் பங்காக ரூ.18,750/-ம் வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை, ரூ. 6,250/- மாநில அரசு அல்லது பயனாளிகளால் ஏற்றுக்கொள்ளப்படும்.



2008 மே 7]

**(இ) கைத்தறி நிறுவனங்களுக்கு நிதி உதவி**

**(i) விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்**

கைத்தறித் துணிகளை, சந்தையில் தக்க விலையில் விற்பனை செய்ய ஏதுவாக, கைத்தறித் தொழிலுக்கு விற்பனை ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. இந்த விற்பனை ஊக்குவிப்புத் தொகை, நுகர்வோரைக் கவரும் வண்ணம் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்குக் கைத்தறி நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு கைத்தறித் துணி வகைகளின் ஒட்டுமொத்த விற்பனைக்கு வழிவகுக்கிறது. மாநிலக் கைத்தறிக் கழகங்கள், தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசிய கைத்தறி நிறுவனங்களுக்கு விற்பனை ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி விற்பனையில் 10 விழுக்காடு தொகை, விற்பனை ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

**(ii) கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ், தேசிய மற்றும் மாநில அளவிலான கைத்தறி நிறுவனங்கள், கைத்தறி கழகங்கள், தலைமை கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவனங்கள் போன்றவற்றின் காசுக்கடன் மற்றும் நடைமுறை மூலதனம் போன்றவற்றை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி, 50:50 என்ற வீதத்தில் மைய / மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**(ஈ) புதிய யுத்திகள், விளம்பரம், கண்காணித்தல், மேற்பார்வைப் பயிற்சி மற்றும் திட்ட மதிப்பாய்வு**

இத்திட்டத்தின்கீழ் உள்ள விதிகளின்படி, திட்டத் தொகையில் 10 விழுக்காடு தொகை புதிய யுத்திகளுக்கும் (Innovative ideas), விளம்பரம், கண்காணித்தல், பயிற்சி மற்றும் திட்ட மதிப்பாய்வு போன்றவற்றிற்கு 2 விழுக்காடும் பயன்படுத்தப்படலாம்.

**3.11. டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நலவாழ்வு அறக்கட்டளையின்கீழ் உதவித் தொகை வழங்குதல்**

நெசவாளர்களின் பிள்ளைகள் மேற்படிப்பு பயில்வதை ஊக்குவித்து, உதவித் தொகை வழங்கும் பொருட்டு, “டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளை” 1986 ஆம் ஆண்டு

[2008 மே 7

உருவாக்கப்பட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றின் பொதுநிதி மற்றும் பொதுநல நிதியிலிருந்து பெறப்பட்ட நன்கொடைத் தொகையைக் கொண்டு, இந்த அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. மேற்படி நன்கொடைத் தொகை, நிரந்தர வைப்பு நிதியில் வைக்கப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் வட்டியிலிருந்து உதவித் தொகைக்கான செலவு மேற்கொள்ளப்படுகிறது. தற்போது, 29 பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவிலும், ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும், இந்திய குடிமைப் பணித் தேர்விற்காக தனிப்பயிற்சி பயில்பவர்களில் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், தற்போது 87 மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற்று வருகின்றனர். இத்திட்டம், 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**3.12. சேலம், இந்திய கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவ மாணவியருக்கு உதவித் தொகை**

சேலத்திலுள்ள இந்திய கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தினால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறித் தொழில்நுட்பப் பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியரை தேர்வு செய்யும்போது, நெசவாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழக அரசு, மாணவ, மாணவியருக்குக் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது:

| | | |
|---|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ.400/- | மாதமொன்றுக்கு |
| இரண்டாம் ஆண்டு | ரூ.450/- | மாதமொன்றுக்கு |
| மூன்றாம் ஆண்டு | ரூ.500/- | மாதமொன்றுக்கு |

இது தவிர, அனைத்து மாணவ, மாணவியருக்கும் புத்தகம் வாங்குவதற்கென, மாதமொன்றுக்கு, ரூ.60/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியருக்கு, சுற்றுலா செல்வதற்கு, ஆண்டொன்றுக்கு ரூ.200/- அளிக்கப்படுகிறது. இக்கல்வி உதவித் தொகை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.



2008 மே 7]

கடாக் (கர்நாடகா) மற்றும் வெங்கடகிரி (ஆந்திரப் பிரதேசம்) ஆகிய இடங்களிலுள்ள பயிலகங்களில், மூன்று வருட கைத்தறித் தொழில்நுட்பப் பட்டய வகுப்பில் படித்து வரும் தமிழக மாணவ, மாணவியர்க்கும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின்கீழ், 78 மாணவர்கள் உதவித் தொகை பெற்று வருகிறார்கள். 2008-09 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**3.13. சிக்ஷ சஹாயக் யோஜனா திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை**

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் "சிக்ஷ சஹாயக் யோஜனா" திட்டத்தில், பயனாளிகளாக உள்ள நெசவாளர் குடும்பத்தின் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை (இரண்டு குழந்தைகளுக்கு) அதிகபட்சம் நான்கு ஆண்டுகளுக்கு அல்லது 12-ம் வகுப்பு முடிக்கும் வரை ஆண்டொன்றுக்கு ரூ.1200/- வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், கடந்த மூன்றாண்டுகளில் வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை விவரம் பின்வருமாறு:—

| வருடம் | மாணவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2004-05 | 9473 | 85.26 |
| 2005-06 | 14424 | 148.58 |
| 2006-07 | 23555 | 250.37 |

**3.14. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கான சிறப்புத் திட்டம்**

இலவச வேட்டி, சேலை இரக உற்பத்தியில் ஈடுபட்டிருந்த கைத்தறி நெசவாளர்களின் வருவாயை அதிகரிக்கும் நோக்குடனும், சந்தையில் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்து, இரக மாற்றம் மேம்படுத்தப்பட்ட புதிய வடிவமைப்புகளை

[2008 மே 7

உருவாக்கி வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தவும், "பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்" கைத்தறி நெசவாளர்களுக்கான சிறப்புத் திட்டம் ரூ.2530.36 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உள்ள திட்ட விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இனங்கள் | திட்ட ஒதுக்கீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு | 110.02 |
| 2. | வடிவமைப்பு மேம்பாடு | 163.15 |
| 3. | நெசவுத் திறன் மேம்பாடு | 519.75 |
| 4. | கூடுதல் வேலைவாய்ப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் | 107.44 |
| 5. | கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சொத்து உருவாக்குதல் | 220.00 |
| 6. | தொழில்நுட்ப மேம்பாடு | 980.00 |
| 7. | விற்பனை மேம்பாடு | 430.00 |
| | **மொத்தம்** | **2530.36** |

இத்திட்டத்தினைச் செயல்படுத்த, மேலே குறிப்பிட்ட தொகையில் மைய மற்றும் மாநில அரசுகள் முறையே ரூ.1085.94 இலட்சம் மற்றும் ரூ.361.98 இலட்சம் முதற்கட்டமாக வழங்கியுள்ளன. மீதமுள்ள தொகை ரூ.1082.44 இலட்சம், இரண்டாம் கட்டமாக விடுவிக்கப்படும்.

மேற்கண்ட திட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சாதனை விவரம் பின்வருமாறு:—

- வடிவமைப்பு மேம்பாடு மற்றும் நெசவுத் திறன் மேம்பாட்டிற்கு பயிற்சி அளிப்பதற்கெனவே தனியாக ஒரு வடிவமைப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

- துணி வகைகள், படுக்கை விரிப்புகள், திரைச் சீலைகள், மேஜை விரிப்புகள், தரை விரிப்புகள், துப்பட்டா, சட்டைகள், சேலைகள், சமையல் அறையில் பயன்படுத்தும் துணி வகைகள், துண்டுகள் போன்ற இரகங்கள் உற்பத்தி செய்வதில், 11,620 நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.



2008 மே 7]

- 26237 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 2096 புதிய தறிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 11,620 தறிகளுக்குத் தேவையான தறி உபகரணங்கள் வழங்கப்பட்டு, தறிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்ட நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் இரகங்களுக்கு, "இழை" எனப் பெயரிட்டு, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின்மூலம் விற்பனை செய்வதுடன், ஊரக வளர்ச்சித் துறையால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டுவரும் கண்காட்சிகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

**3.15. சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்**

கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை அயல்நாட்டுச் சந்தையில் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தினை, 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், ரூ.50,000/- செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 2008-09 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.50,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.16. புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்**

புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில், புதிய வடிவமைப்பினை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம், ஒவ்வோர் ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறந்த வடிவமைப்புக்கு, பின்வருமாறு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 5,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 3,000/- |
| மூன்றாம் பரிசு | ரூ. 2,000/- |

[2008 மே 7

இத்திட்டத்திற்கான செலவு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

### 3.17. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும், விசைத்தறியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க, கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985 ஒன்றை இயற்றி, மத்திய அரசு, கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய 11 வகை நெசவு இரகங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் வகையில், அமலாக்கப் பிரிவு ஒன்று, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் அமலாக்க அலுவலர் அலுவலகமும், சரக அளவில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய 5 உதவி அமலாக்க அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

2007-2008 ஆம் ஆண்டில், 70,000 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்படவேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில், 71,633 விசைத்தறிகள் அமலாக்கப் பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை மக்களிடையே எடுத்துச் செல்லவும், கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கவும், விசைத்தறிகள் அதிகமுள்ள பகுதிகளில் அவ்வப்போது விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. 2008-2009 ஆம் ஆண்டிலும் இந்நடவடிக்கை தொடரும்.

## 4. துறை மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்

### 4.01. வடிவமைப்பு மேம்பாடு

2007-08 ஆம் ஆண்டில், அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து, ரூ.65.00 இலட்சம் செலவில் இத்துறை வடிவமைப்பு திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி, குறிஞ்சிப்பாடி, திருச்சிராப்பள்ளி, விளந்தை, திருபுவனம், குடியாத்தம், காஞ்சிபுரம், ஆரணி, ராசிபுரம் மற்றும் மன்னார்குடி பகுதிகளில் பருத்தி மற்றும் பட்டு இரகங்களில், 1,602 புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய வடிவமைப்புகளின்மூலம், கைத்தறி இரகங்களின் விற்பனை அதிகரித்திடவும், இப்புதிய வடிவமைப்புகளின்



2008 மே 7]

வாயிலாக நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பும், கூடுதல் வருவாயும் பெற்று வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பாரம்பரியம் மிக்க நுகர்வோரின் தேவைகளை நிறைவு செய்யவும், இளைய தலைமுறையினரை ஈர்க்கும் வகையிலும், 2008-09 ஆம் ஆண்டில் கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி விற்பனைக்கு அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.02. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்றுமதி

கைத்தறி மற்றும் துணி நூல் துறை ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளித்து, நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தி வருகிறது. தற்போது 404 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 25,839 தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. 2007-08ஆம் ஆண்டில் சங்கங்களின்மூலம் படுக்கை விரிப்புகள், திரைச் சீலைகள், சமையலறை துணி வகைகள், மேசை விரிப்புகள், ஏப்ரன், கை உறைகள், டர்க்கி துண்டுகள், சிறு கைத்துண்டுகள் போன்ற ஏற்றுமதி இரகங்கள் தயார் செய்யப்பட்டு ரூ.317.77 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணிகள் ஏற்றுமதியாளர்கள்மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. கைத்தறித் துணிகளை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கு துறை தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. முதற்கட்டமாக, ஈரோடு மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் நேரடி ஏற்றுமதி மேற்கொள்ளப்படவுள்ளது.

2008-09 ஆம் ஆண்டில், அதிக அளவு நெசவாளர்களை ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடுத்தி, ஏற்றுமதி விற்பனையினை ரூ.325 கோடி அளவிற்கு அதிகரிக்கவும், இதன்மூலம் நெசவாளர்களின் வருவாயை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.03. கண்காட்சிகள் நடத்துதல்

கைத்தறித் துணிகளின் விற்பனையினை மேம்படுத்த, 2007-08 ஆம் ஆண்டில் மைய அரசின் நிதியுதவியுடன் காஞ்சிபுரம், சேலம், மதுரை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், ஈரோடு, திருவண்ணாமலை, வேலூர், விருதுநகர், இராமநாதபுரம், கரூர் போன்ற இடங்களில் 22 மாவட்ட அளவிலான கண்காட்சிகளும், நாகர்கோவிலில் ஒரு சிறப்பு கைத்தறிக் கண்காட்சியும் துறையால் நடத்தப்பட்டன. இக்கண்காட்சிகளின்

மூலம், ரூ.10.56 கோடி மதிப்பிற்கு கைத்தறி துணிகள் விற்பனையாகியுள்ளன. இது தவிர, 2008 ஆம் ஆண்டு தேசிய கைத்தறிக் கண்காட்சி (National Handloom Expo-2008) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இக்கண்காட்சி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 19-3-2008 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், சென்னை லலித்கலா அகாடமி, சென்னை விஜய மகால், பழனி மற்றும் பாண்டிச்சேரியிலும் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, ரூ.2.24 கோடி விற்பனை ஆகியுள்ளது.

2008-09 ஆம் ஆண்டிலும் இதுபோன்ற கண்காட்சிகள், புதிய படைப்புகளுடன் நடத்தப்படவுள்ளதோடு, அதிக அளவு விற்பனையும் மேற்கொள்ளப்படும்.

**4.04. "கைத்தறி முத்திரை" திட்டத்தினைச் செயல்படுத்துதல்**

கைத்தறி இரகங்களுக்கென தனி அடையாளம் வழங்கி, விற்பனையினை மேம்படுத்திட, தமிழ்நாட்டில் "கைத்தறி முத்திரை"யின் பயன்பாட்டினை அதிகரிக்க, துறை தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கைத்தறி முத்திரையினை, மக்களிடையே எடுத்துச் செல்ல விழிப்புணர்வுக் கூட்டங்கள் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, குறிஞ்சிப்பாடி, மதுரை, ஈரோடு, கும்பகோணம் ஆகிய 6 செறிவுப் பகுதிகளில் (Clusters) ஜவுளிக் குழுவுடன் (Textile Committee) இணைந்து நடத்தப்பட்டன. இதுவரை, 724 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 1,324 தனியார் நெசவாளர்களும் கைத்தறி முத்திரை திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**4.05. கைத்தறி இரகங்களை பூகோளக் குறியீடுச் சட்டம், 1999-ன்கீழ் பதிவு செய்தல்**

கைத்தறி இரகங்களின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், சேலம் பட்டு, ஆரணி பட்டு மற்றும் கோவை கோரா காட்டன் ஆகிய பாரம்பரிய கைத்தறி இரகங்களை, பூகோள குறியீடுச் சட்டம், 1999-ன்கீழ் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள், பூகோளக் குறியீடு பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்டன. பூகோளக் குறியீடு பதிவாளர் அலுவலகம், மேற்படி இரகங்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட விண்ணப்ப எண்கள் 92, 93, 94-ல்





உள்ள தொழில்நுட்பக் குறியீடுகள் மற்றும் இதர விவரங்களை புத்தக எண் 23-ல் வெளியிட்டுள்ளது. பூகோளக் குறியீடுச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள காலக்கெடு முடிவடைந்த பின்னர், இதற்கான சான்றிதழ்கள் பூகோளக் குறியீடு பதிவாளர் அலுவலகத்தால் வழங்கப்படும்.

**4.06. புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்வதற்கான தடை ஆணையினை நீக்கம் செய்தது**

கைத்தறி நெசவாளர்களை பெருமளவில் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன், புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்வதற்கான தடை ஆணையினை நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் 103 புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**4.07. ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டம்**

"ஆயத்த ஆடை ஏற்றுமதி திட்டம்", "ஜவுளித் தொழில் மையங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம்" ஆகிய திட்டங்களை இணைத்து, "ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டம்" என்ற திட்டம், 2005-06 ஆம் ஆண்டில் மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகத் தரம் மிக்க ஏற்றுமதியை மேம்படுத்தி, வேலைவாய்ப்பு வசதியினை உருவாக்கும் வகையில், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், கில்ட் பூங்கா, செங்கப்பள்ளி, ஈரோடு மாவட்டம்; சைமா பதனிடும் பூங்கா, கடலூர்; பல்லடம் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம்; குமாரபாளையம் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, குமாரபாளையம்; ஈரோடு உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, ஈரோடு; மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, மதுரை; கரூர் ஜவுளிப் பூங்கா, கரூர் ஆகிய 7 சிறப்பு ஜவுளித் திட்டங்களை ரூ.572.53 கோடி மொத்தத் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் பல்லடத்தில் உள்ள பல்லடம் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா நாட்டிலேயே முதலாவது பூங்காவாக 19-4-2008 அன்று துவக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

[2008 மே 7

ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (TCIDS) அங்கீகரிக்கப்பட்ட குமாரபாளையத்தில் உள்ள காவேரி உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவும் 19-4-2008 அன்று துவக்கப்பட்டு உற்பத்தியை தொடங்கியுள்ளது.

எஞ்சியுள்ள ஜவுளி சிறப்புத் திட்டங்களைப் பொறுத்த வரையில், இப்பூங்காக்கள் அமைக்கத் தேவைப்படும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, கட்டிடம் கட்டுதல் உட்பட அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வகைப் பூங்காக்கள் அமைப்பதன் மூலம், மாநிலத்திலுள்ள சுமார் 60,500 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

### 4.08. கைத்தறி ஏற்றுமதி மண்டலங்கள்

கைத்தறி நெசவாளர்களின் வருவாய் ஈட்டும் திறனை அதிகப்படுத்தவும், கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டுச் சந்தையில் கைத்தறித் துணி விற்பனையை விரிவுபடுத்துவதற்கும், கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வாழும் பகுதிகளான நாகர்கோவில், விருதுநகர், நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் ஆகிய கைத்தறி செறிவுப் பகுதிகள் கைத்தறி ஏற்றுமதி மண்டலங்களாகத் தேர்வு செய்யப்பட்டு, அப்பகுதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை கைத்தறி மற்றும் துணி நூல் துறையும், கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் கழகமும் இணைந்து செயல்படுத்தி வருகின்றன. கைத்தறி ஏற்றுமதி மண்டலம் செயல்படுத்தப்படும் பகுதி, திட்டத்தொகை மற்றும் பிற விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | திட்டப் பகுதி | உற்பத்தி இரகம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | நாகர்கோவில் | டெர்ரி டவல்<br>நிலை I<br>நிலை II | <br>51.09<br>343.47 |
| 2 | விருதுநகர் | சாப்பாட்டு மேசை விரிப்பு | 64.05 |
| 3 | நாகப்பட்டினம் | பட்டு அலங்கார ரகம் | 55.17 |
| 4 | திருவள்ளூர் | வீட்டு உபயோக துணி ரகம் | 89.97 |



2008 மே 7]

பயனாளிகளுக்குத் தேவையான நெசவுத்திறன் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி வழங்கி, அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டு வசதிகள் ஏற்படுத்தி, ஏற்றுமதியாளர்களுடன் நேரடியாக இணைத்து, ஏற்றுமதி விற்பனையை மேம்படுத்தி, கைத்தறி நெசவாளர்களின் வருவாயை அதிகரிப்பதே இத்திட்ட நோக்கமாகும்.

### 4.09. நெசவாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள அனைத்து நெசவாளர்களுக்கும் தொடர்ந்து வேலைவாய்ப்பும், நியாயமான கூலியும் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருடமும் அடிப்படைக் கூலியுடன், 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டது. 1-11-2004 முதல் அகவிலைப்படி உயர்த்தப்படவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள அனைத்து நெசவாளர்களுக்கும் 1-5-2007 முதல் அடிப்படைக் கூலியில், 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு அரசு வழங்கியுள்ளது.

### 4.10. வடிவமைப்பு நூலகங்கள் அமைத்தல்

19-04-2007 அன்று, இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறு, வடிவமைப்புகளைச் சேகரிக்கவும், நெசவாளர்களுக்கு வடிவமைப்புகள் வழங்கவும், கைத்தறி உற்பத்தி மையங்களான காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் அலுவலகத்தில் வடிவமைப்பு நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 4.11. பொது வசதி மையம் / சமுதாயக் கூடம் அமைத்தல்

19-4-2007 அன்று, இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறு, சென்னிமலை, அருப்புக்கோட்டை, எமனேஸ்வரம், சின்னாளப்பட்டி, குறிஞ்சிப்பாடி, மதுரை மற்றும் ஆரணி பகுதிகளில் ஒவ்வொரு பகுதியிலும் ரூ.10 இலட்சம் மதிப்பில் பொது வசதி மையம் / சமுதாயக் கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.12. கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள்

அரசு கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் வழங்குவதற்கான தடை ஆணையினை நீக்கி அரசாணை எண் 71,

[2008 மே 7

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19-7-2006-ல் ஆணையிட்டுள்ளது. இதன் அடிப்படையில், கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் நிறுவனங்களில் பணியில் இருக்கும்போது காலமான தொழிலாளர்கள்/ பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 62 நபர்களுக்கும், கைத்தறித் துறையில் பணியாற்றி காலமான பணியாளர் ஒருவரின் வாரிசுதாரருக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**5. பகுதி–2 திட்டங்கள்—2008–09**

2008-09 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் பின்வரும் மூன்று திட்டங்கள் அரசால் செயற்படுத்தப்படவுள்ளன.

- கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள பாவு ஓடுதல் மற்றும் கஞ்சி தோய்த்தல் ஆலையினை ரூ.30 இலட்சம் செலவில் நவீனப்படுத்துதல்.
- ஆணையரகத்திலும், கடலூர் சரகத்திலும் பழுதடைந்த வாகனங்களுக்குப் பதிலாக ரூ. 9.50 இலட்சம் செலவில் புதிய வாகனங்கள் வாங்குதல்.
- நெசவாளர் மற்றும் வடிவமைப்பாளர் திட்டம், கோ-ஆப்டெக்ஸ் மூலமாக ரூ. 15 இலட்சம் செலவில் செயல்படுத்துதல்.

**6. நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள், 2008–09**

➢ கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டிச் சுமையினைக் குறைக்கும் பொருட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 விழுக்காடு வட்டி மானியம் 30-9-2002 முடிய வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டம் 2002-ல் திடீரென நிறுத்தப்பட்டது. தற்போது, அரசு வட்டி மானியத் திட்டத்தை நடப்பாண்டிலிருந்து மீண்டும் செயல்படுத்த உள்ளதோடு, 4 விழுக்காடு மானியம் வழங்க ஆணையிட்டுள்ளதன் மூலம், வட்டி விகிதம் 12 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைகிறது. வட்டி மானியத் திட்டத்தைச் செயல்படுத்த, 2008-09 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2008 மே 7]

➢ கைத்தறி நெசவாளர்களுக்கான தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ், கைத்தறி நெசவாளர்களுக்கு "ஹட்கோ" நிறுவனம் கடன் வழங்கியுள்ளது. நெசவாளர்களின் தற்போதைய நிதிநிலை, கடனை திரும்ப செலுத்த இயலாத நிலையில் உள்ளதால், கைத்தறி நெசவாளர்களின் கடன் நிலுவைத் தொகையான ரூ. 15 கோடியினை இரத்து செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

➢ தமிழ்நாட்டில் உள்ள மூன்று இலட்சம் விசைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், கைத்தறி நெசவாளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ளது போன்று, விசைத்தறி நெசவாளர்களுக்கும், ஒரு தனி நலவாரியம் அமைத்து அதன் மூலம் நலத் திட்ட உதவிகளை இந்த அரசு வழங்கும். விசைத்தறி நெசவாளர் நலவாரியம் அமைப்பதற்கென, 2008-09 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்)**

"கோ-ஆப்டெக்ஸ்" என்ற குறியீட்டுடன் இயங்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 1935 ஆம் ஆண்டு, கூட்டுறவு அமைப்பின்கீழ் கைத்தறித் தொழிலை ஒருங்கிணைத்து மேம்பாடு காணும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்வது, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் இரகங்களை கொள்முதல் செய்து, அதனுடைய 209 (தமிழகத்தில் 139 விற்பனை நிலையங்கள் மற்றும் இதர மாநிலங்களில் 70 விற்பனை நிலையங்கள்) விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வது போன்ற பணிகளைச் செய்து வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கீழ்க்காணும் அரசு நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

(i) அரசு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

(ii) முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

(iii) பள்ளி மாணவர்கட்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், தனது "கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்" என்ற துணை நிறுவனத்தின் மூலம், வீட்டுப் பயன்பாட்டு இரகங்களான டெர்ரி டவல்கள், திரைச் சீலை இரகங்கள், படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், சிறிய அளவிலான துண்டுகள், கைலிகள், சட்டைத் துணி வகைகள் மற்றும் சமையலறை உபயோகிப்பு இரகங்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

## 2007–2008 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

2007-2008 ஆம் ஆண்டு ரூ. 375.53 கோடி மதிப்பிற்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து, கைத்தறி மற்றும் விசைத்தறி இரகங்களை கொள்முதல் செய்துள்ளது. 2007-08 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ. 125 கோடி விற்பனை இலக்கினை கடந்து, ரூ. 126.59 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

### வடிவமைப்பு மேம்பாடு

கைத்தறி இரகங்களின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடனும் வாடிக்கையாளர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையிலும், சேலைகள் மற்றும் வீட்டு உபயோகிப்பு இரகங்களில், 703 புதிய வடிவமைப்புகளை கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.

வடிவமைப்பினைப் புகுத்துவதில், கோ-ஆப்டெக்ஸால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகள் பின்வருமாறு:

- ஒரு கோணத்தில் மயிலின் வடிவமைப்பும், மறு கோணத்தில் யானையின் வடிவமைப்பும் ஒருங்கே தெரியும் வண்ணம் நெய்யப்பட்ட "மாஜிக் பட்டு சேலை".
- பட்டும் அசல் ஜரிகையும் எந்த ஒரு இடத்திலும் ஒன்று சேரா வண்ணம், புதிய தொழில் நுட்பத்தைக் கையாண்டு நெய்யப்பட்ட "இராயல் அடுக்குத் துகில் பட்டு சேலை".
- பட்டு வடிவமைப்பு ஒரு புறமும், அசல் ஜரிகை வடிவமைப்பு மறுபுறமும் கொண்டு அழகுற நெய்யப்பட்ட "சுடர்க்கொடி பட்டு சேலை".
- கஞ்சி இடாத உயர் இரக பருத்தியைக் கொண்டு நெய்யப்பட்ட பருத்தி இரக சேலைகள்.
- 108 கோலங்கள் நெய்யப்பட்ட "கோலங்கள் பட்டு சேலைகள்"



- மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்காக, "நந்தி" மற்றும் "ஓம் நமசிவாயா" வடிவமைப்புகளை கரை பகுதியிலும், லிங்கத்தின் வடிவமைப்புகளை புட்டாவிலும், முந்தியில் மீனாட்சி அம்மன் திருக்கோயில் கோபுரம் ஆகியவற்றை ஒரு சேர இணைத்து உருவாக்கப்பட்ட வடிவமைப்புச் சேலை.
- தயாரிப்பு இரகங்களை பிரபலப்படுத்தும் வகையில் தீபாவளி-2007-ன்போது, "அழகு மயில் பட்டு சேலை", "மலையரசி", "மாந்தளிர்", "மல்லிகை", "திருவரங்கம்", "நாச்சியார்" மற்றும் "இரி" ஆகிய பருத்தி இரக சேலைகள் வெளியிடப்பட்டன.
- பழைய பட்டு சேலைகளில் உள்ள வடிவமைப்புகளை நேர்த்தியாகவும், புதுமையாகவும் வடிவமைத்து அதனை வடிவமைப்பு வங்கியில் பாதுகாக்கும் நோக்குடன் கோ-ஆப்டெக்ஸ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
- வாடிக்கையாளர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில், "சித்திரை தொகுப்பு", "வைகாசி வசந்தம்", "ஆடிப்பெருக்கு" போன்ற புதிய வடிவமைப்பு தொகுப்புகளை கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.
- வீட்டு உபயோகிப்பு இரகங்களான படுக்கை விரிப்புகள், படுக்கை உறைகள், திரைச்சீலைகள், சமையலறை உபயோகிப்புகள் போன்ற இரகங்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், "இனிய இல்லம்" கண்காட்சி நவம்பர் 2007-ல் நடத்தப்பட்டது.

### புதிய முயற்சிகள்

போட்டிகள் நிறைந்த வணிகச் சந்தையினை எதிர்கொள்ளும் நோக்கோடு, புதிய வடிவமைப்புகளை, எழில்மிகு வண்ணக்கலவைகளில் உருவாக்கி விற்பனைக்கு வெளிக் கொணரும் பணியில், கோ-ஆப்டெக்ஸ் ஆர்வமுடன் செயலாற்றுகிறது. 2007-08 ஆம் ஆண்டு நிகழ்வுற்ற சாதனைகளில் சில பின்வருமாறு:—

- ஏற்றுமதி இரகங்களில், இயற்கை சாயங்கள் மற்றும் இயற்கை பருத்தி இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.
- சிறாருக்கும், ஆடவருக்கும் ஆயத்த சட்டை இரகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

[2008 மே 7

- வாசனையுடன் கூடிய "அரோமா" சட்டைகள்
- இருபுறமும் பயன்படுத்தக்கூடிய ரிவர்சிபிள் சட்டை இரகங்கள்
- பருத்தி இரக "டெனிம்" சட்டை இரகங்கள்
- 2/100s உயர் இரக பருத்தி இழைகளைக் கொண்டு நெருக்கமாக நெய்து உருவாக்கப்பட்ட "பிளாட்டினம்" சட்டை இரகங்கள்.
- இயற்கை பருத்தி இழைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட "ஆர்கானிக்" சட்டை இரகங்கள்.
- அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய புதிய இரக சுடிதார்கள்
- 500 நபர்கள் அமரக்கூடிய வகையில் 16 அடி x 35 அடி அளவிலான ஒரு மிகப்பெரிய ஜமக்காளம் தயாரிக்கப்பட்டது.

மேற்காண் புதிய இரகங்களுடன், 2007-08 ஆம் ஆண்டு கீழ்க்குறிப்பிட்டுள்ள ஆயத்த சட்டை இரகங்கள் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

- தூய பருத்தி இரக "கிளாசிக்" சட்டை இரகங்கள்
- பாலியஸ்டர் இழை கலந்த "டியூரோ" சட்டை இரகங்கள்
- புதுமையான நெசவுடன் கூடிய சட்டைகள்
- வடிவமைப்பினை உள்ளடக்கிய "சுப்ரீம்" சட்டைகள்
- பாலியஸ்டர் பருத்தி இழை கலந்த குர்தா செட்டுகள்
- பளிங்கு வடிவமைப்பு (Marble finish) கொண்ட சட்டைகள்
- பட்டுச் சட்டைகள்

**திருக்குறள் பட்டுச் சேலை அறிமுகம்**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 1,330 திருக்குறட்பாக்களுடன் "அய்யன் திருவள்ளுவர்" திருவுருவம் கொண்ட கலைநயம் மிக்க அழகிய பட்டுச் சேலையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சிறப்புமிகு சேலையினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 22-4-2008 அன்று சென்னையில் வெளியிட்டுள்ளார்கள்.



2008 மே 7]

**சுய உதவிக் குழுக்களை ஊக்குவித்தல்**

கைத்தறி இரகங்கள் உற்பத்தியில், சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்த, கோ-ஆப்டெக்ஸ், கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

- விலை மதிப்புமிக்க கைப்பைகள், குழந்தைகளுக்கான ஆடைகள், ஆயத்த ஆடை போன்ற இரகங்களின் உற்பத்தியினை சுய உதவிக் குழுக்களிடம் கோ-ஆப்டெக்ஸ் ஒப்படைத்துள்ளது.
- சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் மெத்தை, தலையணை, குழந்தைகளுக்கான மெத்தை, குழந்தைகளுக்கான பருத்தி / கம்பளி ஆடைகள், தொட்டில்கள், மகளிருக்கான கைப் பைகள், செல்பேசி உறைகள் போன்ற இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை செய்து வருகிறது.

**சந்தை மேம்பாடு**

- 2007-2008 ஆம் ஆண்டில், 405 கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன்மூலம் ரூ.11.67 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது. 400-க்கும் மேற்பட்ட கண்காட்சிகளை தமிழகத்திலும், வெளி மாநிலங்களிலும் தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- தேசிய கைத்தறி எக்ஸ்போ-2008, கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் 19-3-2008 முதல் 11-4-2008 முடிய நடத்தப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலிருந்து 138 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இக்கண்காட்சியில் பங்கு கொண்டன. இக்கண்காட்சியில் ரூ.4.25 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**8. கூட்டுறவு நூற்பாலைகள்**

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான தரமான சிட்டா (Hank yarn) நூலினையும், விசைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான கோன் (Cone yarn) நூலினையும் நியாயமான விலையில் தங்குதடையின்றி வழங்கும் நோக்கத்திற்காக, 1958 முதல் 1985 வரை, 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.70 இலட்சம் கதிர் திறனுடன் நிறுவப்பட்டன.

[2008 மே 7

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட 18 கூட்டுறவு நூற்பாலைகளில், கீழ்க்கண்ட 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

- பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம் (தூத்துக்குடி மாவட்டம்)
- அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி (தேனி மாவட்டம்)
- தருமபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி மாவட்டம்)
- புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்)
- கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி (கன்னியாகுமரி மாவட்டம்)

கைத்தறி நெசவாளர்களின் சிட்டாநூல் தேவையினை மேற்கண்ட 5 கூட்டுறவு நூற்பாலைகள் ஓரளவிற்கு பூர்த்தி செய்து வருகின்றன.

**9. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை**

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தனது செயல்பாட்டினை 1964 ஆம் ஆண்டில் தொடங்கி, கூட்டுறவு அமைப்பின்கீழ் இல்லாத நெசவாளர்களுக்குக் கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காகக் கடனுதவி வழங்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.429.23 இலட்சமாகும். இதில் தமிழக அரசின் பங்கு ரூ. 267.00 இலட்சம் ஆகும். மீதி மூலதனமான ரூ. 162.23 இலட்சம் உறுப்பினர்களால் செலுத்தப்பட்டதாகும். இக்கழகம் நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளான பாரத ஸ்டேட் வங்கி மூலம் ரூ. 330.00 இலட்சமும், பாரத பாட்டியாலா வங்கி மூலம் ரூ. 220.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 550.00 இலட்சம் அளவிற்கு கடன் வசதி பெற்றுள்ளது.

தற்போது தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் 11,841 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், 2007-08 ஆம் ஆண்டில் 580 உறுப்பினர்களுக்கு ரூ.207.32 இலட்சம் கடனுதவி வழங்கியுள்ளது.



2008 மே 7]

மாற்று ஏற்பாட்டின் ஒரு பகுதியாக, உத்திரபிரதேச மாநிலம் லக்னோவிலுள்ள தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்துடன் ஒருங்கிணைந்து ஆலைவாயில் விலையில் நூல் வழங்கும் திட்டத்தின்கீழ் நூல் விற்பனையினை மேற்கொள்ள இக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**10. தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம்**

தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம் ISO 9001 சான்று பெற்ற ஒரு மாநில அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான தரமான சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றது. இந்நிறுவனம் 2007-2008 ஆம் ஆண்டில் 48,590 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து 51,634 சரிகை மார்க்குகளை ரூ. 26.78 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ. 9.80 இலட்சம் உத்தேச நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு சரிகை நிறுவனம், சரிகை உற்பத்தியினை மேற்கொள்வதுடன் மத்திய சரிகை கொள்முதல் குழுவின் ஒதுக்கீட்டு ஆணையின்படி பெறப்படும் சரிகை பார்சல்களை தரப் பரிசோதனை மேற்கொள்ளும் பணியினையும் செய்து வருகின்றது. இந்நிறுவனம் 2007-08 ஆம் ஆண்டில் குறைந்த கட்டணத்தில் 1,729 சரிகை மாதிரிகளை தரப் பரிசோதனை செய்துள்ளது.

கும்பகோணம் பகுதியின் சரிகை தேவையினைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் கும்பகோணம் கிளை, 1999 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கிளை ஆண்டொன்றுக்கு 18,000 சரிகை மார்க்குகள் உற்பத்தி செய்யும் திறனுடன் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றது.

இந்நிறுவனம் "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகளில் உள்ள சரிகையினை எவ்வித இழப்புமின்றி தர ஆய்வு மேற்கொண்டு வருகின்றது. இவ்வியந்திரத்தின்மூலம் 2007-08 ஆம் ஆண்டில் மொத்தம் 12,191 பட்டு புடவைகள், பாவாடைகள் மற்றும் வேட்டிகள் [illegible]ள சரிகையை ஆய்வு செய்து, ரூ. 3.11 இலட்சம் ஆய்வுக் க[illegible]மாக வசூலிக்கப்பட்டுள்ளது.

[2008 மே 7

சரிகையின் தரம் அறியும் இயந்திரம் அதாவது "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" (X-Ray Fluorescence Analyser) ஒன்றினை, சென்னையில் *24-9-2007* அன்று தமிழ்நாடு சரிகை நிறுவனம் நிறுவியுள்ளது.

ஐதராபாத்திலுள்ள என்.எப்.டி.டி.சி (Non-Ferrous Materials Technology Development Centre) நிறுவனத்தின் உதவியுடன், சரிகையிலுள்ள வண்ணம் மற்றும் அதன் பளபளப்பு ஆகியவை குறையாமல் உற்பத்தி செய்ய மின்னாற்பகுப்பு முறையில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை வழங்கியுள்ளது. இந்தப் புதிய தொழில்நுட்பம் காஞ்சிபுரத்திலுள்ள அனைத்து மின்னாற்பகுப்பு இயந்திரத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிறுவனம், வெள்ளியிழை உற்பத்தியினை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனை பெற, குமரகுரு தொழில்நுட்ப கல்லூரி, தொழில்நுட்பக் தகவல் கணிக்கும் நிறுவனம் (Technology Information Forecasting Council) போன்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்பாடு (MOU) மேற்கொண்டுள்ளது.

**தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் 2008–09 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்**

- *2008-09* ஆம் ஆண்டில், இந்நிறுவனம் *81,000* மார்க் சரிகை உற்பத்தி செய்யவும், அதே அளவு கொண்ட சரிகை மார்க் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டத்தின்கீழ், ஐதராபாத்திலுள்ள என்.எப்.டி.டி.சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன், தமிழ்நாடு சரிகை நிறுவனத்தில் வெள்ளி இழை உற்பத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
- தரப்பரிசோதனை முறைக்கு தேசிய அங்கீகாரம் பெற திட்டமிடப்பட்டுள்ளது.
- கதர் மற்றும் கிராமத் தொழில்கள் நிறுவனங்களுக்கு, சரிகை விநியோகம் செய்வதற்கு கதர் மற்றும் கிராமத் தொழில் வளர்ச்சி ஆணையகத்தின் சான்றிதழ் பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



2008 மே 7]

**11. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, ஈரோடு**

தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளையும், பருத்தி மற்றும் செயற்கை இழை நூலினை பதனிடும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை, ஒரு மாதத்தில் சுமார் *15.00* இலட்சம் மீட்டர் துணிகளை, பதனிடும் திறன் பெற்றுள்ளது. இவ்வாலை, அரசின் சீருடை திட்டத்திற்குத் தேவைப்படும் துணிகளைப் பதனிட்டு வழங்கும் பணியினை மேற்கொள்வதோடு, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், சர்வோதயா சங்கம், மத்திய சிறைச்சாலை, கேரளா மற்றும் கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகங்களிடமிருந்தும் மற்றும் தனியார் ஏற்றுமதியாளர்களிடமிருந்தும் வழங்கப்படும் துணிகளையும் பெற்று பதனிட்டு வருகிறது.

**2007–08 ஆம் ஆண்டின் சாதனைகள்**

- தமிழ்நாடு கூட்டுறவு பதனிடும் ஆலை *2007-08* ஆம் ஆண்டில் ரூ.*13.77* கோடி மதிப்பிற்கு வணிகம் செய்து ரூ.*2.77* கோடி உத்தேசமாக நிகர இலாபம் ஈட்டியுள்ளது.
- பெருந்துறையில் உள்ள சிப்காட் நிறுவனத்திடம், *9.62* ஏக்கர் நிலத்தை *99* வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் பெற்று புதிய துணி நூல் பதனிடும் ஆலை ஆரம்பிக்கப்படவுள்ளது.
- ஆலையில் உட்பகுதி இணைப்பு (Local Area Network) வசதி அமைக்கப்பட்டு, ஆலையில் உள்ள அனைத்து கணினிகளும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**2008–09 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

- தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, தனது உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்த தற்போதுள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மாற்றி ஆலையை ரூ.*41* இலட்சம் செலவில் நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- ஆலையில் சவ்வூடு பரவுதல் முறை சாதனம் (Reverse Osmosis Plant) ரூ.*1.69* கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 மே 7

## 12. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்

மூடப்பட்ட துணி நூல் ஆலைகளால் ஏற்பட்ட வேலைவாய்ப்பின்மைக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும், துணி நூல் தொழிலை மறுசீரமைக்கும் வகையிலும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகத்தின்கீழ், ஒவ்வொன்றும் 96 தறிகளைக் கொண்ட 2 விசைத்தறிக் கூடங்கள், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையிலும், ஈரோடு மாவட்டம், சிவகிரியிலும் உள்ளன. மேலும் கோவை குறிச்சி பகுதியில் 12 தானியங்கி தறிகளைக் கொண்ட தறிக்கூடம் ஒன்றும் உள்ளது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், சூட் மற்றும் சட்டைக்குத் தேவையான பாலியஸ்டர் துணி வகைகளை குறிச்சி தானியங்கி கூடம், சிவகிரி மற்றும் அருப்புக்கோட்டை விசைத்தறிக் கூடங்களில் உற்பத்தி செய்து வருகிறது.

அரசின் இலவச சீருடைத்துணி வழங்கும் திட்டத்திற்கான வெள்ளை நிற சட்டைத் துணி, நீல நிற தாவணி மற்றும் பாவாடைக்கான துணி போன்றவற்றை இக்கழகம் உற்பத்தி செய்து வருகிறது. மேலும் இக்கழகம் பாலியஸ்டர் சீருடைத் துணி தயாரித்து உற்பத்தி செய்து வழங்குவதற்கான ஆணைகளை மாநில போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்வாரியம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், காவல் துறை மற்றும் பிற பொது நிறுவனங்களிடமிருந்து பெற்று வழங்கி வருகிறது. இதன்மூலம் இக்கழகம், தமிழகத்தின் நிறுவனங்களுக்கான சந்தையில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது.

இக்கழகம் 2007-08 ஆம் ஆண்டில் ரூ. 31.42 கோடி அளவிற்கு வணிகம் செய்து ரூ. 102.70 இலட்சம் (உத்தேசமாக) இலாபம் ஈட்டியுள்ளது.

இக்கழகம் அதன் சொந்த உற்பத்தி மூலம் இலவச சீருடைத் துணி வழங்கும் திட்டத்திற்கான 17.95 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளையும், அரசு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் ரூ. 711.22 இலட்சம் மதிப்பிலான துணிகளையும் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.



2008 மே 7]

### 2008-09 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

2008-09 ஆம் ஆண்டில், அரசு திட்டங்களுக்கென விநியோகம் செய்யப்பட வேண்டிய, ரூ. 2450.22 இலட்சம் மதிப்புள்ள 113.36 இலட்சம் மீட்டர் வெள்ளை நிற சட்டை துணியையும், தாவணி துணியையும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து கொள்முதல் செய்ய இக்கழகம் உத்தேசித்துள்ளது.

2008-09 ஆம் ஆண்டில் இக் கழகம் ரூ. 3161.44 இலட்சம் அளவிற்கு வணிகம் மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்துள்ளது.

## 13. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), சென்னை

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினை நெறிப்படுத்தும்பொருட்டு, டிசம்பர், 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் உறுப்பினராகவுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை, நியாயமான விலையில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்து விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக தமிழக அரசு பங்கு மூலதனமாக ரூ. 25 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ. 2.07 கோடியும், ரொக்கத்திற்கு பஞ்சு வாங்கும்பொருட்டு இணையத்திற்கு வழங்கியுள்ளது. தற்போது, டான்ஸ்பின் நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கும் 5 கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சுத் தேவையில், 15 விழுக்காடு தேவையினை பூர்த்தி செய்து வருகிறது.

2007-08 ஆம் ஆண்டில், டான்ஸ்பின் நிறுவனம், ரூ. 10.18 கோடி மதிப்புள்ள 11,100 பேல்கள் பஞ்சினை கொள்முதல் செய்து, உறுப்பினராக உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விற்பனை செய்துள்ளது. இதுதவிர, நூற்பாலைகளுக்குத் தேவையான பண்டகப் பொருட்கள் மற்றும் சிப்பப் பொருட்களை (Stores and Packing materials) ரூ.49.03 இலட்சத்திற்கு கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

டான்ஸ்பின் நிறுவனம், 2007-08 ஆம் ஆண்டில் ரூ. 10.68 கோடி அளவிற்கு வணிகம் செய்து, ரூ. 6.00 இலட்சம் (உத்தேசமாக) இலாபம் ஈட்டியுள்ளது.

[2008 மே 7

## 14. 2008-09 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

"கைத்தறி மற்றும் துணி நூல்" மானியக் கோரிக்கை எண் 17-இன் கீழ், 2008-09 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.573.79 கோடி பின்வரும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு 2008-09 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் (கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்படும் எடுத்தாளும் தொகை உட்பட) | 27,150.00 |
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 1,120.00 |
| 3 | விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 6,684.00 |
| 4 | கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடி | 4,000.00 |
| 5 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விற்பனை ஊக்குவிப்பு/ தள்ளுபடி | 7,800.00 |
| 6 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செறிவுப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1,000.00 |
| 7 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கைத்தறிகளை மேம்படுத்த குழும அணுகுமுறை | 5,000.00 |
| 8 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 425.00 |
| 9 | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 417.39 |



2008 மே 7]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 10 | மகாத்மா காந்தி புங்கர் பீமா திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 160.00 |
| 11 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 330.00 |
| 12 | பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ்க்கு வட்டி மானியம் | 1,200.00 |
| 13 | மைய சிக்கன நிதித் திட்டம் | 425.00 |
| 14 | அமலாக்கப் பிரிவின் நிர்வாகச் செலவு | 117.84 |
| 15 | ஜவுளித் தொழில் மையங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு திட்டத்தைச் செயல்படுத்துதல் | 0.01 |
| 16 | உயர் தொழில்நுட்ப விசைத்தறி நெசவுப் பூங்காக்கள் அமைக்கும் திட்டம் | 0.01 |
| 17 | விசைத்தறிக் கணக்கெடுப்பு (ஈரோடு விசைத்தறி சேவை மையத்திற்கான வாடகை) | 0.25 |
| 18 | தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சகான் யோஜனா திட்டம் | 0.06 |
| 19 | விசைத்தறி நெசவாளர் நல வாரியத்திற்கு உதவி | 100.00 |
| 20 | பாவு ஓடுதல் மற்றும் கஞ்சி தோய்த்தல் ஆலையினை நவீனப்படுத்துதல் | 30.00 |
| 21 | நெசவாளர் மற்றும் வடிவமைப்பாளர் திட்டம் | 15.00 |
| 22 | தறிக்கூடம் அமைக்கும் திட்டம் | 0.01 |
| 23 | தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம் | 0.01 |
| 24 | தலைமைச் செயலக பொருளாதாரப் பணிகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள்) | 162.38 |
| 25 | நிர்வாகச் செலவுகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள்) | 1,242.64 |
| | மொத்தம் | 57,379.60 |

[2008 மே 7

## அட்டவணை–1

**ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மைய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கைத்தறி செறிவுப்பகுதிகள் (Handloom Clusters)**

| வ. எண் | கைத்தறி செறிவுப்பகுதியின் பெயர். | திட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) | மாவட்டம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருச்சிராப்பள்ளி | 200.00 | திருச்சிராப்பள்ளி |
| 2 | திருவண்ணாமலை | 200.00 | திருவண்ணாமலை |
| 3 | குறிஞ்சிப்பாடி | 200.00 | கடலூர் |
| 4 | நிலையூர் | 59.70 | மதுரை |
| 5 | வீரவநல்லூர் | 59.70 | திருநெல்வேலி |
| 6 | பாதிரிவேடு | 59.70 | திருவள்ளூர் |
| 7 | ஜெயங்கொண்டம் | 59.70 | பெரம்பலூர் |
| 8 | கண்டாச்சிபுரம் | 59.70 | விழுப்புரம் |
| 9 | ஆப்பக்கூடல் | 59.70 | ஈரோடு |
| 10 | சோளிங்கர் | 59.70 | வேலூர் |
| 11 | சிறுமுகை | 59.70 | கோயம்புத்தூர் |
| 12 | தாண்டாம்பாளையம் | 59.70 | ஈரோடு |
| 13 | பழநி | 59.70 | திண்டுக்கல் |
| 14 | எமனேஸ்வரம் | 59.90 | இராமநாதபுரம் |
| 15 | வெங்கமேடு | 60.00 | கரூர் |
| 16 | எடப்பாடி | 52.60 | சேலம் |
| 17 | தாசப்பகவுண்டன்புதூர் | 59.08 | ஈரோடு |
| 18 | சென்னிமலை | 58.30 | ஈரோடு |
| 19 | பள்ளியாடி | 58.50 | கன்னியாகுமரி |
| 20 | திருப்பூர் | 59.00 | கோயம்புத்தூர் |



2008 மே 7]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 21 | புனல்வேலி | 55.00 | விருதுநகர் |
| 22 | திருப்புவனம் | 58.10 | கும்பகோணம் |
| 23 | ஆட்டையாம்பட்டி | 59.99 | சேலம் |
| 24 | வண்டியூர் | 60.00 | மதுரை |
| 25 | சாயர்புரம் | 59.00 | திருநெல்வேலி |
| 26 | சின்னாளப்பட்டி | 59.00 | திண்டுக்கல் |
| 27 | குடியாத்தம் | 60.00 | வேலூர் |
| 28 | புதுப்பேட்டை | 58.25 | கடலூர் |

## அட்டவணை–2

**ஜவுளித் தொழில் விவரம்**

| இனம் | இந்தியா | தமிழ்நாடு | தமிழகத்தின் நிலை |
|---|---|---|---|
| நூற்புத் தொழில் | | | |
| ஆலைகளின் எண்ணிக்கை | 3,039 | 1,248 | 1 |
| வேலையாட்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 8.94 | 2.11 | 1 |
| கதிர்களின் எண்ணிக்கை (மில்லியன்) | 39.27 | 14.74 | 1 |
| விசைத்தறித் தொழில் | | | |
| விசைத்தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 19.03 | 3.66 | 2 |
| நெசவாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 47.57 | 9.14 | 2 |

[2008 மே 7

| கைத்தறித் தொழில் | | | |
|---|---|---|---|
| கைத்தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 34.86 | 4.13 | 2 |
| நெசவாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 65.50 | 6.08 | 2 |
| கைத்தறித் துணி உற்பத்தி (பில்லியன் ச.மீ) | 6.00 | 0.70 | 1 |
| மதிப்பு (ரூ.கோடியில்) | 18,000 | 2,500 | 1 |
| இதர தொழில்கள் | | | |
| மின் விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்கள் | 2,510 | 985 | 1 |
| கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்கள் | 10,397 | 2,614 | 1 |
| பின்னலாடை மற்றும் ஆடை நிறுவனங்கள் | 8,000 | 4,000 | 1 |



2008 மே 7]

## இணைப்பு III

(174 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 18—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

## பட்டு வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

பட்டு வளர்ப்பு விவசாயம் சார்ந்த ஒரு ஊரகத் தொழிலாகும். இத்தொழில் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதுடன் இத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஆண்டுதோறும் தொடர் வருவாயினை வழங்குகிறது. சீனாவுக்கு அடுத்து அதிக அளவு கச்சாப் பட்டு உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடாகவும், அதிக அளவு பட்டு நூல் மற்றும் பட்டு ஆடைகள் நுகர்வு செய்யும் நாடாகவும் இந்தியா உள்ளது.

1.1. உலக கச்சாப் பட்டு உற்பத்தியில் சீனா 81 விழுக்காடும், இந்தியா 14.4 விழுக்காடும் உற்பத்தி செய்கின்றன. தற்போதைய நிலையில் இந்தியாவின் கச்சாப் பட்டுத் தேவை அளவான 26,000 மெட்ரிக் டன்னில் 69 விழுக்காடு அளவான 18,000 மெட்ரிக் டன் மட்டுமே நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. எஞ்சியவை சீனாவிலிருந்து இறக்குமதியாகிறது. ஆண்டுதோறும் 5 விழுக்காடு அளவில் கச்சாப்பட்டுத் தேவையும் வளர்ந்து வருகிறது. எனவே, இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்பின் வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் அதிகமான வாய்ப்புகள் உள்ளன.

1.2. இந்தியாவில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளத்தினை அடுத்து தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத் தொழில் எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நீலகிரி, விருதுநகர்,

திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழக விவசாயிகளிடையே பட்டு வளர்ப்பு நடவடிக்கைகள் மீதான ஆர்வம் புத்துணர்வு பெற்று வருகிறது. 2003-04 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 10,000 ஏக்கராக இருந்த மல்பரி பரப்பு 251 விழுக்காடு அதிகரித்து 35,117 ஏக்கரில் தற்போது மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 28,996 விவசாயிகள் மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். 23-03-2007 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 10,000 ஏக்கர் பரப்பில் கூடுதலாக மல்பரி நடவு செய்யப்படும் என்பதற்கிணங்க 2007-08 ஆம் ஆண்டில் 10,411 ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

1.3. அதிகரித்து வரும் பட்டு முட்டைகள் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் 2007-08 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறையின்கீழ் செயல்படும் 11 பட்டு முட்டை உற்பத்தி மையங்களில் 45.83 இலட்சம் கலப்பினப் பட்டு முட்டைத் தொகுதிகளும் 15.29 இலட்சம் வெண்பட்டு முட்டைத் தொகுதிகளும், உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கோயம்புத்தூர், தாளவாடி, ஓசூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 4 பட்டு முட்டை உற்பத்தி மையங்கள் 2006-07 ஆம் ஆண்டு முதல் அதிக அளவில் வெண்பட்டு முட்டைகளை தயாரிக்க ஆரம்பித்துள்ளன. 2007-08 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள 15.29 இலட்சம் வெண்பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தியே துறையின் வரலாற்றில் உயர்ந்தபட்ச உற்பத்தியாகும். 100 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கான பட்டுக்கூடு அறுவடை 44.70 கிலோவிலிருந்து 63.90 கிலோவாக உயர்ந்துள்ளது.

1.4. மாநிலத்தில் பட்டுக்கூடு உற்பத்தி 2005-06 ஆம் ஆண்டில் 5,225 மெட்ரிக் டன்னாக இருந்த நிலை மாறி 2006-07 ஆம் ஆண்டில் 7,931 மெட்ரிக் டன் மற்றும் 2007-08 ஆம் ஆண்டில் 9,676 மெட்ரிக் டன் என்ற அளவுக்கு உற்பத்தி பெருகி குறிப்பிடத்தக்க வளர்ச்சி பதிவாகியுள்ளது. தமிழகத்தில் தேவையான அளவிற்கு பட்டு நூற்பு அலகுகள் இல்லாததால் மாநிலத்தில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகளில் 65 விழுக்காடு கர்நாடக மாநிலத்திற்கு விற்பனைக்காகச் செல்கின்றது. மாநிலத்தில் பட்டு நூற்புப் பிரிவினை வலுப்படுத்தும் வகையில் பின்வரும் பல்வேறு நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளன:



- மூடப்பட்டுள்ள அரசு, கூட்டுறவுச் சங்கம் மற்றும் தனியார் பிரிவில் உள்ள நூற்பு அலகுகளை மீண்டும் புதுப்பித்தல்
- செயல்பட்டு வரும் அலகுகளை வலுப்படுத்துதல்
- பல்வேறு நிலைகளில் புதிய பட்டு நூற்பு அலகுகளை நிறுவுதல்

மாநிலத்தில் 2006-07 ஆம் ஆண்டில் ரூ.112.922 இலட்சம் மதிப்பீட்டில் 323 ஏனங்களுடன் கூடிய 59 புதிய காட்டேஜ் பேசின் பட்டு நூற்பகங்களும், 62 மின் மோட்டார் சர்க்காக்களும் நிறுவப்பட்டுள்ளன. மாநிலத்தின் முதல் தானியங்கி பட்டு நூற்பாலை கோபிசெட்டிபாளையம் பகுதியில் உருவாகி வருகிறது. பலமுனை பட்டு நூற்பகங்கள் அதிக மேம்பட்டவையாதலால் 2007-08 ஆம் ஆண்டில் இத்தகைய பலமுறை நூற்பகங்கள் நிறுவ அதிக உந்துதல் அளிக்கப்பட்டது. 2007-08 ஆம் ஆண்டில் ரூ. 190.00 இலட்சம் மதிப்பீட்டில் 14 பலமுனை பட்டு நூற்பகங்களும், 20 காட்டேஜ் பேசின் நூற்புகங்களும் நிறுவ ஒப்புளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் 6 பட்டு முறுக்ககங்கள் நிறுவ ரூ. 36.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. நன்னகரம் மற்றும் நாகர்கோவிலில் உள்ள அரசு பட்டு நூற்பகங்களின் பழைய நூற்பு இயந்திரங்களுக்குப் பதிலாக ரூ.4.20 இலட்சம் செலவில் புதிதாக நூற்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பட்டு நூற்புப் பிரிவினை வலுப்படுத்தும் இத்தகைய நடவடிக்கைகள் 2008-09 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அரசு பட்டு நூற்பகங்கள் மற்றும் சர்வோதயச் சங்க நூற்பகங்களையும் 2008-09 ஆம் ஆண்டில் புதுப்பொலிவுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் தனியார் தொழில் முனைவோரால் மேலும் அதிக அளவு பட்டு நூற்பகங்கள் நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1.5. தரமான வெண்பட்டு உற்பத்திக்கு மாநிலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில் 321.80 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது மொத்த கச்சாப் பட்டு உற்பத்தியில் 23.5 விழுக்காடு ஆகும்.

[2008 மே 7

## 2. 2007–08 ஆம் ஆண்டின் சாதனைகள்

### 2.1. இயல்பு

*2007-08* ஆம் ஆண்டில் முக்கியச் செயல்பாடுகளில் அடையப்பட்ட சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | செயல்பாடுகள் | அலகு | வருடாந்திர இலக்கு | சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | | | அளவு | விழுக்காடு |
| 1 | மல்பரி நடவு | ஏக்கர் | 10,000 | 10,411 | 104 |
| 2 | பட்டு முட்டை நுகர்வு | இலட்சத்தில் | 135.00 | 151.42 | 112 |
| 3 | பட்டுக்கூடு உற்பத்தி | மெட்ரிக் டன் | 8370 | 9676 | 115 |
| 4 | கச்சாப்பட்டு உற்பத்தி | மெட்ரிக் டன் | 1200 | 1368 | 114 |
| 5 | வேலை வாய்ப்பு உருவாக்கம் | நபர்கள் | 50,000 | 52,055 | 104 |

### 2.2. நிதி

*2007-08* ஆம் ஆண்டில் மத்திய பட்டு வாரியத்தின் மானியப் பங்காக ரூ.*684.014* இலட்சமும், மாநில அரசுப் பங்காக ரூ.*492.940* இலட்சமும், பயனாளிகள் பங்காக ரூ.*732.295* இலட்சமும் உள்ளடக்கி, மொத்தம் ரூ.*1,909.249* இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பட்டு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## 3. அரசு பட்டுக் கூடு அங்காடிகள்

ஓசூர், தருமபுரி, பெண்ணாகரம், கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி, வாணியம்பாடி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, நன்னகரம், நாகர்கோவில், திருவில்லிபுத்தூர், சிவகங்கை ஆகிய *17* இடங்களில் அரசுப் பட்டுக் கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, மாநிலத்தில் *2* நடமாடும் பட்டுக் கூடு அங்காடிகள் பழனி மற்றும் உடுமலைப்பேட்டையில் செயல்பட்டு வருகின்றன. பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகள் இந்தப் பட்டுக் கூடு அங்காடிகளில் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. பட்டுக் கூடுகளின் தர அடிப்படையில் அதற்கான அடிப்படை விலை, பட்டுக் கூடு அங்காடி அலுவலரால் நிர்ணயிக்கப்படுகிறது. அரசு அலகுகளும், தனியார் பட்டு நூற்பாளர்களும் பகிரங்க ஏலத்தில் பங்கு கொண்டு பட்டுக் கூடுகளைக் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.



2008 மே 7]

*2007-08* ஆம் ஆண்டில் *3315.80* மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் அரசு பட்டுக் கூடு அங்காடிகள்மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. பட்டுக் கூடு கொள்முதல் பரிமாற்றம் மூலம் வர்த்தக மதிப்பில் பட்டுக் கூடு கொள்முதல் செய்வோரிடமும், விற்பனை செய்வோரிடமிருந்தும் தலா *0.75* விழுக்காடு வீதம் ரூ.*50.66* இலட்சம் விதிப்புத்தொகையாக (Levy) *2007-08* ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறையால் வசூலிக்கப்பட்டுள்ளது.

## 4. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்

*4.1* மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டினை விற்பனை செய்ய பயன்படுத்தும் மையமே "பட்டுப் பரிமாற்றகம்" (Silk Exchange) ஆகும். அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், *1991* முதல் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது. பட்டு நூற்பாளர்களால் பட்டுப் பரிமாற்றகத்திற்குக் கொண்டுவரப்படும் அனைத்து பட்டுநூல் தொகுதிகளும், காஞ்சிபுரத்தில் மத்திய பட்டு வாரியத்தால் நிறுவப்பட்டுள்ள "பட்டு பதனிடுதல் மற்றும் சோதனை மையத்தில்" தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. பட்டின் தரத்தின் அடிப்படையிலும், கர்நாடக மாநிலத்தில் நிலவும் கச்சாப் பட்டு விலைக்கு ஏற்பவும் அடிப்படை விலை நிர்ணயிக்கப்பட்டு பின்னர் ஏலத்திற்கு வைக்கப்படுகிறது. தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் (TANSILK), பட்டு நூற்பாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பட்டு முறுக்காளர்கள் மற்றும் இதர பட்டு நுகர்வோர்கள் ஏலத்தில் பங்கேற்று கச்சாப் பட்டினைக் கொள்முதல் செய்கின்றனர். பட்டுப் பரிமாற்றகம், நூற்பாளர்களுக்கு பட்டு நூல் பரிமாற்றம் செய்தமைக்கான தொகைகள் உடனடியாக வழங்கப்படுவதை உறுதி செய்கிறது.

*4.2.* அண்ணா பட்டுப் பரிமாற்றகம், பட்டு உற்பத்தியாளர் மற்றும் பட்டு நுகர்வோரிடையே நேரடித் தொடர்பினை ஏற்படுத்தும் பாலமாகச் செயல்படுவதுடன் தரகு முகவர், இடைத்தரகர்களின் தலையீட்டைப் பெருமளவில் தவிர்ப்பதால் இவ்வகையான கச்சாப் பட்டு வர்த்தக வசதியானது, மாநிலத்தில் பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. *2005-06* ஆம் ஆண்டில் *107* மெட்ரிக் டன் பட்டு நூல் பரிமாற்றம் செய்யப்பட்டது. *2007-08* ஆம் ஆண்டில் இது *159.85* மெட்ரிக் டன் ஆக உயர்ந்து சாதனை நிகழ்த்தியுள்ளது.

[2008 மே 7

## 5. டான்சில்க் (TANSILK), காஞ்சிபுரம்

5.1 "தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், (TANSILK)" காஞ்சிபுரம், தமிழ்நாட்டிலுள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக 1978-ல் பதிவு செய்யப்பட்டது. இந்த இணையம் அண்ணா பட்டுப் பரிமாற்றகத்திலிருந்து பெரும்பாலான கச்சாப் பட்டினைக் கொள்முதல் செய்கிறது. காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் ஈரோடு ஆகிய 7 இடங்களில் இணையம் கிளை மையங்களைக் கொண்டுள்ளது.

5.2 இந்த இணையம் மலிவான விலையில் தரமான பட்டினை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சான்று பெற்ற சர்வோதய சங்கம் போன்ற பிற நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்கிறது. 2005-06 ஆம் ஆண்டில் 381 மெட்ரிக் டன் ஆக இருந்த பட்டு நூல் வர்த்தகம் 2007-08 ஆம் ஆண்டில் 468 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

## 6. பட்டு மற்றும் சரிகை பரிசோதனைக் கூடம், காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தில் 11-03-2007-ல் பட்டு மற்றும் சரிகை பரிசோதனைக்கூடம் மத்திய பட்டு வாரியத்தால் துவக்கப்பட்டது. இங்கு பட்டு நுகர்வோர், பட்டு உற்பத்தியாளர் மற்றும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு எக்ஸ்ரே பகுப்பாய்வின்மூலம் பட்டு மற்றும் சரிகைப் பொருட்களுக்கு எவ்வித சேதமுமின்றி உடனடிப் பரிசோதனை செய்ய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

## 7. 2008–09 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

7.1 2008-09 ஆம் ஆண்டில் இருவேறு நிலைகளில் 228 விவசாயிகளுக்கு தலா ரூ.1.50 இலட்சம் மற்றும் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் தனியாக புழு வளர்ப்பு மனை கட்ட திட்ட உதவிகள் வழங்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.288.00 இலட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அலகு மதிப்பீட்டில் 50 விழுக்காடுத் தொகை மானியமாக வழங்கப்படும். இதனை மத்திய பட்டு வாரியமும், மாநில அரசும் சரிசமமாக தலா ரூ.72.00 இலட்சம் வீதம் ஏற்கும். மீதமுள்ள 50 விழுக்காடுத் தொகையாகிய ரூ.144.00 இலட்சத்தைப் பயனாளிகளே ஏற்பர்.



2008 மே 7]

திட்டவாரியான விவரம் பின்வருமாறு:

| திட்டத்தின் பெயர் | இலக்கு | அலகு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மொத்த மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மாநில அரசு, மத்திய பட்டு வாரியம் மற்றும் பயனாளி பங்கு விழுக்காடு | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| தனியாக புழுவளர்ப்பு மனை கட்டுவதற்காக உதவிகள் அளித்தல் நிலை–1 | 120 எண் | 1.50 | 180.00 | மாநில அரசு | 25 | 45.00 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 25 | 45.00 |
| | | | | பயனாளி | 50 | 90.00 |
| | | | | மொத்தம் | | 180.00 |
| தனியாக புழுவளர்ப்பு மனை கட்டுவதற்காக உதவிகள் அளித்தல் நிலை–2 | 108 எண் | 1.00 | 108.00 | மாநில அரசு | 25 | 27.00 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 25 | 27.00 |
| | | | | பயனாளி | 50 | 54.00 |
| | | | | மொத்தம் | | 108.00 |
| மொத்தம் | 228 எண் | | 288.00 | மாநில அரசு | 25 | 72.00 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 25 | 72.00 |
| | | | | பயனாளி | 50 | 144.00 |
| | | | | மொத்தம் | | 288.00 |

7.2. 2008-09 ஆம் ஆண்டில் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள 12 வாகனங்களுக்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் கொள்முதல் செய்ய பகுதி-2 திட்டம் உட்பட மொத்தம் ரூ.52.50 இலட்சம் தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 8. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

8.1. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.48.10 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

8.2. திட்டத் தொகை பகிர்வு விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மத்திய பட்டு வாரியம் (மத்திய அரசு) | ரூ.15.60 இலட்சம் |
| மாநில அரசு | ரூ.11.80 இலட்சம் |
| பயனாளி | ரூ.20.70 இலட்சம் |

**திட்டவாரியான விவரம் பின்வருமாறு:**

| திட்டத்தின் பெயர் | இலக்கு | அலகு மதிப்பீடு (ரூபாய்) | மொத்த மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | மாநில அரசு, மத்திய பட்டு வாரியம் மற்றும் பயனாளி பங்கு விழுக்காடு | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| மல்பரி நடவுக்கான மானியம் | 60 ஏக்கர் | 5,500 | 3.30 | மாநில அரசு | 18 | 0.60 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 36 | 1.20 |
| | | | | பயனாளி | 46 | 1.50 |
| | | | | மொத்தம் | | 3.30 |
| தனியாக புழு வளர்ப்பு மனைகள் கட்டுவதற்கு உதவியளித்தல் | 32 எண் | 1,00,000 | 32.00 | மாநில அரசு | 25 | 8.00 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 25 | 8.00 |
| | | | | பயனாளி | 50 | 16.00 |
| | | | | மொத்தம் | | 32.00 |
| புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்திட உதவியளித்தல் | 32 எண் | 40,000 | 12.80 | மாநில அரசு | 25 | 3.20 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 50 | 6.40 |
| | | | | பயனாளி | 25 | 3.20 |
| | | | | மொத்தம் | | 12.80 |
| மொத்தம் | | | 48.10 | மாநில அரசு | | 11.80 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | | 15.60 |
| | | | | பயனாளி | | 20.70 |
| | | | | மொத்தம் | | 48.10 |

**9. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின்கீழ் கிரியா ஊக்கித் திட்டங்கள்**

9.1 பட்டுக் கூடு மற்றும் பட்டு நூல் பரிமாற்றத்தின்போது அரசு பட்டுக் கூடு அங்காடிகள் மற்றும் காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தில் வசூல் செய்யப்படும் விதிப்புத் தொகை (Levy) 'பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியாக இட்டுவைப்பு செய்யப்படுகிறது. இந்நிதி, மாநிலத்தில் பல்வேறு வகையான கிரியா ஊக்கித் திட்டங்கள் மற்றும் இதர பட்டு வளர்ச்சி செயல்களுக்கு உதவியளிக்க மாநில அரசின் பங்காகப் பயன்படுத்தப்படுகிறது.



9.2 2008-09 ஆம் ஆண்டில் ரூ.369.83 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டங்கள் மத்திய பட்டு வாரியம் (மத்திய அரசு), மாநில அரசு மற்றும் பயனாளிகளால் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து செயல்படுத்தப்படும்:

| | |
|---|---|
| மத்திய பட்டு வாரியம் (மத்திய அரசு) | ரூ.148.23 இலட்சம் |
| மாநில அரசு | ரூ. 85.65 இலட்சம் |
| பயனாளிகள் | ரூ.135.95 இலட்சம் |

**திட்ட வாரியான விவரம் பின்வருமாறு:**

| திட்டத்தின் பெயர் | இலக்கு | அலகு மதிப்பீடு (ரூபாய்) | மொத்த மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மாநில அரசு, மத்திய பட்டு வாரியம் மற்றும் பயனாளி பங்கு விழுக்காடு | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| உயர் விளைச்சல் தரும் மல்பரி நடவுக்கான உதவிகள் அளித்தல் | 2,250 ஏக்கர் | 5,500 | 123.75 | மாநில அரசு | 18 | 22.50 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 36 | 45.00 |
| | | | | பயனாளி | 46 | 56.25 |
| | | | | மொத்தம் | | 123.75 |
| சொட்டு நீர்ப் பாசன அமைப்பு நிறுவிட உதவிகள் அளித்தல் | 175 ஏக்கர் | 20,000 | 35.00 | மாநில அரசு | 25 | 8.75 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 50 | 17.50 |
| | | | | பயனாளி | 25 | 8.75 |
| | | | | மொத்தம் | | 35.00 |
| தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுவதற்காக உதவிகள் அளித்தல் | 90 எண் | 1,00,000 | 90.00 | மாநில அரசு | 25 | 22.50 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 25 | 22.50 |
| | | | | பயனாளி | 50 | 45.00 |
| | | | | மொத்தம் | | 90.00 |
| புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்திட உதவிகள் அளித்தல் | 150 எண் | 40,000 | 60.00 | மாநில அரசு | 25 | 15.00 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 50 | 30.00 |
| | | | | பயனாளி | 25 | 15.00 |
| | | | | மொத்தம் | | 60.00 |
| இளம் புழு வளர்ப்பு மையம் நிறுவிட உதவி அளித்தல் | 2 எண் | 3,45,000 | 6.90 | மாநில அரசு | 25 | 1.72 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 25 | 1.73 |
| | | | | பயனாளி | 50 | 3.45 |
| | | | | மொத்தம் | | 6.90 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| மேம்படுத்தப்பட்ட காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகுகள் நிறுவ உதவி அளித்தல் | 4 அலகு | 2,50,000 | 10.00 | மாநில அரசு | 25 | 2.50 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 50 | 5.00 |
| | | | | பயனாளி | 25 | 2.50 |
| | | | | மொத்தம் | | 10.00 |
| பலமுனை பட்டு நூற்பு அலகுகள் நிறுவ உதவி அளித்தல் | 2 அலகு | 10,00,000 | 20.00 | மாநில அரசு | 25 | 5.00 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 50 | 10.00 |
| | | | | பயனாளி | 25 | 5.00 |
| | | | | மொத்தம் | | 20.00 |
| நடமாடும் பட்டுக் கூடு அங்காடிகள் பராமரிப்பு மற்றும் தளவாடங்களுக்கு வருடாந்திர பராமரிப்புத் தொகை வழங்குதல் | – | – | 2.18 | மாநில அரசு | 100 | 2.18 |
| | | | | மொத்தம் | | 2.18 |
| தருமபுரி அரசு பட்டுக் கூடு அங்காடியை மேம்படுத்துதல். | – | – | 22.00 | மாநில அரசு | 25 | 5.50 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | 75 | 16.50 |
| | | | | மொத்தம் | | 22.00 |
| மொத்தம் | | | 369.83 | மாநில அரசு | | 85.65 |
| | | | | மத்திய பட்டு வாரியம் | | 148.23 |
| | | | | பயனாளி | | 135.95 |
| | | | | மொத்தம் | | 369.83 |

மேலும் மத்திய பட்டு வாரியத்தின் கிரியா ஊக்கித் திட்டத்தின்கீழ் மாநில அரசின் பங்குடன் மேற்கண்டுள்ள திட்டங்கள் உள்ளிட்டு ரூ.16.00 கோடி அளவிற்கு நலத் திட்டங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**10. விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு உதவி அளித்தல்**

2008-09 ஆம் ஆண்டில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட திட்டங்களுக்காக திட்ட உதவிகள் வழங்கப்படும்:



| திட்டம் | குறைந்தபட்சம் ரூபாய் | அதிகபட்சம் ரூபாய் |
|---|---|---|
| உயர் விளைச்சல் தரும் மல்பரி நடவு செய்திட (ஒரு ஏக்கருக்கு மட்டும்) | 3,000/– | 3,000/– |
| மல்பரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவிட | 15,000/– (ஒரு ஏக்கருக்கு) | 37,500/– (ஒரு ஹெக்டேருக்கு) |
| தனியாகப் பட்டுப் புழு வளர்ப்பு மனை கட்ட | 50,000/– (1000 சதுர அடி பரப்புக்கு மேல்) | 75,000/– (1500 சதுர அடி பரப்புக்கு மேல்) |
| நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய | 30,000/– | 30,000/– |
| நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள் விநியோகம் | 1,500/– | 1,500/– |
| பட்டுப் புழு வளர்ப்பில் பயிற்சி | 5,000/– | 5,000/– |
| **மொத்தம்** (ஒரு பட்டு விவசாயிக்கு அதிகபட்சம்) | | *1,52,000/-* |

இவை தவிர, இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையம், பட்டு நூற்பு அலகுகள் ஆகியவற்றை நிறுவும் தொழில் முனைவோருக்கும் திட்ட உதவிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையம் நிறுவிட | ரூ.1,72,500/– |
| பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட | |
| 1. மேம்படுத்தப்பட்ட காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகுகள் | ரூ.1,87,500/– |
| 2. பலமுனை பட்டு நூற்பு அலகுகள் | ரூ.7,50,000/– |
| பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவிட | ரூ.4,50,000/– |

[2008 மே 7

## 11. 2008–09 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

- பட்டு வளர்ச்சிப் பணிகள், "தொகுப்பு அணுகுமுறையில்" (Cluster Approach) கவனம் செலுத்தி செயல்படுத்தப்படும். இந்த முறையில் திட்ட உதவிகள், ஒட்டுமொத்த வடிவில் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.
- இத்துறையில் இரு சுழற்சியின் பட்டுப்புழு வளர்ப்பு, முன்னுரிமை அடிப்படையில் தொடரப்படும். வெண்பட்டு நூல் உற்பத்தி விழுக்காடு அடிப்படையில் முக்கிய 5 மாநிலங்களில் தமிழ்நாடு முதலாவதாக உள்ளது.

## 12. 2008–09 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

மேற்குறிப்பிட்ட குறிக்கோளினை அடைய 2008-09 ஆம் ஆண்டிற்கு திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு ரூ.3,527.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | | 2008–09–க்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. (அ) | திட்டப் பணிகள்<br>1. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின்கீழ் கிரியா ஊக்கித் திட்டங்கள் | ரூ. 85.65 இலட்சம் | |
| | 2. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி கணக்குகள் இடையே மாற்றம் | ரூ.14.35 இலட்சம் | 100.00 |
| (ஆ) | புதிய திட்டங்கள் | | 72.00 |
| (இ) | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | | 11.80 |
| 2. | திட்டம் சாராப் பணிகள்<br>(அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் முதலியன) | | 3,344.06 |
| | மொத்தம் | | 3,527.86 |



2008 மே 7]

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தமிழக அரசிற்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனமாக நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ் 26-7-1973 அன்று பதிவு செய்யப்பட்டு 01-8-1973 முதல் செயல்படத் துவங்கியது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வர்த்தகச் சங்கங்களின்கீழ் இயங்கி வந்த அனைத்து கைத்திறப் பொருட்கள் விற்பனை நிலையங்களும் பல்வேறு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந்நிறுவனம் உருவாக்கப்பட்டபோது உடனடியாக இந்நிறுவனத்தின்கீழ் மாற்றப்பட்டன. இந்நிறுவனம் "பூம்புகார்" என்ற வணிகப் பெயரில் தனது வணிகத்தைச் செய்து வருகிறது.

## 2. இந்நிறுவனத்தின் நோக்கங்களும், செயல்பாடுகளும்

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

(1) தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல்

(2) கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்தப் பயிற்சி அளித்தல்

(3) கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும், தரத்தினையும் மேம்படுத்துவதோடு, அத்தொழிலில் உள்ள பணிச் சுமையைக் குறைத்தல் மற்றும் தொழில் முறை இடர்ப்பாடுகளைக் களைதல்

(4) வடிவமைப்புகளில் புதிய உத்திகளை ஊக்குவித்தல்

(5) கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு அளித்தல்

மேற்கண்ட குறிக்கோள்களை அடைவதற்காக இந்நிறுவனம் சந்தை, உற்பத்தி, சிறப்புக் கோயில் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

[2008 மே 7

## 3. வணிகச் செயல்பாடுகள்

### 3.1. விற்பனை

இந்நிறுவனம், தனது முக்கியக் குறிக்கோளான கைவினைஞர்களின் பொருட்களுக்குச் சந்தை வாய்ப்பு உதவியினை வழங்குவதை தனது 18 பூம்புகார் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் (தமிழகத்தில் 15 விற்பனை நிலையங்கள் மற்றும் பெங்களூரு, கொல்கத்தா மற்றும் புதுடெல்லி ஆகிய 3 வெளி மாநிலங்களில்) நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும் கண்காட்சிகள்மூலமாகவும் நிறைவேற்றி வருகிறது.

3.2. 1973-74-ல் ரூ.50.00 இலட்சமாக இருந்த இந்நிறுவனத்தின் ஆண்டு விற்பனை, கடந்த 34 ஆண்டுகளில் படிப்படியாக உயர்ந்து 2006-07-ல் விற்பனையாக ரூ.1,858.00 இலட்சத்தை அடைந்துள்ளது. இந்நிறுவனம் 2007-08 ஆம் ஆண்டு முந்தைய ஆண்டு விற்பனையைக் காட்டிலும் 14.5 சதவீதம் அதிகரித்து ரூ.2,130.00 இலட்சம் விற்பனையை எட்டியுள்ளது.

3.3. இந்நிறுவனம் கைத்திறன் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காக ஆண்டு முழுவதும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. 2007-08 ஆம் ஆண்டு 142 கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இந்நிறுவனம் "காந்தி சில்ப பஜார்" என்ற தேசிய அளவிலான கண்காட்சி ஒன்றினை சென்னையில் 01-2-2008 முதல் 10-2-2008 வரை நடத்தியது. 164 கைவினைஞர்கள் அகில இந்திய அளவில் உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், இமாசல பிரதேசம், சட்டிஸ்கர், உத்தராஞ்சல், ஜார்கண்ட், பீகார், பஞ்சாப், ராஜஸ்தான், ஜம்மு காஷ்மீர், குஜராத் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 25 மாநிலங்களிலிருந்தும் வந்து கலந்து கொண்டுள்ளனர். இக்கண்காட்சியில் உலோகக் கைத்திறன் பொருட்கள், ஓவியங்கள், துணி வகைகள், நகை வகைகள், சுட்ட மண் பொம்மைகள், மூங்கில் கைத்திறன் பொருட்கள், நூக்க மர மற்றும் சந்தன மரப் பொருட்கள் போன்ற கைத்திறன் பொருட்கள் ரூ.42.00 இலட்சம் அளவுக்கு விற்பனை நடைபெற்றது. இந்த மாபெரும் கண்காட்சி மிகப் பெரிய வெற்றிகரமான நிகழ்வாக அமைந்ததுடன் பெருமளவு வருகையாளர்கள் வருகை புரிந்ததாகவும் அமைந்தது.

பல்வேறு கைத்திறன் பொருட்களின் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக தஞ்சை கலைத் தட்டுகள், கற்சிற்பங்கள், பித்தளை விளக்குகள் மற்றும் மரச் சிற்பங்கள் போன்ற கைத்திறத் தொழில்களில் இந்நிறுவனம் தொழில் முறை வடிவமைப்பாளர்களின் சேவையைப் பயன்படுத்தி புதிய வடிவமைப்பு மற்றும் பொருட்களுக்கான ஆலோசனையைப் பெற்றுள்ளது. இந்திய அரசின் ரூ.26.60 இலட்சம் நிதியுதவியுடன் கைவினைஞர்களுக்காக இத்தகைய கைத்திறன் பொருட்களில் வடிவமைப்பு மேம்பாட்டு முகாம்களை இந்நிறுவனம் நடத்தியுள்ளது. இந்நிறுவனம் இத்தகைய பயிற்சி முகாம்களில் செய்யப்பட்ட புதிய வடிவமைப்புகளின் பொருட்களை மாதிரி உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.



2008 மே 7]

### 3.4. ஏற்றுமதி

இந்நிறுவனத்தின் ஏற்றுமதி என்பது விற்பனை நிலையங்களுக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு அந்நியச்செலாவணியில் விற்பனை செய்வது "கருதப்படக்கூடிய ஏற்றுமதி" என்பதாக அமைந்துள்ளது. இத்தகைய ஏற்றுமதி விற்பனை கடந்த சில ஆண்டுகளில் ஊக்குவிக்கும் அளவிற்கு உயர்ந்து வந்துள்ளது. பஞ்சலோகச் சிற்பங்கள், பித்தளை நகாஸ் விளக்குகள், நூக்கமர உபயோகப் பொருட்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் போன்ற சில கைத்திறன் வகைகள் இத்தகைய ஏற்றுமதியில் முக்கியமாகப் பங்குபெறுகின்றன. 2006-07 ஆம் ஆண்டு இத்தகைய விற்பனையில் ரூ.99.08 இலட்சமும் மற்றும் 2007-08 ஆம் ஆண்டில் ரூ.74.80 இலட்சமும் ஈட்டியுள்ளன.

### 3.5. உற்பத்தி

இந்நிறுவனம் நாச்சியார்கோவில், மதுரை, தஞ்சாவூர், வாகைகுளம், சுவாமிமலை, கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய 7 இடங்களில் உள்ள தனது உற்பத்தி நிலையங்களைக் கொண்டு பல்வேறு கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மட்டுமே நாட்டிலுள்ள கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகங்களில் சொந்தமான உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ள ஒரே நிறுவனமாகும்.

2006-07 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தனது சொந்த நிலையங்களின் மூலம் ரூ.210.36 இலட்சம் மதிப்பிலான பொருட்களை உற்பத்தி செய்துள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.254.88 இலட்சம் மதிப்பிலான உற்பத்தியை எட்டியுள்ளது. இதில் மிகப்

[2008 மே 7

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினருக்கு அரசாங்கத்தால் இலவச விநியோகம் செய்யப்படவுள்ள பித்தளை சலவைப் பெட்டிகளை உலோக உற்பத்தி நிலையங்களால் உற்பத்தி செய்து விநியோகிப்பதுவும் அடங்கும். 2007-08 ஆம் ஆண்டு 3,592 பித்தளை சலவைப் பெட்டிகள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினருக்கு ரூ.85.00 இலட்சம் மதிப்பில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

**3.6. சிறப்புக் கோயில் திட்டங்கள்**

உற்பத்தி நடவடிக்கைகளுடன் கூடுதலாக இக்கழகம் தங்க ரதம், வெள்ளி ரதம், மரத்தேர், வாகனம், கொடிமரம், கோயில் மணி போன்றவற்றைக் கட்டமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் போன்ற சிறப்புக் கோயில் திட்டப் பணிகளில் ஈடுபட்டு தனக்கென ஒரு தனிச் சிறப்பினை ஏற்படுத்தி உள்ளது. அனைத்து கைவினைப் பொருள் கழகங்களில் தமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சிக் கழகம் மட்டுமே இத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ளது.

2007-08 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ.169.28 இலட்சங்கள் மதிப்புள்ள சிறப்புக் கோயில் திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

இந்நிறுவனம் தற்போது ரூ.100.00 இலட்சம் மதிப்புள்ள பின்வரும் கோயில் திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது:

(அ) திண்டுக்கல் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு 12½ அடி உயர தங்கத் தேர் செய்தல்

(ஆ) பெங்களூருவில் உள்ள இஸ்கான் திருக்கோயிலில் செப்புத்தகடு போர்த்தும் பணி

(இ) திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலுக்கு 18 அடி உயர மரத் தேர் தயாரித்தல்

(ஈ) திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலுக்கு 41 அடி உயர மரத் தேர் தயாரித்தல்

(உ) தஞ்சை மாவட்டம் திருக்கருகாவூரில் உள்ள அருள்மிகு முல்லைவனநாத சுவாமி திருக்கோயிலுக்கு 10¾ அடி உயர மரத் தேர் தயாரித்தல்

(ஊ) சென்னையிலுள்ள ஸ்ரீ ஸ்ரீநிவாச நிகேதனம் திருக்கோயிலுக்கு 11 அடி உயர வெள்ளித் தேர் தயார் செய்தல்



2008 மே 7]

**4. இந்நிறுவனம் தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்கள்**

**(அ) நலிந்து வரும் கைத்திறன்களை கைத்திறன் குழும அடிப்படையில் மேம்படுத்துதல்**

இந்நிறுவனம் தற்போது நலிந்து வரும் கைத்திறன் வகைகளில் கைத்திறன் குழுமங்களை ஏற்படுத்தி திருநெல்வேலி மாவட்டத்தில் பாய்நெசவு, மரக்கடைசல், மதுரை மாவட்டத்தில் காகிதக்கூழ் பொம்மைகள் கைத்திறன், திண்டுக்கல் மாவட்டத்தில் சுட்ட மண் பொம்மைகள் கைத்திறன் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பொம்மைகள் (தலையாட்டி பொம்மைகள்) போன்ற கைத்திறன் வகைகளை ரூ.30.00 இலட்சம் செலவில் மேம்படுத்தி வருகிறது. மொத்தச் செலவு மதிப்பீடான ரூ.30.00 இலட்சத்தில் ரூ.17.50 இலட்சம் செலவிடப்பட்டு திட்டங்களைச் செயல்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**(ஆ) ஏற்றுமதி வாய்ப்பு சார்ந்த கைத்திறன் வகைகளை குழும அடிப்படையில் மேம்படுத்துதல்**

அண்மையில் எடுக்கப்பட்ட ஒரு கணக்கீட்டின்படி இந்நிறுவனம் ஏற்றுமதி சார்ந்த குறிப்பிட்ட சில கைத்திறன் வகைகளைக் கண்டறிந்து அவற்றில் நான்கு கைத்திறன் வகைகளைக் குழும அடிப்படையின் மூலம் மேம்படுத்த உத்தேசித்து, அவை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இலகுமரச் செதுக்கு வேலை, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய் ஓடு மற்றும் கடல்சிப்பிகள் கைத்திறன், சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் மரத்தால் ஆன மணிமாலைகள் கைத்திறன் போன்ற கைத்திறன் வகைகள் ஆகும். மேற்கண்ட திட்டம் மொத்தம் ரூ.10.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இக்கைத்திறன் குழுமங்களை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(இ) கைவினைஞர்களுக்காக பொது பயன்பாட்டு மையங்களை அமைத்தல்**

கோயம்புத்தூர் மற்றும் சுவாமிமலையில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கைவினைஞர்களுக்காக ஒரு பொதுப் பயன்பாட்டு மையத்தை அமைக்க உத்தேசித்துள்ளது. இப்பொதுப் பயன்பாட்டு மையங்களை அமைப்பதற்குத் தேவையான நிலங்களைத் தேர்வு செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(ஈ) மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரியில் கைத்திறன் பொருட்களின் சந்தை வாய்ப்புக்காக நிரந்தரக் கண்காட்சித் திடல்களை அமைத்தல்**

மாமல்லபுரத்திலும் மற்றும் கன்னியாகுமரியிலும் தலா ரூ.200.00 இலட்சம் மதிப்பில் நிரந்தரக் கண்காட்சித் திடல்கள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு திட்டத்திற்கும், தலா ரூ.140.00 இலட்சத்தை இந்திய அரசும், மீதமுள்ள தொகையை மாநில அரசும் வழங்க உள்ளன. மாமல்லபுரம் திட்டத்திற்காக மாமல்லபுரம் கடற்கரை ஓய்வு விடுதி வளாகத்தில் உள்ள நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்காக ரூ.35.00 இலட்சமும், தமிழ்நாடு அரசிடமிருந்து அதன் பங்காக ரூ.60.00 இலட்சமும் இதுவரை பெறப்பட்டுள்ளன. கன்னியாகுமரியில் நிரந்தரக் கண்காட்சித் திடல் திட்டத்திற்கு இந்திய அரசு கொள்கை அளவிலான ஒப்புதலை அளித்துள்ளது. தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்காக தன் பங்காகிய ரூ.60.00 இலட்சத்தை வழங்கியதுடன் கன்னியாகுமரியில் 1.89 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தையும் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் இந்நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. வடிவமைப்புகளைப் பெறுவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் முடிந்து, விவரமான திட்ட மதிப்பீடுகள் பரிசீலனையில் உள்ளன. 2008-09 ஆம் ஆண்டில் இவ்விரண்டு திட்டங்களைச் செயல்படுத்தும் பணி துவங்கப்படும்.

**(உ) வாழ்வாதாரப் பாதுகாப்பு – அரசின் ஈடுபாடு – கைத்திறன் துறையில் உள்ள கைவினைஞர்களுக்குக் காப்பீட்டு வசதி அளித்தல்**

தற்போது, கைத்திறன் துறையில் உள்ள கைவினைஞர்கள் பாதுகாப்பற்ற வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். கைத்திறன் பொருட்களுக்கு உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தை வாய்ப்பு இருந்த போதும் அவற்றை உற்பத்தி செய்யும் கைவினைஞர்களின் நிலை வாழ்வாதாரப் பாதுகாப்பற்றதாகவே உள்ளது. ஜனஸ்ரீ பீமா யோஜனா திட்டத்தின்கீழ், கைவினைஞர்களுக்குக் காப்பீட்டு வசதியளிக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் காப்பீட்டு வசதியளிக்கப்பட்ட கைவினைஞர்கள் பின்வரும் பயன்களைப் பெறுவார்கள்:

| | |
|---|---|
| (அ) இயற்கை மரணம் | ரூ.30,000 |
| (ஆ) விபத்தினால் மரணம் | ரூ.75,000 |
| (இ) உடலில் ஒரு பகுதி செயலின்மை | ரூ.37,500 |
| (ஈ) முழுப் பகுதி உடலும் செயலின்மை | ரூ.75,000 |



இவை தவிர, கைவினைஞரின் குழந்தைகளில் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை மாதம் ரூ.100/- வீதம் கல்விக்கான உதவித்தொகை பெற தகுதி பெறுகிறார்கள்.

இத்திட்டத்திற்கான மொத்தச் சந்தா தொகையான ரூ.200/- பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது:

| | |
|---|---|
| (1) ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் சமூக நல மேம்பாட்டு நிதியம் | ரூ. 100/- |
| (2) மத்திய அரசு | ரூ. 60/- |
| (3) கைவினைஞரின் பங்கு | ரூ. 40/- |
| மொத்தம் | ரூ. 200/- |

இதில் பயனாளியின் பங்கான ரூ.40/-ஐ தமிழ்நாடு அரசே நலவாழ்வுத் திட்ட அடிப்படையில் ஏற்றுக்கொண்டு, கைவினைஞர்களுக்கு இக்காப்பீட்டு வசதியினை அளிக்கும் பொருட்டு, 2007-08 ஆம் ஆண்டில் 10,000 கைவினைஞர்களுக்கான தனிநபர் பங்குத் தொகையாக ரூ.4.00 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. 2008-09 ஆம் ஆண்டிலும், தமிழ்நாடு அரசு, பகுதி 2 திட்டத்தின்கீழ் 10,000 கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில் ரூ.4.00 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.

**(ஊ) பூம்புகார் மாநில விருது**

கைவினைஞர்களின் படைப்புத் திறனை வெளிப்படுத்தவும், அவர்களது சிறப்புத் திறமையை அங்கீகரிக்கவும், இந்நிறுவனம் "பூம்புகார் மாநில விருதுப் போட்டி"யை ஆண்டு ஆண்டுதோறும், நடத்திவருகிறது. இத்திட்டத்தின்படி மிகச் சிறந்த ஐந்து தோறும் கைத்திறன் பொருட்கள், கலை மற்றும் கைத்திறன் துறையில் பெரும்பங்காற்றிய நடுவர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும். முன்னதாக வெற்றி பெற்றவர்களுக்கு பணப் பரிசாக ரூ.5,000/- மற்றும் 40 கிராம் எடையுள்ள வெள்ளிப்பதக்கமும், சான்றிதழும் அளிக்கப்பட்டுவந்தன. 2006-07 ஆம் ஆண்டு முதல் பணப் பரிசு தற்போதுள்ள ரூ.5,000/-லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தப்பட்டு, முன்பு கொடுக்கப்பட்டுவந்த வெள்ளிப் பதக்கத்திற்குப் பதிலாக 4 கிராம்

எடையுள்ள தங்கப் பதக்கமும் அளிக்கப்படுகின்றன. 2007-08 ஆம் ஆண்டின் சட்டமன்ற வரவு-செலவுக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி இந்நிறுவனம் பரிசு பெறுவோரின் எண்ணிக்கையை 2007-08 ஆம் ஆண்டிலிருந்து ஐந்திலிருந்து பத்தாக உயர்த்தியுள்ளது.

பூம்புகார் மாநில விருது பெறும் கைவினைஞர்கள் 60 வயதை எட்டியவுடன், இந்திய அரசு வழங்கும் மாதம் ரூ.1,000/- ஓய்வுத் தொகையைப் பெறத் தகுதியுள்ளவராகிறார்கள்.

**(எ) விற்பனை நிலையங்களில் பழுதுபார்த்தல் மற்றும் அலங்கரிப்புப் பணி**

புதுடெல்லியில் உள்ள விற்பனை நிலையத்தைப் பழுதுபார்த்தல் மற்றும் அலங்கரிப்புப் பணிக்காக தமிழ்நாடு அரசிடமிருந்து ரூ.25.00 இலட்சத்தைப் பங்கு மூலதன உதவியாக இந்நிறுவனம் பெற்றுள்ளது. முன்னேற்ற நிலையில் உள்ள இப்பழுதுபார்க்கும் பணி, ஜூன் 2008-க்குள்ளாக முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2008-09 ஆம் ஆண்டில், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் பெங்களூரு ஆகிய 3 விற்பனை நிலையங்களில் பழுதுபார்த்தல் மற்றும் அலங்கரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**5. நிதிநிலை செயல்பாடுகள்**

2006-07 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.1,858.00 இலட்சம் விற்பனை செய்து, ரூ.46.92 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. 2007-08 ஆம் ஆண்டு இந்நிறுவனம் ரூ.2,130.00 இலட்சம் விற்பனை செய்து ரூ.86.34 இலட்சம் இலாபம் ஈட்டிள்ளது. இக்கழகத்தின் செயல்பாட்டினை மேலும் முன்னேற்றமடையச் செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய உத்திகள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளடக்கிய நிறுவன வணிகத் திட்டம் ஒன்றினை இயக்குநர் குழுவின் ஒப்புதலுடன் தீட்டியுள்ளது. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டுக்கு ரூ.50.00 கோடி விற்பனை என்ற இலக்கை எட்ட உத்தேசித்துள்ளது.

**6. கைத்திறன் ஆணையரகத்தை நிறுவுதல்**

11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்திறன் துறையின் மேம்பாட்டுக்கென பின்வரும் முன்னோக்குத் திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது:



(1) கைவினைஞர்கள் பற்றிய கணக்கெடுப்பைச் செய்தல்

(2) சில வகை உற்பத்தி முறையில் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்குதல், கூடுதல் உற்பத்திக்காக நவீனப் பயிற்சி மூலம் திறமையை மேம்படுத்துதல்

(3) குறிப்பிட்ட அளவு வளர்ச்சிக்காக குழு அடிப்படை அணுகுமுறை

(4) தற்போதுள்ள கட்டமைப்பு வசதியைப் பலப்படுத்துதல்

(5) இத்துறையில் உள்ள மேம்பாட்டுத் திட்டங்களில் இந்திய அரசுடன் கூடவே மாநில அரசையும் கூட்டாகச் செயல்படச் செய்தல்

(6) ஏற்றுமதி மேம்பாட்டிற்காக கைவினைஞர்களுக்கு உதவுதல்

(7) கைத்திறன் துறையில் உள்ள கைவினைஞர்களுக்கு கைத்தறி நெசவாளர்களுக்கு இணையான வகையில் உடல் நல வசதி மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு அளிக்க அரசே முன்னின்று ஈடுபடுதல்

மேற்கண்ட மற்றும் இது தொடர்பான நோக்கங்களை எட்டுவதற்காக 2006-07 ஆம் ஆண்டு கைத்திறன் ஆணையரகம் நிறுவப்பட்டு, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்களை அலுவல் வழி கைத்திறன் ஆணையராக நியமித்து, கைத்திறன் துறையில் பல்வேறு கைத்திறன் திட்டங்களை, தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தவும் நிறுவப்பட்டது.

7. 2008-09 ஆம் ஆண்டில் இந்த ஆணையரகம் கைத்திறன் துறையின் பல்வேறு பகுதிகளின் உடனடித் தேவைகளைப் பகுத்தாய்வு செய்தும், திட்டமிட்டும், இத்துறையில் பணியாற்றும் கைவினைஞர்களின் நலனுக்கேற்ப திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் போன்றவற்றில், பிற மாநிலம், மத்திய அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் போன்றவற்றின் உதவியுடன் ஈடுபடும். கைவினைஞர்களுக்கு பயனளிக்கும் வகையில் இதர அமைப்புகள் / நிறுவனங்களான, கைத்திறன் சார்ந்த தொழிற் கூட்டுறவுகள் சுயஉதவிக் குழுக்கள் போன்றவற்றால் மேம்பாட்டுக்கென எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு இந்த ஆணையரகம், தற்போதுள்ளவை மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளவை, இரண்டும் ஒன்றோடொன்று பொருந்தும் வகையில் அமைந்து செயல்பட வழிவகுக்கும்.

[2008 மே 7

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

தமிழ்நாடு முழுவதும் கிராமக் கைவினைஞர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் குறைந்த மூலதனத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு கதர்த் தொழில்களை மேம்படுத்தும் வகையில் கதர் கிராமத் தொழில் வாரிய சட்டம் 1959-ன்படி **தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம்** 1960 ஆம் ஆண்டு தமிழகத்தில் துவக்கப்பட்டது. கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட விவசாயத்திற்கு அடுத்தபடியாக கதர் மற்றும் கிராமத் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

### 1. கதர்

#### 1.1. கதர்ப் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா துணி இரகங்கள்

கதர் வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்றான பருத்தி, பட்டு மற்றும் பாலியஸ்டர் உற்பத்தியானது கிராமக் கைவினைஞர்களுக்கு நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. இம்மாநிலத்தில் ஏறத்தாழ 142 கிராமிய நூற்பு நிலையங்கள், 59 கதர் உபகிளைகள், 10 நேபாளி தறி நிலையங்கள் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. இந்த உற்பத்தி மையங்கள் ஊரகப் பகுதியில் வசிக்கும் 12,500 பெண்கள் உட்பட சுமார் 20,000 கைவினைஞர்களுக்கு தங்கள் வாழ்க்கையை நடத்த வருவாய் ஈட்டித் தருகின்றன. கதர் பருத்தி மூலம் வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சீருடைத் துணிகள் மற்றும் இதர பெரும்பான்மையான கதர் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

2007-08 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசால் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு இராட்டைகள் மற்றும் நேபாளி தறிகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டபின் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் ஊதியம் 25 விழுக்காடு கூடுதலாக வழங்கியதால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

2007-08 ஆம் ஆண்டில் ரூ.639.00 இலட்சத்திற்கு கதர் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது 2008-09 ஆம் ஆண்டில் உற்பத்தியை ரூ.1,000.00 இலட்சத்திற்கு அதிகரித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2008 மே 7]

#### 1.2. கதர் பட்டு

இம்மாநிலத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் இயங்கி வரும் 27 கதர் பட்டு உபகிளைகளில், கதர் பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் ரூ.1,800/-முதல் ரூ.25,000/- வரை மதிப்பிலான பட்டுப் புடவைகள் மத்தியப் பட்டு வாரியத்தின் சான்றிதழ் பெறப்பட்டு விற்பனை செய்யப்படுவதால், இப்புடவைகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. மேலும் தற்போது அச்சிடப்பட்ட மற்றும் எம்பிராய்டரி பட்டுச் சேலைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அவையும் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. வாரியத்தின் இந்நடவடிக்கைகளால் சுமார் 1,500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதற்கும் வேலை வாய்ப்பினை நல்கி வருகிறது. 2005-06 ஆம் ஆண்டில் ரூ.617.00 இலட்சமாக இருந்த பட்டு உற்பத்தி 2007-08 ஆம் ஆண்டில் ரூ.1,015.00 இலட்சமாக அதிகரித்து, 2008-09 ஆம் ஆண்டில் ரூ.1,500.00 இலட்சமாக உயர்த்திட வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

#### 1.3. நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கான நலத் திட்டங்கள்

##### (i) கைவினைஞர்களுக்கான நல நிதி

கைவினைஞர்களுக்கான நல நிதி ஒன்று இவ்வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவாளர்கள் அவர்களது கூலியிலிருந்து 12 விழுக்காட்டினை இந்த நல நிதிக்கு வழங்குவதுடன் வாரியமும் அதற்கு ஈடான பங்குத் தொகையை வழங்குகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நிதி, நூற்போர் மற்றும் நெசவாளர்களது நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நூற்போர் நெசவாளர்களுக்கு வழங்கும் கூலியுடன் 10 விழுக்காடு கூலித் தொகையினை ஊக்குவிப்புத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது. திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு நூற்போர் மற்றும் நெய்வோருக்கு அவர்களுடைய கோரிக்கை மற்றும் அவர்களது கணக்கில் உள்ள தொகைக்கேற்ப இந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2007-08 ஆம் ஆண்டில் 1,445 கைவினைஞர்களுக்கு ரூ.45.11 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

##### (ii) குடும்ப நல நிதித் திட்டம்

நூற்பாள ம் நெசவாளர் மரணமடைந்தால், அவர்களது
வாரிசுதார த குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் கருணைத்

தொகை வழங்கும் ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டம் வாரியத்தினால் ஏற்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணமடைந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு அரசு ரூ.20,000/- மானியமாக வழங்கி வருகிறது.

### (iii) குழுக் காப்பீட்டுத் திட்டம்

மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையம் கைவினைஞர்களின் நலனுக்காக "காதி காரிகார் ஜனஸ்ரீ பீமா யோஜனா" என்ற பெயரில் குழுக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆண்டொன்றுக்கு ஒரு நெசவாளருக்கு ரூ.200/- வீதம் சந்தாத் தொகை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டும். அதில் ரூ.25/- கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும், ரூ.25/- கைவினைஞர்களும், ரூ.50/- வாரியமும், கைவினைஞர்களின் சார்பில் மத்திய அரசு ரூ.100/-ம் செலுத்த வேண்டும். இந்தியாவில் நெசவாளர்களின் சார்பில் சந்தாத் தொகை செலுத்தும் வாரியம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒன்றேயாகும்.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகைகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| இயற்கை மரணம் | : | ரூ.20,000/- |
| விபத்து நேரிடும் போது | : | ரூ.50,000/- |
| உடல் ஊனம் | : | ரூ.50,000/- |
| பகுதி உடல் ஊனம் | : | ரூ.25,000/- |
| கல்வி உதவித் தொகை | : | ரூ.300/- ஒரு காலாண்டிற்கு (ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படிக்கும் ஒரு சிறார்க்கு ரூ.1,200/- வீதம்) |

இத்திட்டத்தில் 1,445 நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் சேர்ந்துள்ளனர். 2007-08 ஆம் ஆண்டில் கைவினைஞர்களின் 60 சிறார்களுக்கு கல்விச் செலவிற்காக வருடத்திற்கு ரூ.1,200/- வீதம், ரூ.72,000/- ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.





## 2. கிராமத் தொழில்கள்

### 2.1. தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள்

தச்சு மற்றும் கருமாரத் தொழில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்
வாரியத்தின் ஒரு முக்கியமான தொழிலாக அடையாளம்
காணப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின்கீழ் 9 தச்சு மற்றும் கருமாரத்
தொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன.

அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு
சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அறைகலன்கள்
இவ்வலகுகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம்
செய்யப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில் பல்வேறு
நிறுவனங்களில் ரூ.600.00 இலட்சம் மதிப்பிலான ஆணைகள்
பெறப்பட்டு, உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு முடிவுற்ற பொருட்கள்
விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. 2008-09 ஆம் ஆண்டில்
ரூ.1,000.00 இலட்சம் மதிப்பிற்கு அறைகலன்கள் உற்பத்தி செய்து
விநியோகம் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2. கைமுறை காகிதத் தொழில்

"கழிவிலிருந்து செல்வம்" என்ற கொள்கையினை அடிப்படையாகக்
கொண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் நான்கு
கைமுறை காகித அலகுகள் செயல்பட்டு வருகின்றன.
இவ்வலகுகளின்கீழ் ஆண்டுதோறும் சென்னை உயர் நீதிமன்றம்,
ஆவணக்காப்பகத்திற்கு பத்திரத்தாள், சிறைத் துறைக்கு கச்சா
அட்டைகள், அரசு அலுவலகங்களுக்கு தேவைப்படும் கோப்பு
அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.
இந்நடவடிக்கைகளால் 2007-08 ஆம் ஆண்டில் ரூ.47.00 இலட்சம்
மதிப்பிற்குப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

2008-09 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்பகபுதூர்
கைமுறை காகித அலகில் திருமண அழைப்பிதழ்கள், பண்டிகை
கால மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்து அட்டைகள், விருந்தினர்
பைகள் ஆகியவற்றை வண்ண அட்டையில் தயாரித்திடத்
திட்டமிடப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.47.00 இலட்சமாக
இருந்த உற்பத்தியினை 2008-09 ஆம் ஆண்டில் ரூ.75.00 இலட்சமாக
அதிகரித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 மே 7

## 2.3. தோல் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் இயங்கும் பல்வேறு தொழில்களில் தோல் பொருட்கள் உற்பத்தியும் மிக முக்கியமான தொழிலாகக் கருதப்படுகிறது. இவ்வாரியத்தின்கீழ் இயங்கிவரும் 18 காலணி உற்பத்திக் கூடங்களின்மூலம், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களிடமிருந்து 'பெறப்படும் விநியோக ஆணைகளைத் தவிர, பொதுமக்களுக்கும் நல்ல தரமான காலணிகள் குறைந்த விலையில் நவீன வடிவமைப்புகளில் உற்பத்தி செய்து சில்லரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வலகுகளில் பணிபுரியும் 1,000 கைவினைஞர்களுக்கு, தங்கள் வாழ்க்கையை நடத்த வருவாய் ஈட்டித் தருகிறது. அதில் பெரும்பாலோர் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்தோர் ஆவர்.

2007-08 ஆம் ஆண்டில் ரூ.600.00 இலட்சம் மதிப்பிலான ஆணைகள் பெறப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2008-09 ஆம் ஆண்டில் ரூ.700.00 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.4. சோப்புத் தொழில்

கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழில்களில் சோப்புத் தொழிலும் மிக முக்கியமானது. வாரியத்தின்கீழ் 24 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

குளியல் சோப்பு வகைகளான வேம்பு, சந்தனம், கார்பாலிக் சோப்பு, சலவைக் கட்டி மற்றும் தூள், பாத்திரம் துலக்கும் கட்டிகள், கிளீனிங் பவுடர் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. மேலும் வாரியத்தின் தயாரிப்புகளான மூலிகா ஹெர்பல் சோப்பு, மூலிகை கை கழுவும் திரவம், எழில் ஷாம்பு மற்றும் சுகப்பிரியா வலி நிவாரணி தைலம் ஆகியவை சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

வாரியமானது சமீப காலத்தில் தயாரித்த புதிய குளியல் சோப்பு வகையான கிளிசரின் சோப்பு மூன்று வெவ்வேறு நிறங்கள் மற்றும் நறுமணங்களில் உற்பத்தி செய்து வெளிச்சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டு மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதனைத் தவிர ஜவ்வாது பவுடர், அகர்பத்தி, சந்தன மாலை, மூலிகை பற்பொடி, கம்ப்யூட்டர் சாம்பிராணி, கருப்பு



2008 மே 7]

பினாயில் போன்ற பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டு கதர் அங்காடிகளின்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

விற்பனை முகவர்களை நியமித்து அதன் மூலம், தமிழ்நாட்டிலும் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் கேரளாவில் விற்பனை செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் 2007-08 ஆம் ஆண்டில் ரூ.437.00 இலட்சமாக இருந்த சோப்பு உற்பத்தியினை 2008-09 ஆம் ஆண்டில் ரூ.800.00 இலட்சமாக உயர்த்த வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.5. தேனீ வளர்ப்புத் தொழில்

தேனீ வளர்ப்புத் தொழில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகளில் மிக முக்கியமான ஒன்றாகும். வாரியமானது பச்சைத் தேனைப் பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜமுனாமரத்தூர் ஆகிய பகுதியிலுள்ள தேனீ வளர்ப்போரிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. மேலும் வரும் ஆண்டுகளில் வாரியமே தேன் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் 2,000 தேன் பெட்டிகளைத் தேனீ வளர்ப்பு மையத்தில் வைத்து உற்பத்தியைப் பெருக்கிட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.86.00 இலட்சத்திற்கு தேன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் கொள்கலன்களைச் சிறந்த முறையில் வடிவமைத்து ரூ.200.00 இலட்சம் அளவில் விற்பனை செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேனீ வளர்ப்போர்க்குத் தேன் பெட்டிகள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.6. மட்பாண்டத் தொழில்

இம்மாநிலத்தில் பாரம்பரியத் தொழில்களில் மட்பாண்டத் தொழிலும் ஒன்றாகும். வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 2 மெருகு மண்பாண்ட அலகுகளும் ஒரு பீங்கான் அலகும் செயல்பட்டு வருகின்றன. இந்த அலகுகளில் மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்குத் தேவையான பூந்தொட்டிகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுவதன்மூலம் ஊரகப் பகுதிகளில் வாழும் சுமார் 600 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில் வாரியத்தால் ரூ.2.50 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

[2008 மே 7

### 3. விற்பனை

வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும், விற்றபின் தொகை வழங்கும் முறையில் கொள்முதல் செய்யப்படும் கைவினைப் பொருட்களும் 149 கதர் அங்காடிகள் மற்றும் 8 கிராம சில்பாக்கள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. தோல் பொருட்கள் 7 தோல் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க ஒவ்வோர் ஆண்டும் கொலு கண்காட்சி நடத்தப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டின் கொலு விற்பனை மக்களைக் கவர்ந்ததன்பொருட்டு பொம்மைகள் மற்றும் இதர பொருட்களின் விற்பனை ரூ.70.00 இலட்சமாகும்.

கதரங்காடிகளில் விற்பனை திறனுக்கேற்ப சிறப்பு நிலை, 'அ' நிலை, 'ஆ' நிலை எனத் தரம் பிரித்து அதிக விற்பனை செய்ய வாய்ப்புள்ள கதரங்காடிகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சில கதரங்காடிகளில் ரொக்க விற்பனையை அதிகரிக்கும் வகையில் பட்டு இரகங்கள் மட்டுமே விற்பனை செய்யக்கூடிய பட்டு விற்பனை நிலையங்களாக (சில்க் எம்போரியம்) மாற்றியமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் தீபாவளி/பொங்கல் விழாக் காலங்களில் வாடிக்கையாளர்களின் வசதிக்காகத் தற்காலிக சிறப்பு விற்பனை மையங்கள் துவங்கப்பட்டு வருகின்றன. இது தவிர, பல்வேறு கண்காட்சிகளில் கலந்து கொண்டு விற்பனையினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கதராணையத்திலிருந்து நிதியுதவி பெற்ற பயனாளிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் நடவடிக்கைகளை நிலை நிறுத்தும் பொருட்டு, அவர்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கதர் வாரியம் உற்பத்தி செய்யாத கதர் கிராமத் தொழில் பொருட்களை கதராணையத்தின் சான்று பெற்ற நிறுவனங்களிலிருந்து பெற்று விற்பனை செய்து, கதராங்காடிகளை இலாபகரமாக இயக்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கூறிய நடவடிக்கைகளினால் 2006-07-ல் ரூ.2,800.00 இலட்சமாக இருந்த விற்பனை 2007-08 ஆம் ஆண்டில் ரூ.3,715.00 இலட்சமாக அதிகரித்துள்ளது. இந்த நிதியாண்டில் ரூ.5,700.00 இலட்சம் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



2008 மே 7]

### 4. கதர் மற்றும் பட்டு இரகங்களின் விற்பனைக்கான தள்ளுபடி

ஒவ்வோர் ஆண்டும் மாநில அரசு, கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கும் தள்ளுபடியுடன் சேர்த்து ஆண்டு முழுவதற்கும் கதர் இரகங்களின் விற்பனைமீது 30 சதவீத தள்ளுபடியும், பட்டு இரகங்களின் விற்பனைமீது 20 சதவீத தள்ளுபடியும் வழங்கி வருகிறது. அரசு வாரியத்திற்கு வழங்கும் தள்ளுபடி மானியம் அதிகபட்சம் ஆண்டுக்கு ரூ.200.00 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

69 சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் அரசின் தள்ளுபடி மானியம் அதிகபட்சமாக ரூ.500.00 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 5. 2007–08 ஆம் ஆண்டு குறியீட்டின் சாதனை மற்றும் 2008–09 ஆம் ஆண்டின் குறியீடு

வாரியத்தின் 2007-08 ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் விற்பனை மற்றும் 2008-09 ஆம் ஆண்டின் குறியீடு விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | தொழில்களின் பெயர் | 2007–08 (ரூ. இலட்சத்தில்) | | 2008–09 குறியீடு (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 1,654.25 | 1,961.02 | 2,500.00 | 2,700.00 |
| 2. | கிராமத் தொழில்கள் | | | | |
| அ. | தோல் | 545.57 | 436.61 | 650.00 | 700.00 |
| ஆ. | தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள் | 561.53 | 556.80 | 850.00 | 1,000.00 |
| இ | சோப்பு | 436.82 | 391.71 | 800.00 | 1,000.00 |
| ஈ. | கைமுறை காகிதம் | 47.38 | 41.71 | 75.00 | 75.00 |
| உ. | தேனீ வளர்ப்பு | 71.51 | 86.14 | 140.00 | 200.00 |
| | மொத்தம் | 3,316.86 | 3,473.99 | 5,015.00 | 5,675.00 |

[2008 மே 7

## 6. பகுதி–2 திட்டங்கள், 2007–08

1. வாரிய அலுவலகங்களின் செயலாக்கங்களை மேம்படுத்த கணினியுடன் இதர கருவிகள் ரூ.1.35 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளன.
2. மண்டல அலுவலகங்களுக்கு நகலெடுக்கும் இயந்திரங்கள் ரூ.1.20 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளன.
3. அச்சு மற்றும் விழுதுகளை மாற்றி அமைத்து பல்வேறு துணி இரகங்களை உற்பத்தி செய்ய 359 நெசவாளர்களுக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பிற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4. பழைய இராட்டைகள் ரூ.30.00 இலட்சம் செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளன.
5. வாரியத்தின் பல்வேறு விற்பனை மையங்களில் பணிபுரியும் 40 விற்பனையாளர்களுக்கு ரூ.1.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
6. கதர் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், துணியின் தரத்தை அதிகப்படுத்துவதற்காகவும், ரூ.4.50 இலட்சம் செலவில் 100 நேபாளி தறிகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.
7. கதர் மற்றும் கிராமப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கவும், அலகுகளை மேற்பார்வையிடவும், இரண்டு உபயோகமற்ற ஊர்திகளை மாற்றி, இரண்டு புதிய ஊர்திகள் ரூ.9.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
8. கதரைப் பற்றி புதிய தலைமுறைகள் அறிந்து கொள்வதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் முகாம் மற்றும் பொருட்காட்சிகள் நடத்தி பிளக்ஸ் பேனர்மூலம் கதர்ப் பொருட்களை விளம்பரம் செய்திட ரூ.5.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 7. பகுதி–2 திட்டங்கள், 2008–09

2008-09 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.40.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன:

1. நாகர்கோவில் கதர் அங்காடியினை ரூ.5.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.



2008 மே 7]

2. திருச்சிராப்பள்ளி கதர் கிராமத் தொழில் மண்டல துணை இயக்குநர் அலுவலகத்திற்கு ரூ.5.00 இலட்சம் செலவில் ஒரு ஊர்தி கொள்முதல் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.
3. கோயம்புத்தூர் கதர் கிராமத் தொழில் உதவி இயக்குநர் அலுவலகத்தினை ரூ.5.00 இலட்சம் செலவில் பழுதுபார்ப்புப் பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.
4. சென்னை, பிரதான கதர் அங்காடியினை ரூ.25.00 இலட்சம் செலவில் புதுப்பித்து, நவீனப்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. வரவு–செலவுத் திட்டம்

2008-09 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

| வ. எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | | 1,700.00 |
| 1. | கதர் மேம்பாட்டிற்கான மானியங்கள் | |
| 2. | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் நிதிக்கு மானியங்கள் | 500.00 |
| 3. | கதர் விற்பனை மீது தள்ளுபடி<br>1. கதர் வாரியம்<br>2. சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 200.00<br>0.01<br>223.74 |
| 4. | துணிக்கைக் கட்டணம் | |
| 5. | மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானியங்கள்<br>1. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்<br>2. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | 0.01<br>0.01 |
| 6. | பகுதி-2 திட்டங்கள்<br>1. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்<br>2. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | 40.01<br>21.51 |
| 7. | நிதிநிலை அறிக்கை அறிவிப்பு தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் தமிழ்நாடு பனைவெல்லம் தயாரிப்புத் தொழிலாளர்களுக்கு கருவிகள் வழங்குதல் | 150.00 |
| | | 2,835.29 |
| | மொத்தம் | |

[2008 மே 7

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

1. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் என்ற பெயரில் ஒரு தனி வாரியம் தமிழ்நாடு சட்டம் (15) 1994-ன்படி தனியாக அமைக்கப்பட்டு, 1995 ஆண்டு முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே, தமிழ்நாடு, பனைத்தொழில் வளர்ச்சியில் முதன்மையாக உள்ளது. தமிழ்நாடு, பனைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வளங்களைக்கொண்டு, பனைத்தொழில் வளர்ச்சிக்கும், அவைகளின் மேம்பாட்டிற்கும் மையமாக அமைந்துள்ளது. இந்தியாவிலுள்ள சுமார் 8.01 கோடி பனை மரங்களில் தமிழ்நாட்டில் 4.61 கோடி பனை மரங்கள் உள்ளன. பனை மரம் தமிழ்நாட்டின் "மாநில மரம்" ஆகும். இம்மரங்கள் இயற்கையில் மண் அரிப்பைத் தடுக்க வல்லது.

2. பனைபொருட்கள் சந்தையில் எளிதில் விற்பனையாகும் வகையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல், அதற்குத் தேவையான தொழில் நுட்பங்களை அளித்தல், பனைபொருள் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகள் செய்து பனைபொருட்களை முழுமையாகப் பயன்படுத்தி, பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்றவை இவ்வாரியத்தின் முக்கியக் குறிக்கோளாகும். 996 ஆரம்ப பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், (பனைஓலை தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) 8 மாவட்ட பனைவெல்ல விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் ஆகியவை நேரடியாகப் பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 90,000 பனைத் தொழிலாளர்களில் 14,079 பனைத் தொழிலாளர்கள் பதநீர் இறக்க உரிமம் பெற்றுள்ளார்கள். கிராமப்புறங்களில் குறைந்த முதலீட்டில் பனைத் தொழில் செய்து வருவாய் ஈட்டுகின்றனர். இந்த அமைப்புகள் மூலமாகவும், மாநிலமெங்கும் உள்ள 149 கதர் அங்காடிகள் மற்றும் விற்பனை அங்காடிகள் மூலமாகவும் பனைபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

3. கிராமப்புறங்களில் பனை மரத்திலிருந்து கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு குறைந்த முதலீட்டில் அதிகமான வருவாய்



2008 மே 7]

ஈட்டும் வகையில் அதிகளவில் வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கா வண்ணம் பனைபொருட்கள் உற்பத்தி செய்வதுடன் பொருளாதாரம் மேம்பாடு அடையச் செய்கிறது. பனைத் தொழிலுக்குத் தொழில்நுட்ப தகுதி தேவை என்றில்லாமல் பாமரரும் செய்யும் வகையில் கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு இத்தொழில்மூலம் வேலைவாய்ப்பு அளிக்க இயலும். இம்மாநிலத்தில் சுமார் ஆறு இலட்சம் ஆண் மற்றும் பெண் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

### 4. உண்ணும் மற்றும் உண்ணா பொருட்கள்

பனைத் தொழிலில் தற்போது பல்வேறு வகையான பனைவகை உண்பொருட்களான பதநீர், பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பாம் சாக்லெட் வகைகள், பதப்படுத்திய நுங்கு, பனம்பழ ஜாம் வகைகள், காற்றூட்டப்பட்ட குளிர்பான வகைகளான பாம்டா, பாம்கோலா வகைகளும் மற்றும் உண்ணா பொருட்களான பனை ஓலைப்பொருட்கள், பனைநார் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்களும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் மணப்பாடு, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு, வேலூர் மாவட்டத்தில் அடுக்கம்பாறை மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரையிலும் பெண் கைவினைஞர்கள் பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடைய உற்பத்திப் பொருட்களை அமெரிக்கா, லண்டன், பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஜப்பான் மற்றும் நெதர்லாந்து ஆகிய வெளி நாடுகளுக்குத் தனிநபர் முகவர்மூலம் அனுப்பப்படுகிறது.

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரா மற்றும் பதநீர் விதிகளின்படி தமிழ்நாடு அரசு அனுமதியுடன் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பனை மரம், தென்னை மரம் மற்றும் ஈச்ச மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கும் உரிமம் 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை முதல் முறையாக மூன்று ஆண்டுகள் உரிமம் நீடித்து வழங்கப்பட்டுள்ளது.

## 5. உற்பத்தி மற்றும் விற்பனை, 2007–08

(அ) 2007-08 ஆம் ஆண்டில் மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகள் ரூ.660.53 இலட்சம் மதிப்பிலான பனைப்பொருட்களை உற்பத்தி செய்து ரூ.705.52 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன.

(ஆ) 2008-09 ஆம் ஆண்டிற்கு மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகளுக்கு பனைப்பொருட்கள் உற்பத்திக் குறியீடாக ரூ.1,230.00 இலட்சமும் பனைப்பொருட்கள் விற்பனைக் குறியீடாக ரூ.1,430.00 இலட்சமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 6. பனைத் தொழிலில் பயிற்சிகள்

கடலூரில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தின் மண்டல பனைபொருட்கள் பயிற்சி மையத்தின்மூலம் கிராமப்புற கைவினைஞர்களுக்கு பனைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 7. பகுதி–2 திட்டங்கள், 2007–08

2007-08 ஆம் ஆண்டில் பனை பொருள் வளர்ச்சி வாரியம் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.8.00 இலட்சம் செலவில் பின்வரும் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது:

(அ) மதுரை - விருதுநகர் - திண்டுக்கல் மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின் திண்டுக்கல் மாவட்டம் கோவிலூர் அலகிற்கு பதநீர் குளிரூட்டும் அலகினை நவீனப்படுத்தி தேவையான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வாங்கிட ரூ.5.00 இலட்சம்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் உள்ள 200 ஏழைப் பயனாளிகளுக்குப் பனை வெல்லம் தயாரிப்பதற்குத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கிட ரூ.3.00 இலட்சம்.

## 8. பகுதி–2 திட்டங்கள், 2008–09

2008-09 ஆம் ஆண்டில் பின்வரும் பகுதி-2 திட்டம் ரூ.21.50 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படவுள்ளது:



பதநீர் விற்பனையை அதிகரிப்பதற்காக திருநெல்வேலி மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின் பாளையங்கோட்டை நவீன பதநீர் குளிரூட்டும் அலகிற்குத் தேவையான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வாங்கிட ரூ.21.50 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

## 9. நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள்

அரசு பனைத் தொழிலாளர்களின் நலன் காக்க அவர்களுக்கென தனி நல வாரியம் ஒன்றினை அமைத்துள்ளது. 2008-09 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பனைத் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலை மேலும் திறம்படச் செய்வதற்கு ஏதுவாக தொழிற்கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க தலா ரூ.4,000/- வீதம் நிதி உதவி வழங்க ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்திற்கென தனியாக நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. இவ்வாரியத்தின் செலவினங்கள் அனைத்தும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாரியத்திற்கென தனியாக பணியாளர்கள் இல்லை. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியாளர்களே இவ்வாரியத்தில் பணிபுரிந்து வருகிறார்கள்.

[2008 மே 7

## இணைப்பு IV

(237ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 18–கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

## அறிவிப்புகள், 2008–2009

### I. பட்டு வளர்ச்சித் துறை

தமிழ்நாடு பட்டு உற்பத்தியில் சிறப்பாகச் செயல்பட்டு கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளத்தினை அடுத்து உள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் மாநிலத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் செயலாக்கத்தை நோக்கும்போது அனைத்து நடவடிக்கைகளிலும் 100 விழுக்காட்டிற்கு மேல் சாதனை படைத்துள்ளது. 2008-2009 ஆண்டிலும் கிராமப்புறத்தில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதிலும், உயர் ரக பட்டு உற்பத்தியிலும் மிக உயரிய வளர்ச்சியை அடைவதற்கு பட்டு வளர்ச்சித் துறை முனைப்புடன் செயல்படும். தற்போது மாநிலத்தில் 35,117 ஏக்கரில் மல்பரி நடவு செய்யப்பட்டுள்ளது.

**(1) 10,000 ஏக்கரில் கூடுதலாக மல்பரி நடவு செய்தல்**

நடப்பு 2008-2009 ஆம் ஆண்டில் கூடுதலாக 10,000 ஏக்கரில் மல்பரி நடவு செய்யப்படும். இந்த சாதனை பட்டு விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தை அளிப்பதுடன் கூடுதல் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தும்.

**(2) உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய ஊக்குதவி வழங்குதல்**

அதிக அளவு தரமான இலை மகசூல் தரும் எம்ஆர்-2 மற்றும் வி-1 மல்பரி ரகங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. நடப்பு 2008-09 ஆம் நிதி ஆண்டில் 3,000 ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய ஊக்குதவித் தொகை வழங்கப்படும்.

**(3) தனியாக பட்டுப் புழு வளர்ப்பு மனை கட்ட உதவியளித்தல்**

சுகாதாரமான முறையில் தேவைக்கேற்ப கட்டுக்கோப்புடன் பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்ளவும், வெற்றிகரமாக அதிக அளவு பட்டுக்



2008 மே 7]

கூடு அறுவடை செய்வதற்கும் தனியாக புழு வளர்ப்பு மனை மிகவும் அவசியமாகிறது. நடப்பு 2008-09 ஆம் நிதியாண்டில் 1,500 விவசாயிகளுக்கு இவ்விதம் தனியாக பட்டுப் புழு வளர்ப்பு மனை கட்ட திட்ட உதவிகள் வழங்கப்படும்.

**(4) மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன முறை அமைத்தல்**

நாளுக்கு நாள் நிலத்தடி நீர்வளம் குறைந்து வரும் நிலையில், பாசன நீரை பயனுள்ள வகையில் பயன்படுத்த சொட்டு நீர்ப்பாசன முறை மிகவும் அவசியமாகும். எனவே நடப்பு 2008-09 ஆம் நிதி ஆண்டில் 1,000 ஏக்கர் பரப்பிலான மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன முறை அமைப்புகள் நிறுவ திட்ட உதவிகள் வழங்கப்படும்.

**(5) நவீன பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் / பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்ய உதவியளித்தல்**

பட்டுப் புழு வளர்ப்பில் உற்பத்திச் செலவினத்தைக் குறைத்து தரமான பட்டுக் கூடுகளை அறுவடை செய்ய, நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களைக் கையாள்வது சிறந்த தொழில்நுட்ப முறையாகும். நடப்பு 2008-09 ஆம் நிதி ஆண்டில் இவ்விதம் புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்ய 1,000 விவசாயிகளுக்கு திட்ட உதவிகள் வழங்கப்படும்.

**(6) இளம் புழு வளர்ப்பு மையம் அமைக்க உதவியளித்தல்**

இளம் பட்டுப் புழுக்களை (1 முதல் 7 நாட்கள் வரை) கூடுதல் கவனத்துடனும், கட்டுப்பாடான சூழலிலும் வளர்க்க வேண்டியது அவசியமாகிறது. அதன் பின்னர் இளம் புழுக்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். இவ்விதம் இளம் புழு வளர்ப்பு மூலம் பட்டுப் புழு வளர்ப்பு செய்வதால் புழு வளர்ப்பில் இழப்பைத் தவிர்ப்பதுடன் உற்பத்தித் திறனும் அதிகரிக்கிறது. நடப்பு 2008-09 ஆம் நிதியாண்டில் 6 இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க திட்ட உதவிகள் வழங்கப்படும்.

**(7) தரமான நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்களை விநியோகித்தல்**

பட்டுப் புழு வளர்ப்பில் நோய்த் தாக்குதலால் ஏற்படும் இழப்பைத் தவிர்க்கவும், சிறந்த பட்டுக் கூடு அறுவடை பெறவும், தரமான நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்களை உபயோகிக்க விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்படும். நடப்பு 2008-09 ஆம் நிதி ஆண்டில் 2,000

[2008 மே 7

விவசாயிகளுக்கு மானிய விலையில் நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள் வழங்கப்படும்.

**(8) பட்டு நூற்பகங்கள் அமைக்க உதவியளித்தல்**

தமிழகத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகள் விற்பனைக்காக அண்டை மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கவும், இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் போக்குவரத்து செலவினங்களைக் குறைக்கவும், பட்டு நூற்புப் பிரிவினை வலுப்படுத்த கூடுதலாக பட்டு நூற்பகங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு 2008-09 ஆம் நிதி ஆண்டில் புதிதாக பட்டு நூற்பகங்கள் அமைக்க 15 தொழில் முனைவோருக்கு திட்ட உதவிகள் வழங்கப்படும்.

## II. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. தமிழ்நாடு கைவினைஞர் நல வாரியம் மூலமாக தமிழ்நாடு அரசு மாநிலத்தில் உள்ள கைத்திறன் கைவினைஞர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை, அதாவது, மருத்துவ மற்றும் ஆயுள் காப்பீட்டு வசதிகளை தொடர்ந்து செய்வதில் சிறப்புக் கவனம் செலுத்தும்.

2. தமிழ்நாடு கைத்திறன் பொருட்களுக்கான சந்தையை விரிவுபடுத்தும் முயற்சியாக ஒருவருக்கொருவர் பயன்பெறும் வகையில் இந்நிறுவனம், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துடன் கூட்டுச் சந்தை ஏற்பாடு ஒன்றினை ஏற்படுத்தும். வெளி மாநிலங்களிலும், தமிழ்நாட்டிலும், வாய்ப்புள்ள இடங்களில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுடன் இணைந்து சந்தை முயற்சிகளை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளும். அதேபோன்று பூம்புகார் விற்பனை நிலையங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு இட வசதி அளிக்கப்படும். இத்தகைய ஒத்திசைவு மூலம் இரு நிறுவனங்களும் இணைந்து செயல்படுவதால் பூம்புகார் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் அதிகம் பயன் பெறுவதுடன், தமிழ்நாடு கைத்திறன் மற்றும் கைத்தறி விற்பனையை அதிகரிக்க உதவிகரமாக இருக்கும்.

3. கைத்திறத் தொழில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை தயாரிக்கும் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினை பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாக ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2008 மே 7]

4. நாம் உலக வர்த்தக நிறுவனத்தின்கீழ் உலகளாவிய பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக இருப்பதால், நம் பாரம்பரியக் கைத்திறனுக்கான அறிவு சார் சொத்துரிமைப் பாதுகாப்புக்கென உரிய நடவடிக்கையை எடுப்பது தேவையாக உள்ளது. இதற்காக நிலவியல் அடையாளப் பதிவினை ஒவ்வொரு பொருளுக்கும் பெற வேண்டியது தேவையாக உள்ளது. முக்கியமான தமிழ்நாடு கைத்திறன்களுக்கு நிலவியல் அடையாளப் பதிவிற்காக விண்ணப்பித்தலும், பெறுதலும் ஆன நடவடிக்கைகளை கைத்திறன் ஆணையரகம் எடுக்கவுள்ளது.

## III. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

1. நாகர்கோவில் கதர் அங்காடி ரூ.5.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படும்.

2. திருச்சிராப்பள்ளி கதர், கிராமத் தொழில் மண்டல துணை இயக்குநர் அலுவலகத்திற்கு ரூ.5.00 இலட்சம் செலவில் ஒரு ஊர்தி கொள்முதல் செய்யப்படும்.

3. கோயம்புத்தூர் கதர், கிராமத் தொழில் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ரூ.5.00 இலட்சம் செலவில் பழுதுபார்ப்பு பணி மேற்கொள்ளப்படும்.

4. சென்னை, குறளகம் பிரதான கதர் அங்காடி ரூ.25.00 இலட்சம் செலவில் புதுப்பித்து நவீனப்படுத்தப்படும்.

## IV. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

1. பதநீர் விற்பனையை அதிகரிப்பதற்காக திருநெல்வேலி மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின் பாளையங்கோட்டை நவீன பதநீர் குளிரூட்டும் அலகிற்கு தேவையான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ரூ.21.50 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

2. பனைத் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலை மேலும் திறம்பட செய்வதற்கு ஏதுவாக தொழிற்கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க தலா ரூ.4,000/- வீதம் நிதி உதவி வழங்க ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 மே 7

## இணைப்பு V

*(246 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 17—(கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)

## அறிவிப்புகள், 2008–2009

**1. நாகர்கோவிலில் பாவு ஓடுதல் மற்றும் கஞ்சி தோய்த்தல் ஆலை நவீனப்படுத்துதல்**

தென் மாவட்டங்களில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பாவு ஓடுதல் மற்றும் கஞ்சி தோய்த்தல் பணிகளுக்கான தேவையினை நிறைவுசெய்யும் பொருட்டு, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள பாவு ஓடுதல் மற்றும் கஞ்சி தோய்த்தல் ஆலை, ரூ.30 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்படும்.

**2. நெசவுக்கு முந்தைய பணிகளை ரூ. 1.61 கோடி செலவில் நவீனப்படுத்துதல்**

கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், 25 கைத்தறி நெசவாளர் செறிவுப் பகுதிகளில், நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான (Pre-loom activities) உபகரணங்கள் ரூ.1.61 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

**3. சென்னிமலை ஒரு ஏற்றுமதி மண்டலம்**

கைத்தறி ஏற்றுமதியினை ஊக்குவிக்கும் வகையில் ஈரோடு மாவட்டம், சென்னிமலைப் பகுதி ஏற்றுமதி மண்டலமாக தேர்வு செய்யப்பட்டு, தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதி, மைய அரசின் நிதி உதவியுடன் மேம்படுத்தப்படும்.

**4. முதன்மை நகரங்களில் ஆடை அலங்கார அணிவகுப்புக் காட்சிகள்**

கைத்தறித் துணி ரகங்களை மக்கள் மனதில் பதிய வைக்கவும், விற்பனையினை மேம்படுத்தவும், முதன்மையான நகரங்களின் முக்கிய பகுதிகளில், ஆடை அலங்கார அணிவகுப்புக் காட்சிகள் (Fashion Shows) நடத்தப்படும்.



2008 மே 7]

**5. 1,000 சாதாரண விசைத்தறிகள் ரூ.50 இலட்சம் செலவில் மேம்படுத்துதல்**

விசைத்தறி தொழிலை மேம்படுத்தும்பொருட்டு, நடப்பாண்டில் 1,000 சாதாரண விசைத்தறிகளை ரூ.50 இலட்சம் செலவில் நவீனப்படுத்த, தறி ஒன்றுக்கு ரூ.5,000 மானியமாக வழங்கப்படும்.

**6. பட்டுச் சேலைகளில் கோர்வை ரகங்கள்**

பாரம்பரியமிக்க காஞ்சிபுரம் பட்டு ரகங்களில் கோர்வை ரகங்கள் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக, ரூ. 30 இலட்சம் செலவில், 1,000 கைத்தறிகள் மேம்படுத்தப்படும்.

**7. கைத்தறியில் நவீன தொழில்நுட்பம்**

கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், நெசவு செய்வதில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கும் வகையிலும், நவீன தொழில்நுட்பத்துடன் கைத்தறிகள் மேம்படுத்தப்படும்.

**8. இயற்கை பருத்தியில் குழந்தைகளுக்கான ஆடை அறிமுகம்**

இரசாயன கலப்பில்லா இயற்கை பருத்தி இழையில் தயார் செய்யப்பட்ட குழந்தைகளுக்கான ஆயத்த ஆடைகள் அறிமுகப்படுத்தப்படும்.

**9. கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்துதல்**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 15 விற்பனை நிலையங்கள் ரூ.1.50 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

**10. கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் குளிர்சாதன வசதி**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 50 விற்பனை நிலையங்கள், ரூபாய் ஒரு கோடி செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படும்.

**11. நெசவாளர் பகுதிகளில் 50 பொது வசதி மையங்கள்**

கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் 50 பகுதிகளில், பொது வசதி மையங்கள் ரூ.1.50 கோடி செலவில் (ஒவ்வொரு பகுதியிலும் ரூ.3 இலட்சம் செலவில்) அமைக்கப்படும்.

[2008 மே 7

**12. 100 வடிவமைப்பாளர்களுக்குக் கணினிமூலம் வடிவமைப்புப் பயிற்சி**

கைத்தறித் துணி ரகங்களின் விற்பனையினை மேம்படுத்த, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 100 வடிவமைப்பாளர்களுக்குக் கணினி மூலம் துணிகளை வடிவமைப்பதற்கான (CAD) பயிற்சி ரூ.5 இலட்சம் செலவில் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிலையத்தின் (NIFT) மூலம் வழங்கப்படும்.

**13. நெசவாளர்களின் ஈமச்சடங்கிற்கு ரூ. 2,000 மானியம்**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்கள் மரணமடையும்போது, அவர்களின் ஈமச்சடங்கு செலவுக்கென ரூ.2,000 மானியத் தொகையாக வழங்கப்படும்.

**14. நெசவாளர் மற்றும் வடிவமைப்பாளர் பயிற்சித் திட்டம்**

நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பும், அதிக வருவாயும் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்குடன், ரூ. 15 இலட்சம் செலவில் நெசவாளர் மற்றும் வடிவமைப்பாளர் பயிற்சித் திட்டம் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், வடிவமைப்பு மற்றும் வண்ணக் கலவைகளில் நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுவதோடு, 2,000 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்படும்.

**15. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான சம்பள விகிதங்கள் இதற்கு முன்னர் 1-7-1997-ல் மாற்றி அமைக்கப்பட்டன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் சம்பள விகிதம், மறு நிர்ணயம் செய்யப்பட்டு, 1-1-2008 முதல் புதிய ஊதிய விகிதங்கள் அமல்படுத்தப்படும். இதன் மூலம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் சுமார் 4,000 பணியாளர்கள், ரூ.500-லிருந்து ரூ.2,500 வரை பணப் பயன் பெறுவார்கள்.

**16. கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலியில் 10% உயர்வு**

கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் பெறும் அடிப்படைக் கூலியில், 10 ஆண்டுகளுக்கு மேலாக கூலி உயர்வு வழங்கப்படவில்லை. கூட்டுறவு அமைப்பிலுள்ள நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவு



2008 மே 7]

செய்யும் வகையில், கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்கள், தற்போது பெறும் அடிப்படைக் கூலியில், 10 விழுக்காடு கூலி உயர்வு, 1-6-2008 முதல் வழங்கப்படும்.

**17. ஈரோடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலைத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு**

ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலையின் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி கழகங்களுக்கான பிடித்தமின்றி சம்பள உயர்வாக மாதத்திற்கு ரூ.700 உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் சுமார் 300 தொழிலாளர்கள் பயன்பெறுவர்.

**18. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 12 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு 1-4-2008 முதல் வழங்கப்படும். இதன் மூலம் நடப்பு ஆண்டில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூ.1.04 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

**19. நெசவாளர் சுகாதார மையங்கள், புற நோயாளிகளின் பிரிவு மையமாக மாற்றுதல்**

நெசவாளர்களுக்கு இலவச மருத்துவ உதவி கிடைக்கும் வகையில், 45 சுகாதார மையங்கள் புற நோயாளிகளின் பிரிவு மையங்களாக (OPD Centres) மாற்றி அமைக்கப்பட்டு, ஐசிஐசிஐ. லோம்பார்டு பொது காப்பீட்டு நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.

# இணைப்பு VI

*(257 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 44—குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## அறிவிப்புகள், 2008–2009

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் செயல்திறனை அதிகரிக்கச் செய்து மேம்படுத்தி, 11-வது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள் 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் நோக்குடன் கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

### 1. தொழில் வணிகத் துறையின் நிர்வாக அமைப்பைச் சீரமைத்தல்

*5-11-2007*-ல் இவ்வரசால் வெளியிடப்பட்ட புதிய தொழில் கொள்கை, 2007, மேலும் 22-2-2008 அன்று வெளியிடப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் பல்வேறு சலுகைகள் மற்றும் மானியங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பலனாக தொழில் துவங்குவோர் எண்ணிக்கை இனி ஆண்டுக்கு இரு மடங்காக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்து வரும் இந்நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளை அளிக்கும் பொருட்டு தொழில் வணிகத் துறையின் நிர்வாக அமைப்பு தக்க முறையில் மாற்றியமைக்கப்படும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-ல் அறிவிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும் தொழில் ஆணையர் அலுவலகம் மற்றும் மாவட்டத் தொழில் மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்படும். சில பணிகள் வெளிமுகமைகளிடம் இருந்து பெற்று (Out-sourcing) செயல்படுத்தப்படும்.

### 2. கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் மற்றும் மானிய உதவிகள் தொடர்பான வழிகாட்டுதல்களும், நெறிமுறைகளும்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை, 2008-ல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள், வேளாண் தொழில்கள் மற்றும் சிறப்பு வகைத் தொழில்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் மற்றும் மானிய உதவிகள் வழங்குவது தொடர்பான வழிகாட்டுதல்களும், நெறிமுறைகளும் (Guidelines) அடங்கிய ஆணை இன்றே வெளியிடப்படும்.





### 3. தொழில் வணிக ஆணையரகம் மற்றும் மாவட்டத் தொழில் மையங்களுக்கு ஐ.எஸ்.ஓ. தரச் சான்று பெறுதல்

தொழில் வணிக ஆணையரகம், மண்டல இணை இயக்குநரகம் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டத் தொழில் மையங்கள் ஆகியவற்றிற்கு ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ்கள் இவ்வாண்டே பெறப்படும்.

### 4. இணையதளம் வாயிலாக தொழில் முனைவோர் முறையேடு (பாகம்–I) ஒப்புகை வழங்கல்

புதியதாக தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோர் முறையேடு பாகம் I-க்கு கொடுக்கும் தொழில் முனைவோர் முறையேடு பாகம் I-க்கு கொடுக்கும் தொழில் முனைவோர் முறையேடு பாகம் I-க்கு

### 5. தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கியின் புதிய கிளைகள் தொடங்குதல்

தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கியின் கிளைகள் இதுவரை இல்லாத புதுக்கோட்டை, இராமநாதபுரம், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 5 மாவட்டங்களில் புதிய கிளைகள் திறக்கப்படும்.

### 6. தாய்கோ வங்கியிலுள்ள காலியிடங்களை நிரப்புதல்

தாய்கோ வங்கியில் உள்ள அனைத்து காலியிடங்களும் விரைவில் நிரப்பப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 7. தாய்கோ வங்கியின் தலைமை அலுவலகம் கட்டி முடித்தல்

தாய்கோ வங்கியின் தலைமை அலுவலகம் அவ்வங்கிக்குச் சொந்தமான மந்தைவெளியில் உள்ள இடத்தில் கட்டி முடிக்கப்பட்டு, இவ்வாண்டிலேயே திறக்கப்படும்.

### 8. சேலம் சேகோசர்வ் சங்கத்தின் உறுப்பினர் அலகுகளை நவீனப்படுத்துதல்

சேலம் சேகோசர்வ் சங்கத்தின் உறுப்பினர் அலகுகளை நவீனப்படுத்தும் திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2008 மே 7

**9. கூட்டுறவு கயிறு தொழிற்சாலைகளை மேம்படுத்துதல்**

கயிறு தொழிற்சாலைகளை மேம்படுத்துதல், "கயிறு வாரியத்தின் கயிறு தொழில்கள் புத்துயிர் ஊட்டுதல் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்" "Remote-Scheme of Rejuvenation, Modernisation and Technology Upgradation of Coir Industry" திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 737 கயிறு தொழிற்சாலைகள் ரூ.24.37 கோடி திட்ட மதிப்பில் துவங்கி 11-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 5,254 தொழிலாளர்கள்/தொழில் முனைவோர்கள் பயன்பெற ஆவன செய்யப்படும்.

**10. புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்**

அரியலூர், கன்னியாகுமரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் சிட்கோ நிறுவனம்மூலம் புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும்.

**11. அடுக்கு மாடி தொழில் வளாகங்கள் அமைத்தல்**

சென்னையில் நிலவும் இடத் தட்டுப்பாடு மற்றும் காலி மனைகளின் விலை உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கிண்டி, அம்பத்தூர் மற்றும் திருமழிசை ஆகிய தொழிற்பேட்டைகளில் குறுந்தொழில்களுக்கான அடுக்கு மாடி தொழில் வளாகங்கள் அமைக்கப்படும். மேலும், இவ்வளாகங்களுக்கான் தரை தளக் குறியீடு (FSI) 2.5 மடங்கு என நிர்ணயம் செய்து அனைத்து கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படும்.

**12. சிட்கோ தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்**

சிட்கோ நிர்வகித்து வரும் 78 தொழிற்பேட்டைகளில், அவை துவங்கப்பட்ட 1963 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேம்படுத்தப்படாத 19 தொழிற்பேட்டைகள் மேம்படுத்தப்படும்.

**13. தொழில் வணிகத் துறையின் தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்**

தற்பொழுது தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, இதுவரை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படாத 9 தொழிற்பேட்டை ளில் உள்ள தொழில் முனைவோர்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று, அவற்றை சிட்கோவிடம் ஒப்படைத்து, கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.



2008 மே 7]

**14. சிட்கோ நிறுவனம்மூலம் மூலப் பொருட்கள் விநியோகம்**

இரும்பு, எஃகு ஆகியவற்றை சிட்கோ நிறுவனம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்து வருவதை விரிவுபடுத்தி தேவையான அளவில் வழங்கப்படும். மேலும் ஏற்கெனவே விநியோகம் செய்யப்பட்டு தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கல்கரி (Coke) மற்றும் தேனிரும்பு (Pig Iron) விநியோகம் மீண்டும் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலே கூறப்பட்ட பணிகள் பொது-தனியார் கூட்டாண்மை முறையில் (Public-Private Partnership Mode) செயல்படுத்தப்படும்.

**15. சிட்கோ நிறுவனத்தின் அதிகாரங்களைப் பரவலாக்கல்**

சிட்கோவின் தலைமை அலுவலகத்திடம் இருக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து அளித்து, நிர்வாக அமைப்பை மாற்றுதல், நிர்வாகப் பெயர் மாற்றம், உற்பத்தி செயல்பாடுகளில் மாற்றம் மற்றும் வங்கி/நிதி நிறுவனங்களுக்குத் தடையின்மைச் சான்று வழங்கக் கேட்டு அளிக்கும் விண்ணப்பங்கள் போன்றவைகள்மீது, அவர்கள் விண்ணப்பித்த 10 வேலை நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட சிட்கோ கிளை மேலாளர்களே ஆணைகள் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும்.

**16. சிட்கோ நிறுவன தினப்படிப் பணியாளர்களின் பணி வரன்முறை**

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் தினப்படிப் பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படும்.

——

228388